# ஹிந்து பத பாதுஷாஹீ

## (ஹிந்து சாம்ராஜ்ய சரித்திரம்)

ஆசிரியர் :

விநாயக தாமோதர சாவர்க்கர்

மொழி பெயர்ப்பு :

" அபிநவம் "

பவானி பிரசுரம்

ராயவரம், புதுகோட்டை சமஸ்தானம்

முதல் பதிப்பு : ஜூலை 1947
உரிமை பதிவு
செய்யப் பெற்றது

விலை ரூபாய் 3-12
(தபால் செலவு தனி)

சக்தி பிரஸ் லிமிடெட், (சாந்தி பிரஸ்) சென்னை 14

# பதிப்புரை

வீர சாவர்க்கரின் 'எரிமலை'யைப் படித்து அனுபவித்த தமிழ் மக்களுக்கு அவர் எழுதிய இந்த நூலைப் பெருமையோடு சமர்ப்பிக்கிறோம்.

இந் நூலை மேலோட்டமாகப் படித்தால் இது மராட்டியர் சரித்திரமோ என்று எண்ணத் தோன்றும். இந்து சாம்ராஜ்யத்தை ஏற்படுத்துவதில் முன்னணியில் நின்றவர்கள் மராட்டியர்தான் என்பதை மனத்தில் கொண்டு இந்த நூலைப் பார்க்க வேண்டும். மற்ற இந்துக்களுக்கு உரிய பங்கை வீர சாவர்க்கர் தராமல் இல்லை.

இந் நூலின் பல பகுதிகள் இன்றைய நிலையில் பொருத்தமற்றன போலத் தோன்றலாம். ஆனால், வரலாற்று முறைமையோடு நோக்கினால் இந்தப் புத்தகம் அழியா இடம் பெறுவதுதான் என்பது தெளிவாகும்.

இந் நூலை வரலாற்று நுட்பத்தோடு ஆவேசம் பொங்கும் வகையில் ஆசிரியர் எழுதி யிருக்கிறார்.

மூலத்துக்கு ஏற்ற மொழி பெயர்ப்பு. தமிழில் ஆக்கி உதவிய நண்பர் 'அபிநவம்' அவர்களுக்கு எங்கள் நன்றி உரியது.

ராயவரம்
ஆகஸ்டு, 1947

பவானி பிரசுரம்

# முன்னுரை

**தமிழ் நாட்டு மக்களிடையே** நாள்தோறும் ஹிந்து உணர்ச்சி ஓங்கி வருகிறது. தமது ஹிந்துத்துவத்தைப் பாதுகாத்து, விருத்தி செய்து, பலப்படுத்துவதால்தான் தமது சமூகம், நாடு இவைகளின் எதிர்கால வாழ்வு நிலைத்துத் தழைக்க முடியும் என்பதை ஒவ்வொரு தமிழனும் உணருகிறான். ஆதலால் சரித்திரத்தின் அநேக நூற்றாண்டுகளில் அவ்வப்போது ஹிந்து ஜாதியார் தொகுத்து நாட்டிய சாம்ராஜ்யங்களின் உண்மையான தத்துவத்தையும், ரகசியத்தையும், விவரங்களையும் அறிய இயற்கையாகவே ஆவல் தோன்றுகிறது. இம் மொழிபெயர்ப்பின் கருத்து இப் பேராவலுக்குக் கலப்பற்ற உணவு அளிப்பதுவே யாகும்.

நமது சமூகத்தின் சரித்திரத்தில் இதுவரை தோன்றியுள்ள மகத்தான ஹிந்து சாம்ராஜ்யங்களில் முதன்மை பெற்றதும், கடைசியில் தோன்றியதுமான மராட்டிய ஹிந்து சாம்ராஜ்ய இதிகாசமானது உண்மையான தமிழனுக்கு ஒப்பற்ற இனிமையையும், உறுதியான மனோபலத்தையும் தெளிவான யோசனைகளையும், லட்சியத்தையும் அளிக்க வல்லது. ஒரு சமூகமே ஆயுதந் தாங்கி, மனித உரிமைகளிலும் நியாயத்திலும் திடமான கருத்தமைத்து, தமது விடுதலைக்கும் சுயேச்சைக்கும் ஓய்வின்றிப் போர் செய்து வந்த அவ் வற்புத காலத்தில் தலைமுறை தோறும் ஆயிரக் கணக்கான போர் வீரர்களும், அரசியல் நிபுணர்களும், ராஜ்ய கர்த்தாக்களும், முனிவர்களும், கவிகளும் தோன்றி, ஒப்புயர்வற்ற லட்சியம் வாய்ந்த தமது உன்னத இயக்கத்தில் ஈடுபட்டு, ஆத்ம தியாகம் செய்த இம் மராட்டிய இதிகாச வானில் இன்றும் தமிழர் உட்பட ஹிந்து மக்கள் யாவருக்கும் வழி காட்டும் சோதிகள் பல உள்ளன. ஹிந்து ஸ்வராஜ்யத்தை நாட்டிய சத்ரபதி சிவாஜியார், ஹிந்து சாம்ராஜ்யத்தைத் தொகுத்த பாஜீ ராவ், அன்னிய ஆட்சியை உடைத் தெறிந்த ஆண் தகை பாஹூஸாஹப், தியாக மூர்த்தி இளங்காளை ஜன்கோஜீ, அரசியல் அறிவின் கடலான

நாஞ, திக்கு விஜய விக்ரமாதித்யரான மஹாதஜீ, ஹிந்து தரும வேள்விச் சுடரான ராமதாஸர், கவியரசு மோரோபந்த் முதலியோர் நமக்கு என்றும் தவருத தெய்வீக வழிகாட்டிகளாகவே விளங்கி வருவார்கள்.

உலகாளும் ஹிந்து சாம்ராஜ்யத்தை வாழ்த்தி, எதிர்கால ஹிந்து சக்கரவர்த்தியை வரவேற்கும் இசை பொருந்திய பாட்டு ஒன்றையும் அமைத்துள்ளோம்;

இத்தகைய யுத்த காவியத்தை மொழிபெயர்ப்பது சுலபமான வேலையன்று; எனினும் மூலப் பிரதியில் காணும் விவரங்களில் ஒன்றேனும் விடப்படவில்லை; அதில் காணுத சரக்கு லவலேசமும் சேர்க்கப்படவும் இல்லை. யாவரும் அறியவல்ல எளிய நடையையே கையாண்டுள்ளோம்; எனினும் மூலப் பிரதியில் காணும் நடையின் அழகையும் அமைத்துள்ளோம்.

ஆயினும் இம் மொழிபெயர்ப்பில் காணும் பல குறைகளையும் அறிவோம். மராட்டியப் பெயர்ச் சொற்களைத் தமிழில் எழுதுவதிலும், ஆங்காங்குத் தோன்றும் சமஸ்கிருத, ஹிந்தி, மராட்டிய மேற் கோள்களை மொழிபெயர்ப்பதிலும் உள்ள கடினத்தையும் அறிவோம். ஆங்கிலத்தில் மூல நூல் இருபது ஆண்டுகளுக்கு முன்னரே எழுதப்பட்டிருந்தும் இந் நாள் வரை அதைத் தமிழ்ப் படுத்தா திருக்கும் நம்மவரின் பெருங் குறையைக் கவனிக்கும் போது, இம் மொழிபெயர்ப்பில் காணும் பல குறைகளும் பாராட்டத் தக்கனவல்ல என்பதைத் தமிழ்ச் சகோதரர்கள் அறிவார்கள்.

கோயம்புத்தூர்<br>22—4—47

'அபிநவம்'

# முதல் பாகம்

## ஆராய்ச்சிக் காலத்திய சரித்திரம்

"தரும ரட்சணத்தின் பொருட்டுத் தியாக
விரதம் பூண்டிருக்கிறோம்."

—சிவாஜி

# ஹிந்து ஸாம்ராஜ்யம்

(அபிநவம்)

ப்ரளயம் பொங்கும் அந்தப் போதினில் வேதம் புரந்தாய்,
இமையோர் அமுதுகடைதற்கு மேரு சுமந்தாய்,
களிறே, எயிறுமிசை காசினிதாங்கி யுவந்தாய்,
ஹிந்துராஷ்ட்ர ஸாம்ராஜ்யத்துக்கே ஜய ஜய ஜயம்
கூறுவமே.

தன்னிகரில்லை என்றோங்கிய இரணியன் மார்பு பிளந்தாய்,
தானவன் கீழுறத்தாழ்ந்திட தகைமை புரிந்தாய்,
மன்னர் மதத்தை மடக்கிட மழுவும் தெரிந்தாய்,
ஹிந்துராஷ்ட்ர ஸாம்ராஜ்யத்துக்கே ஜய ஜய ஜயம்
கூறுவமே.

கோதண்ட மேந்தி இலங்கையர் கோன் இனம் அழித்தாய்,
கீதைஎனும் விறல் நாணதை காண்டிவத் திசைத்தாய்,
ஏதிலர் யாவரும் ஹிந்து நெறிதழுவ அஹிம்சை யுரைத்தாய்,
ஹிந்துராஷ்ட்ர ஸாம்ராஜ்யத்துக்கே ஜய ஜய ஜயம்
கூறுவமே.

சண்ட மாருத துரங்கம வேகம தாலே,
அண்டம் குலுங்க, அநீதி மிலேச்சர் ஒடுங்க,
பண்டை விஜய கரவாளம் எடுத்துடன் வருக,
ஹிந்துராஷ்ட்ர ஸாம்ராஜ்யத்துக்கே ஜய ஜய ஜயம்
கூறுவமே.

அறம் அழிந்து அயலார்மறம் ஓங்கிய காலம்,
அவரை அழித்து நமதாட்சியை நாட்டுவம் என்றீர்,
விறல் பரதருக்கு வீண்வறி தேதென் றுரைத்தீர்,
ஹிந்துராஷ்ட்ர ஸாம்ராஜ்யத்துக்கே ஜய ஜய ஜயம்
கூறுவமே.

வருக, தமிழர் முருகாட்சியே, ஆந்திர எழிலே,
ராஜ புத்ர மராட்டிய சீக்கியர் அடலே,
திக்விஜய விக்ரமாதித்யர் தொழும் அடல் ஏறே,
ஹிந்துராஷ்ட்ர ஸாம்ராஜ்யத்துக்கே ஜய ஜய ஜயம்
கூறுவமே.



விநாயக தாமோதர சாவர்க்கர்

# 1. புதிய சகாப்தம்

"ஸ்வதர்ம ராஜ்ய விருத்தி செய்வதற்
கென்றே ஸத் புத்திரனுகிய நீ பிறந்துள்ளாய்."

(ஷாஹஜி சிவாஜிக்கு எழுதிய கடிதம்)

கி. பி. 1627-வது வருஷம் சிவாஜி பிறந்தார். அவர் பிறப்பினுல் ஒரு விசேஷ காலத்தின் ஆரம்பமாக இருக்க அந்த வருஷத்துக்கு அதிர்ஷ்டம் வாய்த்தது. அவருக்கு முன்னுல் முகம்மதியப் படைகளை எதிர்த்து ஹிந்து சமூகத்தின் மரியாதையைக் காப்பதன் பொருட்டு நூற்றுக்கணக்கான வீர புருஷர்கள் போர் புரிந்து பிராணத் தியாகம் செய்திருந்தார்கள். ரணகளத்திலே உயிர் ஈந்தும் தோல்வி யடைந்த அந்த வீரர்களைப்போல் சிவாஜியும் யுத்தம் செய்தார். ஆனுல், அவர் ஒவ்வொரு யுத்தத்திலும் வெற்றியடைந்து ஜயகோஷம் புரிவதற்குப் பிறந்தவர். ஒவ்வொரு வெற்றியிலும் பலம் அதிகரித்து வரவும், ஹிந்துக் கொடியானது மேன்மையிலிருந்து மேன்மைக்கே உயர்ந்து சென்றது. ஒன்றின் பின் ஒன்ருய்க் காரிய சித்திகள் பலித்தன. இவ்விதம் ஏறக்குறைய நூறு வருட காலம் நடந்தது. கஜினி முகமதுவின் வீரப் படை நாட்டிய முகமதிய வெற்றியானது எதிர்க்க முடியாத ஒரு சக்தியுடன் நாளுக்கு நாள் ஓங்கி வளரவும் ஹிந்துஸ்தானம் முழுவதும் அதில் ஒடுங்கி விட்டது. இதற்கு அடங்கிக் குன்ருமல் தலை நிமிர்ந்து நின்று, "இதுவரை வந்தது போதும். இனி இத்துடன் நில்" என்று கண்டிப்பான கட்டளையிட்ட முதல் வீர புருஷரே சிவாஜி. அவர் தோன்றுவதற்கு முன்னுல்—அதாவது கி. பி. 1627ம் வருஷத்துக்கு முன்னுல்—ஹிமாசலம் முதல் கடல் வரையில் எங்கெங்கு ஹிந்து சேனைகளும் முகமதிய சேனைகளும் கைகலந்தனவோ, அங்கங் கெல்லாம் ஏதேதோ காரணங்களினுல் ஹிந்துக்கள் தோல்வி யடைவது நிச்சயமாக இருந்தது. தம் தலைவர் தவறியதாலோ அன்றி

இறந்ததாலோ, அமைச்சரோ அல்லது படைத் தலைவரோ வஞ்சகம் புரிந்ததாலோ, இத்தியாதி ஏதேதோ காரணங்களினால் ஒவ்வொரு போர்முனையிலும் ஹிந்துக் கொடி தாழ்ந்து கொண்டே வந்தது. தஹீர் அடைந்த முடிவு, ஜயபாலர் புரிந்த போர்கள், அனங்க பாலர் நின்ற நிலைமை, பிருதிவி ராஜரின் வீழ்ச்சி, காலிங்கர், சிக்ரி, தேவகிரி, அல்லது தலைக்கோட்டை ரணகளங்களில் நடந்த விபத்துக்கள் இவைகளை எல்லாம் நினைத்துப் பார்த்தால் மேற்சொன்னவற்றின் உண்மை விளங்கும். ஆனால், தாழ்வடைந்த ஹிந்துக்களின் விதியை சிவாஜி தமது வீரக் கரத்தில் எடுத்துக்கொண்டார். எதிரிகளை முன்போலவே உக்கிரத்துடன் எதிர்த்து அவர் ஹிந்துக் கொடியை அன்று முதல் தாழ்விலிருந்து வெற்றிக்கு உயர்த்தி வந்தார். அதன் பிறகு ஒருகாலும் ஹிந்துக்கொடி முகமதியப் பிறைக்கு வணங்க வேண்டி ஏற்படவில்லை.

கி. பி. 1627-வது வருஷத்துக்குப் பிற்பாடு எவ்வெப்போது ஹிந்துப் படைகளும் முகமதியப் படைகளும் கைகலந்தனவோ, ஹிமாலயம் முதல் கடல் வரையில் எங்கெங் கெல்லாம் ஹிந்துக்களும் முகமதியர்களும் போர் புரிந்தார்களோ, அன்று முதல் அங்கங் கெல்லாம் ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு தடவையிலும் ஹிந்துக்கள் வெற்றி பெறுவது நிச்சயமாய் இருந்தது. எவ்வளவு வலிவு இருந்தாலும், எவ்வளவு உரக்க 'அல்லாஹூ அக்பர்' என்று வாய்வலிக்கக் கத்தினாலும், ஒவ்வொரு யுத்தத்திலும் முகமதியர்கள் தோல்வியடைந்து மண்ணைக் கவ்வ வேண்டியது உறுதியாகி வந்தது. அல்லாஹூ அக்பர்—ஆண்டவர் வெற்றி பெறுவாராக! ஆண்டவரே வெற்றி பெற்றார். ஆனால் வெற்றியடைந்த அந்த ஆண்டவர் ஹிந்து ஆண்டவரே. கி. பி. 1627-வது வருஷத்துக்குப் பிற்பாடு ஆண்டவர் ஹிந்துப் படையின் கட்சியில் சேர்ந்துவிட்டார்; விக்கிரக நிக்கிரகம் செய்பவரை எதிர்த்து, விக்கிரக ஆராதனை புரியும் ஹிந்துக் கட்சியாரிடம் சேர்ந்துவிட்டார். ஸிங்க்ஹத் கைப்பற்றியதையும், பவன் கிந்து காத்ததையும், கோவிந்த சிங்கு, பந்தா பஹதூர், சத்ரஸால், பாஜிராவ், நானா, பாஹு,

மல்ஹார் ராவ், பரசுராம் பந்த், ரணஜித் சிங்கு, இன்னும் கணக்கில்லாத மராட்டிய, ராஜபுத்திர, சீக்கியப் படைத் தலைவர்கள் ஒவ்வொரு முறையும் ஒவ்வோர் இடத்திலும் முகமதியர்களைச் சின்னாபின்னமாக முறியடித்த வரலாறுகளையும் நினைத்துப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும். ஹிந்து மக்களின் அதிர்ஷ்டம் தாழ்வி லிருந்து வெற்றிக்குத் திரும்பியதின் காரணம், சிவாஜியும் அவரது குருவாகிய ஸ்ரீ ராமதாஸரும் நமது சமூகத்தின் முன்பு நாட்டிய உயர்ந்த தரும தேசிய லட்சியமேயன்றி அவர்கள் போர்க்களத்தில் காட்டிய புதிய தந்திர வழிகளும், புது யுத்த ஆயுதங்களும் ஆகும். ஹிந்து ஜாதியாரின் தேசிய வாழ்வின் ஒளி குன்றியபோது மஹாராஷ்டிர தருமமானது எப்படி அதைத் துலங்கச் செய்ததோ அதேபோல் ஹிந்துக்கள் அது வரை அறிந்திருந்த யுத்த சாஸ்திரத்துக்கு மராட்டியரின் போர் முறையும் ஓர் ஒப்பற்ற முன்னேற்றமே ஆகும்.

இந்த மகத்தான லட்சியம்தான் ஹிந்து பத பாதுஷாஹீ—அதாவது சுதந்திர ஹிந்து சாம்ராஜ்ய ஸ்தாபனம். இதுதான் ஹிந்து விடுதலைப் போரின் தலைவர்களுக்கு நம்பிக்கையும் உற்சாகத்தையும் பலத்தையும் ஊட்டியது. முகமதியரைக் காட்டிலும் உயர்ந்த வலுவை மராட்டியப் படைகளுக் களித்துக் கடைசியில் ஹிந்துக்களுக்கு ஜய மாலை சூட்டிய அதிசயப் போர்முறையானது கொரில்லா போர் முறை—விஸ்மயப் போர்முறை.

இந்த உயர்ந்த லட்சியத்தின் உணர்ச்சியை நாம் அவர்கள் ஒவ்வொரு தலைமுறையிலும் செய்து வந்த முயற்சிகளில் காண்கிறோம். அவர்களின் பல விதமான காரியங்களின்நடுவே, லட்சியத்தில் ஒற்றுமையும், அக்கறையிலும், சிரத்தையிலும் உறவும் தோன்றி, ஸ்வதர்ம ஸ்வதேச மேன்மையே தமது வாழ்க்கையின் நோக்கம் என்ற உணர்ச்சியை உண்டாக்கின. இந்த உயர்ந்த லட்சியத்துக்காகவன்றோ அவர்களது முன்னோர்களான முனிவர்களும் போர் வீரர்களும் மகத்தான தியாகம் செய்திருந்தார்கள். இந்த உணர்ச்சியின் ஆவேசமானது அவர்களது வெற்றியை டில்லி நகரின் வாயிலிலும், வடக்கே சிந்து நதிக் கரையிலும், தெற்கே கடல் வரையிலும் நாட்டியது.

இந்த லட்சியமே அவர்களது வீரச் செயல்களின் சரித்திரத்தை மகத்தான தேசிய இதிகாசமாக மாற்றியது. நாம் பகைவரிடம் தோல்வியுற்று, நமது கொடி தாழ்ந்து, ஓடிந்து நமது பகைவர் வெற்றி பெற்ற வரலாறு உரைக்கும் சோகப் பாட்டுகளைக் காட்டிலும் குதூகலத்தையும் உணர்ச்சியையும் அளிக்கும் வீர கானங்களை ஹிந்துத் தாய்மார்கள் தத்தம் குழந்தைகளுக்குப் பாட முடிந்தது இந்த லட்சியத்திலைல்தான்.

கி. பி. 1627-வது வருஷம் சிவாஜி பிறந்தார். பால்யப் பருவத்தி லிருந்தே ஹிந்து சமூகத்தின் ராஜிய அடிமைத் தனத்தை உணர்ந்து துடித்தார் என்று அவர் சரித்திரத்தை எழுதிய பழைய சரித்திரக்காரர்களிட மிருந்து அறிகிறோம். அயல் நாட்டார் தமது தெய்வ ஆலயங்களை இடித்து மிதித்து வருவதையும், புராதன மேன்மை தங்கிய தமது தரும ஸ்தாபனங்களை எல்லாம் அவமதித்து அசுத்தம் செய்வதையும் கண்டு அவர் பதைபதைத்தார். ஜீஜாபாய் என்ற அவரது வீரத் தாயார் நமது ஹிந்து சமூகத்தின் மகிமைகளையும் ஸ்ரீ கிருஷ்ணர், ஸ்ரீ ராமர், அர்ஜுனர், பீமர், அபிமன்யு, ஹரிச்சந்திரர் முதலியோரின் பராக்கிரமச் செயல்களையும் எடுத்துரைத்து அவரது வீர உணர்ச்சிகளை வளர்த்தார். அவர் சுவாசித்த காற்றிலேயே மன வெழுச்சியும் அவாவும் நிரம்பி இருந்தன. ஹிந்து உலகத்தை ரட்சிக்கும் அவதார புருஷன் வருகையைப் பற்றிப் பேச்சாக இருந்தது. அவர்களது முன்னோர்கள் தேவர்களிடம் நேருக்கு நேர் பேசிய மகரிஷிகள் அல்லவா? அவர்களது தருமத்தைக் காப்பதற்காக அவ்வப்போது அவதாரம் செய்வதாய் ஸ்ரீ கிருஷ்ண பகவான் வாக்குறுதி கொடுத்திருக்க வில்லையா? தமது குலத்தின் பரம்பரை வரலாறு அறிந்து நாட்டின் விடுதலையை நாட்டும் ஆண்தகை தமது குலத்திலே தோன்ற வேண்டும் என்ற நம்பிக்கை அவருக்கு உண்டாயிற்று.

ஆ! தமது வருகையைப்பற்றி முன்னை முனிவர்கள் உரைத்த தெல்லாம் உண்மையாக நடக்குமா? பகவானுடைய கருவியா யிருந்து தமது சமூகத்தையும் தருமத்தையும் பாதுகாப்பதே தமது பிறப்பின் ரகசியமா யிருக்குமா?

அது அவ்விதம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒரு விஷயம் உறுதியாயிற்று. அவருடைய கடமை தெளிவாயிற்று. தமது தெய்வங்களின் ஆலயங்களை இடித்து, தமது சமூகத்தின் அரசியல் சுதந்திரத்தை உடைத்தெறிந்த அயல் நாட்டு எஜமானனை அண்டிப் பிழைக்கும் அடிமையின் இழிவான அற்ப சுக வாழ்வுக்கு அவர் ஒரு கணமும் இணங்க மாட்டார். என்ன ஆபத்து நேர்ந்தாலும் சரி, என்ன துன்பம் நேரிட்டாலும் சரி, தமது தருமத்துக்கும் தமது முன்னோரின் புராதன மேன்மைக்கும் தளராத உறுதியுடன் போர் புரிவதென்று உறுதி கொண்டார். தாம் வெற்றி பெற்றுப் பகைவரை யழிப்பதென்று பகவானுக்கு இச்சை யிருக்குமானால், பண்டைக் காலத்தில் விக்கிரமாதித்தியரும் சாலிவாகனரும் செய்ததுபோல் தானும் மகத்தான மேன்மை தங்கிய ஹிந்து சாம்ராஜ்யத்தை நாட்டுவதென்று நிச்சயம் செய்துகொண்டார். தலைமுறை தலைமுறையாகத் தமது ஜாதியார் அத்தகைய சாம்ராஜ்யத்தைப் பற்றி யன்றோ கனவு கண்டு ஏங்கி வந்தார்கள்? தமது மதத்து முனிவர்களும் பெரியோர்களும் அத்தகைய சாம்ராஜ்யத்துக்காக வன்றோ பிரார்த்தனை செய்து வந்தார்கள்?

---

## 2. ஹிந்து ஸ்வராஜ்யம்

### "ஹிந்து ஸ்வராஜ்யம்—"

(சிவாஜியின் கடிதம்)

அந்த இளங்காளை எதிர்த்து நின்றார். 1645-வது வருஷம் பீஜபூர் சுல்தானுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்ததாகத் தன் மேல் குற்றம் சாட்டிய ஹிந்து அதிகாரிக்கு பகவான் ஒருவருக்கே அன்றி சுல்தான் முதலிய எவர்களிடத்தும் பக்தியும் விசுவாசமும் பாராட்டுவது தகாது

என்ற உயர்ந்த நீதியை எடுத்துரைத்தார். தமக்கு யுத்த முறை போதித்த குருவாகிய தாதாஜீ காண்ட தேவுடனும் மற்றும் பல நண்பர்களுடனும், ஸஹ்யாத்ரி மலை யுச்சியிலே பகவான் முன்னிலையில் அவர் கடைசி வரையில் போர் புரிந்து ஹிந்து சுயராஜ்யத்தை—அதாவது ஹிந்துஸ்தானத்திலே சுதந்திர ஹிந்து சாம்ராஜ்யத்தை—நாட்டுவதென்று சபதம் எடுத்துக் கொள்ள வில்லையா? "பகவான் நமது கட்சியில் இருக்கிறார்! அவரே வெற்றி பெறுவார்!"

ஒரு நூறு வருஷங்களுக்கு மேலாக மகாராஷ்டிர மக்களின் முயற்சிகளிலும் வாழ்க்கையிலும் ஊறித் ததும்பி நின்ற ஆவேச உணர்ச்சியை சிவாஜி எழுதிய "ஹிந்து ஸ்வராஜ்யம்" என்ற வார்த்தையி லிருந்தே தெளிவாக அறியலாம். ஆரம்பத்தி லிருந்தே மராட்டியக் கலகத்தின் நோக்கம் ஓர் ஊரைப்பற்றியதோ அல்லது ஓர் ஆளைப் பற்றியதோ அன்று. ஹிந்து தரும பாதுகாப்புக்காக, அன்னியர்களான முகமதியரின் ஆட்சியைக் கவிழ்த்து, வலுவுள்ள சுதந்திர ஹிந்து ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டுவதே அந்த ஹிந்து இயக்கத்தின் லட்சியமாக இருந்தது.

இத்தகைய தேசிய உணர்ச்சியும் உற்சாகமும் மராட்டியத் தலைவர்களிடம் மட்டுமன்றி அவர் படைகளிலும் நாட்டிலும் உள்ள சாதாரண மக்களிடத்திலும் நிரம்பி யிருந்தன. சிவாஜியின் முயற்சிகளில் உள்ள தேசியக் கருத்தை ஜனங்கள் நன்றாக உணர்ந்தார்கள்; ஹிந்துக்களின் விடுதலையை நாட்டத் தோன்றிய அவதார புருஷர் என்று அவரைக் கொண்டாடினார்கள்.

முகமதிய ஆட்சியால் லாபம் அடையக்கூடிய ஹிந்துக்களில் சிலர் தமது அற்ப சுயநலத்தைக் கருதி முகமதியர் கட்சியில் தயங்கி நின்றார்கள். முகமதியப் பாதுஷாவை எதிர்த்துக் கிளம்பி ஹிந்து ஜனங்கள் வெற்றி பெறலாம் என்று அவர்களால் நம்ப முடியவில்லை. அனுபவம் இல்லாத இளங் காளையான சிவாஜியைத் தலைவராக ஏற்றுக்கொள்ள அவர்கள் தயங்கினார்கள்.

தக்காணம் முழுவது மன்றி வடநாடு முழுவதிலும், மேலும் மராட்டியர்களாலன்றி ஹிந்து மக்கள் எல்லோராலும் சிவாஜி கொண்டாடப்பட்டார். தாய்நாடு, சமூகம்

இவைகளின் ராஜ்ய சுதந்திரத்தை நாட்டி, புனிதமாகிய தங்களுடைய மதத்தைக் காக்க வந்த வீரபுருஷர் என்று அவரைக் கொண்டாடினார்கள். ஹிந்து நாட்டில் உள்ள நகரம், ஜில்லா, மாகாணம் ஒவ்வொன்றிலும் சிவாஜி, ராம்தாஸ் முதலியோர் ஏற்று நடத்திய காரியங்களின் உட்கருத்தை ஹிந்து மக்கள் யாவரும் ஐயமில்லாமல் அறிந்து கொண்டாடி வாழ்த்தினார்கள் என்பது அக்காலத்தில் எழுதப்பட்ட சரித்திர இலக்கிய நூல்களிலிருந்து தெளிவாக விளங்குகிறது. சிவாஜியின் தலைமையின்கீழ் மராட்டியர்கள் எழுந்து வருவதும், முகமதியப் பிறைக் கொடி துண்டுபட்டுப் பிளந்து மண்ணில் சாய்வதும், அந்த இடத்தில் மராட்டியரது தெய்விகமான காவிவர்ணக் கொடி வெற்றியுடன் ஹிந்துஸ்தானம் முழுவதிலும் பரந்தெழுவதும் கண்டு ஹிந்து மக்கள் யாவரும் மனம் களித்தார்கள்.

இதற்கு உதாரணமாகச் சவனூர் ஜில்லா ஹிந்து மக்கள் முகமதிய ஆட்சியைத் தாங்க முடியாமல் சிவாஜிக்கு எழுதிய கடிதத்தைச் சொல்லலாம். "அயலாரின் கொடுங்கோல் ஆட்சியிலே நாங்கள் மிகவும் வருந்துகின்றோம். இவர்கள் நமது தருமத்தையே அழித்து வருகிறார்கள். ஹிந்து தரும ரட்சகரே! வருவீர். நாஸ்திக அயலாரின் கொடுங்கோல் ஆட்சியை அழிக்க வந்த புண்ணிய புருஷரே! வருவீர். உங்களிடம் அன்பு பாராட்டி, உங்களைப் படை எடுப்புடன் இங்கு வரவேண்டுமென்று அழைத்த காரணத்தினால் முகமதியச் சேனாபதி யூஸப்பும் அவனது சிப்பாய்களும் எங்களை மிகத் துன்புறுத்துகிறார்கள். எங்களை எமது வீடுகளில் கைதிகளாக்கி, எமது வாயில்களில் காவல் வைத்து நீர், உணவு ஒன்றும் வாராமல் தடுத்துப் பட்டினிபோட முயலுகிறார்கள். ஆதலால் ஹிந்து சமூகத்துக்கு விடுதலை அளிக்க வந்த வள்ளலே! இரவைப் பகலாக்கிக் கடிதே இங்கு வருவீர்."

மஹாராஷ்டிரத்துக்கு வெளியே உள்ள ஹிந்து மக்களின் இத்தகைய உருக்கமான வேண்டுகோளைக் கேட்டு சிவாஜி வாளா இருக்கவில்லை என்று சொல்ல வேண்டுமா? கீர்த்தி பொருந்திய மராட்டியத் தலைவரான ஹம்பீர்ராவ்

அவ்விடத்துக்குத் துரிதமாகச் சென்று, பல போர்க்களங்களில் பீஜபூர் படைகளைத் தாக்கிச் சின்னா பின்னப் படுத்தி முகமதியக் கொடுங்கோல் ஆட்சியை அந் நாட்டினின்று அறவே அகற்றினர்.

பூனா, ஸுபா கொண்ட தமது சிறு ஜாகீரைச் சீர் படுத்தி, சிவாஜி தமது பதினைன்காம் பிராயத்தில் அந்தப் பன்னிரண்டு மாவளாக்களையும் (ஜில்லாக்களையும்) ஒழுங்கு படுத்தி, தமது சிறு படையைத் திரட்டி, தோரணா முதலிய முக்கியக் கோட்டைகளைத் தந்திரமாகவும் தைரியமாகவும் தாக்கிக் கைப்பற்றினர். அப்ஸல்கான் தலைமையின்கீழ் வந்த பீஜபூர் படைகளின் மீது உறுதியான வெற்றியை நாட்டினதும், சிவாஜி முகலாயருடன் நேருக்கு நேர் போருக்கு வந்தார். தந்திரத்திலும் சாகசத்திலும் முகலாய சேனைத் தலைவர் பலரைப் பலதடவை பயமுறுத்தினர். அது கண்டு ஔரங்கஜீப்புக்குக் கிலி பிடிக்கவே அவர் இவருடன் போர் புரிவதை நிறுத்தி, ஏதேனும் தந்திரம் செய்து இவரைத் தன் வலைக்குள் சிக்க வைக்க வேண்டும் என்று சூழ்ச்சி செய்தார். ஆனால் அந்தத் தந்திரச் சூழ்ச்சிகளினால் சிவாஜி ஏமாறக் கூடியவரல்ல. அவர் ஔரங்கஜீப்பைக் காட்டிலும் பெரிய ஆள். அவர் ஆக்ராவில் செய்த வஞ்சகத் தந்திரங்களை எல்லாம் உடைத்தெறிந்து, சிறையினின்றும் தம்பி ராயகட்டுக்குச் சுகமாகத் திரும்பி வந்தார். முகலாயருடன் மீண்டும் போர் புரிய ஆரம்பித்துச் சிங்கஹத்தை மீண்டும் கைப்பற்றினர். மராட்டியத் தலைவரில் பலர் முகமதியப் படைகளை ஒவ்வொரு தடவையும் முறியடித்து வெற்றி பெற்றனர்கள். கடைசியில் ஹிந்து தருமத்தையும் ஹிந்து நாகரிகத்தையும் பாதுகாக்கும் ஹிந்து சத்ரபதி என்ற பட்டத்துடன் தாம் முடி சூடுவது யுக்தம் என்றும், நன்று என்றும் சிவாஜிக்குத் தோன்றியது. விஜய நகரின் வீழ்ச்சியிலிருந்து அந்நாள் வரையில் ஹிந்து மன்னர் எவருக்கும் சத்ரபதி என்று சுதந்திர மன்னராக முடிசூட்டிக் கொள்ளத் தைரியம் வரவில்லை. படைத் திறனில் ஹிந்துக்கள் முகமதியர்களுக்குச் சற்றும் இளைத்தவர்களல்லர் என்பதை சிவாஜியின் மகுடாபிஷேகம் ஐயந்திரிபற

உறுதியாக்கிற்று. அதற்குப் பின்னர் ஒவ்வொரு போர்க் களத்திலும் முகமதியர் ஹிந்துப் படை எதிரே நிற்க முடியாமல் மடிந்து மாய்ந்து வந்தனர்.

இதன் பலன்களைக் கண்டு மராட்டியர்களுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. ஹிந்து விடுதலைப் போரின் குருவும் தீர்க்கதரிசியுமான ராமதாஸர் மறைபொருள் கொண்ட தமது பாட்டு ஒன்றில் தாம் கனவில் கண்டதெல்லாம் வெற்றியுடன் உண்மையாகப் பலித்தது கண்டு களிப்புடன் பாடியிருக்கிறார்,

"காரிருளில் கனவு கண்டேன். என் கனவுகள் எல்லாம் பலித்தன. ஹிந்துஸ்தானம் விழித்தெழுந்து சுதந்திரம் அடைந்தது; விழித்தெழுந்து தன்னையும் தன் தெய்வத்தையும் பழித்தவர்களைத் தாழ்த்திவிட்டது. உண்மையில் இது தெய்விகமும் மகிழ்ச்சியும் கொண்ட நாடே, இந்நாட்டின் நன்மையைப் பகவான் தன்னதே யென்று கருதி விட்டார். ஔரங்கஜீப்பு தாழ்ந்துவிட்டான். நிலை குலைந்தவர் உயர்ந்து ஓங்கினர். ஓங்கியவர் தாழ்ந்து மெலிந்தனர். அதிகம் சொல்லுவானேன்? நடந்ததைப் பார்த்தாலே உண்மை விளங்குகிறது.

ஹிந்துஸ்தானம் தெய்விகமும் குதூகலமும் பொருந்தியதே. இப்போது ராஜ தருமத்தால் தருமமும், பலத்தால் நீதியும் நிலைநின்று வருவதால், ஹிந்து நாட்டிலுள்ள தீர்த்தங்களி னின்றும் அசுத்தம் நீங்கிவிட்டது. இனி நாம் தைரியமாக ஸ்நானதி, ஜபதப தர்ம காரியங்களைச் செய்யலாம்."

ஒரு சுதந்திர ஹிந்து ராஜ்யத்தை ஸ்தாபித்தபோது, சிவாஜிக்குத் தாம் ஒரு தெய்விகக் காரியத்தைச் செய்து வருவதாயும், பகவானது கொடியின்கீழ்த் தாம் தருமயுத்தம் செய்வதாயும் தோன்றியது. இந்த உணர்ச்சி உண்டானவுடன் அவர் தமது ராஜ்யத்தை குருவான ராமதாஸ் ஸ்வாமியின் பாதங்களில் அர்ப்பணம் செய்தார். அதே உணர்ச்சி ராமதாஸருக்கும் இருந்தது. அர்ப்பணம் செய்யப்பட்ட ராஜ்யத்தைச் சிஷ்யரிடமே திருப்பித் தந்து, "இந்த ராஜ்யத்தை மாந்தரது நன்மைக்காகவும் பகவானது மகிமைக்காகவுமே நடத்துவது உன் பொறுப்பு.

ஆட்சியைத் தருமகாரியமாக நடத்துவாயாக'' என்று பின்னும் சொன்னர், ''ராஜ்யம் சிவாஜியினது அன்று; (நாட்டு) மக்களதே யாகும்.''

சத்ரசாலின் வீரச்செயல்களைப் புகழ்ந்து பாடும் சத்ரப்ரகாஷ் என்ற சரித்திர நூலின் ஆசிரியர் பிறவியில் ஒரு பந்தேளா ஹிந்து ஆவர். உயர்ந்த தேசியக் கவியான பூஷணரும் பிறவியில் மராட்டியர்அல்லர். ஆயினும் இவர்கள் சிவாஜி முதல் பாஜிராவ் வரையில் உள்ள மராட்டியப் போர் வீரர்களின் வெற்றிகளால் பெருமை யடைந்து, ஹிந்துஸ்தானம் முழுவதும் சுற்றி, தூங்கும் ஹிந்து மக்களைத் தட்டி எழுப்பி, ஹிந்து விடுதலைப்போரில் சேரும்படித் தூண்டி, சிவாஜி முதலியோரின் வீரச்செயல் களை எவ்வளவு அழகாகப் பாடியிருக்கிறார்கள்! அவை களில் இரண்டொன்று கூறுவோம்: ''சிவாஜி பிறந்திரா விட்டால் காசியின் கலை அழிந்திருக்கும்; மதுரைக்கோவில் மசூதியாக மாறியிருக்கும்; நாம் அனைவரும் சுன்னத்துச் செய்து முகமதியரா யிருப்போம்; அவர் ஹிந்து மொழிகளை யும், ஹிந்து திலகத்தையும், ஹிந்து ஸ்மிருதி, புராண, வேத, விதிகளையும் ரட்சித்தார்; அவரால் ராஜபுத்திரர் குலங்களும், தலை நகரங்களும் ரட்சிக்கப்பட்டன; நமது விசேஷ குணங்களை யும் தருமத்தையும் காத்தருளினர்: பூஷண கவியாகிய நான் மராட்டிய மக்களின் மகிமையைத் தேசந்தோறும் சென்று பாடிவருவேன். ஷாஹஜீயின் சத்புத்திரரான சிவ ராஜர் கையில் கத்தி எடுத்து, டில்லியின் படையைத் தடுத்து, ஹிந்துக்களின் பாதுகாப்புக்காக ஒரு பெரிய மதிலைத் தொகுத்துள்ளார்.''

இவ்விதம் மராட்டியரது யுத்தகானம் ஸஹ்யாத்ரி உச்சியிலிருந்து கிளம்பி, ஹிந்து தருமத்தையும் ஹிந்து சாம் ராஜ்யத்தையும்பற்றிப் பறைசாற்றி, மஹாராஷ்டிரத்துக்கு வெளிப்புறமுள்ள ஹிந்து மக்களையும் தட்டி யெழுப்பி, மராட்டியர் புரியும்போரின் உயர்ந்த லட்சியம் ஹிந்து மக் களையும் ஹிந்து நாட்டையும் அன்னியர் ஆட்சியாகிய அடிமைத்தனத்தி லிருந்து மீட்பதேயாகும் என்ற செய் தியை அவர்களுக்குத் தெளிவுறக் காட்டியது.

## 3. சிவாஜிக்குப் பின்வந்த சமூகம்

"பகவானே, எமது கடைசிப் போருக்காகக் கிளம்பு கிறோம். எமது லட்சியம் தருமமானது என்று அறி வீர். உமது தெய்விக அருள் ஒளியில் போருக்கு முற்பட்டு வெற்றியை நாடுகிறோம். உமது கிருபைக்குப் பாத்திரர் களாய் இருப்போமாக. தெய்விக லட்சியத்தில் சேவை செய்வோமாக. அபாயத்தைக்கண்டு அஞ்சாத நெஞ்சின் உறுதியை அருள்வீராக. தருமத்துக்காகப் போராடி உயிர் துறக்கும் உன்னத மார்க்கத்தைப் போதிப்பீராக!"

கி. பி. 1680-வது வருஷம் சிவாஜி இறந்தார். கி. பி 1781-வது வருஷம் ராமதாஸர் இறந்தார். இருவரும் அநேக காரியங்களைச் செய்திருந்தனர். எனினும் இன்னும் செய்யவேண்டிய வேலை அதிகமாகவே இருந்தது. அவர் கள் இறந்தும் அவர்களுடைய இயக்கம் நின்றுவிடவில்லை. அந்த இயக்கத்தின் நோக்கம் தனிப்பட்ட ஆளைப்பற்றிய தன்று. அதன் லட்சியம் தேச வாழ்க்கையில் வேரூன்றி யிருந்தது. இந்த விஷயத்தை இதைப் படிக்கும் வாசகர்கள் அறிந்துகொள்வார்களாக. சிவாஜி, ராமதாஸ் இவர்களைப் பற்றி மஹாராஷ்டிரத்துக்கு வெளியே உள்ளவர்களுக் குத் தெரியும் என்றாலும் அவர்களுக்கு மராட்டியரது பிற் காலச் சரித்திரம் சரிவரத் தெரியாததனால் சில தப்பு எண் ணங்கள் உண்டா யிருக்கின்றன. சிவாஜி, ராமதாஸர் இருவர்தான் முதன் முதலாகவோ அல்லது கடைசி யாகவோ ஹிந்து சாம்ராஜ்ய ஸ்தாபனத்தைப்பற்றிய லட்சியம்கொண்டவர்கள் என்றும், சிவாஜியின் பிறப்பி லிருந்து மராட்டியரது உண்மைச் சரித்திரம் தொடங்கி சிவாஜி இறந்ததும் அதுவும் முடிந்து விடுகிறதென்றும், அவருக்குப் பிற்பாடு நடந்ததெல்லாம் சுயநல துஷ்டர்கள் செய்துவந்த சூழ்ச்சியும் துர்விஷயங்களும் நிறைந்த சரித் திரமாகும் என்றும் நினைப்பார்களானால் அது முற்றிலும் தவறாகும்.

சிவாஜியும், ராமதாஸரும் தொடங்கிய இயக்கம் அவர்களோடு நின்றுவிடாமல், அவர்களுக்குப் பிறகும்

அநேக ஆண்டுகள் வரையில் நடந்துவந்து, அவர்களைப் போல் திறமையும் தேசபக்தியும் நிறைந்த போர்த் தலைவர்களும், வீரர்களும், பிராணத்தியாகிகளும் நூற்றுக் கணக்காகத் தோன்றி, ஹிந்து சாம்ராஜ்ய ஸ்தாபனத்துக்காகப் போர் பல புரிந்து, சிவாஜியும் திருப்தி யடையும்படியான பல வெற்றிகளை நாட்டினார்கள். சிவாஜி, ராமதாஸர் இவர்களது மகிமைக்கு இதுவே அத்தாட்சியாகும். சிவாஜி முடி சூடியபொழுது அவரிடம் பெருத்த மாகாணம் ஒன்றும் இல்லை எனினும், அவரது மகுடாபிஷேகமே ஒரு பெரிய தேசிய வெற்றியாகும். அவருக்கப்பால் வந்த வீரர்கள் ரகோபாதாதாவின் தலைமையின்கீழ் லாகூருக்குள் பிரவேசித்து, சிந்து நதிக்கரையில் மராட்டியப் படையை நடத்தியபோது, பாதகண்டமே அவரது ஆட்சியின்கீழ் இருந்தது. இது ஒப்பற்ற பராக்கிரமச் செயலாகுமன்றோ? சிவாஜி யிருந்த போது ஔரங்கசீப் உயிருடன் தான் இருந்தார். ஔரங்கசீப்பையும் அவரது வஞ்சகப் பேராசைகளையும் ஆமத் நகர் மயானத்திலே புதைத்தது சிவாஜியல்ல; சிவாஜியின் மராட்டிய சமூகம்தான். ராயகட்டிலே விழுந்த சிறு விதையானது ஒரு பிரம்மாண்ட சாம்ராஜ்ய விருட்சமாக வளர்ந்தது. அது வித்துவிட்டு வளராமல் மண்ணோடு மண்ணாக மறைந்துபோகும் விதை போன்றதன்று. சிவாஜி ராயகட்டில் அரசு புரிந்தார். ஆனால் அவரது மராட்டிய மக்கள் டில்லியில் ஆட்சியை நாட்டும் நாள் கடிதே நெருங்கி வந்தது. தனாஜி, ஸந்தாஜி, பாலாஜி, பாஜி, நானா, பாவு, மல்ஹாரி ராவ், தத்தாஜி மாதவராவ், பரசுராம்பந்த், நானா, பாபு - இவர்கள் எல்லாரும் சிவாஜியின் உயர்ந்த லட்சியத்துக்காகப் பாடுபட்டுப் போர்புரியாமல் இருந்தார்களானால், சிவாஜியின் பராக்கிரமத்தினால் சாதிக்கப்பட்ட தெல்லாம் பட்வர்த்தன், பந்தேளா நாடுகளைப்போன்ற ஒரு சிறு ராஜ்யமாகவே இருந்திருக்குமே யல்லாமல் ஒப்பற்ற ஹிந்து சாம்ராஜ்யத்தை நாட்டியிருக்க முடியுமா?

சிவாஜியின் மகிமைக்குக் காரணம் அவரது மக்கள் அவரது மகிமைக்குப் பாத்திரர்களா யிருந்து, அவர் விரும்பிய உயர்ந்த லட்சியத்தைக் கடைப்பிடித்து, நிலைநாட்டி,

அவரது ஆசைக் கனவை மெய்ப்படுத்தியதுதான். சிவாஜியின் மரணத்துக்குப் பிறகே மஹாராஷ்டிர சாம்ராஜ்ய சரித்திரம் தொடங்குகிறது. அவர் ஸ்தாபித்ததெல்லாம் ஒரு சிறு ஹிந்து ராஜ்யமே. ஆனால் அதிலிருந்து ஒப்பற்ற ஹிந்து சாம்ராஜ்யம் பிறந்தது. இது சிவாஜி பிறந்த பிறகே ஆயிற்று. சுதந்திர சாம்ராஜ்யத்தை நாட்டவல்ல சக்தியை தேச மக்களிடம் எழுப்பித் திடீரென்று சிவாஜி மறைந்த பின்னரே ஹிந்து சாம்ராஜ்ய இதிகாசம் ஆரம்பமாகிறது.

---

## 4. ஆத்மத் தியாகம் செய்த அரசர்

"தருமத்துக்காக உயிர் ஈவோம்"

(ராமதாஸர்)

மஹாராஷ்டிர தருமத்தினுடைய ஆழத்தையும், அது ஹிந்து சமூகத்துக்குப் புத்துயிர் கொடுத்ததின் பலத்தையும், ஔரங்கசீப் சோதித்துப் பார்த்ததனால் அவருக்கே கேடு விளைந்தது. மற்ற இயக்கங்களைப்போல் சிவாஜி ஆரம்பித்த இயக்கமும் அவர் இறந்ததனாலும், அவரது மகன் ஸம்பாஜி வீரராயினும் திறனற்று இருந்ததனாலும், மாய்ந்துவிடும் என்று எண்ணி ஔரங்கசீப் தமக்குத் தருந்த சமயம் வாய்ந்ததென்று சந்தோஷப்பட்டார். காபூல் முதல் வங்காளம் வரையில் பரந்திருந்த தமது ராஜ்யத்தின் திரவிய ஆதரவினால் அவர் மூன்று லட்சம் கொண்ட பெரும் படையைச் சேகரித்துத் தக்காணத்தின் மீது படையெடுத்து வந்தார். அவ்வளவு பெரிய சேனையை எதிர்க்கும்படி சிவாஜிக்குக்கூட ஏற்பட்டிருந்ததில்லை. இந்த விஷயத்தில் ஔரங்கசீப் செய்ததில் தவறொன்றும் இல்லை. இத்தகைய பிரம்மாண்டப் படையினால்

அவன் மஹாராஷ்டிர நாட்டைக்காட்டிலும் பத்து மடங்கு பெரியதாயும் ஒழுங்குபட்டதுமான ராஜ்யத்தையே பொடியாக்கி யிருக்கலாம். இந்த துர்ப்பாக்கிய நிலைமையில் மராட்டியரது தலைவரான ஸம்பாஜியோ ஒரு பெருஞ் சமூகத்தை நடத்தத் திறனற்றவரா யிருந்ததுமன்றி, சிற்றின்ப லோலராயும், குடியில் பிரியம்வைத்த மூர்க்கராயும் இருந்தார்.

ஆனால், இத்தகைய இழி குணமுள்ள ஸம்பாஜியும் தமது கடைசி காலத்தில் சிவாஜிக்குத் தகுந்த மகனையும், அவர் கிளம்பிய தேசிய இயக்கத்துக்குத் தகுந்த தலைவராயும் இருக்கும் தகுதியைக் காட்டினார். பயங்கரமான பகைவர் முன்னர் அவர் ஆதாரவற்ற கைதியாய் நின்ற போதும் தலை நிமிர்ந்து நின்று உயிர்ப் பிச்சைக்காகத் தமது மதத்தைக் கைவிட மறுத்தார்; உயிர் போவதானாலும் இஸ்லாம் மதத்தைத் தழுவ மறுத்துத் தமது முன்னோரின் தருமத்தையே தழுவி உறுதியுடன் நின்று, முகமதிய எதிரிகள் சொல்லிய ஒவ்வொரு மதத் துவேஷத்துக்கும் இழிவுரைக்கும் எதிர்த்து வாதாடினார். இந்த மராட்டியச் சிங்கத்தை நாய்போல் அடக்க முடியாது என்று கண்ட ஔரங்கசீப் அந்தக் காப்பீருக்கு (நாஸ்திகருக்கு) மரண தண்டனை விதித்தார். ஆனால், சிவாஜியின் மகனிடம் இந்த மிரட்டுகள் பலிக்கவில்லை. அவரது கண்களிரண்டும் தோண்டி யெடுக்கப்பட்டன; காய்ச்சிய இருப்பு ஈட்டிகள் அவரது கண்கள் இருந்த இடத்தைத் துளைத்தன; அவரது நாவைத் துண்டு துண்டாக வெட்டினார்கள். ஆனால், இந்தச் சித்திரவதைகளால் பிராணத் தியாகியான அவ்வரசர் பயந்து பணியவில்லை. கடைசியில் முகமதிய மதப் பித்துக்கு இரையாக அவரது சிரம் வீழ்ந்தது. ஆனால், அவர் அதனால் ஹிந்து ஜாதிக்கே அழிவற்ற மேன்மையை நாட்டி விட்டார். தமது இந்தப் பூரண ஆத்மத் தியாகத்தினால் ஸம்பாஜி ஹிந்து சமூகத்துக்குப் புத்துயிரளிக்கும் மஹாராஷ்டிர தருமத்தின் லட்சியத்தை உறுதி செய்துவிட்டார். கொள்ளைக் கூட்டத்தாரின் தலைவன் அத்தகைய சமயத்தில் வேறு விதமாகவன்றோ செய்திருப்பான்? சிவாஜி சேர்த்து வைத்த திரவியமெல்லாம் போய்விட்டது. அவரது

பொக்கிஷம் காலியாகிவிட்டது. அவரது கோட்டைகள் இடித்து அழிக்கப்பட்டன. அவரது தலை நகரமே அன்னியப் பகைவர் கையில் வீழ்ந்தது. ஸம்பாஜியால் இந்த ஆபத்துக்களில் ஒன்றையேனும் தடுக்க முடியவில்லை. சிவாஜி திரட்டியிருந்த செல்வத்தை அவரால் காப்பாற்ற முடியவில்லை. எனினும் தமது ஒப்பற்ற ஆத்மத்தியாகத்தினால் சிவாஜியின் ஆத்மார்த்த தேசிய பொக்கிஷத்தை ஸம்பாஜி நிரப்பிவிட்டார். அவரது வீர ரத்தத்தினால் வளர்ந்த ஹிந்து விடுதலைப் போர் ஒப்பற்ற ஆத்ம பலத்தை யடைந்தது.

---

## 5. மராட்டியர் தமது அரசர் கொலைக்கு வஞ்சம் தீர்த்த வரலாறு

"இறப்ப தாயினும் நாம் பகைவரை விடாமல் கொன்றே வரவேண்டும். இவ்விதம் பகைவரைத் தாக்கி யழிப்பதால், தமது ராஜ்யத்தை நாம் மீளவும் பெறுவோம்"

(ராமதாஸர்)

தமது அரசர் கொலையுண்டதின் வஞ்சத்தைத் தீர்க்க மராட்டிய மக்கள் படையெடுப்பு ஆரம்பித்தார்கள். அவரது உயர்ந்த ஆத்மத் தியாகத்தினால் அவரது துர்கடத்தைகளை யெல்லாம் மறந்து போயினர். பணம் இல்லாமலும் வகை தெரியாமலும் இருந்தும், அவர்கள் தமது தேச சுதந்திரத்தை நாட்டுவதாகச் சபதம் கூறினார்கள். தமது தலைவரும் சிவாஜியின் இரண்டாவது புத்திருமான ராஜாராம் தலைமையின்கீழ்க் கூடி ஹிந்து மதம், ஹிந்து ராஜ்யம்

இவைகளின் பாதுகாப்புக்காகப் போர் புரிந்து இறப்பதாக ஆணையிட்டார்கள். "தருமத்துக்காக உயிர் ஈவோம். இறப்பதானாலும் நாம் பகைவரை விடாமல் கொன்றே வர வேண்டும். இவ்விதம் பகைவரைத் தாக்கி யழித்து நமது ராஜ்யத்தை மீண்டும் பெறுவோம். மராட்டிய மக்கள் அனைவரையும் திரட்டிக் கூட்டி, ராஷ்டிர தருமத்தை எடுத்துரைப்பீர். இவ்விதம் செய்யாவிடில் நமது முன்னோர்கள் நம்மைக் கண்டு பரிகாசம் செய்து சிரிக்க மாட்டார்களா?'' என்ற ராமதாஸரின் பாட்டு அவர் இறந்த பின்னும் மறக்கப்படாமல் ஒரு ஜனசமூகமே நம்பித் தழுவும் தருமமாயிற்று. மூகமதியப் பகைவருக்கு எதிரே படையெடுத்துக் கிளம்பியது ஒரு முழுச் சமூகமேயாகும். ராஜாராம், நிலோமோரேஷ்வர், பிரஹ்லாத் நிராஜி, ராமச்சந்திர பந்த், சங்கர் ஜிமல்ஹார், பரசுராம் திரியம்பக், ஸந்தாஜி கோர்படே, தனாஜீ ஜாதவ், கண்டேராவ் தாபாடே, பந்தர்பானர், நிம்பால்கர் நேமாஜீ, பர்ஸோஜி, பிராமணர்கள், மராட்டியர்கள், பிரபுக்கள், அரசர்கள், குடியானவர்கள் எல்லோரும் ஒருங்கே படையெடுத்துக் கிளம்பினார்கள்.

இந்தச் சமயத்தில் தக்காணம் முழுவதும் ஔரங்கசீப் கையில் விழுந்திருந்தது. கோட்டை கொத்தளங்களுடனும், சிவாஜியின் தலை நகருடனும், மஹாராஷ்டிரம் முழுதும் மூகம்மதியப் படைத் தலைவர் கையில் அகப்பட்டுப் பதைத்து வந்தது. சிவாஜியும் அவரது வீர புருஷர்களும் போர் புரிந்து இறந்ததெல்லாம் வீண் ஆனது போல் தோன்றிற்று. ஆனால், கோட்டைகளும் தலை நகரங்களும் போனதால் என்ன? சுதந்திரம் பெற உறுதி கொண்ட மக்களின் பலத்த கோட்டை அவர்களது இதயத்திலன்றோ உள்ளது. அதன் கொடியே அதன் உயர்ந்த லக்ஷியம். அதன் கொடி எங்கெங்கெல்லாம் பறக்குமோ அங்கெங்கெல்லாம் அவர்களது தலை நகரம் இருக்கும். "மஹாராஷ்டிரம் முழுதும் தோற்றாலும் சென்னைக்கு யுத்தத்தை எடுத்துச் செல்வோம். ராயகட் விழுந்தாலும் சரி, சுதந்தர ஹிந்து சாம்ராஜ்யக் கொடியை செஞ்சியில் நாட்டுவோம். ஆனால் யுத்தத்தைமட்டும் கைவிட மாட்டோம்.'' இவ்விதமான தளராத உறுதியுடன் இருபது

ஆண்டுகளுக்கு மேல் ஔரங்கசீப்பின் பலத்த படைகளை மராட்டியர் எதிர்த்து வரவே, அவர் ஏமாற்றத்தால் மனம் உடைந்து சிந்தை கலங்கி, 1707-வது வருஷம் ஆமத் நகரில் தேகம் தளர்ந்து உயிரையும் கக்க நேர்ந்தது.

இந்த நீண்ட யுத்தத்தில் அவர்களுக்கு அனுகூலத்தை யளித்தது அவர்களுடைய கனிமீகாவா என்னும் மராட்டியப் போர் முறையின் அற்புதத் தந்திரங்களே. இணையற்ற தலைமையின்கீழ் மின்னல் வேகத்துடனும், தளராத தீரத்துடனும் மராட்டியப் போர் வீரர்கள் கூடிக் கலந்தும், முன்சென்று பின் வாங்கியும், பாய்ந்து தாக்கிப் பின்பு விலகியும், படையெடுத்து எதிரிகளைப் பலக்கத் தாக்கி ஓடி மறைந்தும் இவ்விதமாகப் போர் புரியவே, முகலாயர் பிரமையடைந்து ஒவ்வொரு போர்க் களத்திலும் தோல்வி யுற்று மராட்டியரைக் கைப்பற்ற முடியாமல் தவித்து நின்றார்கள். ஸுல்பிகர்கான், அலிமஸ்தன்கான், ஹிம்மத் கான், காஸம் முதலிய புகழ்பெற்ற முகமதியப் படைத் தலைவர்களெல்லோரும் ஒருவர் தவறாமல் தோல்வியுற்றோ, தாழ்வடைந்தோ, கைப்பற்றப்பட்டோ, கொலையுண்டோ, போனார்கள். தனாஜீ, ஸந்தாஜி முதலிய மராட்டியப் படைத் தலைவர்கள் செஞ்சி, காவிரிப் பாக்கம், துந்தாரி முதலிய பல போர் முனைகளிலும் முகமதியச் சேனைகளைச் சின்னபின்னமாய்த் துகளாக்கி, மஹாராஷ்டிரத்தை மீண்டும் ஜயிக்க வேண்டும் என்ற ஔரங்கசீப்பின் கொடிய பேராசையைக் குலைத்தழித்து நாசமாக்கினார்கள். முகலாயச் சக்கிரவர்த்தியின் கூடாரத்துள்ளும் புகுந்து அந்த முகலாயச் சிங்கத்தை அதன் குகையிலேயே கைப் பற்றி யிருப்பார்கள். முகலாயரது தங்கக் கூடாரமெல்லாம் வெற்றி பெற்ற மராட்டியர் கையில் வீழ்ந்தபோது, தற்செயலாக வெளியே போயிருந்ததால் அதிர்ஷ்ட வசமாய் அந்த முகலாய மன்னர் உயிருடன் தப்பினார்.

அக்காலத்திய மராட்டியத் தலைவர்களுடைய தேச ஆவேசத்தை விளக்க ஓர் உதாரணமே போதும். முகலா யர் கட்சியில் சேர்ந்து செஞ்சி முற்றுகைக்கு உதவி புரிந்துவந்த சில மராட்டியப் பிரபுக்களைத் தமது கட்சியில் கொண்டுவரக் கண்டோபல்லால் முயற்சியெடுத்து வந்தார்.

நாகோஜி ராஜேவை மராட்டியர் கட்சியில் சேர்க்க ரகசிய ஏற்பாடுகள் நடந்து வந்தன. அவர் மட்டும் ராஜாராமின் கட்சியில் சேர்ந்தால், செஞ்சியில் முகமதியச் சேனைகளை எவ்வளவு சுலபமாக வென்று அழித்துவிடலாம் என்றும், தமது சுதேசத்தையும் முன்னோர்களின் தருமத்தையும் பாதுகாப்பதற்கு மராட்டியர் செய்யும் முயற்சிகளில் ஒத்துழைப்பது அவரது கடமையாகும் என்றும் அவருக்கு எடுத்து விளக்கப்பட்டது. இந்த வேண்டுகோள் வீணாக வில்லை. உடனே தமது ஐயாயிரம் வீரர்களுடன் நாகோஜி ராஜே முகமதியக் கட்சியிலிருந்து விலகி மராட்டியர் கட்சியில் சேர்ந்துவிட்டார். அதன் பிறகு முகலாயரது உத்தியோகத்தில் இன்னமும் தயங்கி நின்ற ஷிர்காவையும் தூண்டுவதற்குக் கண்டோபல்லால் நிச்சயித்தார். ஆனால், ராஜாராமின் அபாயத்தை அறிவித்ததும், ஷிர்கா சீறி விழுந்து துடுக்காகப் பேசினார், "ராஜாராம் மட்டுமன்றி போன்ஸ்லே குடும்பமே இவ்வுலகினின்று ஒழிந்து போவதானாலும் எனக்கு அக்கறை என்ன? ஷிர்கா வம்சத்தவர்களை ஸம்பாஜி கண்ட இடத்திலெல்லாம் கொலை செய்யவில்லையா? ஷிர்காண என்றாலே பாவக் கொலை என்று ஆகிவிட வில்லையா?" அதற்குக் கண்டோபல்லால் உருக்கமாகப் பதில் உரைத்தார், "நேயரே, கேளுங்கள். நீர் சொல்லுவது முற்றிலும் உண்மையே. ஆனால் அதே ஸம்பாஜி என் குலத்தவர்களில் மூவரை யானையின் அடியின் கீழ் மிதித்துக் கொலை செய்வித்ததும் உண்மை யன்றோ? இப்போது நம்மவர்க்குள் உள்ள சில்லறைக் குடும்பச் சச்சரவுகளைப் பாராட்டலாமா? நாம் இப்போது போர் புரிவது போன்ஸ்லே குலத்தையோ அன்றி வேறு குலத்தையோ அல்லது மனிதரையோ உயர்த்துவதற்காக வன்று. ஹிந்து சாம்ராஜ்ய ரட்சணத்துக்காகவே—ஹிந்து சாம்ராஜ்யத்துக்காகவே நாம் போர் புரிகிறோம்" ஷிர்க்காவால் இந்தத் தேசிய உணர்ச்சிக்கு இணங்காமல் இருக்க முடியவில்லை. தமக்கும் தம் குடும்பத்திற்கும் இழைக்கப் பட்ட அநீதிகளை யெல்லாம் மறந்து மன்னித்து முகலாயரிட மிருந்து ராஜாராமைத் தப்புவிக்க உதவி செய்வதாய் வாக்களித்து, முகலாய நாட்டினின்றும் ராஜாராம் தப்பி வெற்றியுடன் மஹாராஷ்டிரத்துக்குத்

திரும்பி வந்தபோது பல அரிய உதவிகளையும் புரிந்தார்.

இவ்விதம் சிவாஜி காலத்தில் மட்டும் அல்லாமல் அதற்குப் பிற்பாடும் மராட்டிய மக்களிடம் உயர்ந்த தேசிய ஆவேசம் ஓங்கி நின்றது. அயலாரும் மிலேச்சரு மான பகைவர்களது கொடுமையி னின்றும் ஹிந்து தரு மத்தைக் காத்து ஹிந்து ஜாதியின் அரசியல் சுதந்திரத்தை மீண்டும் பெற்றுயர்த்தும் தெய்விக போதனை அவர்களி டம் ததும்பி நின்றது. அத்தகைய பகைவருடன் போர் புரிந்து வெற்றி பெறுவது வெறும் கொள்ளைக் கூட்டத் தாரால் முடியாத காரியம். இந்தியாவில் அதுவரையில் ஒரு ஜாதியாரும் அத்தகைய அபாயத்தினின்று தப்பியது கிடையாது. அத்தகைய அபாயத்தினின்று நாட்டைக் காத்த தேச பக்தர் எல்லோருக்கும் உறுதியையும் தைரி யத்தையும் அளித்தது அவர்களது உயர்ந்த சமூக ஆத் மார்த்த லட்சியமே.

---

## 6. மஹாராஷ்டிர மண்டலம்

> “கையில் ஏற்கெனவே இருப்பதைக் காப் பாற்றி, அதை மேன்மேலும் விருத்தி செய்து, மஹாராஷ்டிர ராஜ்யத்தை எவ்விடத்திலும் நாட்டுவீராக!”
>
> (ராமதாஸர்)

ஹிந்துக்களுக்கு விரோதமான துராசைக ளெல்லாம் வீண்படவே, ஔரங்கசீப் சோகத்துடன் ஏங்கி இறந்தார். மராட்டியரோ காண்டேஷ், கோண்டவன், பீரார், குஜராத் முதலிய முகலாய மாகாணங்களுள்

புகுந்து நாடெங்கும் போர் புரிந்து வந்தார்கள். ஷாஹூ வும் விடுதலை யடைந்தார். மஹாராஷ்டிரத்திலே ஸ்வராஜ் யத்துக்கும், சுதந்திர மற்ற மைசூர், திருவாங்கூர் ராஜ்யங் களிலும் மற்றும் தக்காணதது ஆறு சுபாக்களிலும் சௌதாயி, ஸர்தேசமுகி வரிகளை வசூலிப்பதற்கும், உள்ள உரிமைகளை முகலாயச் சக்ரவர்த்தி மராட்டியர் களுக்கு அளித்துவிட்டார். இந்தக் காரணங்களால் மராட்டியர்களது பலம் அதிகரித்தது. தம்முள் உள்ள சில்லறைச் சச்சரவுகளை அடக்கித் தமது நாட்டில் ஒழுங்கு நாட்ட மராட்டியருக்குச் சற்று ஓய்வுகாலம் கிடைத்தது. அவர்கள் இடையே குறைகள் பல இருந்தும், ஒற்றுமை யும் வலுவும் வீரமும் சிதறவில்லை. மஹாராஷ்டிர மண் டலம் தோன்றி ஹிந்து சாம்ராஜ்யத்தை ஹிந்துஸ்தானம் முழுவதிலும் நிலை நிறுத்தியது.

மஹாராஷ்டிர மண்டலத்தில் மேற்கூறிய குறைகள் இருந்துவந்தன. மற்ற ஹிந்து மக்களுடன் மராட்டியர் களும் பொதுவாகக் கொண்ட தேசியத் திட்டங்களினால் இக் குறைகளில் பல ஏற்பட நேரிட்டது. இவைகளைப் பற்றிப் பின்னால் எடுத்துரைப்போம். இப்பொழுது ஒன்று மட்டும் சொல்வோம்—இக் குறைகளை நாம் உணராமல் இருக்கவில்லை. மராட்டிய மக்களிடம் தேசிய உணர்ச்சி யைத் தோற்றுவித்து ஹிந்து விடுதலைப் போரில் கடுமை யான முயற்சி செய்து வெற்றி பெறத் தூண்டிய உயர்ந்த தேசிய லட்சியங்கள் நிரம்பி யிருந்த அக்காலத்திலும் அம் மக்களில் சிலரிடம் சுயநலம், இழிவான நோக்கம், அடக்க மற்ற பேராசை இவைகள் இருந்தன என்பதை நாம் மறைத்து ஒளிக்க வில்லை. இக் குறைகள் இல்லாதிருந் தால் மராட்டியர் மனித வர்க்கத்தில் சேராமல் தெய்வங் களாகவன்றோ விளங்கி யிருப்பார்கள். இப்போது நாம் இங்கு ஆராய்ச்சி செய்வது ஹிந்து இயக்கத்தின் பொது வான விஷயங்களைப் பற்றியதே யன்றி ஆங்காங்கு நடந்த சிறு விஷயங்களைப் பற்றியதன்று. ஆதலால் மராட்டியருள் சிற்சிலரிடம் அவ்வப்போது குறைகள் தோன்றிய போதிலும், அவர்கள் ஏற்றுக்கொண்ட உன் னதமான காரியத்தின் சிறப்பையும், அவர்கள் செய்த அரிய

தியாகத்தின் உயர்வையும், அவர்கள் அடைந்த வெற்றியின் அளவையும் ஆராய்ந்து பார்த்தால் தேசபக்தி யுள்ள ஒவ்வொரு ஹிந்துவும் அவர்களை மெச்சிப் பாராட்ட வேண்டி யிருக்கிறது. தேசிய இயக்கத்தை நடத்திய அக் காலத்துத் தலைவர்களின் சொற்களையும் செயல்களையும் குறைகூற முடியாத சாட்சியத்தையும் ஆதாரமாகக் காட்டி இந்த உண்மையை இச் சிறு புத்தகத்தில் விளக்குவோம்.

மஹாராஷ்டிரத்திலே ஒழுங்கை நாட்டியதும், பாலாஜீ விஸ்வநாதருக்கு டில்லி ராஜாங்க விவகாரங்களிலும் தலையிட முடிந்தது. மராட்டியருக்கோ முகமதியரிடமிருந்து அபாயம் ஒன்றும் நேரிடக் கூடியதா யில்லை. கலகம் செய்யும் தமது சேனைத் தலைவர்களிட மிருந்தும் மந்திரிமார்களிட மிருந்தும் தம்மைக் காப்பாற்றும்படி முகமதியச் சக்ரவர்த்தியே மராட்டியர்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். மராட்டியரின் விடுதலைப் போரினால் முகமதிய ஏகாதிபத்தியம் அவ்வளவு தூரம் ஒடுங்கி உடைந்து விட்டது. 1718-வது வருஷத்தில் 50,000 போர் வீரர்களைக் கொண்ட படையுடன் பாலாஜீ விஸ்வநாதரும், தாபாடேவும் டில்லிமீது படை யெடுத்து, சையது சகோதரர்களின் உரிமைகளுக்கு ஆதரவு அளித்தார்கள். ஏனென்றால் தக்காணம் முழுவதிலும் சௌத், ஸர்தேஷ்முகி வரிகளை விதித்து வசூல் செய்யும் உரிமையை ஸையது சகோதரர்கள் மராட்டியர்களுக்கு அளித்திருந்தார்கள். டில்லியில் இருந்த முகமதியர்களுக்கு ஐம்பதினாயிரம் படை கொண்ட ஹிந்துக்கள் வருவது பிடிக்கவில்லை. ஆகையால் மராட்டியர் ஸ்வராஜ்யத்துக்கும் சொத்துக்கும் உரிமைகளை முகலாயச் சக்ரவர்த்தி யிடமிருந்து பெறுவாரேல், அவர்களை வழிமறித்து அவர்களது தலைவரைக் கொலை செய்யவும் சதியாலோசனை செய்திருந்தார்கள். மராட்டிய வீரர்களுக்கு இது தெரிந்தவுடன் பானு என்பவர் தமது தலைவரின் உயிரைக் காக்க முன் வந்து அவசியமானால் தமது உயிரையும் பலி கொடுக்கத் தயாராக விருந்தார். ஆதலால் பாலாஜீ பீஷ்வா முகலாயச் சக்ரவர்த்தியிட மிருந்து ஸன்னத்துக்களைப் பெற்றவுடன்

ரகசிய வழியாக மராட்டியப் படையிடத்துக்குத் திரும்பி வருவது என்றும், பானு அவரைப் போல் மாறுவேடம் தரித்து தகுந்த மரியாதையுடன் வழக்கமான பாதையிலே பாலாஜியின் பல்லக்கில் சவாரி செய்வது என்றும் ஏற்பாடு ஆயிற்று. பீஷ்வாவின் பல்லக்கைப் பார்த்ததும் மதவெறி பிடித்த முகமதிய வஞ்சகக் கூட்டம் அதைத் தாக்கி அங்கு வந்த சில மராட்டியர்களைத் துண்டுபடுத்தி, பானுவை உண்மையான பாலாஜீ என்று நம்பி அவரையும் வெட்டி வீழ்த்தினார்கள். ஆனால் முகலாயச் சக்ரவர்த்தியிடமிருந்து வாங்கிய ராஜாங்க தஸ்தாவேஜுகளுடன் பாலாஜீ மராட்டிய படையைச் சௌக்கியமாக அடைந்தார். தேச நன்மையின் பொருட்டுச் செய்யப்படும் மக்களின் இத்தகைய ஆத்ம தியாகத்தினால் தேச சரித்திரத்துக்கு இதிகாச மகிமை ஏற்படுகிறது. இத்தகைய தியாகங்களில் சிலவற்றையே நாம் ஆங்காங்கு உதாரணமாக எடுத்துச் சொல்வோம். அவைகளிலிருந்தே இந்த இயக்கத்தின் உயர்ந்த லட்சியம் தெளிவுற விளங்கும் என்று நம்புகிறோம்.

---

## 7. பாஜிராவ் தோன்றியது

"ஹிந்து சுதந்திரப் போரைச் சுதந்திர மஹாராஷ்டிரமே நடத்த வேண்டும்"

"அரசருக்கும், தருமத்துக்கும் விடுதலை வாளெடுத்துப் போர் புரியும் சுதந்திர வீரனே என் பின் வரட்டும். எம்மைக் கட்டிய விலங்குகளை உடைத்தெறிந்து அடிமைத் தளத்தின் துன்பங்களை யொழிப்பதன் பொருட்டு உயிர் ஈவதற்கும் தயாராக இருக்கிறோம். அதனால் எமது மக்கள்

> அடிமைகளா யில்லாமல் சுயேச்சையுடன் விளங்கு வார்கள்; நிமிர்பிடித்த துஷ்டர்கள் தாழ்ந்து மெலி வார்கள்; அவர்களது கொடுங்கோ லாட்சியும் உடைந்து ஒழியும்—நமது வாளின் ஒவ்வோர் அடி யிலும் சுதந்திரம் ஒலிக்கும். விடுதலைக்காகப் போர் புரிவதின்றேல், வீணே வாழ்ந்திடாமல் இறப்பதுவே மேலாகும்.''

டில்லியிலிருந்து திரும்பிய பிறகு 1720-வது வருஷம் பாலாஜி விஸ்வநாதர் இறந்தார். அவரது புத்திரரான பாஜிராவ் மஹாராஷ்டிர மண்டலத்துக்குத் தலைவரானார். ஷாஹு மஹாராஷ்டிரத்தின் அரசராக இருந்து வந்தார். சிவாஜி பிறந்ததற்குப் பிற்பாடு மராட்டியச் சரித்திரத்தில் நடந்த விசேஷச் செய்தி பாஜி ராவ் அரசியல் காட்சியில் தோன்றியதே. அனேக பெரிய ராஜிய விஷயங்களில் அவர் நிச்சயமும், நிர்வாகமும் செய்ய வேண்டி யிருந்தது. மஹாராஷ்டிரத்தின் ராஜிய சுதந்திரம் நாட்டப்பட்டு, மராட்டிய மக்கள் உயர்ந்த ஒழுங்கும் வலிவும் பெற்றுச் சுதந்திரத்துடன் தமது தேசத்தையும் தருமத்தையும் பாதுகாக்க முடிந்திருந்தது. மராட்டியர்கள் டில்லி அரசியல் விவகாரங்களில் தலையிடாமல் மஹாராஷ்டிரத்தில் மாத்திரம் முயற்சிகள் செய்து வந்தார்களானால், தாங்கள் பாடுபட்டுப் பெற்ற பலன்களை அமைதியுடன் சில காலமேனும் அனுபவிப்பதற்காகவே—மராட்டியத் தலைவர்களில் சிலர் இவ்வித மனப்பான்மையுள்ளவர்களாய் ஷாஹு சத்ரபதியிடம் போதனை செய்தார்கள். இதை நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லி மஹாராஷ்டிரத்தின் எல்லைக்கு வெளியே ஹிந்து விடுதலைப் போரை நடத்தி விடுவது கூடாது என்று சொல்லி யிருந்தாலும், அவர்கள் தமது நிலைமையில் திருப்தி யடைந்து அத்துடன் வாளா யிருந்திருப்பார்கள் என்று சொல்ல முடியாது. அஃதின்றி அயலார் மஹாராஷ்டிரத்தில் பிரவேசிக்காமல் தடுத்து, மராட்டியர் தமது காரியங்களை மட்டும் கவனித்து, வெளி விஷயங்களில் தலையிடாமல் அமைதியுடன் இருக்க முடியுமானால் அப்படி யிருப்பது சரியாகுமா? சென்ற இரண்டு மூன்று தலை முறையாக அவர்கள் போர் புரிந்து ரத்தம் சிந்தியதெல்லாம் எதற்காக? வெறும் அமைதிக்கும்

சுகத்துக்குமாகவன்று. மேலும் மஹாராஷ்டிரத்துக்கு வெளியே உள்ள ஹிந்து சகோதரர்களின் துன்பங்களைக் கண்டு வாளாவிருந்து சுகமா யிருப்பதில் அமைதியிருக்குமானால் அதில் என்ன மேன்மை யிருக்கிறது? சிவாஜியும் அவரது வீர புருஷர்களும் விரும்பிப் போற்றிய லட்சியம் கேவலம் மஹாராஷ்டிர ராஜ்யம் மட்டும் அன்றே—' ஹிந்து ஸ்வராஜ்யமன்றோ?

அன்னியர் கொடுங்கோ லாட்சியிலிருந்து மஹாராஷ்டிர மக்கள் விடுதலை பெற்றிருந்தும், இந்தியாவின் மற்றப் பாகங்களி லிருந்த கோடிக்கணக்கான ஹிந்து சகோதரர்களின் கதி யென்ன? "தருமத்தின் பொருட்டு உயிர் ஈவோம்" என்று வலியுறுத்தி, "தீர்த்த க்ஷேத்திரங்களெல்லாம் அசுத்தம் அடைந்தனவே" என்று ராமதாஸர் புலம்பவில்லையா? காசி விசுவநாதர் ஆலயத்தின்மீது துருக்கர் பிறை வெற்றியுடன் பறந்துகொண் டிருக்கும் போது மராட்டியர் ஸ்வதர்ம ரட்சணம் புரிந்துவிட்டதாய்த் திருப்தி யடைய முடியுமா? டில்லியில் யுதிஷ்டிரரின் ஹிந்து சிங்காதனத்தின் மீது அயலான் அமர்ந்திருக்கும்பொழுது, சிவாஜி கனவு, கண்ட ஹிந்து ஸ்வராஜ்யம், ஹிந்து சாம்ராஜ்யம் பூரணமாகி விடுமா? மராட்டியர் பண்டரிபுரத்திலிருந்து துருக்கர் பிறையைத் துரத்தி, நாஸிக் க்ஷேத்திரத்தை மத வெறி பிடித்த முகமதியர் தூஷணையிலிருந்தும் காப்பாற்றினார்கள். ஆனால் காசி, குரு க்ஷேத்திரம், ஹரித்வாரம், ராமேசுவரம், கங்கா சாகரம் இவைகளின் நிலைமை என்ன? அவைகள் பண்டரிபுரத்தைப் போலும் நாஸிக்கைப் போலும் புனிதமான க்ஷேத்திரங்கள் அல்லவா? அவர்களது முன்னோர்களின் சாம்பல் கோதாவரியில் மட்டும் அன்றிக் கங்கையிலும் விழுந்திருந்தது. அவர்களது தெய்வாலயங்கள் ஹிமாலயத்தி லிருந்து ராமேசுவரம் வரையிலும், துவாரகையி லிருந்து ஜகன்னாதம் வரையிலும் பரவி யிருந்தன. ராமதாஸர் பாடியபடி துருக்கர் பிறையின் நிழல் விழுமளவும் கங்கை யமுனையில் உள்ள ஜலம் அசுத்தியடைந்து ஸ்நான பானங்களுக்குத் தகுதியற்றே யிருக்கும் "இப்போது முகமதியர்கள் பலாட்டியர்களாய் இருக்கிறார்கள். தன்னைக் காத்துக்கொள்ள வல்ல ஹிந்து ஒருவனும்

இல்லையே'' என்று ராமதாஸர் மனம் நொந்து, ''தருமத்துக்காக உயிர் ஈவோம். இறப்பதாயினும் நாம் பகைவரை விடாமல் கொன்றே வரவேண்டும். இவ்விதம் பகைவரைத் தாக்கி அழித்து நமது ராஜ்யத்தை மீண்டும் பெறுவோம்'', என்று மராட்டியருக்குப் போதித்தார். ஆனால், முகமதியக் கொடுங்கோலாட்சி முறிபடலாயிற்றா? ஹிந்துஸ்தானமெங்கும் ராஜிய மத விஷயங்களில் அடிமைத்தனம் நீங்கி விட்டதா? மஹாராஷ்டிரத்தில் மட்டுமன்றி ஹிந்துஸ்தானம் முழுவதிலும் முகமதிய ஏகாதிபத்தியமும் பலமும் ஒடுங்கினாலன்றி ஹிந்து தருமமோ ஹிந்து ராஜ்யமோ செழித்து நிற்க முடியாது. முகமதிய ஆதிக்கத்தின்கீழ் ஹிந்து பூமியில் ஒரு சதுர அங்குலமேனும் அடங்கி யிருக்கும் வரையில் சிவாஜி, ராமதாஸர் இவர்களுடைய உயர்ந்த லட்சியம் பலிக்காமல் வீண் கனவுகளாகவே யிருக்கும். மேலும் சுதந்திரப் போரில் அந்த ஐம்பது வருஷங்களுக்கு மேலாக ஆயிரக் கணக்கான மக்கள் செய்திருந்த ஆத்மத் தியாகமும் வீண் என்றே கருதப்படும். "இழிவான அடிமைத்தனத்தில் ஹிந்து நாட்டையும் ஹிந்து சமூகத்தையும் கட்டியிருக்கும் விலங்குகள் உடைந்து, ஹிந்து மக்கள் யாவரும் தமது மத ஆராதனைகளைத் தைரியமாக நடத்தச் சக்தி பெற்று மகத்தான வலுவுள்ள ஹிந்து சாம்ராஜ்யத்தை நாட்டும் நாள் வரையில் வெளி யெடுத்த வாளை உறையுள் போடுவதில்லை என்று உரக்கக் கூறிய வீரமக்களே! காசி விசுவநாதர் ஆலயம் இடிக்கப்பட்டு அதன் மீது ஒரு முகமதிய மசூதி தோன்றும் போதும், தடங்கலின்றி அயலானின் குதிரைப் படைகள் புனிதமாகிய சிந்து நதியைத் தாண்டி வரும் போதும், ஹிந்துக் கடல்களில் அன்னியர் கப்பல்களின் மீது பகைவரது கொடி திமிருடன் பறக்கும்போதும் நீங்கள் சபதத்துடன் வெளியே யெடுத்த வாளை உறையுள் தள்ளி அற்ப சுகங்கருதி அமைதி நாடுவது தகுமா? அற்ப சுயநல லாபங்களைக் கருதாது, ஹிந்து தருமத்தையும் ஹிந்து ஸ்வராஜ்யத்தையும் ஹிந்து சாம்ராஜ்யத்தையும் ஸ்தாபிப்பதற் கென்றே இந்த இயக்கம் தொடங்கிற்று என்பது உண்மையானால்,—மராட்டிய மக்களே! நூற்றுக் கணக்காகவும் ஆயிரக் கணக்காகவும் முன்வந்து, உமது

தெய்விகம் பொருந்திய காவி வருணக்கொடியை நருமதை, சாம்பல், யமுனே, கங்கை, சிந்து, பிரமபுத்திரா இவைகளுக் கப்பாலும், கடல் வரையும் எடுத்துச் செல்லுங்கள். ராமதாஸர் உபதேசித்தபடி தளராமல் மேன்மேலும் முயலுங்கள். "பகவானிடம் நம்பிக்கை வைத்து பகைவரை எதிர்த்துக் கிளம்பி, தரும ஸ்தாபனத்தின் பொருட்டு நாடெங்கும் கொந்தளிப்புப் பரவ வேண்டும்" இவ்விதமாக அக்காலத்தில் மஹாராஷ்டிரப் போர் வீரர்கள், ராஜ தந்திரிகள், முனிவர்கள், இலக்கிய நிபுணர்கள் யாவரும் தம்முள் யோசித்தார்கள். பாஜிராவ், சிவாஜி அப்பா, பிரமேந்திரஸ்வாமி, தீக்ஷித், மதுரா பாய் ஆங்க்ரே இன்னும் பல தலைவர்களது கருத்து இவ்விதமாகவே யிருந்தது. மராட்டியரது வீரச் செயல்கள் இன்னமும் பரவ வேண்டும் என்பது அவர்களது நோக்கம். அதுதான் நியாயமும் தருமமுமானது; அவசியமானது. மஹாராஷ்டிரம் விரும்பினாலும் தனித்து வாழ முடியுமா? ஹிந்து மக்களின் சுக துக்கம், வடக்கே சிந்து முதல் தெற்கே கடல் வரையில் உள்ள இந்தியாவின் மற்றப் பாகங்களில் உள்ள ஹிந்து சகோதரர்களின் சுகதுக்கங்களைப் பொறுத்திருந்தது.

முன் காலத்தில் ஹிந்து மக்கள் தத்தம் மாகாணங்களின் நன்மையை மட்டும் தனித்துக் கருதியதால்தான் ஹிந்து சமூகத்துக்கும், ஹிந்து ஜாதிக்கும் அதோகதி நேராயிற்று என்னும் உண்மை மராட்டிய ராஜதந்திரிகளின் நுண்ணறிவுக்குப் புலப்படாமலில்லை. முடியுமானால் அகில ஹிந்து நிலைமைக்கே முயற்சி செய்வதென்று தீர்மானித்தார்கள். இவ்விதமே நாதிர்ஷா இந்தியாவின்மீது படையெடுத்தபோது பாஜிராவ் பல ஹிந்து அரசர்களுக்கு எழுதியனுப்பினர். தேச பக்தி ஆவேசத்துக்காக மட்டுமன்றித் தமது ராஜ்யச் செல்வங்களைக் காத்து விருத்தி செய்வதற்காகவும் மராட்டியர்கள் சுதந்திரப் போரைப் பூரணமாக நடத்தி அகில ஹிந்து மக்களை யொருங்கே கட்டுப்படுத்தும் மகத்தான பலமுள்ள ஹிந்து சாம்ராஜ்யத்தை நாட்டும் வரையில் ஓய்வின்றிப் போர்புரிவது அவசியமாய் இருந்தது. தமது சமூக மக்கள் அயலானின் ஆதிக்கத்தில்

அடங்கிக் குன்றி வரும்போது உண்மையான ஹிந்து அமைதியுடன் தனது லட்சியத்தையடைய முடியுமா? இந்தக் காரணங்களினால் டில்லியையும் ஆளாமல் ஸதாராவில் ஆட்சிபுரிய முடியாது என்று தலைவர்களுக்கு மட்டுமன்றி மராட்டியப் படைகளில்இருந்த வீரர்களுக்கும் தெளிவாயிற்று. மராட்டிய மண்டலத்தின் தலைவர்கள் எல்லோரும் ஒருங்கே ஷாஹுவின் தலைமையின்கீழ்க் கூடித் தமது வெளிநாட்டு அரசியல் நியமத்தைத் தீர்மானிக்கலானார்கள். அப்போது பாஜிராவ் இவ்விதமே பேசினார். அவருக்குத் தமது மக்களின் கருத்தும் அவாவும் தெரியும். தமது வார்த்தைகளில் ஜனங்கள் வைத்திருக்கும் மதிப்பும் அதிகாரமும், வெளிநாட்டு அரசியல் விஷயங்களில் மராட்டியர் தலையிடும் பிரச்சினையில் உள்ள நுட்பமும் அவர் அறியாதவரல்லர். "டில்லிக்கு முற்படுங்கள். டில்லியைக் கைப்பற்றி முகமதிய ராஜாங்கத்தின் வேர்களையே அறுத்திடுவோம். இதில் என் தயங்கவேண்டும்? ஹிந்து வீரமக்களே! முன்செல்லுங்கள். ஹிந்து சாம்ராஜ்ய காலம் வந்துவிட்டது. துருக்கர் பலத்தை ஆழம் பார்த்துள்ள எனக்கு இந்த நம்பிக்கை பூரணமாக இருக்கிறது. சத்ரபதியே! பணமோ ஆட்களோ நீர் கொடுக்க வேண்டாம். இதற்கு அனுமதி தந்து எனக்கு ஆசிகூறும். இதோ நான் கிளம்பி நேரே சென்று துருக்க ராஜ்யத்தின் வேர்களையும் கிளைகளையும் அறுத்துத்தள்ளி வீழ்த்துகிறேன்."

போர் வீரனின் சொல்வன்மைக்கு வசப்படாதவரும் உண்டோ? பாஜிராவின் வீர வார்த்தைகளால் உணர்ச்சி பெற்ற ஷாஹு சத்ரபதியின் நாடிகளில் அன்று சிவாஜியின் ரத்தம் ஊறித் ததும்பியது போலும். "எமது மக்களின் வீரசிகாமணியே, சென்றுவருவீர். எமது படைகளைக் கூட்டி விரும்பிய இடமெல்லாம் சென்று திக்கு விஜயம் செய்து வருவீராக. டில்லியில் மாத்திரமன்றி ஹிமயமலையின் உச்சியிலும் இன்னர் கண்டிலும் நமது தெய்விகம் பொருந்திய கனகாம்பர வருணக்கொடியை வெற்றியுடன் நாட்டி வாரும்"—ஷாஹு பேசிய இந்தக் கொடி தங்கத்திலும் வெள்ளியிலும் அலங்கரிக்கப்பட்டதன்று.

உலகைத் துறந்த சன்னியாசிகள் உடுக்கும் காவிஉடையே ஹிந்துக் கொடியாகும். துறவின் உறுதியும், பகவத் பக்தியும், மாந்தரிடம் தயையும் விளக்கும் காவி வர்ண ஆடை. இந்தக் கொடியையே மராட்டியர் பின்பற்றிச் சென்றார்கள். அன்னியர் ஆட்சியினின்றும் ஹிந்து சமூகத்துக்கு விடுதலையை நாட்டி ஹிந்து தருமத்தைப் பாதுகாக்கும் புனிதமான லட்சியத்தை என்றும் ஞாபகப் படுத்துவதற்காகவே அவர்களுக்கு அக்கொடி வழங்கப் பட்டது. பவானியே அவர்களது வீரவாள்; காவியே (பகவா) அவர்களது வெற்றிக் கொடி; அதை உயர்த்தியவர் ராமதாஸர்; அதன்கீழ்ப் போர்புரிந்து அதை ஸஹ்யாத்ரி மலையுச்சியில் நாட்டியவர் சிவாஜி; இப்போதோ இன்னர் கண்ட்வரையில் அதை ஜயகோஷத்துடன் தாங்கிச் செல்வதாக ஷாஹூவும் அவரது வீரர்களும் தீர்மானித்தார்கள்.

அத்துடன் சபை கலைந்தது, அன்று முதல் மஹாராஷ்டிர மண்டலத்தின் வரலாறு அகில ஹிந்துஸ்தானத்தின் வரலாறாக மாறியது.

---

## 8. டில்லியின்மீது படையெடுப்பு

"அடே, இதென்ன யோசித்து நிற்கிறீர்கள்? வேகமாய்ச் சென்று தாக்குவோம் வாருங்கள். ஹிந்து பத பாதுஷாஹீ (ஹிந்து சாம்ராஜ்யம்) நெருங்கிவிட்டது!" (பாஜிராவ்)

பெருந் தலைவரான சிவாஜியின் உயர்ந்த லட்சியத்தையும், ஐதிகங்களையும், அரசியல் நியதிகளையும், யுத்த தந்திரங்களையும் பாஜிராவும் அவரது வீரமக்களும்

முற்றிலும் அறிந்து உணர்ந்திருந்தார்கள் என்பது அவர் ஷாஹுவின் முன்னிலையில் மராட்டியத் தலைவர்களுக்குக் கூறிய வார்த்தைகளி லிருந்து நன்கு புலப்படும். பல கஷ்டங்கள் இருந்தும் பொருட்படுத்தாமல் துணிந்து சிவாஜி ஹிந்து விடுதலைப் போரைத் தெற்கில் பரவச்செய்ய முயன்றதையும், தற்போது அவ்வளவு கஷ்டங்கள் இல்லா திருந்தும் மராட்டியர் வடக்கே சென்று யுத்த கோஷம் புரிந்திடாமல் தயங்கி வாளா விருப்பதையும் ஒப்பிட்டுக் கூறினார். மேலும், அவர் நிஜாம், பங்கஷ் முதலிய முகலாயச் சேனாதிபதிகளின் எதிரே நடத்திய படையெடுப்புக் களிலும் அவரது அறிவும் கருத்தும் விளங்குகின்றன. முகமதிய சேனாதிபதிகளிலும், ராஜதந்திரிகளிலும் முக்கி யத்துவமும் பலமும் பொருந்திய நிஜாமைக் கவிழ்த்து வதே அவரது முதல் காரியமாக இருந்தது.

ராஜ சபையில் சொல்வன்மை காட்டுவதில் மட்டு மன்றிப் போர்க்களத்தில் வீரங்காட்டுவதிலும் பாஜிராவ் சிவாஜிக்குத் தகுந்த சிஷ்யராக இருந்தார். 7–8–1727-ல் கடுமழையில் பாஜிராவ் சேனையுடன் கிளம்பினார்; ஔரங்கபாத்தை அடைந்து நிஜாமுக்குச் சேர்ந்த ஜால்னா விலும் அதைச் சுற்றியிருந்த ஜில்லாக்களிலும் யுத்த வரி விதித்தார். நிஜாமின் படைகள் இவாஸ்கான் தலைமையின் கீழ் அவரை எதிர்க்க முன்வந்தன. அவர்களுடன் போர் புரிந்த மாதிரியே பாஜிராவ் திடீரென்று மஹுருக்குச் சென்று அங்கிருந்து ஔரங்கபாத்துக்கு வந்து அந் நகரில் பளுவான யுத்தவரி விதிப்பதாக அறிவித்தார். அந்நகரைக் காப்பாற்றும் பொருட்டு நிஜாம் இவாஸ்கானைச் சேர முன் வந்தார். தம் தந்திரம் பலித்து நிஜாம் முற்றிலும் ஏமாறி யதைக் கண்ட பாஜிராவ் காண்டேஷை விட்டு குஜராத்துக் குள் புகுந்து அங்கிருந்த முகலாய ராஜப் பிரதிநிதியிடம் தாம் நிஜாமின் உத்திரவின்படி அம்மாகாணத்தின் மீது படையெடுத்து வந்திருப்பதாக உறுதியுடன் சொன்னார். ஔரங்கபாத்தைக் காப்பாற்ற ஓடி வந்த நிஜாமுக்கு இது தெரிந்ததும் கோபம் பொங்கி வந்தது. மராட்டிய யுத்த தந்திரங்களைக் கொண்டே பாஜிராவை வெல்ல வேண்டும் என்று விரும்பிப் பூனாமீது படையெடுத்து, பாஜிராவின்

நாடுகளில் கொள்ளையடிக்க முற்பட்டான். ஆனால் இதை யெல்லாம் பாஜிராவ் எதிர்பாராமல் இருக்கவில்லை. இதற்கு முன்னரே குஜராத்தை விட்டு மின்னல் வேகத்துடன் நிஜாமின் ராஜ்யத்துக்குள் புகுந்து விட்டார்.

பெரிய தந்திரத்தைச் சாதிப்பதாய் எண்ணி நிஜாம் பூனாவின் மீது படையெடுத்து வந்துகொண் டிருக்கும் போதுதான் பாஜிராவின் நாடுகளைக் கொள்ளையடிக்க முடியும் முன்பே அவரே தம் நாட்டில் புகுந்து கொள்ளையடித் திருந்ததை அறிந்து மனம் நொந்தார். ஆதலால் பூனா மீது படையெடுப்பதை விட்டுப் பாஜிராவைச் சந்திக்கக் கோதாவரிக் கரை வழியே துரிதத்துடன் வந்தான். இதற்குள் நிஜாமின் படைகள் களைத்து ஓய்ந்து விட்டார்கள். இதை யறிந்த பாஜிராவ் அவர்களைச் சண்டைக்கு இழுக்க எண்ணி, பால்கேத் என்னும் இடத்துக்கு அருகே, தாம் பகைவருக்கு என்று நிச்சயித்திருந்த ஸ்தானத்தில் நிஜாமைத் தூண்டி நிற்கச் செய்து அவர்களின்மீது திடீரென்று பாய்ந்தார். பெரிய துப்பாக்கிகளும், பீரங்கிகளும் இருந்தும் நிஜாம் மராட்டியரைத் தள்ளமுடியாமல் அகப்பட்டுக்கொண்டார். பாஜிராவின் சொற்படி அடங்கி நடக்க ஒப்பந்தம் செய்து கொள்ளாவிடில் தம் சேனை முழுதும் அழிந்துவிடும் என்று கண்டு கொண்டார்; அவ்விதமே பாஜிராவின் கட்டளைப்படி ஷாஹூ ஒருவரையே மராட்டியர்களது அரசராக அங்கீகரித்து, சௌத், ஸர்தேஷ்முகி வரிகளின் பழைய பாக்கிகளை யெல்லாம் கொடுத்துத் தமது நாட்டில் மராட்டிய வரி உத்தியோகஸ்தர்களை மீண்டும் நியமிப்பதாக ஒத்துக் கொண்டார்.

மராட்டியப் போர் முறையின் சிறந்த உதாரணமாக இந்தப் படையெடுப்பைச் சொல்லலாம். இதனால் பிற்காலத்திய மராட்டியப் படைத்தலைவர்கள் சிவாஜியின் பாடங்களை மறக்காமல் அபிவிருத்தி செய்து பல பெரிய போர்முனைகளிலும் பயிற்சிசெய்து வெற்றி நாட்டினார்கள் என்றும் விளங்குகிறது.

தக்காணத்து முகலாய ராஜப்பிரதிநிதியைப் போல் மாளவ மாகாணத்து முகலாய ராஜப் பிரதிநிதியும்

மராட்டியரிடம் தோல்வியடைந்தார். 1698-ம் வருஷம் உடாஜிபவார் மாளவத்தின் மீது படையெடுத்து மாண்டுவில் படை நிறுத்திய நாள் முதல், மராட்டியர் பலதடவை பல பக்கங்களிலிருந்தும் அந்த மாகாணத்தில் இருக்கும் முகலாயப் படைகளைத் தாக்கி வந்தார்கள். அந்த மாகாணத்து ஹிந்து மக்கள் முகமதியக் கொடுங்கோல் ஆட்சியாலும் மத அடக்குமுறைகளாலும் துன்புற்று வந்தார்கள். ஹிந்து விடுதலைப் போருக்கு முன்னர் ஹிந்துஸ்தானம் எங்கும் கொந்தளித்து ஹிந்து தேசிய உணர்ச்சியில் அவர்களில் பலர் ஊறித் ததும்பினர். மாளவத்திலே ஹிந்து சாம்ராஜ்யத்தை நாட்டுவதில் அவர்களில் அநேகருக்கு உற்சாகமும் ஆவேசமும் இருந்தது. மராட்டியரது பலம் நாடோறும் அதிகரித்து வருவதையும் அவர்களுடைய காரியங்களிலே மீறித் ததும்பும் ஹிந்து ஏகாதிபத்திய லட்சியத்தையும் அறிந்து மாளவ நாட்டுத் தாகூர்கள், மத குருக்கள், கனவான்கள் முதலிய ஜனத்தலைவர்களும் அன்னிய ஆட்சியினின்றும் தங்களது நாடு விடுதலைபெற உதவும் வழி அது ஒன்றே என்று மக்களுக்கு உணர்த்தி வந்தார்கள்.

அதிர்ஷ்டவசமாக மாளவ நாட்டில் அதிகச் செல்வாக்குள்ள அரசர் ஹிந்து சாம்ராஜ்யத்தில் ஆவேசம் கொண்டவர்—அவர்தான் ஜயபூர் அரசரான ஸவாயி ஜயசிங்கு. சத்ரசாலின் உயர்ந்த தேசிய அறிவு ஜயசிங்குக்கும் இருந்தது. அயல்நாட்டுப் பகைவரிடமிருந்து தமது சிறு ராஜ்யத்தின் சுதந்திரத்தைக் காக்க முடியாது என்று கண்டதும், சத்ரசால், ஹிந்து அல்லாத டில்லி முகமதிய பாதுஷாவுக்கு அடங்கி நடப்பதால் பல செல்வங்களுடன் இன்பமாக வாழலாம் என்றறிந்தும் அதை மதியாமல் மறுத்து, மராட்டியரேனும், ராஜபுத்திரரேனும், சீக்கியரேனும் யாராயிருந்தாலும் ஹிந்துவானல் சரி, அந்த ஹிந்துச் சக்ரவர்த்திக்கு வணங்கி நிற்பதுவே உத்தமமாகும் என்று தீர்மானித்து அகில ஹிந்து சாம்ராஜ்ய முயற்சியில் ஈடுபட்டவர்.

ஜயசிங்கு மாளவத்தில் கொடுமைகளால் துன்புற்ற ஹிந்து மக்களின் நன்மையைக் கருதிப் போராடுபவர்;

அதிகமான வரிப் பளுவால் வருந்தும் விவசாயிகள், நிலச் சுவான்கள், முகமதிய ஆட்சியால் தாங்கமுடியாத தாழ்ச்சியும் அவமரியாதையுமடைந்த தாகூர்கள், மதகுருக்கள் இவர்களுக்கெல்லாம் அவர் நல்ல போதனை செய்தார்; முகமதியரிடமிருந்து தங்கள் நாட்டு விடுதலையைக் காத்து ஹிந்து சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்கும்படி மராட்டியருக்கு அழைப்பு அனுப்பும்படி வற்புறுத்தினர்; அக்காலத்தில் ஆண்டுவந்த ஹிந்து ராஜ்யங்களில் மஹாராஷ்டிர மண்டலம் ஒன்றே சீருடன் நின்று போர்புரிந்து முகலாயரை நசுக்கி ஹிந்து மக்களின் பலத்தையும் ஒற்றுமையையும் அதிகரிக்க வல்லது என்பதைச் சிறந்த தேசபக்தரான அந்த ராஜபுத்திர வீரர் கண்டுகொண்டார். தம்மால் முகலாயக் கொடுங்கோலினின்றும் ஹிந்து மக்களை விடுதலை செய்ய முடியாவிட்டால், தம் சுயநல ஆசைகளையும், அகங்காரத்தையும், பொறுமையையும் அறவே துறந்து விட்டு அக் காரியத்தைச் செய்ய வல்ல சக்தியுள்ளவர்களுக்கு அப் பெருங்காரியத்தில் உதவிபுரிவதே உத்தம வழியாகும் என்று ஜயசிங்கு துணிந்தார்.

இந்த யோசனையைச் செல்வாக்குள்ள தாகூர் நந்தலால் மாண்டவிமுற்றிலும் ஆமோதித்தார். "மிலேச்சரைத் துரத்தி ஹிந்து மதத்தின் மேன்மையைக் காக்கும் பொருட்டு, மால்வா ஹிந்து மக்களின் சார்பாக அவர்கள் மராட்டியருக்கு அழைப்பு அனுப்பினர்கள். மராட்டியரும் தமது மாளவ ஹிந்து சகோதரர்களது வேண்டுகோளுக்கு உடனே சம்மதிக்கவே, பாஜிராவின் சகோதரரான சிமாஜி அப்பாவின் தலைமையின்கீழ் மராட்டியப் படைத் தலைவர்கள் மாளவத்தை நாற்புறமும் தாக்கி வந்தார்கள். முகலாயப் பிரதிநிதி தம் படைகள் யாவையும் கூட்டினர். ஆனால், மராட்டியர் அசைவதாகக் காணோம்—சமயம் பார்த்துத் திடீரென்று முகமதியரைத் தாக்கி தேவாஸ் என்ற இடத்தில் நடந்த போரில் முகமதிய ராஜப்பிரதிநிதியைக் கொன்றுவிட்டார்கள்.

ஆனால், அவ்வளவு சுலபமாக அந்தக் கொழுத்த மாகாணத்தைக் கைவிட முகலாயச் சக்ரவர்த்திக்கு மனம் வரவில்லை—மராட்டியரிடம் போர் புரிந்து வரும்படி ஒரு

புது ராஜப் பிரதிநிதியை அனுப்பினர். மராட்டியரிடம் அன்பு பாராட்டிய மாளவ ஹிந்துக்கள் மராட்டியர் படைகளில் சேர்ந்துகொண்டார்கள். முகலாய ராஜப் பிரதிநிதி பல யோசனைகள் செய்து தமது பெரிய சேனையின் உதவியால் மாண்டவகாட், கணவாய் முதலிய இடங்களில் மராட்டியரை அழிக்க முயன்ருர். ஆனல், மாளவ ஹிந்து மக்களின் உதவியால் மராட்டியர்கள் அவரை முற்றிலும் ஏமாற்றி விட்டார்கள். மல்ஹார்ராவ், பிலாஜி, சிமாஜி அப்பா இவர்களின் தலைமையின்கீழ் முகலாயப் படையைச் சின்னபின்ன மாக்கிக் கலைத்து, திரல் என்ற இடத்தில் நடந்த பயங்கரப் போரில் முகமதியரை நசுக்கி யழித்து அவர்களது ராஜப் பிரதிநிதியையும் கொன்று விட்டார்கள்.

இந்த இரண்டாவது ஜயத்தை யறிந்ததும் மாளவ நாட்டு ஹிந்து மக்களுக்குக் கங்குகரை யில்லாத மகிழ்ச்சி உண்டாயிற்று. சென்ற விடமெல்லாம் மராட்டியருக்கு வாழ்த்தும் வரவேற்பும் கொடுக்கப்பட்டன. தோல்வியிலும் துன்பத்திலும் அநேக நூற்ருண்டுகளைக் கழித்து வந்த ஹிந்து மக்கள் ஹிந்துக் கொடி வெற்றி பெற்று ஓங்குவதைக் கண்டு உள்ளத்தில் ஆவேசம் கொண்டு தேசிய உற்சாகத்திலும் சமூகக் கொண்டாட்டத்திலும் பரவசமானர்கள்.

புனிதமான லட்சியத்தின் பொருட்டுப் போர்புரிந்த வீரர்களையும் வெற்றி நாட்டிய மராட்டியர்களையும் வாழ்த்திக் கொண்டாடி எழுதிய கடிதமொன்றில் ஜயசிங்கு எழுதுகிருர் :

> "வீரர்களாகிய உங்களுக்கு எமது மனமார்ந்த வந்தனங்களை அளிக்கிறேன். நீங்கள் நாட்டிய வெற்றி மேன்மை தங்கியதே—அயலானை வெளியே துரத்தி மாளவ ஹிந்து மக்களுக்கு விடுதலையளித்து ஹிந்து தரும சமூக மரியாதையை மேன்மைப் படுத்தினீர்கள்''

உடனே மராட்டியர்கள் ஒழுங்கை நிலைநிறுத்தி, முகலாய உத்தியோகஸ்தர்களை யகற்றி, மஹாராஷ்டிர

ஏகாதிபத்தியத்தில் ஒரு பாகமாக அந்த மாகாணத்தை நிர்வாகம் செய்யவும் ஆரம்பித்தார்கள்.

ஆனால், டில்லி முகலாய மன்னரோ ஆசையின்னமும் விடாமல் முகமதுகான் பங்கஷ் என்ற புது ராஜப் பிரதிநிதியை அனுப்பினர். அவன் ஒரு ரோஹில்ல பட்டாணியன்; வீரமுள்ளவன்; தனது போர் வீரத்தினல் 'யுத்த சிங்கம்' என்று முகமதியர்களிடமிருந்து கீர்த்தி பெற்றவன். டில்லி முகமதிய மன்னர் அவனைப் பந்தேளா தலைவரான சத்ரசாலின் வலிமையை யடக்கி நசுக்கவும், பிறகு மாளவ நாட்டி லிருந்து மராட்டியரை வெளியே துரத்தவும் அனுப்பினர்.

முகமதுகான் பங்கஷ் முறைப்படி பந்தேள ராஜபுத்திரரை எதிர்த்தான். அவர்களோ தங்களது கீர்த்தி பொருந்திய தலைவரான சத்ரசாலின் தலைமையின்கீழ்ப் போர் புரிந்து முகமதிய ஆட்சியை யகற்றிச் சுதந்திர அரசியல் வாழ்வை யடைந்திருந்தார்கள். சத்ரசால் சிவாஜியைக் கொண்டாடுபவர்; அவரது பெயரைக் கேட்ட மாத்திரத்தில் ஆவேசமடைபவர்; தமது இளமைப் பருவத்திலேயே சிவாஜியைத் தலைவராகவும் குருவாகவும் கொண்டவர்; அதிலிருந்தே தமது குரு வாக்கின் படி ஹிந்து விடுதலை இயக்கத்தை பண்டில்கண்டில் நாட்டி அந்த மாகாணத்தை அயலார் ஆட்சியினின்றும் விடுவித்து, ஹிந்து தருமத்தையும் ஹிந்து தேசத்தையும் பாதுகாக்க வெகுபாடுபட்டு வெற்றியடைந்தவர்—ஆதலால் அவரை ஹிந்துமக்கள் யாவரும் "ஹிந்து சாம்ராஜ்ய க்ஷேமம்" என்று கொண்டாடி வாழ்த்தினர்கள்.

இப்போது அவர் முதுமைப் பருவத்தை யடைந்திருந்தார். பிரளயம்போல் பொங்கி அளவற்ற படையுடன் ரோஹில்லப் பட்டாணியர் தமது சிறு ஹிந்து ராஜ்யத்தைக் கவிழ்த்திட வந்ததைக் கண்டார். சிவாஜி, ராமதாஸர், பிராண நாதப் பிரபு இவர்களது ஹிந்து சாம்ராஜ்ய லட்சியத்தின் உணர்ச்சியில் வளர்ந்த முதிய ஹிந்து போர் வீரரான சத்ரசால் மராட்டிய மண்டலத் தலைவராய் சிவாஜியின் பலத்தையும் தெய்விகச் சோதியையும் விளக்கி நின்ற பாஜிராவுக்கு எழுதினர். சத்ரசால் ஹிந்து

புராண ஐதிகக் கோட்பாடுகளைக் காட்டி உதவி புரியும் படி எழுதிய அந்தச் சோக ரஸம் ததும்பிய கடிதத்தைக் கண்டதும் ஒவ்வொரு ஹிந்துவின் உள்ளத்திலும் ஹிந்து சாம்ராஜ்ய ஆவேசமும் ஹிந்து சகோதர உணர்ச்சியும் பொங்கிற்று.

"பாஜி, வருவீராக. மஹாவிஷ்ணு கஜேந்திரரைக் காத்தருளியதுபோல் நீரும் வந்து என்னை இந்த வஞ்சகப் பகைவனிட மிருந்து காப்பாற்றுவீராக."

இவ்விதம் சிவாஜியின் முதிய நண்பரும் சிஷ்யருமான சத்ரசால் முகமதியர் படையெடுத்து வந்தபோது மராட்டியரிடம் உதவி கேட்டதும், பாஜிராவ் ஒரு கணமேனும் தாமதியாமல் மல்ஹார்ராவ், பிலாஜி ஜாதவ், இன்னும் பன்னிரண்டு சேனாதிபதிகளோடும் 70000 படையுடனும் துரிதமாக வந்து தாமுராஹே என்ற இடத்தில் சத்ரசாலைச் சந்தித்து, பந்தேள ராஜபுத்திரப் படையில் எஞ்சி நின்றவர்களையும் சேர்த்துக்கொண்டு மழைக் காலத்தையும் பொருட்படுத்தாமல் புறப்பட்டார்.

சத்ரசாலை அவரது தலை நகரத்தினின்றும் துரத்தி, அவரது சிறு ஹிந்து ராஜ்யத்தைச் சுலபமாகக் கைப்பற்றியதால், முகமதுகான் கர்வம் மேலிட்டு மழைக் காலத்தில் ஓய்வு எடுக்க விரும்பினான். இவ்விதம் இவன் மதி மயங்கி இருக்கும்போது ஹிந்து வீரப் படைகளோ கொடிய மழையையும், பிரவேசிக்க முடியாத காடுகளையும், தாண்ட முடியாத மலைகளையும் சற்றேனும் பொருட்படுத்தாமல் வந்து திடீரென்று முகமதுகான் பங்கஷ்மீது பாய்ந்து 1729-வது வருஷம் ஜயத்பூரில் அவனைக் கெட்டியாகப் பிடித்துவிட்டார்கள். மராட்டியரால் கைப்பற்றப் பட்டு அடியுண்டு தோல்வியுற்று அந்த 'முகமதிய யுத்த சிங்கம்' ஏக்கமடைந்து தன்னுயிர் மிஞ்சினால் போதும் என்று பண்டல்கண்டையும் மால்வாவையும் வெற்றி பெற்ற ஹிந்துக்களின் கையில் விட்டு மானக்கேடான இழிவுடன் போர்க்களத்தினின்றும் முதுகுகாட்டி ஓடிப் போயிற்று. அந்த முதிய பந்தேள அரசரும் குதூகலத்துடன் தமது தலைநகரில் மீண்டும் பிரவேசித்தார். குடிகள்

யாவரும் அவரை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். மராட்டிய பீரங்கிகள் அவருக்கு ஜயகோஷம் புரிந்தன.

மராட்டியரிடம் நன்றியறிவு கொண்டு அந்த முதிய வீரர் பாஜிராவைத் தமது மூன்றும் புத்திரராக ஸ்வீகாரம் செய்துகொண்டார். அவர் இறந்த பிற்பாடு அவரது ஸ்வீகாரத்தின்படி அவரது ராஜ்யத்தில் மூன்றில் ஒருபங்கு பாஜிராவுக்குக் கொடுக்கப்பட்டது. இதிலிருந்தே அவர்கள் செய்த காரியங்களின் உயர்ந்த எண்ணங்கள் விளங்குகின்றன. இதிலிருந்தே பாஜிராவ் காலத்து ஹிந்துக்கள் தமது சொந்த சுயநலங்களைக் கருதாமல் தமது பொதுவான ஹிந்து உறவையும் சமூகத்தையும் மதத்தையுமே கருதியவர்களாய் ராஜிய சுதந்திரத்தையும் ஹிந்து சாம்ராஜ்யத்தையும் நிலைநாட்ட முயன்று வந்தது வெளிப்படையாக விளங்குகிறது.

இவ்விதம் மூன்றுவது முகமதிய ராஜப் பிரதிநிதி மால்வா, பண்டில்கண்ட் நாடுகளிலிருந்து ஓடிப்போனதால் அந் நாடுகளில் மஹாராஷ்டிர ஆதிக்கம் ஏற்பட்டது. மராட்டியர் கையில் அந் நாடுகளின் யுத்த மர்மஸ்தானங்கள் அகப்படவே அவர்களால் அங்கிருந்து ஹிந்து விடுதலைப் போரை மூகலாய சாம்ராஜ்யத்தின் பிரதான ஸ்தானத்துக்கே எடுத்துச் சென்று ஜயகோஷம் புரிய முடிந்தது.

இவ்வாறு மால்வர், பண்டில்கண்ட் நாடுகளில் படையெடுப்புக்கள் நடக்கும்போது குஜராத்திலும் மஹாராஷ்டிரப் படைகளும் ராஜதந்திரங்களும் மகத்தான வெற்றி பெற்றன. பிலாஜி காயக்வாட், கண்டாஜி பந்தே, இன்னும் சிமாஜி அப்பா இவர்கள் குஜராத்திலுள்ள மூகலாயப் படைகளை நொறுக்கி வந்தார்கள். அதனால் மூகலாய ராஜப் பிரதிநிதி மராட்டியருக்குச் சௌத், ஸர்தேஷ்முகி செலுத்தும்படி இணங்க வேண்டி ஏற்பட்டது. இந்த இழிவான உடன்படிக்கையால் ஆத்திரங் கொண்ட மூகலாயச் சக்ரவர்த்தி மராட்டியரைக் குஜராத்திலிருந்து துரத்தும்படி அபய சிங்கை அனுப்பினர். அபய சிங்கோ ஜய சிங்கைப்போலிராமல் சுய நலத்தையும் சுய மேன்மையையும் கருதியவன். இதனல் அவன் ஹிந்து சுதந்திரப்

போரை நடத்துவதற்கு மற்ற ஹிந்து அரசர்களைக் காட்டிலும் தனக்கு விசேஷ உரிமை எதொன்றும் இல்லை என்பதை உணரவில்லை. ஹிந்துக்களுள் மஹாராஷ்டிர மண்டலமே இந்த உன்னத காரியத்தை நடத்தச் சக்தியுள்ளது. ஆனால், சுயாபிமானத்தினால் இந்த உண்மையை அறியமுடியாத அபய சிங்கு குஜராத்தில் மராட்டியரை எதிர்க்கவும் முற்பட்டுச் சமரசப் பேச்சு நடத்தும் பாவனையில் பிலாஜி காயகவாடை டாகூர் நகருக்கு அழைத்தான். அந் நகரோ ஹிந்துக்களுக்கு ஒரு புண்ணிய ஸ்தலமாயிருந்தபடியால் பிலாஜி காயக்வாடுக்குக் கெட்ட சந்தேகங்கள் உண்டாகவில்லை—ராஜபுத்திரனாகிய தான் கொடுத்த சபத வார்த்தைகளையும் பாராமல் அபய சிங்கு அங்கு வந்த பிலாஜியைக் கொன்றுவிட்டான். ஆனால் தான் செய்தது பெரும் பாவமன்றிப் பெருந் தவறுமாகி விட்டதென்று உடனே கண்டுணர்ந்தான்.

ஏனெனில், ஆங்காங்கே தலைவர்களில் ஒவ்வொருவர் கொலையுண்டதனால் மராட்டிய மக்கள் பயந்து அடங்க மாட்டார்கள்; அவர்கள் இளம் பிராயத்திலிருந்தே யுத்தம் மரணம் இவைகளுடன் பழகியவர்கள்; தலைமுறை தலைமுறையாக யுத்த கூடாரத்தில் வளர்ந்தவர்கள்.

பண்டில்கண்டிலும், மால்வாவிலும் போல் குஜராத்திலும் ஹிந்து மக்கள் மராட்டியரை வரவேற்று ஆதரவு அளித்துப் பல முறை அவர்களது கொடியின்கீழ்ப் போர் புரிந்து வந்தார்கள். குஜராத்திலுள்ள கோளி, பில், வாகிரி முதலிய ஹிந்துப் பட்டாள வகுப்புக்கள் தாம் கொண்டாடி வந்த பிலாஜி கொலையுண்டதால் சீற்றங் கொண்டு அதன் வஞ்சந் தீர்க்கக் கருதி முகலாயப் படைகளைத் தாக்கினார்கள். நாற்புறமிருந்தும் மராட்டியர்களும் வந்தார்கள். 1732-வது வருஷம் பரோடாவைக் கைப்பற்றி அதை அம் மகாணத்துத் தலைநகராக்கி அபய சிங்கு அங்கே நிற்கமுடியாமல் செய்துவிட்டார்கள். தாமாஜி காயகவாட் என்பவர் ஜோத்பூரையே தாக்கி வென்று, அபய சிங்கை அவனது ஊருக்கே துரத்தி யனுப்பி வெகு வேகத்துடன் திரும்பிவந்து, ஆமதாபாத்தையே கைப்பற்றி விட்டார்.

அதனல் முகலாய ராஜப் பிரதிநிதியால் குஜராத்துக்குத் திரும்பமுடியாமல் போய்விட்டது. மேலும் அப்படித் திரும்புவது அனுவசியமும் ஆகிவிட்டது. ஏனென்ருல், அந்த மாகாணம் முழுவதுமே 1735-வது வருஷம் முகம்மதிய ஏகாதிபத்தியத்திலிருந்து தப்பிவிட்டது.

---

## 9. ஹிந்துக் கடல்களினின்றும் அயலாரைத் துரத்தியது

"கடற் படை தனிப்பட்டதொரு ராஜ்ய அங்கமாகும். பலத்த கப்பற் படையுள்ளோனே சமுத்திரத்துக்கு எஜமானனுவான். இயற்கையான கடற் கோட்டைகள் இருந்தும், நாம் புதிய ஜல துர்க்கங்களைக் கட்டிப் பகைவரை வென்ருேம்."

(—ராமச்சந்திர பந்த் அமாத்ய)

இவ்விதம் ஹிந்து சுதந்திரத்துக்காக மராட்டியர்கள் முகலாய நாட்டில் புகுந்து அதன் பிரதான ஸ்தலங்களில் போர் புரிந்து வருங்காலத்தில் மேலைநாட்டிலிருந்து வரும் அயலார் ஆதிக்கத்திலிருந்து ஹிந்துஸ்தானத்துக் கடல்களையும் பாதுகாப்பதற்காக வேண்டிய முயற்சிகளையும் செய்து வந்தார்கள். தமது நாட்டிலே எஜமானர்களாய் ஸ்தாபித்துக்கொண்ட முகமதியரைப்போல் ஐரோப்பாவிலிருந்து வந்த மேலைநாட்டு வியாபாரிகளிடமிருந்தும் ஹிந்து சாம்ராஜ்யத்துக்குக் கேடு விளையும் என்பதை அவர்கள் ஆதியிலேயே அறிந்திருந்தார்கள். மேற்குக் கரை நாடுகளில் ஐரோப்பியரின் பேராசையை அடக்கி யழிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் சிவாஜியும் அவர் காலத்துத்

தலைவர்களும் செய்தார்கள். மராட்டிய ராஜாங்கத்தின் கட்டளைப்படி பொதுஜன அறிவிப்புக்காகச் சிறந்த மராட்டியத் தலைவரும் அரசியல் நிபுணருமான ராமச்சந்திர பந்த் எழுதிய "ராஜ நீதி" என்ற அரிய நூலில் காணும் விதிகளிலும் திட்டங்களிலும் சிவாஜி முதலியோரது கருத்து நன்கு விளங்குகிறது. அக்காலத்தில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு மட்டும் ஹிந்துக் கடற்கரைகளை அயலாரது ஆதிக்கத்தினின்றும் விடுவிக்க சிவாஜி முயன்றார். பலத்த மராட்டியக் கப்பல் படையைத் தொகுத்து ஜலதுர்க்கங் (கடல் கோட்டை) களைக் கட்டி அவைகளின் பாதுகாப்புக்கு வேண்டிய சேனைகளையும் பீரங்கிகளையும் வைத்தார். ஒரு நூறு ஆண்டுகளுக்கு மேலாக இந்த ஜலதுர்க்கங்கள் ஹிந்துக் கடல்களைக் காத்துதவின.

ராஜாராம் காலத்தில் ஔரங்கசீப்பின் படைகள் தக்காணம் முழுவதிலும் வழிந்தோடியபோது மராட்டியர் நாடுகளில் ஒழுங்கு குலைந்து எங்கும் கலவரமும் குழப்பமுமாக விருந்தது. ஹிந்து நாடுகளும் தலைவர்களும் தனித் தனியே தங்களாலான வழிகளில் எதிரிகளை எதிர்த்துப் போர் புரிந்து வந்தார்கள். அப்போது முகலாயரைக் கடற்கரையி லிருந்து துரத்தவேண்டிய பொறுப்பு கானோஜி ஆங்க்ரே, கூஜார் முதலிய சிறந்த மராட்டியக் கப்பற் படைத் தலைவர்களின்மீது வீழ்ந்தது. அவர்களில் ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளைச் செவ்வனே செய்து வந்தார்கள். ஆங்கிலேயர்கள், போர்த்துகீசர்கள், டச்சுக் காரர்கள், அன்றி ஸித்திகள், முகலாயர்கள் இவர்கள் எல்லோரும் தனித் தனியாகவும் சமயம் வாய்த்தபோது ஒன்றாகச் சேர்ந்தும் தினே தினே உயர்ந்து வரும் மராட்டியக் கப்பற்படையின் பலத்தை நிர்மூலம் செய்ய முயன்றார்கள். ஆனால், அதெல்லாம் வீணாயிற்று. பம்பாய்க்குத் தெற்கே பதினாறு மைல் தூரத்திலுள்ள கானேரி என்னும் தீவு மராட்டியக் கப்பற்படைத் தலைவரான கானோஜி ஆங்க்ரேவின் கையில் அகப்பட்டபடியால் ஆங்கிலேயருக்கு அதிக நஷ்டம் உண்டாயிற்று. ஜன்ஜிரா நாட்டு ஸித்தி முகமதியர்களும், மராட்டியருக்கு முன்னமே

மேற்குக் கரைகளில் அதிகாரத்தை ஸ்தாபித்துக் கொண்ட போர்த்துகீசரும் முறியடிந்து அழிவுற்றால், எஞ்சி நின்ற தம்மை மராட்டியக் கப்பற்படைத் தலைவர் பொடியாக்கி ஊதிவிடுவார் என்று ஆங்கிலேயர் அறிந்தார்கள்.

இந்த எதிரிகளிட மிருந்து தமது கப்பற்படை ஸ்தலங்களைக் காப்பதற்காகக் கானோஜி ஆங்க்ரே ஒரு பெரிய படையை நியமித்தார். அதன் செலவுக்காக அரபிக் கடலில் வர்த்தகம் நடத்தும் கப்பல்களிட மிருந்து சௌத் வரி வசூலிக்க வேண்டியிருந்தது. ஹிந்துக் கடல்களில் மராட்டியர்கள எஜமானர்களாய் இருக்கவேண்டும் என்று அவர்கள் கருதினார்கள். ஆகையால் தமது உத்தரவு பெற்றோ பெறாமலோ தமது கடல்களில் பிரயாணம் செய்யும் அயலாரிடமிருந்து சௌத் வரி வசூலிப்பது முற்றிலும் நியாயமானது என்றே அவர்களுக்குத் தோன்றியது. ஆனால், ஆங்கிலேயரும் மற்ற ஐரோப்பியர்களும் இதற்கு இணங்காமல் எதிர்த்தார்கள். இவர்களுக்கு ஒரு பாடங் கற்பிக்கக் கானோஜி அவர்களது கப்பல்களையும் அவைகளில் உள்ள சரக்குகளையும் மனிதர்களையும் கைப்பற்றிப் பிரதிக்கிரயம் கொடுத்தாலன்றி விடமுடியாது என்று தெரிவித்தார். 1715-வது வருஷம் சார்லஸ்பூன் என்பவர் பம்பாய் கவர்னர் ஆனதும் ஆங்கரேவின் படை ஸ்தாபனங்களை அழிப்பதாக நிச்சயித்து ஏற்பாடுகள் செய்து பெருமையடித்தார். ஒரு பெரிய கப்பற்படை கிளம்பி மராட்டியத் துறைமுகமான விஜயதுர்க்கத்தைத் தாக்கிற்று. ஆங்கிலேயர் சீறிக் கொதித்தார்கள். அவர்கள் தங்களது போர்க் கப்பல்களுக்கு வைத்த பெயர்களிலிருந்தே அவர்கள் மராட்டியர்மீது வைத்திருந்த துவேஷம் தெரியவரும். ஒன்றின் பெயர் 'வேட்டைக்காரன்' (Hunter); இன்னொன்று 'பருந்து' (Hawk); மூன்றாவதின் பெயர் 'வஞ்சம்' (Revenge); நான்காவதோ (போர் தொடங்குவதன் முன்பே) 'வெற்றி' (Victory). இந்த பயங்கரக் கப்பற் படைக்கு உதவியாகச் சேனைகளையும் அனுப்பினார்கள். மராட்டியக் கோட்டைகளைத் தாக்குவதற்கு அதில் பொறுக்குத்தரமான ஆங்கிலேயப் போர் வீரர்கள் ஆயிரக்கணக்கில் இருந்தார்கள். 17-4-1717 இல்

இவர்கள் விஜயதுர்க்கம் என்ற கோட்டையின்மீது குண்டு களைப் பொழிந்தார்கள். ஆனால், தமது காரியம் அவ்வளவு சுலபமான தன்று என்றும் மராட்டியக் கோட்டைகள் மெழுகினால் கட்டப்பட்டவை யல்ல என்றும் தெரிந்து கொண்டார்கள். அந்தப் பீரங்கிகளின் எதிரே மராட்டியக் கோட்டைகளும் கோட்டைப் படைகளும் கோட்டைச் சுவர்களின்பின் வீரத்துடன் உறுதியாக நின்றுகொண்டு ஆங்கிலேயரின் வீண் முயற்சிகளைக் கண்டு ஏளனம் செய்தார்கள். இது கண்டு கொதித்து ஆங்கிலேயர் அரண் தாண்டி மதிலேற முயன்றார்கள். ஆனால், மராட்டியரோ அவர்களை உடனே சிதறவடித்துத் தோல்வியுடன் திருப்பி யனுப்பிவிட்டார்கள். வகையில்லாமல் போய்விடவே ஆங்கிலேயர் பின்வாங்க ஆரம்பித்தார்கள். இதைக் கண்டதும் மராட்டியர்கள் அவர்களின்மீது குண்டுமாரி பொழியவே, அவர்கள் வந்ததைக் காட்டிலும் அதிக வேகத்துடனே ஓடிப்போனார்கள்.

கானேரியை அடுத்த வருஷம் பூன் தாக்கினான். ஆனால், மராட்டியர்கள் அவனைப் பெருத்த நஷ்டத்துடன் துரத்தி விட்டார்கள். அதிலிருந்து தினந்தோறும் மராட்டியரால் இந்தியாவில் உள்ள ஆங்கிலேய அதிகாரத்துக்கே பெருத்த ஆபத்து அதிகரித்தது. இதையறிந்த ஆங்கில அரசர் கம்மோடோர் மத்தேயு என்ற சிறந்த கப்பல் படைத் தலைவனை நான்கு போர்க் கப்பல்கள் பொருந்திய பிரத்தி யேகமான வியூகத்துடன் அனுப்பினார். எப்படியாவது வெற்றி பெற வேண்டும் என்றெண்ணிப் போர்த்துகீசரை யும் தம்முடன் சேரும்படி ஆங்கிலேயர் அழைக்க, அவர் களும் இணங்க, இருவரும் சேர்ந்து மராட்டியரைத் தாக்கி னார்கள். 1721-வது வருஷம் மராட்டியர்கள் இந்த இரண்டு ஐரோப்பிய வகுப்பினர்களையும் தைரியமாக எதிர்த்து நின்று நிலத்திலும் கடலிலும் போர் புரிந்து கோட்டை மதிற் சுவர்களை யேறித் தாண்டவந்த அவர்களைச் சிதற வடித்துத் துரத்தினார்கள். இதைக் கண்டு சகியாமல் போர் வெறியில் கம்மோடோர் மத்தேயு தானாக முன்னே குதித் துப் பாயவும் அவனது தொடையில் மராட்டியவீரன் ஒருவன் கத்தியால் குத்தினான். ஆனால், கம்மோடோர்

அஞ்சாமல் அவ் வீரனைப் பின்பற்றி ஓடித் துப்பாக்கியை அவனுக்கு நேராகப் பிடித்தான். ஆனால், அதில் தோட்டா போட மறந்து விட்டது தெரிந்தது. கம்மோடோரைப் போலவே அவனது கூட்டாளிகளும் தோல்வியுற்றார்கள். அவர்கள் கோட்டைச்சுவர் மீதேறித் தாண்ட முயன்றபோது மராட்டியர்கள் உறுதியுடனும் வன்மையுடனும் எதிர்த்துத் தாக்கவும் அவர்கள் அலறிப் பின்வாங்க நேர்ந்தது. இதற்குள் இன்னொரு மராட்டியக் கப்பல் வியூகம் நிலத்தின்மீ திருந்த போர்த்துகீசரைத் தாக்க ஆரம்பித்தது. போர்த்துகீசருக்குக் கிலி பிடித்ததும் அவர்கள் உயிர் தப்பினால் போதும் என்று ஓட்டம் பிடித்தார்கள். அதைப் பார்த்து ஆங்கிலேயரும் தங்களது துப்பாக்கிகளையும் தோட்டாக்களையும் வெற்றி பெற்ற மராட்டியர் கையில் விட்டு ஓட்டமெடுத்தார்கள். இந்த அவகேடான இரண்டு தோல்விகளின் பொறுப்பை ஆங்கிலேயர் போர்த்துகீசர்மீது சாட்ட, அதை யவர்கள் ஆங்கிலேயர்கள்மீது சட்ட, இப்படி விவாதம் நடந்து எஞ்சி நின்ற சக்தியும் ஒழிந்து களைத்துவிட்டார்கள். மனஸ்தாபத்துடன் போர்த்துகீசர் சாலுக்குத் திரும்பினார்கள். ஆங்கிலேயரும் பம்பாய்க்குத் திரும்பினார்கள். சௌத் வரிக்காக மராட்டியக் கப்பல் படைத் தலைவர்கள் கைப்பற்றி விடுவார்கள் என்ற பயத்தினால் வெகு நாள்வரை ஆங்கிலக் கம்பனியார் தமது வியாபாரக் கப்பல்களைப் போர்க் கப்பல்களின் பாதுகாப்பில்தான் அனுப்ப வேண்டியிருந்தது. உடனே ஆங்கிலேயரின் 'வெற்றி'யும் தோல்வியாகத் தாழ்ந்தது. 'வஞ்சமும்' வஞ்சம் தீர்க்க முடியாமல் மராட்டியர் கையில் அகப்பட, அவர்களும் அதைப் பிரதிக் கிரயம் கொடுப்பதானால்தான் திருப்பித் தருவோம் என்றார்கள். கி. பி. 1724-வது வருஷத்தில் டச்சுக்காரர்களுக்கும் இதே கதி நேர்ந்தது. ஏழு போர்க் கப்பல்கள், இரண்டு பீரங்கிக் கப்பல்கள், ஒரு பெரிய சேனை இவைகளுடன் டச்சுக்காரர்கள் விஜயதுர்க்கத்தைத் தாக்கினார்கள். ஆனால், அவர்களால் மராட்டியரது வலிவை அசைக்க முடியவில்லை. முதுமை யடைந்த வீர பலாட்டியரான ஆங்கரேவை ஹிந்துக் கடல்களில் மடக்குபவர் யாரும் இல்லை. கொங்கண நாட்டில் முகமதிய சித்தியுடனும்,

தக்காணத்தில் நிஜாமுடனும், குஜராத் புண்டில்கண்ட் மாளவ நாடுகளில் முகலாயருடனும் தீராத கடும்போர் நடத்திவந்த காலத்திலும் மராட்டியர் தமது வெற்றியை ஹிந்துக் கடல்களில் நிலைநிறுத்தியே வந்தார்கள்.

1729-வது வருஷம் கானோஜி ஆங்கரே இறந்தார். அப்போதுதான் கொங்கணத்திலே மகான் ஒருவர் தோன்றி மராட்டியத் தலைவர்களிடமும் மக்களிடமும் தேச சமூக உணர்ச்சியைக் குன்ருது வளர்த்து வந்தார். அவர்தான் ஷாஹூ, பாஜிராவ், சிமாஜி, ஆங்கரே முதலிய ஆயிரக் கணக்கான வீரர்களுக்குக் குருவான பிரமேந்திரஸ்வாமி. அவரிடம் உன்னதமான தேசியக் கொள்கைகளும் உணர்ச்சியும் ததும்பின. ஜனங்களுக்கு ஸ்வதர்ம ஸ்வராஜ்ய லட்சியங்களை எடுத்துச் சொல்லிவந்தார். இளவயதில் கடுந் தவமியற்றி யோக சக்தி பெற்றவர்; வருஷத்தில் ஒரு மாதம் யோக சமாதியில் ஆழ்ந்து அக்காலத்தில் நிலத்திலே மண்ணுக்குள் புதைக்கப்பட்டிருப்பார்; ராமதாஸர் போலவே பரத கண்டம் முழுவதும் சுற்றி ஒவ்வொரு க்ஷேத்திரத்தையும் பார்த்தவர்; ஹிந்து சமூகத்தின் அடிமைத்தனத்தை உணர்ந்தவர். அவரது தேசிய ஆவேசத்தைக் கிளப்பிவிட்டது ஜஞ்ஜிரா முகமதியர் செய்த ஒரு தீச்செயலே. ஸித்திகள் மராட்டிய ராஜ்யத்தின் கடும் பகைவர்கள்; கொங்கணத்தில் மராட்டியர் பலம் அதிகரித்து வருவதால் தமது ராஜ்யமெல்லாம் கவிழ்ந்துவிடுமென்று ஸித்திகள் அறிந்தார்கள். ஆதலால் மராட்டியருக்கு எதிராக ஆங்கிலேயர், டச்சுக்காரர், போர்த்துகீசர் இவர்களுடன் சேர்ந்து மராட்டிய நாட்டில் புகுந்து பலமுறை கொள்ளையடித்து வந்தார்கள். இது மட்டுமன்றி, முகமதியர்களிடமே விசேஷமாய் விளங்குகிற மிலேச்சத் தன்மையுடன், நூற்றுக்கணக்கான பாலர் பாலிகைகளைப் பெற்ருேர்களிடமிருந்து களவாடிச் சென்று பலவந்தமாக முகமதிய மதத்தில் சேர்த்து, ஹிந்து ஆலயங்களை மண்ணோடு மண்ணாக இடித்துத் தள்ளி, ஹிந்து மக்களுக்கு அநேக அநீதிகளை ஸித்திகள் இழைத்து வந்தார்கள். ஸ்வாமிஜி தவமும் சமாதியும் பயின்று வந்த புனிதமான பாசுராமர் ஆலயமும் அவர்

களது மதவெறிக்குப் பலியாயிற்று. ஸித்திகள் அவ்வால யத்தைத் துகள் துகளாக இடித்து அதில் இருந்த பொக்கிஷத்தைக் கொள்ளையிட்டுக் கையில் அகப்பட்ட பிராமணர்களைச் சித்திரவதை செய்துவந்தார்கள். அந்த அநீதிகளால் பிரமேந்திரஸ்வாமியின் மனத்தில் தணிக்க முடியாத தவக்கோபம் பொங்கிற்று. சாதாரணமாக ஹிந்து சாதுக்கள் எல்லாரிடத்திலும் சம பார்வை வைத்துக் கோபத்தை யகற்றுபவர்கள். அத்தகைய குணம் இன்று இந்த அநீதிகளால் மாறிவிட்டது. ஹிந்து விடுதலைப் போரைத் தளராமல் நடத்தி ஹிந்து சுதந்திர லட்சியத்துக்கே தமது வாழ்க்கையை அர்ப்பணம் செய்வதாய் ஸ்வாமிஜி உறுதிகொண்டார். அவர் மகத்தான செல்வாக்கு உள்ளவராதலால் ஸித்தியே அவரது பகையை வளர்க்க அஞ்சி அவர் இனித் துன்பம் இல்லாமல் பரசுராமர் ஆலயத்தில் இருந்து வரலாம் என்றும் பிரார்தித்தான். ஆனால், ஸ்வாமிஜி மறுத்து, "தெய்வங்களின் மீதும் அந்தணர்களின்மீதும் நீ இழைத்துள்ள அநீதிகளுக்குப் பழிக்குப் பழி வாங்காமல் போகுமா?" என்றுரைத்தார். ஆங்கரே அவரைச் சமாதானப் படுத்த முயன்று கொங்கணத்தில் தங்கியிருக்கும்படி வேண்டினார். "வஞ்சக அயலான் ஆட்சி புரியும் இந் நாட்டில் நான் இனி வாழ முடியாது. இங்கு ஒரு துளி நீரேனும் பருகமாட்டேன். நான் மீண்டும் கொங்கணத்துக்கு வரும்போது வஞ்சம் தீர்க்கும் ஹிந்துப் படையுடனேதான் வருவேன்" என்றுரைத்து அவர் சாத்தாராவுக்குச் சென்றார். அன்று முதல் ஹிந்துக்களின் வஞ்சகப் பகைவர்களுக்கெதிராக, அதிலும் ஜஞ்ஜிரா நாட்டு ஸித்திகளுக்கும் கோவாவின் போர்த்துகீசருக்கும் எதிராக, மும்முரமாகப் பிரசாரம் செய்து வந்தார். ஹிந்துஸ்தானத்தை அன்னியரிட மிருந்து மீட்டு ஹிந்து தர்மத்துக்குப் போர் புரிந்து காஷ்மீரம்முதல் கன்னியாகுமரிவரை யுள்ள ஹிந்து மக்களின் அரசியல் சுதந்திரத்தை நாட்டுவதாகிய மராட்டிய மனவுறுதியை மக்களிடம் வளர்த்து வந்தார் என்பது அவரது கடிதங்களினால் விளங்கும்.

ஸித்திகள் இழைத்த அநீதிகளுக்கு வஞ்சம் தீர்க்க வேண்டுமென்று ஸ்வாமியின் சிஷ்யர்களான ஷாஹூவும்

பாஜிராவும் தீர்மானித்தார்கள். உடனே மராட்டியத் தலைவர்கள் கொங்கணத்தில் ஸித்திகள்மீதும் போர்த்து கீசர்மீதும் படை யெடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை யும் சூழ்ச்சிகளையும் செய்யத் தொடங்கினார்கள். ஒரே காலத்தில் டில்லியி லிருந்து ஆர்க்காடு வரையில் உள்ள அநேக அரசர்களிடம் அவர்கள் போர் புரிய வேண்டி யிருந்ததால் ஒரு தகுந்த சமயத்துக்காகக் காத்திருந்தார் கள். அப்போது ஸித்தியின் ராஜ்யத்தில் கலகம் உண்டாகி ஒரு கட்சித் தலைவன் அரசை யேற்கவும் மற்றொரு கட்சித் தலைவன் மராட்டியரது உதவியை ஏற்கவும் வந்தனர். மராட்டிய பாட்னிஸ் உடனே நல்வர வேற்று மராட்டிய ராஜியச் சூழ்ச்சி பலித்துவிட்டதை ஷாஹுவுக்குத் தெரி வித்தார். வெகு நாளாகக் காத்திருந்த இந்தச் செய்தியைக் கேட்டவுடன் அரசர் குதூகலமடைந்து பாஜிராவுக்குக் கடிதம் எழுதிக் கட்டளையும் பிறப்பித்தார். "இந்தக் கடி தம் முழுவதும் வாசிப்பதற்காகத் தாமதம் செய்ய வேண் டாம். உமது வீரக் குதிரையின் மீதேறி உடனே புறப் பட்டு வரவும். வரும்போது இதை வாசித்தால் போதும்." 1783-வது வருஷம் படையெடுப்பு ஆரம்பித்தது. மராட்டியப் படைகள் ஸஹ்யாத்திரி மலையினின்று இறங்கி டாகா கோஸாலாக் கோட்டையைக் கைப்பற்றி ஸித்தியின் நாடுகளில் வெற்றியுடன் பிரவேசித்து முகமதி யப் படைகளின்மீது கடுமையான தோல்விகளைச் சுமத்தின. உடனே பாஜிராவும் ராயகட்டைத் தாக்கி அதை மீண்டும் கைப்பற்றினார். புகழ் பெற்ற இந்தக் கோட்டையே சிவாஜியின் சிங்காதன ஸ்தலம். இங்கேதான் சிவாஜி முடி சூடினார். இக் கோட்டை சுதந்திரப் போரின் ஆரம்பத்தி லிருந்து இன்றுவரை முகமதியர் கையில் இருந்து வந்தது. தமது பேரரசரின் தலைநகர் மீட்கப்பட்டதை யறிந்து மஹாராஷ்டிரத்தி லுள்ள ஹிந்து மக்கள் எல்லோரும் குதூகலித்தார்கள். கடலிலும் மராட்டியப் படை வெற்றியை நாட்டிற்று. ஜஞ்ஜிராவின் அருகே மானாஜி ஆங்க்ரே ஸித்தியின் கப்பற் படையைத் தாக்கி மகத்தான வெற்றியை நாட்டினார். ஆங்கிலேயரும் பயந்து முதலில் இரகசியமாகவும் பின்பு வெளிப்படையாகவும் ஆயுதங் களைக் கொடுத்து ஸித்திக்கு உதவி புரிந்தார்கள். கடைசி

யில் மராட்டியர் எதிரே போர் புரிவதற்குக் காப்டன் ஹால்டேன் தலைமையின் கீழ் ஒரு பெருத்த சேனையையும் அனுப்பினார்கள். ஆனால் கண்டீஜிராஹர், கர்டே, மோரே, மோஹிதே முதலிய மராட்டியத் தலைவர்கள் போரைப் பலமாக நடத்திவந்தார்கள். மதுராபாய் ஆங்க்ரே முதலிய மாதரசிகளும் இதில் ஈடுபட் டிருந்தார்கள். இந்தப் புகழரசி பிரமேந்திர ஸ்வாமிக்கு எழுதிய கடிதங்களால் அவரது தேசிய ஆர்வமும், அயலாரிட மிருந்து ஹிந்து நாட்டை விடுவிக்கும் ஊக்கமும், எதிரியின் கையிலிருந்த ஒவ்வொரு நகரின்மீதும் ஹிந்துக் கொடி வெற்றியுடன் பறந்து வருவதைக் கண்ட பெருமையும் இனிது விளங்குகின்றன. 1736-வது வருஷம் சிமாஜி அப்பா இதில் கலந்துகொண்டு ரேவாஸ் என்னும் நகரருகே நடந்த போரில் அபிஸீனியப் படைகளை முறியடித்து வெற்றி நாட்டினார். அபிஸீனியர் தலைவனை அரபியன் கொங்கணத்தில் ஹிந்துக்களின் பகைவனா யிருந்தான். இவன்தான் பரசுராமர் ஆலயத்தை இடித்துத் தரைமட்டம் ஆக்கியவன். இந்தப் பாதகன் இப்போது தலை வெட்டுண்டு தனது பாவத்துக்கு உயிரை ஈடு கொடுத்தான். இவனுடன் அன்று போர்க்களத்தில் அண்டேரி முகமதியர் தலைவனும் முகமதியர் கட்சியில் பதினாயிரம் பேர்களும் உயிர் துறந்தார்கள்.

தமது தருமத்துக்கு வஞ்சகம் புரிந்த எதிரிகளின்மீது தகுந்த வஞ்சம் தீர்த்து மகத்தான வெற்றியுடன் ஹிந்து சமூகத்தின் மரியாதையை நிலைநிறுத்திய தமது பெருந் தலைவரைக் கொங்கணம், மஹாராஷ்டிரம் முழுவதும் வாழ்த்தின. அரசரும் மட்டில்லாத மகிழ்ச்சியுடன் எழுதியனுப்பினார்: "இராவணனைப் போல் இந்த ஸாத்ஸித்தியும் ஓர் அரக்கனே. இவனைக் கொன்றதால் நீர் ஸித்திகளையே நிர்மூலமாக்கி விட்டீர். உமது புகழ் எங்கும் பரவிற்று." இளஞ் சிங்கமாகிய அப் படைத் தலைவரைத் தமது சபைக்கு அழைத்து அரசர் அவருக்கு மரியாதைகளும் வெகுமதிகளும் அளித்தார். இப் படையெடுப்பின் முக்கிய கர்த்தாவா யிருந்தவர் பிரமேந்திர ஸ்வாமி; சில்லரைச் சண்டைகளாலும் பொறுமையாலும் மராட்டியர் முயற்சி

யில் தளர்ச்சியடையும்போ தெல்லாம் தேசத்துக்கும் தரு மத்துக்கும் செய்ய வேண்டிய கடமைகளை அவர்களுக்கு எடுத்துக் காட்டி அவர்கள் புரிந்து வரும் மகத்தான ஹிந்து விடுதலைப் போரின் உயர்ந்த லட்சியங்களை நினை வூட்டி வந்தார். பிரமேந்திர ஸ்வாமி பகவானுக்கு நன்றி யறிவு பாடித் தமது மட்டற்ற மகிழ்ச்சியைத் தமது சிறந்த சிஷ்யனுக்குத் தெரிவித்து வாழ்த்துக் கூறினர். குதூகலத் தில் தமது முழு உணர்ச்சியையும் அவர் சொல்ல முடிய வில்லை. அவர் ஹிந்து தருமத்தைக் காத்துப் பரசுராமரின் புண்ணிய க்ஷேத்திரத்தை விடுவித்து வெற்றி நாட்டியவ ரன்றோ? "சாமள நிறத்து அன்னியரை (போர்த்துகீசரை யும் சித்தியையும்) வென்று கொங்கணத்தில் தருமத்தைக் காத்தீர்."

இவ்விதமாக மராட்டியர் ஸித்தியை வென்று அவனது சிறு ராஜ்யத்தை ஹிந்து சாம்ராஜ்யத்தில் சேர்த்து விட்டார் கள். இதனால் போர்த்துகீசர் ஓண்டியாக மராட்டியர் எதிரே போர் புரிய நேர்ந்தது. மராட்டியரது அதிகாரம் தொடங்கியது முதல் இந்தியாவில் போர்த்துகீசர் சுலப மாகப் பெற்ற ஜயங்களும், கம்பாயத்து முதல் இலங்கை வரையில் உள்ள மேற்குக் கரைகளில் போர்த்துகீசர் அனுபவித்து வந்த செல்வாக்கும் குறைய ஆரம்பித்தன. மத விஷயங்களில் போர்த்துகீசர் செய்துவந்த அக்கிரமங் களும் நியாய விசாரணை என்ற முறையில் அவர்கள் செய்துவந்த அட்டூழியங்களும் முகமதிய அவகேடுகளைக் காட்டிலும் பயங்கரமானவை. ஐரோப்பாவில், ஸ்பெயின் தேசத்தில் நடந்த அநீதிகளைத்தான் அவைகளுக்கு ஒப்பிட முடியும். ஒரு நூற்றுண்டுக்கு மேலாக ராஜிய அடிமைத்தனத்திலும் இவ்விதமான மத அடக்குமுறை களாலும் துன்புற்று வருந்திய ஹிந்து மக்கள் தமது கொங்கணத்து ஹிந்து சகோதரர்கள் ஸித்தியின் கொடுங் கோல் ஆட்சியை அகற்றி விடுதலை பெற்றதைக் கண்டு தமது விடுதலைக்கும் உதவி பெற மராட்டியப் படைகளை எதிர்நோக்கினர். ஹிந்து மக்களின் மனத்தில் தேசியக் கிளர்ச்சியும் அவாவும் தோன்றவே, அவர்கள் கோவா நகரில் நியாய விசாரணை என்ற திட்டத்தினால் போர்த்து

கீசர் கொங்கணத்தில் ஹிந்துத்துவத்தை நசுக்கச் செய்து வரும் ஏற்பாடுகளை எதிர்த்து நிற்கத் தலைப்பட்டனர். பாஜிராவின் வெற்றிகளும் மராட்டியப் படைகள் தமது எல்லைப்புறத்தை யணுகுவதும் போர்த்துகீசருக்குப் பய வெறியை விளைவித்தன. அவிவேகத்துடன் அவர்கள் ஹிந்து இயக்கத்தை நசுக்கி, அது மக்களிடையே பரப்பிவரும் புது ஆசைகளையும் புதிய கிளர்ச்சிகளையும் கொடுமையாக அடக்கி வந்தார்கள். பழைய பதிவுகளிலிருந்து இவ்வாறு அறிகிறோம். "ஹிந்து மிராசுதார்களின் பரந்த சொத்துக் களைப் பறிமுதல் செய்தார்கள்; பல கிராமங்களைச் சூழ்ந்து கொண்டு மக்களைக் கத்திகொண்டு மிரட்டித் தமது மதத்தில் பலவந்தமாகச் சேர்த்தார்கள். ஹிந்துக் குழந்தைகளை எடுத்துப் போனார்கள். ஹிந்து மதத்தை விட்டுவிட மறுத்தவர்களைக் கைதுசெய்து கொன்றார்கள். இன்னும் சிலரை அடிமைப்படுத்தினார்கள். அவர்களது கோபம் முக்கியமாகப் பிராமணர்கள்மீது விழுந்தது. பிராமணர்களை அவர்களது வீட்டிலேயே சிறை வைத்தார் கள். ஹிந்து மதக் கிரியைகளை வெளிப்படையாகச் செய் வதைத் தடுத்து அடக்கினார்கள். ஹிந்து ஒருவன் மதச் சடங்குகளை நடத்தத் துணிந்தால் அவன் வீட்டைச் சூழ்ந்துகொண்டு, அவனது வீட்டுக்காரர்களைக் கைது செய்து, அவர்களை நியாய விசாரணைக்கு அனுப்பி, அங்கே அவர்கள் பலவந்தத்தினாலும் கிறிஸ்துவ மதத்தைத் தழுவ மறுத்தால் கொன்றுவிடுவார்கள் அல்லது அடிமைகளாக்கி விடுவார்கள்." ஆனால், இத்தகைய அநீதியான அடக்கு முறைகள் இருந்தும் ஹிந்துத் தலைவர்கள் தளராமல் போர்த்துகீசியச் சர்க்காரின் அக்கிரமமான உத்தரவுகளை எதிர்த்தே வந்தார்கள். போர்த்துகீசரின் கோபத்துக்கு ஆயிரக் கணக்கானவர்கள் பலியானார்கள். கடைசியில் வஸயீ பேஸின் முதலிய இடங்களில் உள்ள தேஷ்முகி களும் தேசாயிகளும் ஆகிய ஹிந்துத் தலைவர்கள் எல்லோ ரும் சேர்ந்து தமது விடுதலையைக் காத்து ஹிந்து சுதந்திரம், தேசம், தருமம் இவற்றின் மேன்மையை நாட்டும்படி பாஜிராவுக்கும் ஷாஹுவுக்கும் இரகசியமாகச் செய்தி அனுப்பினார்கள். ஹிந்து மக்களிடம் மிகுந்த செல்வாக் கும் தீரமும் பொருந்திய மலாட் நாட்டின் ஸர்தேசியான

அந்தாஜி ரகுநாதர் வெளிப்படையாகவே போர்த்து கீசரின் உத்தரவை மீறி ஹிந்துமதச் சடங்குகளைச் செய்து தம் பூமிகளில் இருக்கும் ஹிந்துக்களையும் அவ்விதமே செய்யும்படி உற்சாகப்படுத்தி வரவும், அவர் போர்த்து கீசரின் அடக்குமுறைகளுக்குப் பலியாகிக் கைது செய்யப் பட்டார். போர்த்துகீசர் அவரது நிலங்களையெல்லாம் பறி முதல் செய்து, அவரை நியாய விசாரணைக்காகக் கோவா நகருக்கு அனுப்பினார்கள். ஆனால், ஹிந்து மக்களின் அதிஷ்டவசத்தால் அவர் தப்பி அபாயமின்றிப் பூனாவை அடைந்தார். ஒரு ரகசியத் திட்டத்தை ஏற்படுத்தி, போர்த்துகீசரது வசமிருக்கும் நாடுகளில் மராட்டியர் பிரவேசிக்கும்போது வேண்டிய உதவியையும் பரா மரிப்பையும் தகுந்த யோசனைகளையும் அளிப்பதாய்ப் பாஜி ராவுக்கு வாக்களித்தார். மேலும், போர்த்துகீசருக்கு உரிய கொங்கணத்தில் இருக்கும் ஹிந்து மக்கள் எல்லோரும் அவரை ஹிந்து மதத்தின் வஞ்சகப் பகைவர் களைத் தண்டித்து ஹிந்து நாட்டை மீட்கவந்த அவதார புருஷராகக் கருதி, அவரது வருகையை மன வெழுச்சி யுடன் எதிர்பார்க்கிறார்கள் என்றும் அந்தாஜி ரகுநாதர் பாஜிராவுக்கு எழுதியனுப்பினார்.

பாஜிராவுக்கோ வட நாடுகளில் விடாமல் போர் புரிந்து பல பிரச்சினைகளில் தீர்மானம் செய்யவேண்டி யிருந்தது. மேலும், இந்தியாவெங்கும் மராட்டியர் செய்து வரும் நீண்ட படையெடுப்புக்களினால் செலவும் அதிகமாகி வந்தது. எனினும், தமது கொங்கண நாட்டு ஹிந்து சகோதரர்கள் அடிமைத் துன்பங்களைப் பொறுக்க முடியா மல் அனுப்பிய வேண்டுகோளைக் கேட்டு, பாஜிராவ் வாளா இருக்கவில்லை. வழக்கத்தைக் காட்டிலும் உயர்ந்த விதத் தில் பார்வதிதேவியின் திருவிழாவைக் கொண்டாடுகிற பாவனையில் பாஜிராவ் பூனாவில் அதிவிரைவாக, ரகசியத்தில், கவனிப்புடன் ஒரு பெரும் படையைத் திரட்டி ஒவ்வொரு படைத் தலைவருக்கும் தகுந்தபடி வேலையிட்டுப் படை யெடுப்பின் விவரங்களைத் திட்டப்படுத்தினார். சிமாஜி அப்பா சேனாதிபதியாக நியமிக்கப்பட்டார். ராமச்சந்திர ஜோஷி, அந்தாஜி, ராமச்சந்திர ரகுநாத் முதலிய படைத்

தலைவர்கள் எல்லோரும் அவரவர் சைன்ய ஸ்தலத்துக்கு அனுப்பப்பட்டார்கள். 1737-வது வருஷம் மராட்டியப் படைகள் தாணக் கோட்டையைத் தாக்கின. கடைசி வரையில் போர் புரிந்தும் வீணுகவே, போர்த்துகீசர் அக் கோட்டையை மராட்டியரது கையில் ஒப்புவித்தார்கள். இந்த வெற்றியினுல் குதூகலமடைந்து மராட்டியர்கள் ஸால்ஸெட்டில் புகுந்தார்கள். சங்கர்ஜி கேசவ் என்பவர் அர்ளுளா என்ற கோட்டையையும், ஜோஷி என்பவர் தாராவி, பர்ஸிக் என்ற இடங்களையும் கைப்பற்றிஞர்கள். இந்த விபத்துகளைக் கண்டு கோவாவின் ராஜப் பிரதிநிதி அந்தோனியோ என்ற வீரனை அனுப்பிப் போரை நடத்தச் சொன்ஞன். புதிய போர்த்துகீசியப் போர் வீரர்கள் ஐரோப்பாவி லிருந்து இதற்குப் பிரத்தியேகமாகத் தருவிக்கப்பட்டார்கள். அதஞல் வெகு தைரியத்துடன் அந்தோணியோ தாணவை மீண்டும் கைப்பற்ற யோசித்து, படையெடுப்புத் தொடங்கிஞன். வீரஞன பெட்ரோ மெல்லோவின்கீழ் 4500 போர் வீரர்கள் தாணவை மீட்க முன்வந்தார்கள். ஆஞல், மராட்டியர் கட்சியிலோ தாணவைக் காப்பதற்கு ஓர் ஒப்பற்ற வீரர் இருந்தார். அவர்தான் புகழ்பெற்ற மல்ஹார் ராவ் ஹோல்கர். அவரது பாதுகாப்பில்தான் தாண இருந்தது. அந்தப் படை யெடுப்பும் எதிர்ப்பும் பராக்கிரமக் கீர்த்தி பொருந்தியவை. ஆஞல் மராட்டியர்கள் தமது பீரங்கிப் படைகளால் போர்த்துக் கீசரைச் சிதறடிக்கவே அவர்களது வலிமை தளர்ந்து விட்டது. இதைக் கண்டு வீரத் தலைவஞன பெட்ரோ மெல்லோ அவர்களை மீண்டும் திரட்டும்போது மராட்டியக் குண்டொன்று அவன்மீது தாக்கி அவனைக் கொன்று விட்டது. உடனே போர்த்துகீசர் குழப்ப மடைந்து தங்களது கப்பல்களுக்கு ஓடிவிட்டார்கள். மராட்டியர் போர் புரிந்து மாஹிம் என்ற நகரையும் கைப்பற்றிஞர்கள் கோவா அருகிலுள்ள ராகோல் வரையில் வெங்கட ராவ் கோர்படே படையெடுத்துச் சென்ருர். போர்த்துகீசரின் வலிமை அழிந்துவிட்டதாகவே காணப்பட்டது.

அப்போதுதான் நாதிர்ஷா படை யெடுப்பின் செய்தி வந்தது. ஹிந்துப் படைகள் இதுவரை எதிர்த்துவந்த

அயல் நாட்டுப் படைகள் யாவினும் இதுவே பெருத்த அபாயத்தை விளைவிக்கக்கூடியதாய் இருந்தது. இதனால் போர்த்துகீசரின் ஸ்திதி அடியோடு அழியாமல் இருந்தது. நிலைமையை நன்றாக ஆராய்ந்துவிட்டு பாஜிராவ் எழுதுகிறார்: "போர்த்துகீசருடன் நடக்கும் போரில் விசேஷம் ஒன்றும் இல்லை. இப்போது ஹிந்துஸ்தானத்தில் இருக்கும் பகைவன் ஒருவனே; இந்தியாவின் முழு பலமும் அதிகாரமும் ஒருங்கே திரளவேண்டும். நருமதை நதி முதல் சாம்பல் நதி வரையில் நமது மராட்டியப் படைகளைப் பரப்புவோம். அப்போது நாதிர்ஷா தக்காணத்துக்கு எப்படி வர முடியும் என்பதைப் பார்த்து விடுகிறேன்." மராட்டிய ஐக்ய பலத்தை மட்டுமன்றி, ராஜபுத்திரர், பந்தேளர், மராட்டியர் முதலியோர் சேர்ந்த ஹிந்து ஐக்ய பலத்தையே திரட்டும்படி பாஜிராவ் டில்லி, ஜயத்பூர் முதலிய வடக்கு ராஜ்யங்களில் இருந்த தமது மராட்டியப் பிரதிநிதிகளுக்குச் சொல்லியிருந்தார். முகலாய அரசனைச் சிங்காதனத்திலிருந்து கீழே இறக்கி, உதயபூர் மகாராணாவை ஹிந்துஸ்தானத்தின் சிங்காதனத்தின்மீது ஏற்றுவது என்ற உன்னத ஹிந்து ஏற்பாடு அப்போது நடந்து வந்ததாக அக்காலத்தில் இருந்த மராட்டிய ராஜதந்திரி ஒருவருடைய கடிதங்களிலிருந்து தெரிய வருகிறது.

மராட்டியத் தலைவரோ பல படையெடுப்புக்களுக்குத் திட்டம் செய்யவேண்டியிருந்தபோதிலும், பாஸீனை முற்றுகை யிட்டுப் போர்த்துகீசருடன் போர் புரிவதற்கு ஒரு படையையும், டில்லியிலிருந்து நாதிர்ஷாவை வெளியே துரத்த இன்னொரு பெரும் படையையும் அனுப்பினார். இதிலிருந்து நாதிர்ஷா வந்தும் தம்மைச் சுற்றியுள்ள மராட்டிய விபத்து நிற்கவில்லை என்பதைப் போர்த்துகீசர் அறிந்துகொண்டார்கள். தன் ராஜ்யத்திலிருந்த சைன்ய ஸ்தலங்களெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக மராட்டியர் கையில் விழுவதை கோவா பிரதிநிதியறிந்தான். சிரகான், தாராபூர், தாஹாணூ இவைகளை மராட்டியர் திடீரென்று தாக்கிப் பிடித்து அங்கிருந்த காவல் படைகளைக் கொன்றுவிட்டார்கள். பேஸீனையும் முற்றுகை யிட்டார்கள். அதைத் தாக்கியவர்களின் வீரத்தையும் எதிர்த்தவர்களின்

வீரத்தையும் வாசகர்கள் அறிவார்கள். யுத்தம் முடியும் வரையில் மராட்டியர் கடுமையாகவே போர் புரிந்து வந்தார்கள். நேரில் பார்த்தவர் சொல்லுகிறதாவது: "பெரிய உத்தியோகஸ்தர்களும் நின்ற இடத்தில் போர் புரிந்து வீழ்ந்தார்கள். தமதன்புள்ள தலைவரான பாஜி ராவின் வசை மொழிகளைக் கேட்கச் சகியாமல், அவர்கள் தமதுயிரைத் திரணமாக மதித்துப் போர் புரிந்து மடிந்தார் கள். போர்த்துகீசர் கட்சியிலும் படைத் தலைவர்க ளெல்லாரும் ஒருவர் பின் ஒருவராய்க் கையில் கத்தியுடன் போர்க் களத்தில் இறந்தார்கள். மராட்டியர்கள் தாக்கி யதும் போர்த்துகீசர்கள் அவர்களைச் சேதத்துடன் தள்ளி னார்கள்.மராட்டியர்கள் தாக்கும் போதெல்லாம் போர்த்து கீசர் அவர்களைத் துரத்தித் தள்ளுவதால் இருதிறத் தாருக்கும் பெரிய சேதம் ஏற்பட்டது. தங்களது சுரங்கங் கள் வெடித்துப்போனதால் மராட்டியப் படையில் சேதம் அதிக மாயிற்று. ஆனாலும் மராட்டியர் சிறிதும் தளராமல் பதினெட்டு முறை தாக்கினார்கள். பதினெட்டு முறையும் போர்த்துகீசர் அவர்களைத் துரத்திவிட்டார்கள். ஆனால் ஒவ்வொரு முறையிலும் போர்த்துகீசர்கள் களைப் படைந்தே வந்தார்கள். இவ்விதம் முற்றுகை நாளுக்கு நாள் நடந்து வந்தது. நாதிர்ஷா வந்து திரும்பிப்போயா யிற்று. ஆயினும் பேஸீன் முற்றுகை நடந்தே வந்தது; முடியவில்லை. கடைசியில் சிமாஜி அப்பா கோபத்துடன் பேஸீனைக்கைப்பற்றத்தம்வீரர்களுக்குக்கர்ஜித்தார்:"நான் பேஸீன் கோட்டைக்குள் புகுந்தே தீரவேண்டும். இன் றைக்கு உங்களால் அதைக் கைப்பற்ற முடியாவிட்டால், நாளைய தினம் உங்களது துப்பாக்கிகளால் என் தலையைச் சிதற அடித்துக் கொத்தளங்களின்மீது எறிந்து விடுங்கள். அவ்விதம் இறந்தாவது நான் அதில் பிரவேசிக்க வேண் டும்.'' இத்தகைய குன்றாத வீரம் போர் வீரர்களை மகத் தான முயற்சிகளைச் செய்யும்படி தூண்டிற்று, மானாஜி ஆங்க்ரே, மல்ஹார்ராவ் ஹோல்கர், ராணோஜி ஷிந்தே இவர்கள் நான் முதல் நீ முதல் என்று அக் கோட்டையின் மதில் சுவர்களின்மீது ஏறினார்கள். அப்போது மராட்டியச் சுரங்கம் ஒன்று வெடித்துப் போர்த்துகீசியக் கோட் டையின் ஒரு முக்கியப் பாகத்தைத் தரைமட்ட மாக்கவும்

மராட்டியர் தளராத தீரத்துடன் அந்த வெடிப்பைக் கைப்பற்றினார்கள். அவர்களை அந்த ஸ்தானத்தினின்றும் உதறித் தள்ள பூகோளத்தின் இருபெரும் பாகங்களிலும் புகழ் பெற்ற போர்த்துகீசராலும் முடியவில்லை. மராட்டியர்களோ இளைக்காமல் மேன்மேலும் போர்த்துகீசிய வீரர்களைக் கூட்டம் கூட்டமாக அழித்து வரவே, போர்த்துகீசரும் அவர்களை எதிர்த்து நிற்கச் சக்தியற்றுத் தத்தளிக்கவும், எதிர்பார்த்த முடிவும் சீக்கிரம் வந்தது. கடைசியில் போர்த்துகீசர் அடைக்கலம் அடைந்தார்கள். ஹிந்து தருமத்துக்கும் சமூகத்துக்கும் அநீதிகளை யிழைத்த பகைவரின்மீது வெற்றி சூடிய மராட்டிய விஜயக் கொடி பேஸீன்மீது நாட்டப்பட்டதும் மகாராஷ்டிரம் முழுவதும் குதூகலம் நிரம்பிற்று.

இப்போது ஏறக்குறையக் கொங்கண நாடு முழுதும் விடுவிக்கப்பட் டிருந்தது. மராட்டியருக்கு வேறு இடங்களில் கை நிறைய முக்கியக் காரியங்கள் இருந்து வந்தபடியால் போர்த்துகீசர் கோவாவில் மட்டும் ஏதோ தப்பிப் பிழைத்து இழிவான வாழ்வை நடத்திவந்தார்களேயன்றி அன்று முதல் அவர்களது அதிகாரம் அந்தத் தோல்வியினின்றும் தேய்ந்து, வலிவு பெறாமல் குன்றி விட்டது. ஒரு காலத்தில் நன்னம்பிக்கை முனையினின்று மஞ்சள் கடல்கள் வரையில் உள்ள ஆசிய கண்டத்துக் கடல்களில் பரந்து ஆதிக்கம் பெற்றிருந்த போர்த்துகீசரின் அதிகாரம் மராட்டியரால் நிலத்திலும் கடலிலும் சிதறுண்டு வீழ்ந்து பிறகு ஹிந்து மக்களின் எதிரே மீண்டும் கிளம்ப முடியாமல் தாழ்ந்துவிட்டது.

ஹிந்துக்களின் மனத்தில் திருப்திகரமான ஓய்வு தோன்றிற்று. பல நூற்றாண்டுகளாக ஆளப் பிறந்தவர்கள் அன்னியர்களே யென்றும் தாங்கள் அடிமைத்தனத்துக்கே பிறந்தவர்கள் என்றும் ஏங்கிய ஹிந்து மக்களின் தேசத்தையும் தருமத்தையும் நசுக்கி வந்த கொடியவர்களைத் தாழ்த்திய போர் வீரர்களின் தீரச் செயல்களைக் கண்டு ஹிந்து மக்களின் இதயத்திலே வெற்றிகரமான கர்வமும் வலிவும் தேசியப் பெருமையும் தோன்றின. பல நூற்றாண்டுகளாகப் போர்த்துகீசிய கொங்கணத்து

ஹிந்துக்கள் ஹிந்துக் கொடி பறந்ததையே பார்த்ததில்லை. இப்போது கத்தி யுருவி ஹிந்து தருமத்தின் பாதுகாப்புக்காகப் போர் புரிந்து அயலாரின் கொடுங்கோலாட்சியையும் அகம்பாவத்தையும் பிளந்து தமது சமூகத்துக்கும் மதத்துக்கும் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு வஞ்சம் தீர்த்துக் கொண்டார்கள். இந்த உன்னத வெற்றியைப் பற்றிப் பிரமேந்திர ஸ்வாமிக்கு ஒரு நிருபர் எழுதினர்: "அவர்களது வீரத்தையும் தளராத சிந்தையையும் வெற்றியையும் செயல்களையும் பார்த்தால் தேவர்கள் பூவுலகில் நடந்த காலம் போல் தோன்றுகிறது. இந்த வெற்றி நாட்களைப் பார்த்துக் களிக்க வாழ்ந்தவர்கள் புண்ணியவான்களே; அவர்களைக் காட்டிலும் அதி புண்ணியவான்கள் இந்த வெற்றியை நாட்டப் போர்க்களத்தே உயிர் ஈந்த வீர புருஷர்களே."

---

## 10. நாதிர்ஷாவும் பாஜிராவும்

"நாதிர்ஷா துணிந்து முன்னேறுவதைப் பார்த்துவிடுகிறேன்"

(பாஜிராவ்)

கொங்கணத்தில்போல் மற்ற நாடுகளிலும் மராட்டியப் படைகள் வெற்றிபெற்று வந்தன. மால்வா, பண்டில்கண்ட் குஜராத் நாடுகளை ஜயித்த பின்னர் அந் நாடுகளில் ஒழுங்கும் ராஜாங்க ஏற்பாடுகளும் நாட்டிச் சாம்பல் நதிவரை ஹிந்து அதிகாரத்தைப் பரப்பிய பாஜிராவ் அத்துடன் நிற்கப்போவ தில்லை. ஹிந்துஸ்தானம் முழுவதிலும் ஆதிக்கம் பெற்ற ஹிந்து சாம்ராஜ்யத்தை நாட்டு

வதே அவரது கருத்தா யிருந்தது. ஹிந்து தருமத்தின் பகைவர்களான வஞ்சக அன்னியரிட மிருந்து ஹிந்து ஆலயங்களையும் தரும ஸ்தாபனங்களையும் விடுவித்து அங்கு அவர்களால் ஏற்பட்டிருக்கும் அசுத்தங்களை நீக்கிச் சுத்தி செய்யவேண்டும் என்ற கவலை அவருக்கு இருந்தது.

ஆகையால் அவர் கொங்கணத்துப் பரசுராமர் ஆலயத்தை மீட்ட அத்துடன் நிற்கவில்லை. காசி, கயா, மதுரை இவை யெல்லாம் முகமதியரின் மத வெறியாலும் மதத்தாலும் துன்புற்றன. ஆதலால் பண்டரிபுரத்தையும் பஞ்சவடியையும் விடுவிக்கக் கவலை கொண்டதைப்போல் இந்தப் புனித க்ஷேத்திரங்களையும் விடுவிக்கக் கவலை கொண்டு பாஜிராவ் முதலிய மராட்டியப் படைத் தலைவர்கள் மேன்மேலும் முயற்சி செய்தார்கள். கொங்கணத்தில் நிலத்திலும் கடலிலும் நடந்த போர்களில் எத்தனை விபத்துக்கள் நேர்ந்தும் மராட்டியர் மனந் தளரவில்லை. காசி, கயா, மதுரா முதலிய க்ஷேத்திரங்களை விடுவித்துத் தமது கட்டளையின்படி நடக்காவிடில் டில்லியைப் படையெடுத்துத் தாக்குவதாய் பாஜிராவ் முகமதியச் சக்ரவர்த்தியைப் பயமுறுத்தினர். டில்லியி லிருந்த முகமதியத் தலைவர்களுக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. இந்த ஹிந்துக்களுக்கு எதிராக இருபத்திரண்டு சேனாதிபதிகள் வந்தும் அவர்களால் ஒன்றும் சாதிக்க முடியவில்லை. ஆதலால் ஒரு பெரிய யுத்தத்தில் பாஜிராவ் தோல்வியுண்டு மராட்டியர் முறிவுற்று ஓடிவிட்டார்கள் என்று ஒரு பொய்யைக் கிளப்பிச் சக்ரவர்த்திக்கு எழுதினார்கள். அதைக் கேட்டதும் முகலாய மன்னருக்கு மட்டில்லாத மகிழ்ச்சி யுண்டாயிற்று. உடனே அவர் மராட்டிய ராஜாங்க தூதரைத் தமது தர்பாரி லிருந்தும் துரத்திவிட்டு இந்த வெற்றியைக் கொண்டாடும்படி பிரஜைகளுக்கு அறிவித்தான்.

டில்லியில் நடந்ததை யெல்லாம் கேள்வியுற்று பாஜிராவ் கோபச் சிரிப்புடன் சொன்னார்: "நல்லது. டில்லிக்கு என் மராட்டியப் படைகளை வடக்கே கூட்டிச் சென்று இனியும் உள்ளோம் என்பதை அவர்களது தலைநகர் பற்றியெரியும் ஒளியில் ருசுப்படுத்துகிறேன்."

அவர் வார்த்தை தப்பவில்லை. உடனே சந்தாஜி ஜாதவ், துகோஜி ஹோல்கர், சிவாஜி, யஸ்வந்த் ராவ் பவார் இவர்களுடன் சென்று டில்லி வாயிலில் யுத்தகோஷம் புரிந்தார். இதைப் பார்த்துத் திடுக்கிட்டு முகமதிய அரசர் தமது படைகளை ஒவ்வொன்றாக அனுப்பினார். ஆனால் அவைகளை மராட்டியர் சின்னா பின்னப்படுத்திவிட்டார்கள். மராட்டியரை முறியடித்துவிட்டதாக வந்த பொய்ச் சேதியை நம்பி மதிமயங்கிப்போனவர் இப்போது தம்முயிராவது தப்பவேண்டுமே என்று கதிகலங்கினார். வீர மராட்டியர் டில்லியை வெளிப்படையாய்த் தாக்கிக் கலக்கியது இதுவே முதன் முறை. வடக்கே மராட்டியர் பெற்றுவந்த வெற்றிகளைக் கேட்டுச் சகியாமல், நிஜாம் 34,000 பேர் கொண்ட படையுடனும் அப்போது இந்தியாவில் மிகச் சிறந்ததென்று பேர்பெற்ற பீரங்கிப் படையுடனும் கிளம்பி, ஸிரோஞ்ச் என்னும் இடத்தை யடைந்தான். மராட்டியருக்கு எதிராக அவனுடன் சேர்ந்திடுவது சரியென்று ராஜபுத்திரர்கள் யோசித்தார்கள். ஆனால் பாஜிராவோ வெகு சமர்த்துடனும் வீரத்துடனும் தன் படைகளை வேகமாகக் கூட்டிவரவும் மராட்டியரது கையில் நிஜாம் முன்போல் அகப்பட்டுக் கொண்டார். அவர்கள் இடைவிடாது தாக்கிவந்ததால் நிஜாம் போபால் கோட்டையை விட்டு வெளியே வர முடியாமல் போகவே, ஓய்ந்து வரும் தம் படைகளுக்குத் தீரம் புகுத்த முயன்றார். அன்றி மராட்டியரைத் தாக்கவும் முற்பட்டார். ஆனால் அவனுக்குப் பாஜிராவின் சமர்த்தும் வீரமும் வருமா? முகமதியரும் ராஜபுத்திரரும் கொண்ட நிஜாமின் படைகளோ மாளாத முற்றுகையால் பட்டினி பொறுக்க முடியாமல் தளர்ந்து வீழவும், கடைசியில் நிஜாம் பாஜிராவின் கட்டளைப்படியுள்ள உடன்படிக்கைக்கு ஒத்துக் கொள்ள வேண்டி நேர்ந்தது.

ஆனால், அப்போது ஒரு முகமதிய வஞ்சகச் சூழ்ச்சியால் நாதிர்ஷா சிந்து நதியைத் தாண்டி வந்தான். தேய்ந்து மாய்ந்துவரும் தமது ஆதிக்கத்தை மீண்டும் ஸ்தாபிக்கலாம் என்று முகமதியர்கள் பேராசைப்பட்டார்கள். ஔரங்கசீப்பின் மதவெறியில் வளர்ந்த நிஜாமும் மற்ற முகமதிய

அரசர்களும் நாதிர்ஷாவுடன் உறவு கொண்டாடி, முகலாயனால் முடியாததை இவனாவது சாதித்து மராட்டிய மண்டலத்தை முறியடித்து முன்போல் முகமதிய சாம்ராஜ்யத்தை நாட்டி பலப்படுத்துவான் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால், ஹிந்து மக்கள் பாஜிராவின் தலைமையின் கீழ் வீரத்துடன் நின்று மூர்க்கனான இந்த அயலானின் கீழ் வந்த முகமதியப் படைகளை எதிர்த்திராவிட்டால் அப்படியே நடந்திருக்கக் கூடும்.

தேச நெருக்கடியான இந்தச் சமயத்தில் பாஜிராவின் வீரமும் வலிமையும் தளர்ந்து குன்றாமல் மேன்மேலும் உயர்ந்து வளரலாயின. நாதிர்ஷா படையெடுப்பதனால் ஹிந்துக்களை யெல்லாம் ஒருங்கே திரட்ட முடியுமென்று அவர் நம்பினார். அவரது படைத் தலைவர்கள் போர்க்களங்களில் நாட்டிவந்த வெற்றியையும் காட்டிவந்த வலிமையையும் அவரது ராஜ தூதர்கள் வடக்கே உள்ள ராஜ்யங்களிலும் நாட்டிவந்தார்கள். போர்க்களங்களில் பவார், ஷிந்தே, கூஜார், ஆங்க்ரே இவர்களும் மற்ற மராட்டிய சேனாதிபதிகளும் வெற்றி நாட்டியதைப்போல் வியங்கோஜிராவ், விஸ்வாஸ்ராவ், தாதாஜி, கோவிந்த நாராயண், சதாசிவ் பாலாஜி, பாபுரங்க மல்ஹார், மகாதேவ் பட்ட ஹிங்கணே முதலியோர் அரசியல் தந்திரங்களில் வெற்றிகளை நாட்டிவந்தார்கள்.

இந்த ராஜ தந்திரிகள் ராஜ நீதியின் பிளவுறாத ஐதிகங்களையும், ஹிந்து இயக்கத்தின் உன்னத லட்சியங்களின் தத்துவங்களையும் மக்களிடை பரப்பியதால், மராட்டியப் படைத் தலைவர்கள் போர்க்களங்களில் வெற்றி பெற முடிந்தது. புகழ்பெற்ற இந்த அரசியல் நிபுணர்களின் கடிதங்களும் ராஜாங்கப் பதிவுகளும் தற்போது அச்சாகியிருக்கின்றன. அவைகளைப் படித்தால் மராட்டிய அரசியல் வாதிகளின் ஆழ்ந்த எண்ணங்களும், மராட்டிய வீரர்களின் அவாவும், உறுதியும், முயற்சிகளும், ஹிந்து சமூகத்தின் ராஜிய சுதந்திரத்தைப் பாதுகாக்க வல்ல ஹிந்து சாம்ராஜ்யத்தை நாட்டும் பரந்த யோசனையும் தெளிவாக விளங்கும். ஓங்கி வளரும் ஹிந்து ஆதிக்கத்தைக் கண்டு பொறாத முகமதியத் தலைவர்கள் ஔரங்கசீப்பின் போதனை

பெற்று, ஹிந்து மக்களின் இந்த ஏற்பாடுகளையும் முயற்சிகளையும் சிதறியடிப்பதற்காகவே நாதிர்ஷாவை அழைத்தார்கள்.

*1120—1124* வருஷங்களில் முகமது கஜினி தாக்கிய ஹிந்து மக்களின் நிலைமை வேறுவிதம். *1739*-வது வருஷம் நாதிர்ஷாவை எதிர்த்து நின்ற ஹிந்து ஆதிக்கமோ முற்றிலும் வேறானது. இதை நாதிர்ஷா உடனே கண்டுகொண்டான். மராட்டியர்கள் சுதேசத்தின் பொருட்டும் சுதருமத்தின் பொருட்டும் ஒருங்கே திரண்டு ஒரே சமூகமாய்க் கிளம்பித் தமது தெய்வங்களாகிய ஸ்ரீ ராமர், ஸ்ரீ கிருஷ்ணர் இவர்களது விருப்பத்தை அனுசரிப்பதாய் நம்பிப் போர் புரியத் தொடங்கிய நாள்முதல், அரசியலிலும் தேசிய உணர்ச்சியிலும் சைன்ய பலத்திலும் ராஜாங்க ஒழுங்கிலும் தக்க சமயங்களில் பகைவர்களுக்கு அளவற்ற கஷ்ட நஷ்டங்களை விளைவிக்க வல்ல தியாகத்திலும் மகாராஷ்டிர மக்கள் முகமதியரைக் காட்டிலும் சிறந்து விளங்கி வந்தார்கள். நாதிர்ஷாவைக் கண்டு அவர்கள் அஞ்சவில்லை. "நாதிர்ஷா என்ன ஒரு தெய்வமா? அவனால் சிருஷ்டியை அழிக்க முடியுமா? தன்னைக் காட்டிலும் பலாட்டியராய் இருப்பவர்களுக்கு அவன் பணிய வேண்டியதே. அவரவர் பலத்தைச் சீர்தூக்கிப் பார்த்த பின்பே சிநேகப் பேச்சுத் தொடங்க முடியும்; யுத்தத்துக்குப் பிறகே சமாதானம் தோன்ற முடியும். ஆதலால், மராட்டியப் படைகள் முன் செல்லட்டும். தங்களது பாஜிராவின் தலைமையின்கீழ் ராஜபுத்திரரும் மற்ற ஹிந்து மக்களும் ஒருங்கே கூடி வீரப்போர் புரிந்தால் பெரிய காரியங்களைச் சாதிக்கலாம். நிஜாமின் உதவி பெற்ற நாதிர்ஷா திரும்பிப் போவான் என்று தோன்றவில்லை. அவன் ஹிந்து ராஜ்யங்களின்மீது படையெடுத்து வருவது நிச்சயம். ஆகையால் ஸவாயி ஜயஸிங்கு உட்பட எல்லா ஹிந்து ராஜ்யங்களும் மகாராஜாக்களும் உமது (பாஜிராவின்) வரவை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். மராட்டிய ஹிந்துப் படைகளை நீர் நடத்தினால் டில்லியின்மீது படையெடுத்து முகமதியரைச் சிங்காசனத்தினின்றும் உதறித் தள்ளி, அதன்மீது உதயபூர் மகாராணாவை நாட்டுவது திண்ணம்."

இவ்விதமாய் மராட்டிய ராஜ தூதர்களும் ராஜ தந்திரிகளும் பாஜிராவுக்கு எழுதினார்கள். பேஸீன் இன்னமும் மராட்டியரது கையில் அகப்படவில்லை. கர்னாடகத்திலிருந்து கட்டாக் வரையிலும் அல்லாஹாபாத் வரையிலும் மராட்டியச் சேனைகள் பெரும் படையெடுப்புகளைச் செய்துவந்தன. எனினும் வட நாட்டு ஹிந்துமக்களின் மனத்தில் தமது அரசியல்வாதிகள் எழுப்பிய அவாக்களையும் அவர்கள் மேற்கொண்ட பொறுப்புக்களையும் பாஜிராவ் ஒரு கணமும் அதைரியப்படுத்தவில்லை. தமது கூட்டாளிகளுக்குத் தைரியம் குன்றியபோதெல்லாம் அவர் சொன்னார்: "வீரர்களே! ஏன் யோசித்துத் தயங்குகிறீர்கள்? ஒருங்கு திரண்டு முன் செல்லுங்கள். ஹிந்து சாம்ராஜ்ய தினம் வந்துவிட்டது. நருமதையிலிருந்து சாம்பல் வரையில் எனது மராட்டியப் படைகளை நிறுத்துவேன். அப்போது நாதிர்ஷா தக்காணத்துள் எவ்விதம் நுழைவான் என்பதைப் பார்த்துவிடுகிறேன்."

மராட்டியரது இத்தகைய தளராத உறுதியால் அந்தப் பாரசிக வீரனின் ஆசைகளெல்லாம் தடையுற்று அழிந்தன. முகமதிய மத பக்தன் என்ற பெயர் கொண்டு அவன் பாஜிராவுக்கு எழுதிய நீண்ட பரிகாசமான கடிதத்தில் அவர் டில்லி முகலாய அரசனுக்கு அடங்கி நடக்காவிடில் கொடிய தண்டனைக்கு ஆளாக வேண்டுமென்று எழுதினான். நாதிர்ஷா எழுதிய இந்தக் கடிதத்தை மராட்டியர் குப்பைத்தொட்டியில் எறிந்தார்கள். மராட்டிய மஹாராஜாவான ஷாஹு தமது ராஜ சபையில் 14–6–1739-இல் வெளிப்படையாகவே, "மராட்டியருக்கு அஞ்சி நாதிர்ஷா நாட்டைவிட்டு ஓடிவிட்டான்" என்று சொன்னார்.

நாதிர்ஷா திரும்பிப் போனதும் நிஜாமுக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. போபால் ஒப்பந்தப்படிக்கு நடக்காததற்கும் ஹிந்துக்களுக்கெதிராக நாதிர்ஷாவுடன் சேர்ந்து அக்கிரமங்கள் புரிந்ததற்குமாக நிஜாமுக்குத் தக்க தண்டனை விதிக்கக் கருதி மராட்டியர் டில்லியின்மீது படையெடுத்தார்கள். ஆனால், மராட்டியரை நடத்திய தலைவர்களில் சிரேஷ்டரான பாஜிராவ் 22–4–1740-ல் பரலோகம் அடைந்து விட்டார்.

ஹிந்து சுதந்திரம் என்ற உன்னத லட்சியத்துக்காக அவரைக் காட்டிலும் நாணயத்துடன் வெற்றிகரமாக ஒருவரும் பாடுபட்டதில்லை. இளவயதிலேயே தமது ஜாதிக்கும் தருமத்துக்கும் அநீதி யிழைக்கும் பகைவரை யழிப்பதாய்ச் சபதம் செய்து வெளியெடுத்த வாளை அவர் சாகும் வரையில் உறையில் போடவில்லை. ஹிந்து சமூகத்தின் பகைவர்களுக் கெதிரே படைகளை நடத்திக்கொண்டிருக்கும்போது அவர் யுத்த கூடாரத்தில் இறந்தார். ஸித்திகள், ரோஹில்லர், முகலாயர், போர்த்துகீசர் இவர்களெதிரே புரிந்த பல நீண்ட படையெடுப்புக்களில் அவர் தோல்வியையே அறியாதவர். ஹிந்து சாம்ராஜ்ய ஸ்தாபனம் என்ற லட்சியத்தை விரைவில் நாட்டுவதற்காக வெகு பாடுபட்டாதால் அவர் இளவயதில் இறக்க நேரிட்டது. அரை டஜன் நாதிர்ஷாக்கள் படையெடுத்து வந்ததால் ஒரு மோசமும் இல்லை. இத்தகைய வீரத் தலைவரின் அகால மரணத்தினல்தான் ஹிந்து மக்களுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது.

---

## 11. நானாவும் பாவூவும்

"தசரதர் ராஜாங்கத்தை இராம லட்சுமணர்களுக்கு ஈந்தது போலும், காலை நட்சத்திரம் தனது பலத்தைச் சூரியனுக்கு ஈவதைப் போலும், பாஜிராவும் ஹிந்து சுதந்திரக் கொடியை நர வீரர்களான நானாவுக்கும் பாவூவுக்கும் ஈந்தருளினார்."

(மஹாராஷ்டிரபாத்)

பாஜிராவ் இறந்தும் மக்களிடை அவர் நாட்டிய வீரம் குன்றவில்லை. பாஜிராவின் புத்திரரான பாலாஜி என்ற நானாஸாஹிபும், பேஸீனில் வெற்றி நாட்டிய சிமாஜியின் புத்திரரான பாவூஸாஹிபும் அவர்களது புதுத் தலைவர்கள்.

இவ்விருவர் தலைமையின்கீழ் மராட்டியர் முன்னிலும் அதிகமான முயற்சிகள் செய்து எடுத்த காரியங்களை வெற்றிகரமாக நடத்த முற்பட்டார்கள். பாலாஜிக்கு வயது 19 தான் ஆகியிருந்தது. ஆனால் அதற்குள் தமது தந்தையாரின்கீழ்ப் பயிற்சி பெற்று மக்களை நடத்தும் வலிமை யமைந்தவர். அவரது வன்மையைக் கண்டு ஷாஹூவும் அவரை மராட்டிய சாம்ராஜ்யத்தின் பிரதம மந்திரியாக அவரது தந்தையரின் ஸ்தானத்தில் நியமித்தார். பாலாஜி பிரதம மந்திரி ஸ்தானத்தில் நியமிக்கப் பட்ட தினம் வெகு விமரிசையுடன் கொண்டாடப்பட்டது. கொண்டாட்டச் சடங்குகள் ஆனதும், ராஜ ஆக்ஞைகள் அடங்கிய கடிதத்தை மகாராஜா அவரிடம் கொடுத்தார். அதில் மஹாராஷ்டிரத்தில் நடக்கும் இயக்கங்களின் உன்னதத் தத்துவங்களையும் லட்சியங்களையும் பற்றி உணர்ச்சி ததும்பிய வாக்கியங்கள் உள்ளன. "உமது தந்தையரான பாஜிராவ் பூரண ராஜ விசுவாசத்துடன் அரிய வீரச் செயல்களைப் புரிந்துள்ளார்; ஹிந்துஸ்தானம் முழுவதிலும் ஹிந்து ஆட்சியைப் பரப்ப முயன்றார்; அவ் வீரரின் புத்திரரான நீர் உமது தந்தையாரின் லட்சியத்தை யறிந்து அவர் நாட்ட முயன்ற அந்த லட்சியத்தை நாட்டி அட்டக் நகருக்கப்பாலும் படைகளைக் கூட்டிச் சென்று வெற்றி சூடுவீராக."

அரசரின் கட்டளையின்படி நானாவும் பாவூவும் சாகும் வரையில் சிவாஜி ஆரம்பித்த காரியத்தை வெற்றிகரமாக முடித்து வந்தார்கள். இதில் அவர்களுக்குத் தூண்டுதல் தேவையில்லை. ஹிந்து சாம்ராஜ்யமானது அவர்களது குழந்தைப் பருவத்துக் கனவாக இருந்து, யுவபருவத்தில் வேரூன்றிய பேரவா ஆயிற்று. அதற்காக முயன்று போர் புரிந்து இறப்பதே அவர்களது உள்ளத்தின் விருப்பம். நீண்ட காலம் டில்லியில் முகலாய அரசரது சிறை வாசத்திலிருந்த தோஷத்தினால் ஷாஹூ சில சமயம் முகலாய ராஜ சபையைப்பற்றிச் சற்று மரியாதையாகப் பேசுவது கூட அவர்களது மனத்தில் வெறுப்பை யுண்டாக்கிற்று.

பாலாஜி பிரதம மந்திரி ஸ்தானத்துக்கு வந்ததும் ஷாஹூ அவரைப் பூனாவுக்கு அனுப்பிப் படையெடுப்புக்

காக ராகோஜி போஸலேவைத் தென்னாடுகளுக்கு அனுப்பினர்.

ஷாஹு சிறையினின்று திரும்பி வந்ததும், மஹாராஷ்டிரத்தில் உள்நாட்டுப் போர் தொடங்கவே, முகமதியர்கள் அதனால் லாபமடைந்து, ஸாதத் உல்லா என்னும் தலைவன்கீழ்ப் படையெடுத்து, இந்தியாவின் தென் கிழக்கு நாடுகளில் எல்லாம் முகமதிய ஆதிக்கத்தை மீண்டும் நாட்டி, மராட்டியர் குடியேறியுள்ள தஞ்சாவூரையும் பலமாகத் தாக்கினார்கள். தஞ்சாவூர் ராஜாவான பிரதாப சிங்கு ஷாஹுவிடம் உதவி கேட்டார். 1732-வது வருஷம் ஸாதத் உல்லா இறந்து அவனது மருமகனான தோஸ்த் அலி என்பவர் ஆர்க்காட்டு நவாப் ஆனார். அவர் பலம் மிகுந்தவர். மராட்டியரிடம் கடும்பகை கொண்டவர். 19-5-1740-ல் தோஸ்த் அலியின் படைகள் நின்ற இடத்துக்குத் தெற்கேயுள்ள மலைச் சந்தின் வழியாக மராட்டியர்கள் புகுந்து அவரது படைகளை நாற்புறமும் தாக்கினார்கள். சில மணி நேரம் யுத்தம் நடந்ததில் முகமதியப் படை முழுவதும் அழிந்து போர்க்களத்தில் தோஸ்த் அலியும் மாண்டார். வெகு நாளாக முகமதியக் கொடுங்கோலாட்சியால் துன்புற்ற ஹிந்து மக்கள் மராட்டியரது ஜயத்தைக் கொண்டாடி அவர்களுடன் கலந்து கொண்டார்கள். வழியில் உள்ள நகரங்கள்மீது பளுவான யுத்த வரிகளை விதித்துக் கொண்டே ராகோஜி ஆர்க்காட்டை எதிர்த்தார். தோஸ்த் அலியின் மகனும் மாப்பிள்ளையுமான ஸப்தர் அலியும் சண்டாஸாஹிபும் வேலூரிலும் திருச்சினாப்பள்ளியிலும் பெரும் படைகளுடன் அகப்படாமல் தப்பியிருந்தார்கள். ஆகவே இந்தப் படையெடுப்பினால் தமக்குப் பெருத்த நஷ்டம் ஏற்படுகிறதென்றும், ஆதலால் அத்துடன் அதை நிறுத்தித் திரும்புவதாகவும் அறிவித்து ராகோஜி திருச்சினாப்பள்ளியை விட்டு எண்பது மைல் தூரம் திரும்பிப் போய் விட்டார். இந்தச் சூழ்ச்சியினால் வெகு சமர்த்தனான சண்டாஸாஹிபும் ஏமாறிப்போய், தம் படைகளில் 10000 பேர்களைப் பெருஞ் செல்வம் படைத்த ஹிந்து க்ஷேத்திரமாகிய மதுரையைத் தாக்கும்படி அனுப்பினர்.

முகமதியர் இப்படி வலைக்குள் அகப்பட்டுக்கொண்டதைக் கண்டு அந்த ஹிந்து சேனாதிபதி உடனே திரும்பி வந்து திருச்சினாப்பள்ளியைத் தாக்கினார். புனித ஹிந்து க்ஷேத்திரமாகிய மதுரையைத் தாக்கிக் கொள்ளையிட்டு நாசமாக்கி வந்த பராஸாஹிப் உடனே தன் சகோதரனுக்கு உதவி புரியத் திரும்பி ஓடிவந்தான். ஆனால், ராகோஜியோ தம் படையின் ஒரு பாகத்தை யனுப்பி அவனை வழிமறித்துப் போர் புரியவும் அந்த முகமதியன் அந்தப் போரில் அடிபட்டுத் தன்யானையின் மேலிருந்து விழுந்து இறந்தான். முகமதியர்கள் நாற்புறமும் சிதறி ஓடினார்கள். அவனது சவம் ராகோஜியின் கூடாரத்துக்கு எடுத்தச் செல்லப் பட்டது. அதை யவர் விலையுயர்ந்த துணிகளால் போர்த்தி அவனது சகோதரனை சண்டாஸாஹிபுக்கு அனுப்பினார். திருச்சினாப்பள்ளியின் முற்றுகை மாதக் கணக்கில் நடந்தது. கடைசியில் முகமதியத் தலைவர் ஹிந்துவுக்குப் பணியாமல் இருக்க முடியவில்லை. ராகோஜி சண்டாஸாஹிபைக் கைதியாக்கி, ஸாதாராவுக்கு அனுப்பி, திருச்சினாப்பள்ளியை முரார்ராவ் கோர்படே என்பவரின் தலைமையின் கீழ் 14000 போர் வீரர்களின் காவலில் வைத்தார். ஸாதத் உல்லாவும் மராட்டியரிடம் அடைக்கலம் புகுந்தார். ஸாதத் உல்லா ஒரு கோடி ரூபாய் கப்பங்கட்டி, தம் தந்தையால் 1736-வது வருஷம் முதல் துரத்தப்பட்ட ஹிந்து அரசர்களை மீண்டும் அவரவர் ராஜ்யத்தில் ஸ்தாபித்தால், அவனை ஆர்க்காட்டு நவாப்பாக அங்கீகாரம் செய்வதாய் மராட்டியர் வாக்களித்தனர்.

ஆனால், ராகோஜி தெற்கில் இந்த உன்னத வெற்றி நாட்டிவந்தபோதே மராட்டிய ராஜ்யத்துக்கும் வங்காளம் பீஹார் ஓரிஸ்ஸா நாடுகளின் முகமதிய அரசரான அலிவர்டிகானுக்கும் போர் உண்டாயிற்று. அலிவர்டிகானை எதிர்த்து வந்த கட்சியின் தலைவரான மீர் ஹபீப் மராட்டியரை உதவி புரியும்படி வேண்டினார். வங்காளத்தில் முகமதிய அதிகாரத்தைத் தாழ்த்தி ஹிந்துஸ்தானத்தின் கீழ்நாடுகளில் ஹிந்து ஆதிக்கத்தை நாட்ட ஆவல் கொண்டு ராகோஜியின் திவானான பாஸ்கர் பந்த் கோல்ஹட்கர் அதற்கு இணங்கவும் உடனே 10000 பேர்

கொண்ட மராட்டியக் குதிரைப் படை பீஹார் வழியாகத் துரிதமாகச் சென்று முகமதிய அதிகாரத்தின் பெருமையை மிதித்துத் தள்ள ஆரம்பித்தது. அலிவர்டிகான் எதிர்த்து நின்று போர் புரியவும் மராட்டியர்கள் அவனைத் தந்திரமாகச் சிக்க வைத்து இறுக்கி அவனது யுத்தக் கருவிகளைக் கைப்பற்றி அவனது படைகளை நொறுக்கவே அவன் கட்வா என்னும் இடத்துக்கு ஓடினன். மீர் ஹபீப்பின் வேண்டுகோளின்படி பாஸ்கர் பந்த் வங்காளத்தில் மழைக் காலம் முழுவதும் தங்கி, பகைவனுடைய நாட்டில் யுத்த வரி விதித்து வந்தார். மேலும், மராட்டியர் மூர்ஷிதாபாத்தைத் தாக்கி அதைத் தவிரக் கங்கையின் மேற்குப் புறமுள்ள ஹுக்ளி, மிட்னபூர், ராஜ்மஹல் முதலிய வங்காள ஜில்லாக்கள் யாவையும் கைப்பற்றினர்கள். வங்காளத்தில் மதவெறி பிடித்து இறுமாப்பு அடைந்திருந்த முகமதியனின் செருக்கை யடக்கி, ஹிந்து வெற்றியை நாட்டியதால் மராட்டியர் குதூகல மடைந்து அதன் பொருட்டுக் காளி பூஜையை அவ்விடம் வெகு சிறப்பாக நடத்த எண்ணினர்கள். அலிவர்டிகான் திடீரென்று ஹுக்ளி நதியைத் தாண்டி வங்காளத்தின் எல்லை வரையில் மராட்டியரைத் துரத்தியும் ஒரு சொற்பக் காலத்துக்குள் ராகோஜி திரும்பி வந்தார். பாலாஜியும் படையுடன் சக்ரவர்த்தியின் சேனதிபதி என்ற முறையில் பீஹாருக்குள் நுழைந்தார். உண்மையில் அவர் வந்த காரியம் வரி வசூல் செய்வதற்கும் ராகோஜி போஸலேயுடன் ஒரு தீர்மானத்துக்கு வருவதற்குமே. மராட்டியத் தலைவர்கள் தமக்குள் ஒரு சமரச முடிவுக்கு வந்தவுடன் பாலாஜி திரும்பிப் போய்விடவும், பாஸ்கர்ராவ் பந்தி நஷ்ட ஈட்டுக்காகவும் மராட்டிய சைனத்துக்காகவும் ஒரு பெருத்த தொகையை அதிகாரத்துடன் கேட்டார். அவரைப் போர்க் களத்தில் சந்திக்கச் சக்தி யற்ற அலிவர்டிகான் ஒரு வஞ்சகச் சூழ்ச்சியைத் தீர்மானித்து, நஷ்ட ஈடு விஷயமாய்ப் பேசுவதற்காக ராஜ தூத முறையில் பாஸ்கர்ராவ் பந்தைத் தனது கூடாரத்துக் கழைத்தான். நடுப்பேச்சில் 'காபிர்களைக் கொல்' என்ற சமிக்ஞை வார்த்தையைச் சொல்லவும் கொலையாளிகள் அவர் மீது பாய்ந்து தாக்கி அவரைக் கொன்றுவிட்டார்கள். அந்தக் கொடிய தினத்

தில் இருபது மராட்டியத் தலைவர்கள் மடிந்தார்கள். ராகோஜிகாயக்வாட் மட்டும் தப்பிப் பிழைத்து மராட்டியப் படையுடன் தம்மைச் சூழ்ந்து துண்டாக்கி வந்த வஞ்சகப் பகைவரிடமிருந்து திரும்பினர்.

ஆனல் ஔரங்கசீப்பின் ஏகாதிபத்திய பலத்தாலும் நசுக்க முடியாத மராட்டிய இயக்கம் தனது தலைவர்களில் சிலர் இங்கும் அங்கும் கொலையுண்டு போவதால் பின்னடையப் போவதில்லை யென்றலும் மூடனை அலிவார்டிகான் ராகோஜிக்கு எழுதினன்: "அல்லாவின் புகழ் ஓங்குக. ஹிந்துக்களைக் கண்டு முகமதியர்கள் அஞ்சார்கள். இஸ்லாமின் சிங்கங்கள் போருக்கு வந்தால் விக்கிரக ஆராதனை புரியும் அரக்கர்களான ஹிந்துக்கள் தொலைந்து விடுவார்கள். அதன்பின்பே சமாதானம் கைகூடும்.'' ராகோஜி தான் அலிவர்டிகானைச் சந்திக்க ஆயிரம் மைல் முன்னே வந்தும் அந்த இஸ்லாம் சிங்கம் அவரைச் சந்திக்க ஒரு நூறு மைலேனும் முன்னுக்கு வரவில்லை யென்று ஏளனமாக பதில் உரைத்து மூடவார்த்தைகளில் கால தாமதம் செய்ய மறுத்து பர்த்வான், ஒரிஸ்ஸா நாடுகளின் மீது படை யெடுத்து வரி விதித்தார். இடைவிடாமல் மராட்டியர்கள் அலிவர்டிகானை நொறுக்கி வந்து, கூடுமான இடங்களில் வரி வசூல் செய்தும், மற்ற இடங்களில் பளுவான யுத்த அபராதங்களைச் சேகரித்தும், பல ஜில்லாக்களைக் கைப்பற்றியும், பல இடங்களில் போர் புரிந்தும், அந்த முகமதியனல் வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா நாடுகளில் ஆட்சி செய்ய முடியாத நிலைமைக்குக் கொண்டு வந்தார்கள். மராட்டியர் தோல்விகளால் தளராமலும் கஷ்டங்களால் குன்றமலும் சௌத்துக்காகப் போர் புரிந்து வந்தார்கள்.

கடைசியில் 1750-வது வருஷம் 'இஸ்லாம் சிங்கமாகிய' அலிவர்டிகான் ஓய்ந்து ஒடுங்கி யுத்தத்தை நிறுத்து மாறு மராட்டியர்களைக் கெஞ்சினன். பாஸ்கர்ராவ் பந்தின் கொலையின் அபராதத்துக்காக ஒரிஸ்ஸா நாட்டை மராட்டியருக்குக் கொடுத்தான். மேலும் வங்காளம், பீஹார் நாடுகளின் சௌத்துக்காக வருஷந்தோறும் பத்து லக்ஷம் ரூபாய் கொடுப்பதாயும் வாக்களித்தான். இவ்விதம்

'இஸ்லாத்தின் சிங்கங்கள்' கடைசியில் 'விக்கிரக ஆராதனை புரியும் அரக்கருக்கு'த் தாழ்ந்து வணங்கிக் கெஞ்ச வேண்டியிருந்ததைப் பார்த்தால் அன்று அவர்கள் அல்லாவைப் புகழ்ந்திருக்க மாட்டார்களென்று சந்தேகிக்கிறோம்.

இவ்விதம் ராகோஜி போஸலே வங்காளத்தினின்றும் முகமதிய அதிகாரத்தை நிர்மூலம் செய்து வரும் போது மற்ற மராட்டியப் படைத் தலைவர்கள் வட நாடுகளில் உள்ள முகமதிய பல ஸ்தானங்களை யெல்லாம் பொடியாக்கிப் புகழ் பெற்றார்கள். யமுனை முதல் நேபாளத்தின் எல்லை வரையுள்ள நாடுகளில் ஆதிக்கம் பெற்ற மதவெறி பிடித்த ரோஹில்லரும் பட்டாணியரும் பயங்கரமான முறையில் ஒன்று சேர்ந்து மொகலாய ராஜ்யத்தை ஒழித்து ஆப்கானிய ராஜ்யத்தை மீண்டும் டில்லியில் ஸ்தாபிக்க முயன்றார்கள். டில்லி மொகலாயச் சக்ரவர்த்தியின் வஜீர் மராட்டியரது உதவியை நாடினான். இத்தகைய நல்ல சமயத்தை எதிர்பார்த்திருந்த மராட்டியர்கள் தமது பகைவருக்குள் ஏற்பட்ட சண்டையின் குழப்பத்தால் லாபமடையக் கருதி முகலாய மந்திரியின் வேண்டுகோளுக்கு இணங்கினார்கள். உடனே மராட்டியத் தலைவர்களான மல்ஹார்ராவ் ஹோல்கரும், ஜயாஜிராவ் ஷிந்தேவும் படைகளுடன் யமுனையைத் தாண்டிப் பட்டாணியரது கையில் இருக்கும் காதர்கஞ்ச் கோட்டையைத் தாக்கினார்கள். பட்டாணியரும் வெகுநாள் தங்களாலான வரையில் பார்த்தார்கள். கடைசியில் மராட்டியர்கள் அவர்களது படையைச் சின்னாபின்னமாக்கித் தூரத்தி உன்னதமான வெற்றியை அடைந்தார்கள். மேலும் கதர்கஞ்சுக்கு உதவி புரிவதற்கு வந்துகொண்டிருந்த பட்டாணியத் தலைவனை அஹமத்கானைச் சூழ்ந்து எதிர்த்தார்கள். அஹமத்கான் பருக்காபாத்தில் நுழைந்ததும் மராட்டியர்கள் அதை முற்றுகை யிட்டார்கள். அனேக வாரங்கள் சண்டை தளராமல் நடந்தது. ஆனால் கங்கையின் அக் கரையிலிருந்து ரோஹில்லப் படையினால் வந்த உதவியால் பட்டாணியர்கள் தளராமல் போர் புரிந்து வந்தார்கள். பருக்காபாத்தின் முற்றுகை மும்முரமாக நடந்துகொண்டிருக்கும்

போதே மராட்டியப் படைகளில் பல தொகுதிகள் படகுகளைக் கொண்டு பாலம் அமைத்து கங்கையைத் தாண்டி அக் கரை சென்று அங்கு ஒன்று சேர்ந்து நின்ற 30,000 ரோஹில்லர்களையும், பட்டாணியர்களையும் பயங்கர யுத்தத்தில் முறியடித்தார்கள். அஹமத்கான் பருக்கா பாத்தி லிருந்து தப்பியோட முயன்றான். ஆனால் அது பயன் படாமல் போகவே மராட்டியர் அவனைத் துரத்தி முகமதியர்களைச் சிதறவடித்து அவர்களது கூடாரங்களி லிருந்து யானைகளையும் குதிரைகளையும் ஒட்டகங்களையும் கொள்ளை கொண்டு போனார்கள்.

இந்தப்படை யெடுப்பினால் மராட்டியர்களுக்கு யுத்தப் புகழ் அன்றி பல நன்மைகள் ஏற்பட்டன. ஏனெனில் மராட்டியரை வம்புக்கு இழுக்கக் கருதி பட்டாணியர்கள் காசியைத் தாக்கி ஹிந்து ஆலயங்களை யிடித்து தமது கட்சியில் அல்லா இருப்பதால் தம் எதிரே ஹிந்துக்களால் நிற்க முடியாது என்று பெருமையடித்துக்கொண் டிருந் தார்கள். இதுவும் ஒரு விதத்தில் உண்மையாயிற்று என்று சொல்லலாம். ஏனென்றால் ஒவ்வொரு போர் முனையிலும் மராட்டியர் பிரவேசித்தவுடனே பட்டாணியர் கள் முதுகு காட்டி ஓடினார்கள். இவ்விதம் முகமதியரைத் தாக்கி முறியடித்துத் துரத்தியதனால் தமக்கு இழைக்கப் பட்ட அநீதிகளுக்கு வஞ்சம்தீர்ந்தது என்ற திருப்தி ஹிந் துக்களுக்கு ஏற்பட்டது. அக்காலத்திய கடிதங்களில் இந்த வெற்றியின் ஒலியைக் கேட்கிறோம்: "இந்தப் பட் டாணியர்கள் காசியையும் பிரயாகையையும் இழித் துரைத்து ஏளனம் செய்தார்கள். நல்லது, கடைசியில் ஹரி பக்தர்களே வெற்றி பெற்றார்கள். பகைவர்கள் காசியில் செய்த அக்கிரமங்களின் பலனை பருக்காபாத்தில் அடைந் தார்கள்". மராட்டியர் அரசியலிலும் இந்த வெற்றியின் பலனை அடைந்தார்கள். முற்றிலும் தாழ்வுற்று அடங்கிய முகமதியச் சக்ரவர்த்தி தனது ராஜ்யத்தின் ஏனைய பாகங் களிலிருந்தும் சௌத் வசூலிக்கும் உரிமையை மராட்டிய ருக்கு அளித்துவிட்டான். இவ்விதம் ஸூல்தான் (சிந்து), பஞ்சாப், ராஜபுதனம், ரோஹில் கண்ட் நாடுகள் மராட்டி யர் ஆதிக்கத்துள் அடங்கின. முகலாய ஆதிபத்தியத்தை

இருபிளவாக்கிய மராட்டிய வெற்றி வாளை எய்திய ஹரி பக்தர்களே. இந்த விசேஷச் செய்திகளைக் கேட்டதும் மராட்டிய மண்டலத் தலைவரான பலாஜி தமது படைகளுக்கு எழுதினர்: “ தக்காணத்துப் படைகளின் வீரமும் தீரமும் மகத்தானவை. நருமதையையும் யமுனையையும் கங்கையையும் தாண்டிச் சென்று கொடும் பகைவர்களான ரோஹில்லரையும் பட்டாணியரையும் வென்ற வீர சிஷ்டர்களே, உங்களது வெற்றி அபூர்வமானது நீங்களே ஹிந்துராஜ்யத்தின் தூண்கள். உங்களாலே ராஜ்யங்கள் சிருஷ்டிக்கப் படுகின்றன என்ற புகழ் இரான் நாட்டிலும், துரானிலும் அதற்கப்பாலும் பரவி விட்டது ” (கி. பி. *1751.*)

அயோத்தி நவாப் கையிலிருந்தும் டில்லி வஜீர் கையிலிருந்தும் காசியையும் பிரயாகையையும் மீட்டுவிக்க மராட்டிய மண்டலத் தலைவர்கள் மீண்டும் முயன்றனர்கள். ஹிந்து விடுதலை இயக்கத்தின் பிரதிநிதிகளான அவர்களுக்கு தமது புனித க்ஷேத்திரங்கள் முகமதியரின் கீழ் அடைந்து வரும் இழிவுகளைக் கண்டு மனம் பொறுக்கவில்லை. இதை அக்காலத்து கடிதங்களிலிருந்து அறிகிறோம். வெறும் வெட்டிப் பேச்சுகளில் பொறுமையற்ற மல்ஹார்ராவ் உடனே காசிமீது படையெடுத்து அங்கே புனிதமான தியானவாவி மீது நின்ற முகமதிய மசூதியை இடித்துத் தகர்த்து ஹிந்து மக்களுக்கும் மதத்துக்கும் ஏற்பட்ட அவகேட்டைப் போக்குவதென்று நிச்சயித்தார். பிரதான ஹிந்து ஆலயங்களின் மீது முகமதியப் பிறை இறுமாப்புடன் பறந்த கொடிய நாட்களை அந்த மசூதி நினைவூட்டிற்று. ஆனல் காசியில் அதிகாரம் ஓங்கிய “யவனர்” களுக்கு பயந்து காசிப் பிராமணர்கள் தகுந்த சமயம் வாய்க்கும் வரையில் காசியைத் தாக்கலாகாது என்று வேண்டினர்கள். தமது உயிரைக் கருதி இவ்விதம் தரும காரியத்தில் யோசனை கூறியதால் உண்டாகும் பாவத்தைப் பற்றியும் காசிப் பிராமணர்கள் அந்தக் கடிதத்தில் எழுதினர்கள். (*18–6–1751*)

*1749*-வது வருஷம் ஷாஹூ இறந்தார். அவரிடமிருந்து பிரதான தலைமை யதிகாரங்களைப்பெற்ற பாலாஜி

அன்றுமுதல் மஹாராஷ்டிர மண்டலாதிபதியாய் விளங்கி தமது சமூகத்தின் லக்ஷியங்களின் உயிராய் நின்றார். அவரது காலத்தில் சிற்சில சமயங்களில் உள்நாட்டுக் கலகங்கள் நடந்தன வென்றாலும் முகலாய ஆதிபத்தியத்தை ஒடுக்கி மராட்டியரது தலைமையின் கீழ் உன்னத சுதந்திரம் பொருந்திய ஹிந்து சாம்ராஜ்யத்தை நாட்ட வேண்டுமென்று அவர் உறுதியுடன் இடைவிடாது முயன்று அயல்நாட்டுப் பகைவர்களான முகமதியர்களையும் கிறிஸ்துவர்களையும் ஐரோப்பியர்களையும் போர்க்களத்தில் எதிர்த்துத் தளராமல் யுத்தம் புரிந்து வந்தார்.

தக்காணத்துச் சமவெளிகளில் பிரெஞ்சுக்காரரின் அதிகாரமும் செல்வாக்கும் அதிகரித்துக்கொண்டு வந்தது. பாலாஜி இதை யறியாமல் இல்லை. ஆனால் ஏக காலத்தில் இந்தியாவின் பல பாகங்களிலும் மராட்டியரது அதிகாரத்தை யழிக்க வந்த பல பகைவர்களுடன் அவர் போர்புரியவேண்டி யிருந்ததால் பிரெஞ்சுக்காரரிடம் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. கடைசியில் போர் வெற்றியாலும் ராஜ தந்திரங்களாலும் பிரெஞ்சுக் காரரிடம் பிரமையை உண்டாக்கி விட்டார்கள். அதனால் பிரெஞ்சுக்காரர்களும், அவர்களது ஆதரவில் இருந்த நிஜாமும், 1752-வது வருஷம் பாலாகியில் உடன்படிக்கை செய்து கொண்டார்கள். அதனால் தபதிக்கும் கோதாவரிக்கும் நடுவுள்ள நாடுகள் மராட்டியருக்கு அகப்பட்டதன்றி தக்காணத்து ராஜ்யங்களில் பிரெஞ்சுக்காரரின் செல்வாக்கும் குன்றி விட்டது.

தக்காணத்துச் சமவெளியிலும் கர்னாடகத்திலும் உள்ள கலக நவாப்புக்களைத் தண்டிப்பதென்று ஏற்கெனவே நிச்சயித்திருந்த பேஷ்வா ஸாவனூர் நவாப்பைத் தோற்கடிக்கவும், அவன் பரந்த பிரேதசத்தை மராட்டியருக்கு அளித்து பதினொரு லக்ஷம் ரூபாய் கப்பம் கட்டுவதாகவும் ஒப்புக்கொண்டான். பின்பு 60000 படைகளுடன் பாலாஜியும் பாலுவும் ஸ்ரீரங்கப் பட்டிணத்தைத் தாக்கி, சௌத் வரிக்கும் பாக்கிக்குமாக 35 லக்ஷம் ரூபாய் விதித்து, ஷிவ்ரேலவை மீண்டும் கைப்பற்றி, முகமதிய

சிற்றரசர்களுக்கு தண்டனை விதித்தார்கள். பின்பு பலவந்த ராவ் மேஹேந்தளே கடப்பையின் முகமதிய நவாப் மீது படைஎடுத்தார். கீழ்த் தக்காணத்திலே மராட்டியரது பெயரைக் கேட்டு நடுங்கி வந்த முகமதியத் தலைவர்கள் யாவரும் நவாப்புக்காகப் போர்புரிந்தார்கள். ஆங்கிலேயரும் அவனது கட்சியில் சேர்ந்து கொண்டார்கள். பெருத்த மழையையும் லக்ஷியம் செய்யாமல் பலவந்த ராவ் மேஹேந்தளே முகமதியப் படைகளைத் தாக்கிக் கொடிய யுத்தம் புரிந்து ஆயிரக்கணக்கான பட்டாணியரையும், நவாப்பையும் கொன்றார். அவனது ராஜ்யத்தில் அரை பாகத்தைத் தமது ராஜ்யத்தில் சேர்த்து மராட்டியர்கள் ஆற்காட்டு நவாப்புக் கெதிரே சென்றார்கள். ஆங்கிலேயர் அவனுக்கு அதிக ஆதரவு கொடுத்தும், அவன் மராட்டியாது கட்டளையை மீற முடியாமல் அவர்களைச் சமாதானப் படுத்த நான்கு லக்ஷம் ரூபாய் கொடுக்கவும் நேரிட்டது. 1759-வது வருஷம் மராட்டியர்கள் பெங்களூரை முற்றுகை யிட்டு சென்னப் பட்டணத்தைக் கைப்பற்றி, மைசூரில் தனது பலத்தைப் பெருக்கி வந்த ஹைதரிடமிருந்து 34-லக்ஷம் ரூபாயை வசூலித்தார்கள். பாலாஜி அவனை அப்போதே நசுக்கிவிட வேண்டும் என்று விரும்பினார். ஆனால் மராட்டியர் இந்தியாவின் மற்ற பாகங்களில் இடை விடாது படை யெடுக்க வேண்டி யிருந்ததால், தாம் எடுத்த காரியம் முழுவதும் நடக்காதிருந்தும், பாலாஜி தக்காணத்தினின்று படைகளுடன் திரும்பிச் செல்ல நேர்ந்தது.

இதற்குள் ராகோபா 1753—வது வருஷம் அஹமதாபாத்தைக் கைப்பற்றி டில்லியில் மாரட்டிய அதிகாரத்தை எதிர்த்து வந்த ஜாட் ஜாதியாரிடமிருந்து 30 லக்ஷம் ரூபாய் வசூலித்தார். அப்போது ஜோதபூர் சிங்காதனத்தின் பொருட்டு ராஜபுத்திரர்களுள் உள்நாட்டுப் போர் தோன்றியது. விஜயசிங்குக்கு எதிராக மராட்டிய உதவியை ராமசிங்கு வேண்டினார். மராட்டியரும் அதற்கிணங்கி தத்தாஜி, ஜயப்பாஷிந்தே இவர்களின் தலைமையின் கீழ் படைகளை அனுப்பினார்கள். 50000 பேர் கொண்ட பலத்த ராஜபுத்திர சேனையின் எதிரே மராட்டியர்கள்

பயங்கர யுத்தம் புரிந்து விஜயசிங்குக்குத் தோல்வி யளிக்க, அவனும் நாகூருக்கு ஓடினன். ஜயப்பா நாகூரை முற்றுகை யிட்டார். ஆனல் அவருக்குப் போரில் அதிருப்தி ஏற்பட்டது. ஹிந்து சகோதரர்களான ராஜ புத்திரர்களும் மராட்டியரும் எதிர் எதிர் போர் புரிவது பாலாஜிக்குப் பிடிக்கவில்லை. ராஜபுதனத்தில் சமரசத்தை நாட்டித் திரும்பி வந்து, ஹிந்துஸ்தானத்தின் புண்ணிய க்ஷேத்திரங்களான காசியையும் பிரயாகையையும் விடுவிக்கும்படி பாலாஜி அடிக்கடி ஷிந்தேயை வற்புறுத்தி வந்தார்.

ஆனல் அப்போது விஜயசிங்கு செய்த அநீதியைக் கேட்டு மஹாராஷ்டிரம் முழுவதும் கொதிப்படையவே சமரஸ முயற்சி பயன்படாமல் போய்விட்டது. விஜய சிங்கின் பெரியப்பா தனது கூடாரத்துக்குப் பில்லாஜி காயக்வாடை யழைத்துக் கொலை செய்ததை வாசகர்கள் அறிவார்கள். பில்லாஜியின் கொலையினல் மராட்டியரின் சீற்றம் அதிகமாகி வந்ததை யறிந்தும் விஜயசிங்கு மீண்டும் அதேவிதமான வஞ்சகக் காரியத்தைச் செய்யத் துணிந்தான். விஜயசிங்கின் கூடாரத்தினின்றும் மூன்று ராஜ புத்திரக் கொலையாளிகள் கிளம்பிச் சென்று பிச்சைக்காரர் களைப்போல் மாறு வேடம் பூண்டு ஜயப்பாவின் கூடாரத்தின் முன்னே உள்ள மராட்டிய குதிரை லாயத்தில் உட்கார்ந்து கொண்டு நிலத்தில் எறியப்பட்ட கொள்ளு தானியத்தைப் பொறுக்குவதுபோல் பாசாங்கு செய்து கொண்டிருந்தார்கள். ஸ்னானம் செய்வதற்காக ஜயப்பா வெளியே வந்ததும் அவர்மீது இம் மூவரும் பாய்ந்து கத்தியால் அள்ளையில் குத்தினர்கள். ஜயப்பா பெருத்த காயத்துடன் விழுந்தார். அம் மூவரில் இருவரைப் பிடித்தார்கள். ஒருவன் தப்பிவிட்டான். உடனே தலைவர் இறந்த அந்தக் குழப்பத்தில் மராட்டியரை முறியடிப்பதற்காக ராஜபுத்திரர்கள் வெளியே வந்து மராட்டியரைத் தாக்கினர்கள். ஆனல் மரணத்தருவாயிலும் ஜயப்பா தன் தோழர் போர் புரிந்து எதிரியை வென்ற பிறகே தன்னை வந்து கவனிக்கும்படிச் சொல்லவும், இறக்கும் தலைவரின் இந்த வீர மாமொழிகளைக் கேட்டு மராட்டியர் ஆவேசத்துடன்

போர் புரியவும், விஜயசிங்கு தோல்வியுற்ருன். ஷிந்தேயின் உதவிக்கு மற்ற மராட்டியப் படைத் தலைவர்களும் வந்தார்கள். 10000 வீரர்களுடன் அந்தாஜி மங்கேஷ்வர் ராஜபுதனத்தில் பிரவேசித்து, விஜயசிங்கை ஆதரித்த ராஜபுத்திர அரசர்களுக்குத் தண்டனை விதித்தார். இவ்விதம் நிர்க்கதியானதும் விஜயசிங்கு சமாதானத்தை வேண்டினன் ; ராமசிங்கை நாகூர், மாடாதா முதலிய ஜில்லாக்களுக்கு அரசராக அங்கீகரித்து, அஜ்மேரையும் கொடுத்து, மராட்டியருக்குப் படை யெடுப்பினல் உண்டான செலவையும் கொடுத்தான்.

இப்போது பூண்டி நாட்டின் குழந்தைப் பருவத்து அரசரின் விதவையான தாயார் பகைவர்களிட மிருந்து தம்மைக் காக்கும்படி ஷிந்தேவின் உதவியை நாடினர். தத்தாஜி ஷிந்தேவும் அதற்கு இணங்கி உதவி செய்ய அந்த ராஜபுத்திர அரசி திருப்தி யடைந்து வெகுமதியாக அவருக்கு 75 லக்ஷம் ரூபாய் கொடுத்தார்.

---

## 12. சிந்து நோக்கிப் படையெடுப்பு

"மஹோரில் உள்ள தெய்வத்துக்குத் தமது வேண்டுதலைத் தவருமல் செலுத்திவிட்டு, ஹிந்துக்கள் திக்கு விஜயத்துக்காக லாகூருக்குப் போனர்கள். இமைப் பொழுதில் அட்டக் நகர் மீது தமது கொடியை நாட்டினர்கள். பாஜிராவின் தலைமையில் போர் புரிந்த ஸர்தார்கள் சிங்கம், புலிகளைப்போல் ஆண்மை பொருந்தியவர்கள்."

—பிரபாகர்

இக் காலத்தில் ராகோபா டில்லியில் அநேக அரிய காரியங்களைச் செய்தார். சக்ரவர்த்தியின் வஜீர்

உத்தியோகத்தை அடைவதில் காஜியுத்தீனுக்கு உதவி புரிந்தார். சக்ரவர்த்தியை பலவந்தம் செய்து மராட்டியருக்கு கயாவையும் குரு க்ஷேத்திரத்தையும் தந்து விடும்படி செய்தார். தானே நேரில் சென்று மதுரா, பிருந்தாவனம் கடமுக்தேஷ்வர், புஷ்பவதி, புஷ்கர் முதலிய ஹிந்து க்ஷேத்திரங்களைக் கைப்பற்றினார். மராட்டியப் படை ஒன்று காசிமகா க்ஷேத்திரத்தையும் கைப்பற்றியது. இவ்விதம் ஹிந்து மக்களின் ஆசைக் கனவு பலித்து விட்டது. அநேகமாய் ஹிந்து க்ஷேத்திரங்கள் ஸ்தலங்கள் யாவையும் முகமதியரிட மிருந்து மீட்டதாக பேஷ்வாவுக்கு ராகோபா பெருமையாக எழுத முடிந்தது. ஒவ்வொரு ஹிந்துவின் உள்ளத்திலும் தெய்வீக எண்ணங்களை எழுப்பவல்ல வடநாடுகளிலுள்ள திவ்ய க்ஷேத்திரங்களி லெல்லாம் ஹிந்து துவஜம் வெற்றியுடன் பறக்க முடிந்ததை யோசித்துப் பார்த்தால் ஹிந்து விடுதலைப் போரையும் ஹிந்து சாம்ராஜ்ய இயக்கத்தையும் நடத்தும் உரிமை மராட்டியருக்கே தகும் என்பது உறுதியாய் விளங்கிற்று. மராட்டிய வெற்றிகளால் பயமடைந்து சக்ரவர்த்தி இவர்களுக்கு எதிரே சூழ்ச்சி செய்யலானான். அதையறிந்த காஜியுத்தீன் தன்னையும் தனக்கு உதவி புரிந்து உத்தியோகம் தந்த மராட்டியர்களையும் காப்பாற்ற எண்ணி ஹோல்கரை 50000 போர் வீரர்களுடன் அழைத்தான். சக்ரவர்த்தியின் படைகள் சின்னபின்னமாய்க் குலைந்திடவும் அவனது அந்தப் புரத்து ஸ்திரீகளையும் காப்பாரில்லாமல் போகவே அவர்கள் மராட்டியர் கையில் அகப்பட்டனர். மராட்டியர் காஜியுத்தீனுடன் டில்லியில் பிரவேசித்து, அரண்மனைக்குச் சென்று, கிழச் சக்ரவர்த்தியைச் சிங்காதனத்தி னின்றும் இறக்கி, ஒரு புது மனிதனை அதன் மீதமர்த்தி, தெய்வமே பழிக்குப் பழி வாங்குவது போல் அவனுக்கு இரண்டாவது அலம்கீர் என்று பெயரிட்டார்கள்.

அலம்கீர் என்றால் உலகை ஜயிப்பவன் என்று அர்த்தம். முதலாவது அலம்கீரான ஔரங்கசீப், ஹிந்துக்களின் வாழ்வின் சுடரைத் தமது கோப மூச்சினால் அணைத்து விடலாம் என்று கனவு கண்டு, அல்லாவின் மீது

ஆணையிட்டுப் பெருமூச்சு விட்டான். ஆனால் அச்சிறு சுடர் சோதி பெற்றுத் தன் தாடியைப் பொசுக்கி மகத்தான காட்டுத் தீயாக ஓங்கியதைக் கண்டு திடுக்கிட்டு மதிகலங்கித் தத்தளித்தான். அச் சுடர் ஸஹ்யாத்ரி சிகரங்களைப் பற்றிக்கொண்டு கோடிக் கணக்கான உள்ளங்களையும் கோட்டைக் கொத்தளங்களையும் மலைகளையும் பள்ளத்தாக்குகளையும் நீரிலும் நிலத்திலும் எரித்து மகத்தான தெய்விகவேள்விச்சுடராகப்பிரகாசித்தது. முதலாவது அலம்கீர் மராட்டியரை 'மலை எலிகள்' என்று வனனம் செய்தான், ஆனால் அந்தமலை எலிகள் வலிவுள்ள கூறிய நகங்களையும் பற்களையும் வளர்த்திக்கொள்ளவே, இஸ்லாத்தின் பல சிங்கங்கள் கிழியுண்டு துண்டுபட்டு இரண்டாவது அலம்கீரின் தலைநகரான டில்லியில் அவ் வெலிகளின் பாதங்களில் சக்தியற்று வீழ்ந்துவிட்டன. முதலாவது அலம்கீர் சக்ரவர்த்தி சிவாஜி ஒரு சிற்றரசராக மதிக்கவும் மறுத்தான். ஆனால் அதே சிவாஜியின் சந்ததியில் தோன்றியவர், பரவாயில்லை என்று எண்ணியதால்தான் ஔரங்கசீப்பின் எள்ளுப்பேரனை இரண்டாவது அலம்கீர், சக்ரவர்த்தியென்றபெரும் பட்டத்தைப் பெயரளவிலேனும் வகிக்க முடிந்தது.

ஹிந்து ஆதிக்கம் பரவுவதைப் பார்த்து இந்திய முகமதியர்கள் பயந்து கோபத்தால் துடித்தார்கள், பருக்காபாத் முதலிய போர்முனைகளில் முறியடிந்த ரோஹில்லர்களும், பட்டாணியர்களும், வெளியேதுரத்தப்பட்ட வஜீர்களும் நவாப்புகளும், மௌல்விகளும், மௌலானுக்களும் காபிர்களின் ஒப்பற்ற வெற்றியால் தமது பிறை தினந்தோறும் ஒளிகுன்றித் தேய்ந்து வருவதைக் கண்டு துள்ளினர்கள். மராட்டியாது வாள் வன்மையால் பிழைத்து வந்த சக்ரவர்த்தியும், மனம் விண்டு கதியற்ற எல்லா முகமதியரும் மராட்டியர்மீது பழி வாங்குவதாய் ஆணையிட்டு அலறி, மராட்டியர்களைத் துரத்தியழிக்கும் வஞ்சக சதியாலோசனைகளைச் செய்தார்கள். இதைத் தவிற மராட்டிய ஆதிக்கம் வடக்கில் ஓங்குவதைக் கண்டு ஹிந்து மன்னர்களில் சிலருக்கும் துவேஷம் தோன்றியது நமக்கு ஆச்சரியத்தை விளைவிக்கிறது. ஜயப்பூர் மாதவசிங்கும்; ஜோதிபூர்

விஜயசிங்கும், ஜாட் ஜாதியாரும், இன்னும் சில ஹிந்து சிற்றரசர்களும் தமது இயற்கையான தேசப் பகைவர்களுடன் சேர்ந்துகொண்டு, ஹிந்து தருமத்தையும் சுதந்திரத்தையும் அழிக்க வந்த பகைவர் யாவரையும் அடக்க வல்ல ஓரே ஹிந்து ராஜ்யமான மராட்டியரைத் தொலைக்க வஞ்சக ஏற்பாடுகளில் கலந்துகொண்டார்கள். விக்கிரக ஆராதனை புரியும் காபீர் மக்களைப் போர்க் களத்தில்சந்திக்கவும் சக்தியற்று சாணக்கிய தந்திரங்களாலும் வெல்ல முடியாமல், ஔரங்கசீப்பு கற்றுக்கொடுத்த வஞ்சக முறைகளாலும் ஏமாற்ற முடியாமல், சக்தியற்ற மூகமதியத் தலைவர்கள் பண்டைக் காலத்தில் ஒவ்வொரு முறையும் செய்ததைப்போல் இப்போதும் இந்தியாவின் எல்லைக்கு அப்பால் உள்ள தமது மூகமதியச் சகோதரர்களைப் படையெடுத்து வரும்படி யழைத்தார்கள்.

இந்த வஞ்சகச் சூழ்ச்சிக்குத் தகுந்த தலைவர்களாக இருந்தவர்கள் மராட்டியரது வீழ்ச்சியால் லாபமடைய வல்ல ரோஹில்லர் தலைவனை நஜீப்கானும் டில்லி மன்னனது அந்தப்புரத்திலே ஓயாத சாகஸம் புரிந்து வந்து இப்போது ஹிந்துக்களின் தயவினால் வயிறுவளர்க்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையை வெறுத்த மால்காஜாமணி என்ற துஷ்ட ஸ்திரீயும்தான். இவர்கள் தமது முன்னோர்கள் நாதிர்ஷாவை யழைத்த தந்திரத்தைக் கையாளத் தீர்மானித்தார்கள். அஹமத்ஷா அப்டாலியுடன் ரகசியப் பேச்சு நடத்தி அவனை இந்தியாமீது படையெடுத்து மூகமதிய ஆதிக்கத்தைக் காபீர்களினின்றும் காப்பாற்றும்படி வேண்டினார்கள். அவனோ போர்வெற்றியில் வெறி கொண்டவன். மேலும் தனது ராஜ்யத்தின் எல்லைப் புரத்தில் மூல்தான் வரையில் மராட்டிய அதிகாரம் ஏற்கனவே பரவி தினேதினே மேன்மேலும் வளர்ந்து வருவதைக் கண்டு மராட்டியர் மீது படையெடுப்பது அவசியம் என்று தீர்மானித்தான்.

ஏற்கனவே அப்டாலி மூல்தானையும் பஞ்சாபையும் தனது ராஜ்யத்துடன் சேர்த்துக் -கொண்டிருந்தான். ஆனால் மராட்டியரோ 1750-வது வருஷம் தட்டா, மூல்தான், பஞ்சாப் மாகாணங்களில் சௌத் வரி விதிக்க உரிமை பெற்று அந்நாடுகளில் உள் நாட்டுக் கலகங்களை

யடக்கி வெளிநாட்டு ஆக்கிரமிப்பையும் எதிர்ப்பதற்கு முற்பட்டிருந்தார்கள். அதன்படி 1754-வது வருஷம் தங்கள் கட்சியில் சேர்ந்துள்ள காஜியுத்தீன் அப்டாலி கையினின்றும் பஞ்சாபையும் மூல்தானையும் திரும்பப் பெறுவதற்கு வேண்டிய உதவி புரிந்தார்கள். இது அப்டாலியைச் பண்டைக்கு இழுத்தது. இப்போது நஸீப்கானின் வஞ்சகச் சூழ்ச்சியால் இந்திய முகமதியரின் ஆதரவு தனக்கு வரும் என்று நிச்சயித்துக் கொண்டு; அந்தப் பேராசை பிடித்த பட்டாணியன் இந்தியாவை ஜெயித்து இந்தியச் சக்ரவர்த்தியாக முடிசூடி; நாதிர்ஷாவும் செய்யத் தவறிய காரியத்தைத் தான் சாதித்து விடுவதென்று மனக் கோட்டை கட்டினன். 1756-வது வருஷம் மராட்டியரின் முக்கியத் தலைவர்கள் எல்லோரும் தக்காணத்தில் போர் புரிந்து வருவதையறிந்து; இதுவே தகுந்த சமயம் என்று துணிந்து அப்டாலி 80000 பேர் கொண்ட பெரும் படைகளுடன் சிந்து நதியைத் தாண்டி பஞ்சாபைக் கைப்பற்றி, எதிர்ப்பவர் இல்லாமல் டில்லியையும் கைப்பற்றி இந்திய சக்ரவர்த்தியாக மகுடாபிஷேகம் செய்துகொண்டதுமன்றி; பட்டாணியவீரர்களின் ஐதிகப்படி கோபமும் கொண்டு, தனது மகுடாபிஷேகத்தை கொண்டாடுவதற்காக டில்லி மக்களைப் பயங்கர முறையில் படுகொலை செய்யும்படி உத்தரவும் பிறப்பித்தான். சில மணி நேரத்தில் 18000-த்துக்கு அதிகமான மனிதர்கள் அக்கிரமமாய் வாளுக்கு இரையானார்கள். பிறகு முகமதிய மத ரக்ஷகன் என்ற பெரும் பட்டத்தை நாட்டும் முறையில், முகமதியரது ஆட்சியினின்றும் மராட்டியர் சற்றுமுன்பு மீட்டியுள்ள ஹிந்து க்ஷேத்திரங்களையும் தரும ஸ்தாபனங்களையும் அழிக்க ஆரம்பித்தான். மதுரை முதல் பலியாயிற்று ஆனல் அதன் வீழ்ச்சி ஒரு மகத்தான ஆத்மத் தியாகியின் வீழ்ச்சியை ஒக்கும். 5000 ஜாட்வீரர்கள் உடலில் உயிர் சிறிது உள்ளளவும் பகைவரின் அபரிமிதமான படைகளுடன் வீரமாகப் போர்புரிந்தார்கள். மராட்டியரை ஏளனம் செய்வதற்கென்றே மதுரையின் மீது பழிசெய்துவிட்டு அந்தமுகமதியன் கோகுல பிருந்தாவனத்துக்கு வந்தான். அங்கே தமது கோகுல நாதரைக் காப்பதற்கு 4000 நாகர்கள் ஆயுதம் தாங்கிப் போர்

முனையில் உயிர் துறக்கத் தயாராக விருந்தார்கள். இரண்டாயிரத்துக்கு அதிகமான பைராகிகள் போர்க்களத்தில் மடிந்தார்கள். ஆனால் தமது ஆலயத்தைக் காத்துப் பகைவர்களைப் தோற்கடித்து வெற்றி கொண்டார்கள். ஏனென்றால் அப்டாலி உடனே ஆக்ராவை நோக்கிச் சென்று அந் நகரைக் கைப்பற்றி அதன் கோட்டையைத் தாக்கினன். வஜீரானகாஜியுத்தீனும் அவனைச் சேர்ந்த முகமதியர்களும் பட்டாணியர்களிடம் துவேஷம் கொண்டு பட்டாணியரோ அன்றி பார்சிகரோ இந்தியாவில் ராஜ்யம் ஸ்தாபித்துக் கொள்வதை வெறுத்தார்கள். இப்போது அவர்கள் ஆக்ரா கோட்டையில் ஒளிந்துகொண்டு, தமது உதவிக்காக மராட்டியர்கள் வருவார்கள் என்று ஒவ்வொரு கணமும் எதிர்பார்த் திருந்தார்கள்.

ஆனல் ஜயபூர், ஜோத்பூர், உதயபூர், ராஜபுத்திரர்களும், வேறுபல ஹிந்து அரசர்களும், சிற்றசர்களும் மராட்டியரை வெறுத்தவர்களாய், ஹிந்து சாம்ராஜ்யத்தை நடத்துவதற்கான மராட்டியரது உரிமையை ஆக்ஷேபித்தார்கள். அப்படியிருந்தும் அவர்களில் ஒருவரேனும் தனித்தோ அன்றி ஒன்றுசேர்ந்தோ ஹிந்து மதத்தையும் சுயேச்சையையும் காப்பதன் பொருட்டுப் போர் தொடுத்து ஹிந்து இயக்கத்தின் தலைமை வகிப்பதற்குள்ள தமது தகுதியை நிரூபிக்கவில்லை. இப்போது அவர்களில் ஒருவராவது அசையவில்லை. ஹிந்து மக்கள் நிறைந்த அந் நாடுகளில் யாதொரு எதிர்ப்பு மில்லாமல் அஹமத்ஷா அப்டாலி படையெடுத்துச் சென்று டில்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றி, தக்காணத்தையும் கைப்பற்றுவதாகப் பெருமையுடன் பறைசாற்றினன். ராஜபுத்திரர், ஜாட் ஜாதியார் மற்றும் பல ஹிந்து அரசர்களின் கண்முன்பாகவே தங்கு தடையில்லாமல் மூகமதியக் கூட்டங்கள் காபிர்களான ஹிந்துக்களின் மீது பழிவாங்க வேண்டுமென்று கோஷம் செய்துகொண்டு ஹிந்து மக்களின் வீடு வாசல்களையும் தீர்த்த க்ஷேத்திரங்களையும் மிதித்து நாசம் செய்து வந்தார்கள். ஆனல் மாராட்டியர் வரும் வரையில் ஒருவராவது எதிர்த்து நிற்கவில்லை.

நாதிர்ஷாவின் படை யெடுப்பினல் அஞ்சிக் குன்றாத மராட்டியத் தலைவர்கள் அப்டாலியின் படை யெடுப்பைக்

கேட்டு கொஞ்சமும் தளரவில்லை. ரகுநாதராவ் தலைமையின் கீழ் ஒரு பெரும் படை வடக்கே அனுப்பப்பட்டது. ஆக்ராவின் அருகே அப்டாலி இந்தச் சேதியைக் கேட்டான். அவன் யுத்த விஷயங்களில் தேர்ச்சி பெற்றவனாதலால் மராட்டியரது படையெதிரே முற்படுவதால் ஒருகால் தோல்வியுற்று ஏற்கனவே அடைந்துள்ள லாபத்தையும் இழக்க நேரிடலாம் என்று எண்ணி, தனது குருவாகிய நாதிர்ஷாவைப்போல் தானும் பின்வாங்கி டில்லிக்குப் போய், முகலாயச் சிங்காதனத்துக்குள்ள தனது உரிமையைப் பலப்படுத்தும் பொருட்டுமால்காஜாமணியின் மகளை விவாகம் செய்துகொண்டு, 10000 வீரர்களை ஸர் ஹிந்த் காப்பதற்குக் காவல் வைத்து, தனது மகனாகிய தைமூர்ஷாவை லாகூரில் ராஜப் பிரதிநிதியாக நியமித்து விட்டு, எவ்வளவு எதிர்பாராத விதமாய் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தானோ அவ்விதமே திடீரென்று இந்தியாவை விட்டு நீங்கித் தன் ஊருக்குத் திரும்பிப் போனான்.

தக்காணத்தில் பல அலுவல்கள் இருந்தபோதிலும் பொருட்படுத்தாமல் மராட்டியர்கள் வெகு துரிதமாய்ப் படையெடுத்து வந்து அப்டாலியின் காரியங்களெல்லாம் பிரயோசனம் ஆகாமல் செய்தார்கள். ஸகாராம் பகவந்தும், கங்காதர் யேஷ்வந்தும், மற்ற மராட்டியச் சேனாதிபதிகளும் சேர்ந்து, கங்கைக்கும் யமுனைக்கும் நடுவில் உள்ள நாடுகளில் பிரவேசித்து, தமக்கெதிராகக் கலகம் செய்து வந்த ரோஹில்லர்களையும் பட்டாணியர்களையும் அடக்கி வஜீரான காஜியுத்தீனைக் காப்பாற்றினார்கள். விட்டல ஷிவதேவ் டில்லி மீது படையெடுத்து இரு வாரம் மும்முரமாகப் போர் புரிந்து, அந் நகரைக் கைப்பற்றி, மராட்டியரின் கொடும் பகைவனும் பட்டாணிய சூழ்ச்சி செய்தவனுமான நஜீப்கானை உயிருடன் கைப்பற்றினர். பிறகு மராட்டியர்கள் முன் சென்று ஸர் ஹிந்தில் அப்துல் ஸாமத்தின் தலைமையின் கீழிருந்த அப்டாலியின் 10000 படைகளையும் முறியடித்து அவர்களது சேனாதிபதியையும் உயிருடன் கைப்பற்றி லாகூரை நோக்கிப் படையெடுக்க நிச்சயித்தார்கள். மராட்டியர்கள்

துரிதமாய் அடைந்து வந்த வெற்றிகளைக் கேட்டு தைமூர்ஷா அஞ்சினான். அப்டாலியின் மகனும் ராஜப் பிரதிநிதியுமான அவன் கீழ் பஞ்சாப்பும் மூல்தானும் இருந்தன. அவன் மராட்டியரைப் போரில் சந்திக்கப் பயந்து பின்வாங்கவே, ரகுநாத ராவ் வெற்றியுடன் லாகூரில் பிரவேசித்தார். ஜஹான்கானும், தைமூரும் தந்திரமாகப் பின்வாங்க முயற்சி செய்தார்கள். ஆனால் மராட்டியர்கள் வெகு வேகமாய் வந்து அவர்களைக் கொடுமையாகத் துரத்தித் தாக்கவும் முகமதியப் படை சின்ன பின்னமாகக் கலைந்தது. உயிரினும் சிறந்தது ஏதொன்றுமில்லை என்று நிச்சயித்தவனாய், மராட்டியரை நசுக்கி இந்தியாவிலே ராஜ்யத்தை ஸ்தாபிக்க வந்த அந்த அஹமத்ஷா அப்டாலியின் மகனும் ராஜப் பிரதிநிதியுமான தைமூர்ஷா என்ற வீரப் புலி இப்போது உயிர் தப்பினால் போதுமென்று மராட்டியர் முன்னால் ஓட்டம் பிடிக்க ஆரம்பித்தான். மராட்டியர் முகமதிய கூடாரங்களைக் கொள்ளையிட்டு, அங்கிருந்த ஏராளமான பணத்தையும் யுத்த சாமான்களையும் கைப்பற்றி, ராமதாஸர் சிவாஜிக்குக் கொடுத்தருளிய காவிக் கொடியை ஹிந்துஸ்தானத்தின் வடக்கு எல்லையில் நாட்டினார்கள்.

ஹிந்துக்கள் அட்டக்கைத் தாக்கினார்கள். பிருதிவி ராஜர் வீழ்ச்சியடைந்த சோகதினத்துக்குப் பிற்பாடு முதன் முதலாக இப்போதுதான் வேதங்கள் புகழும் புண்ணிய நதியின் மீது ஹிந்துக்களின் வெற்றிக் கொடி பெருமையுடன் பறந்தது. ஹிந்துக்களின் வெற்றிப் பரிகள் சிந்து நதியில் நீரருந்தி அதன் தெளிவான நீரில் தங்களது அழகிய நிழலை அச்சமின்றி நோக்கிக் களித்தன.

மராட்டியப் படைகளின் உன்னத வெற்றிகளின் செய்தி மஹாராஷ்டிரத்துக்கு எட்டியதும் மக்களிடம் வீர எழுச்சி ஓங்கியது. ரகுநாத ராவுக்கு அந்தாஜி மங்கேஷ்வர் எழுதினார்: "லாகூரைக் கைப்பற்றிப் பகைவனை எல்லைக்கப்பால் துரத்தியடித்தோம். நமது படைகள் சிந்து நதியை அடைந்தன. இதெல்லாம் சந்தோஷச் செய்திகள். வட நாடுகளில் கலகம் செய்யும் ராஜாக்களும்' ராவ்களும், சுபேதார்களும், நவாபுகளும் பயந்து

ஒடுங்கினார்கள். நமது சமூகத்துக்கு இழைக்கப்பட்ட குறைகளுக்குப் பழிவாங்க வல்லவர் மராட்டியரே. அவர்களால்தான் அப்டாலியின் மீது அகில ஹிந்துஸ்தானத்தின் பழிகளுக்குப் பதில் பழி வாங்கப்பட்டது. எனது உணர்ச்சி முழுவதையும் எடுத்துச்சொல்வதற்கு வார்த்தைகள் எழும்பவில்லை. அவதாரங்களின் வீரச் செயல்களைப் போன்ற அரிய செயல்களைச் செய்திருக்கிறோம்.''

தமது வெற்றிகளைக் கண்டு மராட்டியர்களே ஆச்சரியப் பட்டார்கள். துவாரகையிலிருந்து ஜகன்னாதம் வரையிலும், ராமேசுவரத்திலிருந்து மூல்தான் வரையிலும் அவர்கள் வாள்வெற்றியை நாட்டினார்கள். அவ்விடமெல்லாம் அவர்களது வார்த்தைகளே சட்டமாகின. தம்மை வெளிப்படையாகவே இந்திய சாம்ராஜ்ய ரக்ஷகர்கள் என்றும் வார்சுதார்கள் என்றும் சொல்லிக் கொண்டு அந்த உரிமையை நாட்டுவதற்காக இரான், துரான், ஆப்கானிஸ்தானம், இங்கிலாந்து, பிரான்சு, போர்த்துகல் இந்நாடுகளிலிருந்து வந்த பகைவர்களுடன் போர்புரிந்து வெற்றி சூடினார்கள். சிவாஜியின் உன்னத லக்ஷியமான ஹிந்து சாம்ராஜ்யத்தை அநேகமாய் சாதித்தாய் விட்டது. ராமதாஸரின் உபதேசங்கள் வீரச் செயல்களாக விளங்கின. சிந்து நதியின் கரைக்கே ஹிந்து ஜயக் கொடியை எடுத்துச் சென்றது மட்டுமன்றி ஷாஹூ பாஜிராவுக்கு உத்திரவிட்டதைப் போல், அதற்கப்பாலும் அதை எடுத்துச்செல்லவும் முற்பட்டார்கள்.

அட்டக்கைத் கைப்பற்றியதும் மராட்டியர்களின் செல்வாக்கும் அதிகாரமும் அதிகரித்து, அரசியல் முயற்சிகளின் நோக்கமும் பரந்ததால், டில்லி மீதுமட்டும் நோக்கம் வைத்துத் திருப்தியடைய மறுத்தார்கள். காஷ்மீரத்திலிருந்தும் காண்டஹாரிலிருந்தும் காபூலிலிருந்தும் ராஜதூதர்கள் மராட்டிய யுத்த கூடாரங்களுக்கு வரத் தலைப்பட்டார்கள். ஹிந்து மன்னர்கள் தமது ராஜ்யத்தின் சிங்காதனத்தினின்று தள்ளப்பட்டு காபூல், பாரசிக முகமதியரிடமிருந்து உதவியை யாசித்த காலம் இருந்தது. இப்போது அந்தக் காலம் மாறிவிட்டது. இப்போது காபூல், காண்டஹார் நாடுகளிலுள்ள அரசர்கள்

மராட்டியரது உதவியை யாசித்து ரகுநாத ராவுக்கு தினந் தோறும் விண்ணப்பங்களை அனுப்பி வந்தார்கள். 4—5—1758-ல் சேனாதிபதி நானாஸாஹிபுக்கு எழுதினார்: "சுல்தான் தைமூர், ஜஹான் கான் இவர்களின் படைகளைச் சின்னாபின்னமாக்கி அவர்களின் கூடாரங்களில் கொள்ளை யிட்டு அவைகளில் இருந்த சாமான்களைக் கைப்பற்றி னோம். அட்டக்கிலிருந்து உயிர் தப்பிச் சென்றவர்கள் வெகு சிலரே. இரான் நாட்டு அரசன் அப்டாலியை முறி யடித்து, என்னை இன்னமும் முன்வந்து காண்டஹாரைக் கைப்பற்றும்படி எழுதிக் கேட்கிறான். அப்டாலியை இரு வரும் சேர்ந்து நசுக்கியதும் அட்டக்கை நமது ராஜ்யத்தின் எல்லையாக ஒத்துக் கொள்வதாய் வாக்குறுதி செய்கிறான். ஆனால் நாம் அட்டக்குடன் ஏன் நின்றுவிட வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. அக்பர் நாள்முதல் ஔரங்கசீப் காலம்வரையிலும் காபூலும் காண்டஹாரும் ஹிந்துஸ்தான் சாம்ராஜ்யத்துக்கு உட்பட்டிருந்தன. அவைகளை அந்நிய நாட்டினருக்கு நாம் ஏன் கொடுக்க வேண்டும்? இரான் அரசன் தன்னாட்டை யடைந்து அத்துடன் திருப்தி யடைந்து காபூலுக்கும் காண்ட ஹாருக்கும் உள்ள தமது பாத்தியதையை ஆக்ஷேபிக்க மாட்டான் என்று எண்ணுகிறேன். அவன் இதற்கு இணங்கினாலும் இணங்காவிட்டாலும் அம் மாகாணங்களை நம்மைச் சேர்ந்தன வென்றே கருதி நமது ஆட்சியை அவைகளில் நாட்டப் போகிறேன். ஏற்கெனவே அப்டாலியின் மருமகன் நம்மை யணுகி அப்டாலிக்கு எதிராக நமது உதவியைக் கேட்டிருக்கிறான். சிந்து நதிக் கப்பாலுள்ள நமது சாம்ராஜ்ய மாகாணங் களுக்கு அவனை நமது ராஜப் பிரதிநிதியாக நியமித்து அவனது உதவிக்குச் சில படைகளை அனுப்ப விரும்பு கிறேன். ஆனால் தற்போது நான் தக்காணத்துக்குத் துரித மாய்ப் போகவேண்டும். எனக்குப் பிற்பாடு அதிகாரத் துக்கு வருபவர்கள் எனது எண்ணங்களைப் பூர்த்திசெய்து காபூல் காண்டஹார் மாகாணங்களில் நமது ராஜ்யத்தை நிர்வாகம் செய்வார்கள்".

# 13. ஹிந்து சாம்ராஜ்ய ஸ்தாபனம்

"இரான் நாடு முதல் இங்கிலாந்து வரையில் சத்துரு பரவி யிருக்கிறான். ஸிந்து முதல் சேது பந்தம் வரையில் ரணகள மயமாக இருந்தது. நமது கொடிய முப்பகைவருக்கும் தோல்வியை யளித்தோம். ஸிந்து முதல் சேதுபந்தம் வரையில் ஒவ்வொரு போர்முனையிலும் வெற்றி சூடினோம்."

மேலே சொன்ன கடிதத்தை யெழுதிய பின்னர் ரகுநாத ராவ் மழைக் காலம் அணுகியபடியால் தமது படைகளுடன் தக்காணத்துக்குத் திரும்பினார். புதிதாக ஜெயித்த நாடுகளில் பலத்த காவல் வைக்காமல் அவர் திரும்ப நேர்ந்தது துரதிஷ்டவசமேயாகும். இன்னொரு தவறு நஸீப்கானை உயிருடன் விட்டது. அவனே மராட்டியருக் கெதிரே அப்டாலியை அழைத்த பட்டாணியச் சூழ்ச்சியில் முக்கியமான தலைவன், கையில் பிடிபட்டதும் அவனை மராட்டியர் கொன்றுவிட விரும்பினார்கள். ஆனால் நஸீப் கானோ வெகு தந்திரசாலி. மன்னிப்பு வேண்டிக் கெஞ்சிக் கூத்தாடி, மல்ஹார்ராவைத் தன் தகப்பனாராக ஸ்வீகாரம் செய்து, தன்னை மகனென்றெண்ணி உயிர்ப் பிச்சை யளிக்க வேண்டும் என்று மன்றாடினான். மல்ஹார் ராவோ மராட்டியருக் கெதிர் போர் புரிந்து தோல்வியுற்று உயிரை வேண்டும் ஒவ்வொருவரையும் ஸ்வீகாரம் செய்துகொள்வதில் சிரத்தை யுள்ளவர். அவர் நஸீப்கானுக்காகப் பரிந்து பேசவே, ரகுநாதராவ் தமது விருப்பத்துக்கு ஒவ்வாதிருந்தும், அதற்கு இணங்கினார். தனக்கு உயிர்ப் பிச்சை யளித்தவர்களை யழிக்கப் பெருத்த அபாய சூழ்ச்சிகளை அவன் மீண்டும் செய்து வந்தது வாசகர்களுக்கு இனி தெரியவரும்.

இதுவரை ராஜ தந்திரத்தை உத்தேசித்து மராட்டியர் டில்லிச் சக்ரவர்த்தியின் சார்பாகவே காரியங்களைச் செய்துவந்தார்கள். அதனால் கலகமுண்டாகாமல் காரியங்களும் நடந்துவந்தன. அது 1818-வது வருஷத்தில் மராட்டியரது வீழ்ச்சிக்கு முன்பு இந்தியாவில் ஆங்கிலேயர்கள் ஆட்சி புரிந்து வந்ததை ஒக்கும். தங்களிடம் பூரண

ராஜாங்கா அதிகாரம இருந்தும் 1857-ம் வருஷம் வரையில் ஆங்கிலேயர் சக்ரவர்த்தியின் பிரதிநிதிகளாகவே நின்று ஆட்சி புரிந்து வந்தார்கள். அந்த ராஜாங்க காரணங்களை முன்னிட்டே மராட்டியரும் டில்லி சக்ரவர்த்தியின் பிரதி நிதிகள் என்ற முறையில் அதிகாரம் செலுத்தி வந்தார்கள். அப்படி யின்றி ராஜாங்க அதிகாரத்தை வெளிப்படையாக நடத்தத் தொடங்கினால் இந்திய முகமதியர்களிடமிருந்தும் ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரர் பட்டாணியர் இவர்களிட மிருந்தும், அன்றி சில ஹிந்து அரசர்களிடமிருந்தும் ஆக்ஷேபணையும் எதிர்ப்பும் உண்டாயிருக்கும். இவர்களில் ஒவ்வொருவரும் சக்ரவர்த்தியின் ஆட்சி நாளுக்கு நாள் ஒடுங்கி வருவதை யுணர்ந்து தத்தம் அதிகாரத்தைப் பெருக் கிக்கொள்ளக் கருதினாலும், அவ்வாட்சி தானாகவே சிறிது சிறிதாக மாய்ந்த பின்னரே மற்றவர்களை மாய்த்துத் தமது பூரண ஆட்சியை நாட்ட வேண்டும் என்று விரும்பினார்கள்.

ஆனால் வடநாடுகளில் மராட்டியர் நாட்டிய பெரிய வெற்றிகளும், தென்னாடுகளில் பேஷ்வா நாட்டிய வெற்றி களும், மராட்டியரின் புகழையும் அதிகாரத்தையும் உன்னத பதவியில் நாட்டின. பாலாஜி, சதாசிவபாவூ இவர்கள் முதல் சாமானிய மனிதன்வரையில் உள்ள மராட்டிய மக்கள் யாவரும் தமது சமூகத்தின் பலத்தை யுணர்ந்து தாம் மகத்தான ஏற்பாடுகளைச் செய்யும் காலம் வந்துவிட்டதை யுணர்ந்தார்கள். மராட்டிய ராஜ ஆலோ சனைச் சபைகளில் இதற்கான பெரிய ஏற்பாடுகள் யோசிக்கப்பட்டு வந்தன. இந்தியாவில் முகமதிய சாம் ராஜ்யத்தையே அழித்த தமது பலத்தை நன்குணர்ந்தார் கள். ஆசியாகண்டத்தில் தாங்கள் பெருத்த ராஜ்ய அதி காரம் பெற்று, தமது தலைநகரான பூனா இந்திய அரசிய லில் அன்றி ஆசியாகண்டத்து அரசியலிலும் நடுநாயக மாக விளங்கி வருவதை யறிந்தார்கள். அவர்களது பாதத் தில் முகலாய சாம்ராஜ்யமேசிதறி வீழ்ந்திருந்தது. இப்போது தடைகள் யாவையும் அகற்றி வெளிப்படை யாகப் பேசாம்ராஜ்ய ஆட்சியைக்கொள்ளத் தீர்மானித் தார்கள். மராட்டியத் தலைவர்கள் யாவரிலும் சதாசிவ ராவ் பாவூ இந்தப் பெருங் காரியத்தை நடத்துவது தமது

பொறுப்பாகும் என்றுணர்ந்து இதைச் சாதிப்பதில் தம துயிரை அர்ப்பணம் செய்யவும் தயாராகவிருந்தார். ஹிந்துக்கள் முகமதிய சாம்ராஜ்யத்தைப் பிளந்து துண்டாக்கி தம்மை வென்று அடக்கி வந்தவர்களை வென்று விட்டார்கள். பாவூவின் வீரமொழிகளைக் கேட்டு ஆவேசமடைந்து இந்தியா முழுவதிலும் 'விடுதலை' யை நாட்டி இன்னும் சில வருஷங்களில் இந்தியா முழுவதை யும் ஹிந்து ஆட்சிக்குள் கொண்டுவரத் துணிந்தார்கள்.

இந்த நோக்கத்துடன் மூன்று பெரும் படையெடுப்புகள் தீர்மானிக்கப்பட்டன. பஞ்சாப், மூல்தான் நாடுகளுக்குப் படையுடன் சென்று புதிதாக ஜயித்த அந் நாடுகளில் ஒழுங்கையும் துரைத்தனத்தையும் நாட்டுமாறு தத்தாஜி ஷிந்தேவுக்கு உத்திரவு பிறந்தது. அதன் பின்பு அவர் காசி, பிரயாகைக்கு வந்து, ரகுநாத ராவையும் அவரது படையையும் சந்திக்க வேண்டும். அங்கிருந்து இரு படைகளும் ஒன்று சேர்ந்து வங்காளத்தின்மீது படையெடுத்துச் சென்று அந் நாட்டில் கடல்வரையில் முகமதிய ஆட்சியையும் ஆங்கிலேய அதிகாரத்தையும் அகற்ற வேண்டும். 1757-வது வருஷத்தில் பிளாஸி யுத்தத்தில் வெற்றி பெற்றிருந்த ஆங்கிலேயர் வங்காளத்தில் தமதாட்சியை நாட்டக் கருதினர்கள். சிந்து; மூல்தான் முதல் கடல் வரையுள்ள வடநாடுகள் எல்லாவற்றிலும் இவ்விதம் தத்தாஜியும், ஜன்கோஜியும் ரகுநாத ராவும் மராட்டிய ஆட்சியை நாட்டுவதாகவும், தென்னடுகள் யாவையும் தமது மகனுகிய விஸ்வாஸ் ராவுடனும், சதாசிவ பாவூவுடனும் பாலாஜியே விடுவிப்பதென்றும் ஏற்பாடு ஆயிற்று.

அதன்படியே தத்தாஜியும் தன் படைகளுடன் வடக்கே புறப்பட்டார். பாலாஜியும் பாவூவும் முதலில் தக்காணத்தில் நிஜாமின் அதிகாரத்தை அறவே ஒழிக்க முற்பட்டார்கள். பலத்த சேனையுடனும் பீரங்கிப் படையுடனும் அவர்கள் படை யெடுத்துப் பல போர் புரிந்து 1760-ஆம் வருஷம் உத்கீர் என்ற இடத்தில் பெரும் வெற்றியை நாட்டினர்கள். முகமதியப் படைகள் உருப்படாமல் நசுங்குண்டு ஒழிந்தன. ;பயந்து நடுங்கிய நிஜாம், தனது ராஜ முத்திரைகளையும் பாவூவின் வசம் ஒப்புவித்துவிட்டு அவர்

விரும்பும் எந்த நிபந்தனைக்கும் தான் இணங்கிக் கையெழுத்திடத் தயாராகவிருப்பதாகச் சொன்னான். உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி நாகர், பர்ஹன்பூர், ஸால்ஹெர், முல்ஹர், அஸிர்கட், தௌலதாபாத் என்ற கோட்டைகளும், நாந்தேட், புலும்பிரி, அம்பேட், விஜாபூர் என்ற நான்கு ஜில்லாக்களும் மராட்டியர் கைவசத்துக்கு வந்தன. இதனால் பாஊவும் திருப்தியடைந்தார்: "நிஜாமின் அதிகாரமெல்லாம் பறந்துவிட்டது. வடநாடுகளில் காரியம் இல்லாதிருந்தால், இவ்வருஷத்தில் தக்காணம் முழுவதும் விடுதலையடைந்திருக்கும்". கடைசியில் மராட்டியரின் வெற்றிக் கொடிகள் நாகர்; விஜாபூர் தலைநகரங்களின் மீது பறந்தன. சிவாஜி தோரணாவைக் கைப்பற்றி அங்கு ஹிந்து எதிர்ப்புக் கொடியை நாட்டியகாலத்தில் இந்நாட்டு அரசர்கள் அவரை ஏளனம் செய்திருந்தார்கள்.

இந்தப் பெரிய ராஜாங்க, போர் வெற்றிகளுக்குப் பிறகு உத்கீர் வெற்றி வீரரான பாஊ ஹைதர் அலியைத் தாக்கி நசுக்க விரும்பினார். இவன் மைசூரைக் கைப்பற்றி அங்குள்ள பண்டைய ஹிந்து ராஜ குலத்தைக் கவிழ்த்துத் தன்னை யரசனாக்கிக்கொள்ள முயன்று வந்தான். இந்தமூக மதியனின் பேராசையினின்றும் தம்மைக் காத்து ரக்ஷிக்கும்படி மைசூர் ஹிந்து மன்னரும் அவராது மந்திரியும் மராட்டியருக்கு உருக்கமான விண்ணப்பம் செய்திருந்தார்கள். ஹைதர் அலியை நசுக்கித் தக்காணம் முழுவதையும் விடுவிக்க விரும்பிய சதாசிவ பாஊ இந்த தக்க சமயத்தைப் பயன்படுத்தி ஹைதர்மீது படையெடுக்கக் கருதினார். ஆனால், துரதிருஷ்ட வசமாய் அப்போது வடக்கிலிருந்து பேஷ்வாவுக்கு ஒரு முக்கிய அபாயச் செய்தி வந்தது. பாஊ எழுதுகிறார்: "கையில் எடுத்து உண்ண ஆரம்பிக்கும்போது வெற்றியாகிய உணவு கையினின்றும் நழுவி விட்டது."

தத்தாஜியின் தலைமையின்கீழ் வடக்கு நோக்கிச் சென்ற மராட்டியப் படைகள் 1758-ஆம் வருஷ முடிவில் டில்லியை அடைந்தன. பின்பு பேஷ்வாவின் உத்திரவுப்படி தத்தாஜி புதிதாக ஜெயிக்கப்பட்ட லாகூர், மூல்தான் மாகாணங்களில் துரைத்தனத்தை ஸ்தாபிக்க ஆரம்பித்தார்.

ஸாபாஜி ஷிந்தேவையும், திரிம்பக் பாபுஜியையும் அட்டக் வரையில் ஆள நியமித்து ஸர்ஹிந்த், லாகூர் முதலிய முக்கிய இடங்களில் காவலுக்காகப் படைகளையும் தத்தாஜி வைத்தார். பின்பு பஞ்சாபைவிட்டு நீங்கி, தமக்குக் கொடுக்கப்பட்ட இரண்டாவது காரியத்தைச் செய்யக் கருதினர். அந்தக் காரியம் கங்கையைத் தாண்டி, பாட்னு மீது படையெடுத்து, ஆங்கிலேயரை ஒடுக்கி, கடல்வரையில் ஹிந்து ஆட்சியை நாட்டுவதே.

ஆனல் அவர் செய்த ஒரு பெருந் தவறு என்னவென்றல் பேஷ்வாவின் கட்டளைப்படி நஸீப்கானைத் தண்டிக்காமல் விட்டதுதான். ஷிந்தியா அவனை ஒடுக்கியிருக்க வேண்டும். ஆனல் அப்படிச் செய்யாமல், தனக்கு வங்காளப் படையெடுப்பில் உதவி செய்வதாய் நஸீப்கான் ஒப்புக்கொண்டதால் ஷிந்தியா ஏமாறி அவனை விட்டுவிடவே, அவன் தனது அதிகாரத்தை யதிகரித்துக்கொள்ள முடிந்தது. பேஷ்வா கோபத்துடன் எழுதினர்: "நஸீப்கான் தன்னைப் பக்ஷியாக நியமித்தால் 30 லக்ஷம் ரூபாய் கொடுப்பதாக வாக்குறுதி செய்ததாய் எழுதி யிருந்தீர். அவனிடமிருந்து ஒரு காசுகூட நமக்கு வேண்டாம். வஞ்சகத்தில் நஸீப் அப்டாலிக்குச் சமமானவன். அவனை நம்புவது விஷப் பாம்புக்குப் பால் கொடுப்பதுபோலாகும்." ஆனல் தத்தாஜியோ அந்த வஞ்சகனது வார்த்தைகளால் மதிமயங்கி, கங்கையை தாண்டுவதற்கான படகுப் பாலம் கட்டுவதிலும் அவனது உதவியை நாடினர். இதனல் வங்காளத்தின்மீது மராட்டியரது படையெடுப்பு தாமதிக்கப்பட்டதுமன்றி நஸீப்கானுக்கு வஞ்சகச் சூழ்ச்சிகளைச் செய்ய வசதியும் ஏற்பட்டது. அவன் ரகசியத்தில் மராட்டியர் எதிரே அரசர்களைத் திரட்டினன். இந்தியாவின் மீது மீண்டும் படையெடுத்துவருமாறு அப்டாலிக்கு முகமதியச் சக்ரவர்த்தியிடமிருந்து ஒரு கடிதத்தையும் அனுப்புவித்தான். இஸ்லாத்தின் பெயராலும் அல்லாவின் பெயராலும் அந்தப் பட்டாணியனுக்கு மதவெறியைக் கிளப்பினர்கள். 'நம்பிக்கையற்ற ஹிந்துக்களிடமிருந்து இந்திய முகமதிய சாம்ராஜ்ஜத்தைக் காத்து இஸ்லாத்தைக் காப்பாற்ற அப்டாலி வரமாட்டாரா?' அப்டாலியும்

மராட்டியர் தன் மகனை வென்றதை நினைத்துத் துடித்தான். மராட்டியரன்றோ தன் கையினின்றும் இந்திய சாம்ராஜ்ய அதிகாரத்தைப் பிடுங்கிச் சென்று தன்னைப் பஞ்சாபிலிருந்தும் மூல்தானிலிருந்தும் துரத்தி காபூலையும் காண்டஹாரையும் கைப்பற்றிச் சேர்க்க முயன்று வந்தார்கள்? அப்படியிருந்தும் தன்னால் இந்நாள் வரையில் ஒன்றும் செய்ய முடியவில்லையே. ஆனால் இப்போது தருந்த சமயம் வந்தது. ஹிந்து ஆட்சியை இந்தியா முழுவதிலும் நாட்ட மராட்டியர் செய்து வரும் முயற்சிகளையும் ஏற்பாடுகளையும் நசுக்கி இந்திய சக்ரவர்த்தியாக முடிசூட வேண்டுமென்று மீண்டும் தீர்மானித்தான். ஆதலால் அப்டாலி உதவி செய்வதாய் வாக்களித்து பெரும் படையுடன் சிந்துவையும் தாண்டி லாகூரை அடைந்து அதையும் கைப்பற்றினன்.

அப்டாலியின் படையெடுப்பின் செய்தி டில்லியை அடைந்ததும் நஜீப்கான் தனது வெளி வேஷத்தையெல்லாம் அகற்றி அப்டாலியின் கட்சியில் வெளிப்படையாகவே சேர்ந்து கொண்டான். பேஷ்வாவின் உத்திரவுப்படி நஜீப்கானைத் தண்டித்திடாமல் விட்ட பெருந் தவறை தத்தாஜி உணர்ந்தார். நஜீப், ஷுஜா இவர்களால் தாம் ஏமார்ந்ததையும் அவர்களது வஞ்சகத்தால் விளைந்த பேராபத்தையும் தம்மைச் சூழ்ந்து வரும் பகைவரின் படைபலத்தையும் தத்தாஜி உணர்ந்தார். ஒரு புறம் ஷுஜாவும், இன்னொரு புறம் நஜீபும் ரோஹில்லர்களும் பட்டாணியர்களும், இவர்களுக்குப் பின்னே அப்டாலியும் பெருஞ் சேனைகளுடன் படையெடுத்து வந்தார்கள். அப்டாலியின் அபரிமிதமான சேனைகளின் முன்பு அட்டக்கிலும் லாகூரிலும் உள்ள மராட்டியக் காவல் படைகள் பின் வாங்க வேண்டி நேர்ந்தது. மராட்டியரைத் தவிர வடக்கே முகமதிய ஆதிக்கத்தை எதிர்த்து வந்த இன்னொரு ஹிந்து மக்களான சீக்கியர்கள் இப்போது தலையெடுத்து வந்தார்கள். இவர்கள் தம்மாலான வரையில் பகைவர்களைத் தாக்கவும் தடுக்கவும் முயன்றார்கள். ஆனால் இவர்களுக்குள் ஒற்றுமையும் ஒழுங்கும் இன்னமும் பூரணமாகவில்லை யாதலால் தமது மாகாணத்தையே

விடுவிக்காமல் இருந்தார்கள். சீக்கியர்கள் தமது மாகாணத்துக்கு விடுதலையளிக்கும் நாள் இன்னமும் வரவில்லை. ஆதலால் தட்டுத் தடங்கலில்லாமல் அப்டாலி தனது பெருஞ் சேனைகளுடன் ஸர்ஹிந்த் மீது வந்தான். மதுரை க்ஷேத்திரத்தை யழித்து ஹிந்து ஆட்சிக்கே கொடும் பகையாய்த் தோன்றிய அப்டாலியுடன் ராஜபுதனத்திலும் வடக்கே மற்ற பாகங்களிலும் உள்ள பல ஹிந்து அரசர்கள் உறவு கொண்டாடினார்கள். அப்டாலியின் பெருஞ் சேனைக்கும் டில்லியின் சிங்காதனத்துக்கும் குறுக்கே நின்றதெல்லாம் தத்தாஜி நடத்திய மராட்டியப் படையொன்றுதான். தத்தாஜி தனக்கு உதவி செய்வதற்காக உடனே படைகளுடன் வரும்படி ஹோல்கருக்கு எழுதினார். ஆனால் நஜீபை ஸ்வீகாரம் செய்துகொண்ட அப் படைத் தலைவர் இங்கும் அங்கும் உள்ள சிற்றரசர்களுள் நடந்து வந்த சில்லரைச் சச்சரவுகளில் தலையிட்டு வாளா இருந்தார். இவ்விதம் பகைவர்களது பெருஞ் சேனைகளால் நாற்புறமும் சூழப்பட்ட மராட்டியப் படை தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஒரே வழியிருந்தது. அதாவது டில்லியைக் கைவிட்டு பின்வாங்க வேண்டிய ஒரே வழிதான். ஹோல்கர் வருமளவும் பின்வாங்கி வருமாறு அனுபவமும் வீரமுமுள்ள ஒவ்வொரு சேனாதிபதியும் தத்தாஜிக்குச் சொன்னார்கள். பயமறியாத இளங் காளையாகிய ஜன்கோஜியும் பின்வாங்குமாறே தமது பெரியப்பாவாகிய தத்தாஜிக்குச் சொன்னார்கள். ஆனால், தாத்தாஜி காது கொடுத்துக் கேட்க மறுத்தார். முன் யோசனையில்லாமல் தமது படைகளை இப் பெருத்த ஆபத்துக்குக் கொண்டு வந்ததே அவரது மனதை யுறுத்தி வந்தது. தமது கொடும் பகைவனான நஜீபை நம்பிய மதியின்மையுடன் பேடித்தனமாகிய பெருங் குற்றத்தையும் செய்ய அவர் மனம் ஒப்பவில்லை. எல்லாருக்கும் அவர் ஒரே கண்டிப்பான பதில் அளித்தார்: "பின்வாங்க விரும்புவோர் அப்படியே செய்யலாம். நான் ஒருவரையும் பலவந்தப்படுத்தவில்லை. ஆனால் நான் ஒரு அடியேனும் பின்வாங்க மாட்டேன். பின்வாங்கினேனானால் நானாவுக்கும் பாவுவுக்கும் இந்த ஜன்மத்தில் எனது முகத்தை எப்படிக் காட்டுவேன்? நான் அப்டாலியை எதிர்ப்பது திண்ணம். பகவானுடைய

கிருபையிருக்கு மானால் அவனைப் போரில் முறியடிப்பேன். இன்றேல் போரில் உயிர் துறப்பேன்.''

தத்தாஜி அவ்விதமே உரை தவறாமல் அப்டாலியைக் குருக்ஷேத்திரத்தில் எதிர்த்தார். அவரது வீரத்தால் மனம் தேறி குதூகல மடைந்த மராட்டியப் படை அப்டாலியைக் கடுமையாகத் தாக்கவும், அவன் ஷிந்தியாவின் எதிரே தன்னால் வெகு நேரம் தனித்து நிற்க முடியாது என்று கண்டு பின்வாங்க யோசித்து, யமுனையைத் தாண்டி, சுக்ரதால் என்னுமிடத்தில் நஸீப்கானின் படைகளுடன் சேர்ந்து கொண்டான். அஹமத்கான் பங்கஷ், குதுப்ஷா இவர்களும் அவனைச் சந்தித்தார்கள். இந்த முகமதிய ஐக்கியம் முன்னைவிட பயங்கரமாயிற்று. இவர்களின் எதிரே தத்தாஜியின் ஒரே படை தனித்து நின்று தடுக்க முடியாது என்று தெளிவாய் விளங்கவும், மராட்டியப் படைத் தலைவர்கள் தத்தாஜியைப் பின் வாங்கும்படி வேண்டினார்கள். ஆனால் அவரோ, ''இஷ்டப் பட்டவன் போகட்டும். தத்தாஜி தன் கடமைகளைப் போர் வீரனாகவே செய்வான்'' என்றார். தலைவர் இவ்விதம் வீரமொழி கூறவும், படை வீரர்களுக்கும் வீராவேசம் பொங்கிற்று. அவரை விட்டு ஒருவராவது பின் வாங்கவில்லை. 10–7–1760-இல் யமுனையின் துறைகளைக் கைப்பற்றி மராட்டியர்கள் அந் நதியைக் கடக்க முயன்ற அப்டாலியின் படைகளைத் துறத்த முற்பட்டார்கள். யுத்தம் தொடங்கிற்று. பெருத்த படைகளின் முன்பு பயாஜி, மாலோஜி முதலிய மராட்டியப் படைத் தலைவர்கள் ஒருவர் பின் ஒருவராக வீர யுத்தம் புரிந்து விழுந்தார்கள். பகைவர்களது படைகள் கலந்து கொண்டு குழப்பத்தில் தங்களைத் தாங்களே நெருக்கத் தலைப்பட்டார்கள். திடீரென்று தற் செயலாக பட்டாணியப் படைகளும் ரோஹில்லப் படைகளும் மஹாராஷ்டிரக் கொடியைச் சூழ்ந்து தாக்கினார்கள். அதைக் காப்பாற்ற மராட்டியர்கள முன்வந்தனர். யுத்தமும் முற்றியது. தத்தாஜியும் ஜன்கோஜியும் தமது தேசக்கொடி அபாயத்திலிருப்பதைக் கண்டு சகியாமல் அதைக் காத்திட முன்னோடி வந்து இதிகாசங்களும் புகழத்தக்க சிறந்த யுத்தம்

செய்தார்கள். அப்போது ஜன்கோஜியின் மீது ஒரு குண்டு படவும், அவ்விளஞ் சிங்கம் அடிப்பட்டுக் குதிரையினின்றும் கீழே விழுந்தார். தத்தாஜி அதைக் கண்டு தற்காப்புக் காகவேனும் பின்வாங்காமல் வீராவேசத்தால் பொங்கிக் குதித்து முன்னால் வந்து பகைவரது படைக்குள் இறங்கிக் கலந்து ஆவேசம் பிடித்தவரைப்போல் அவர்களைப் பலமாகத் தாக்க ஆரம்பித்தார். கடைசியில் விதியின்படி தத்தாஜி மீதும் ஒரு குண்டு படவே அவரும் மரண காயம் பட்டு மண்மீது வீழ்ந்தார்.

நஜீப்கானின் குருவும் பட்டாணிய சூழ்ச்சியில் முக்கியமானவனுமான குதுப்ஷா இதைக் கண்டு வீழ்ந்து கிடந்த அந்த மாராட்டியச் சேனாதிபதியினருகே சென்று ஏளனமாக, "நல்லது, படேல்; நீங்கள் மீண்டும் எங்களெதிரே போர் புரிவீரா?" என்று கேட்க; மரணத்திலும் அஞ்சுதல் அறியாத தத்தாஜி, "ஆம். நான் சாகாமல் பிழைத்து இருந்தால் மீண்டும் போர் புரிவேன்" என்றார். இவ் வீர மொழிகள் அந்த மதவெறி பிடித்த முகமதியனுக்குக் கோபத்தை விளைவிக்கவும், அவன் சீறி மண்மீது சாய்ந்துள்ள அத்த வீர சிகாமணியைக் காலால் உதைத்து, கத்தி யுருவி அவரது சிரத்தை யறுத்து; அதைப் பெருமையுடன் எடுத்துப் போனான்.

இவ்விதம் தத்தாஜி வீழ்ந்தார். அவரைக் காட்டினும் பக்தியுடனும் வீரத்துடனும் போர் புரிந்து தேச மேன்மைக்கும் பாதுகாப்புக்கும் உயிர் துறந்த வீரர் இருந்ததில்லை.

தத்தாஜி விழுந்ததையும் அவர் தரைமீது வீழ்ந்து மரணத்தறுவாயில் இருந்தபோது அவருக்கு இழைக்கப் பட்ட கொடிய ஏளனங்களையும் கேட்டு மஹாராஷ்டிரம் கொந்தளித்தது. மக்கள் எல்லோரும் ஒருவர்போலெழுந்து பழிக்குப் பழிவாங்க வேண்டுமென்று கதறினார்கள்.

அந்த வாரத்தில்தான் அவர்கள் உத்கீர் போர் முனையில் வெற்றி பெற்றிருந்தார்கள்; ஹைதரைக் நசுக்கித் தென்னாடுகளை விடுவிக்கும் காரியத்தைப் பூர்த்தி செய்யக் கருதியிருந்தார்கள். அப்போது தத்தாஜி தோல்வியுற்று

இறந்த செய்தி வந்தது. பாலாஜியும் பாவும் ஒரு கண மேனும் தாமதியாமல் பெருத்த போருக்கு ஆயத்தம் செய்யலானார்கள். அவர்கள் அந்த வாரத்தில்தான் தெற்கே ஒரு பெரும் படையெடுப்பை நடத்தி யிருந்தார்கள். எனினும் தமக்கும் தமது படைகளுக்கும் ஒரு நாள் ஓய்வேனும் கொடுக்க மறுத்துத் தமது சேனாதிபதிகளையும் மந்திராலோசனைத் தலைவர்களையும் பட்டூரில் வரவழைத்து யுத்த விஷயத்தைப்பற்றி ஆலோசனை செய்து, அப்டாலி மாளவ நாட்டை அடைவதற்கு முன்னரே அவனை எதிர்த்துப் போர் புரிய ஓர் பெரும் படையை அனுப்புவதென்று தீர்மானித்தார்கள். மராட்டிய நாட்டு வீர மக்கள் யாவரும் படைகளில் சேர்ந்து கொண்டார்கள். ஸம்ஷேர் பகதூர், விட்டல் ஷிவதேவ், மானாஜி தாய்குடே; அந்தாஜி மங்கேஷ்வர், மானே, நிம்பால்கர் இன்னும் போரில் தேர்ந்த பல முதிய வீரர்களும் சேனாதிபதிகளும் தத்தம் ஸ்தானங்களை ஏற்றுக் கொண்டார்கள். உக்கிர வெற்றி வீரரான பாவூ முதல் சேனாதிபதியாக நியமிக்கப்பட்டார். உக்கிர போர்முனையில் வெற்றி நாட்டி, மக்களின் ஆசையின் அணிகலமாக விளங்கிய விஸ்வாஸ்ராவ் என்னும் பாலாஜியின் மூத்த குமாரரான இளவரசர் பாவூவின் பின்னே படை நடத்தி வந்தார். இப்ராஹிம் கான் கார்டியின் தலைமையின் கீழ் பலத்த பீரங்கிப் படை சென்றது. படைகள் முன் செல்லும்போது தமாஜி காயக்வாட், ஸந்தோஜிவாக் முதலிய மராட்டியச் சேனாதிபதிகள் சேர்ந்து கொண்டார்கள். மதுரா, கோகுல புண்ணிய க்ஷேத்திரங்களை யழித்த ஹிந்து ஆட்சியின் பகைவனை எதிர்த்துப் போராடும் முயற்சியில் மராட்டியருடன் சேரும்படி பல ராஜபுத்திர அரசர்களுக்குக் கடிதங்களும் தூதர்களும் அனுப்பினார்கள். விந்திய மலையையும் நருமதை நதியையும் தாண்டி மராட்டியச் சேனை சாம்பல் நதியை அடைந்தது. அதன் பலத்தையும் கம்பீரத்தையும் கண்டு வட நாடுகள் எல்லாம் பயந்து நடுங்கின. கலகம் உண்டாக்கும் ராஜாக்களும் ராவ்களும் நவாபுகளும் கான்களும் பயந்து தடையொன்றும் செய்யாமல் இருந்தார்கள். ஜன்கோஜி ஷிந்தேவும் தன் படையுடன் வந்து பாவூவுடன் சேர்ந்து கொண்டார்.

பாதான் போர்முனையில் வீழ்ந்த தத்தாஜியின் மருமகனை அழகும் வீரமும் பொருந்திய அவ்விளவரசரை மராட்டிய வீரர்கள் அன்புடனும் குதூகலத்துடனும் வரவேற்று தத்தாஜியின் ஞாபகத்துக்கு மரியாதை யளித்தார்கள். இளம் பிராயத்திலேயே போர் பல புரிந்து வெற்றிகள் சூடி தமது தருமத்தின் பொருட்டும் மக்களின் பொருட்டும் ரத்தம் சிந்தி பல காயங்களைக் கொண்டுள்ள அவ்வீர இளவரசரை வரவேற்பதற்காக பாஹு ஒரு பெரும் சபை கூட்டி அங்கே அவருக்குப் பல வீர விருதுக்கள் வழங்கினார். பாலாஜிக்கு அடுத்த தலைவராக மராட்டிய மக்கள் போற்றி வந்த விஸ்வாஸ் ராவ் இள வீரராகிய ஜன் கோஜியைச் சந்தித்துத் தழுவ முன்வந்தபோது மராட்டிய படை வீரர்களின் மனம் உருகிவிட்டது. அழகும் தீரமும் பொருந்தித் தமது மக்களின் லக்ஷியத்துக்காகப் போர் புரிந்துவந்த இவ்விரு இளங் காளையர் மீதே ஹிந்து சமூகம் தனது ஆசை முழுவதையும் நாட்டி யிருந்தது.

மல்ஹார் ராவ் ஹோல்கரும் வந்தார். நஸீப் கானை ஸ்வீகாரம் செய்து கொண்ட தனது பெருந் தவறையும்; தக்க சமயத்தில் தத்தாஜி அப்டாலியிடம் தோல்வியுற்று வீழ்ந்திறப்பதற்கு முன்பே அவருக்கு உதவி புரியாமல் தாமதித்த தமது பெருந் தவறையும் அவர் உணர்ந்தார். தத்தாஜி இறந்த பின்பு அவர் அப்டாலியிடம் தோல்வியுறவும் நேர்ந்தது. யமுனையைத் தாண்டி அப்டாலி இக்கரையை அடையும் முன்பே அவனை எதிர்த்துத் தாக்க பாஹு நிச்சயித்து; முடியும்போதெல்லாம் அவனது பின் படைகளைத் தாக்கி அவனது சாமான்களையும் ஆகாரங்களையும் தடுத்துவிடும்படி கோவிந்தபந்த் பந்தேளாவுக்குக் கட்டளையிட்டிருந்தார். ஆனால் ஆறுகளில் பெரும் பிரவாகம் ஓடியதாலும், அக்கரையில் பெருத்த பகைவரின் சேனையிருந்ததாலும், நதிகளைத் தாண்டுவது கஷ்டமாக இருந்தது. ஆதலால் பாஹு டில்லிமீது படையெடுத்து அதை அப்டாலியின் படைகளினின்றும் கைப்பற்ற நிச்சயித்தார். வட நாட்டு ஹிந்து அரசர்களில் ஜாட் அரசர் ஒருவரே மராட்டியாது உதவிக்கு வந்தார். அவரை பாஹு தகுந்த மரியாதையுடன் வரவேற்றார். இருவரும் சேர்ந்து அப்டாலியை

கடைசிவரையில் எதிர்த்துப் போர் புரிவது என்று யமுனை யின் புண்ணிய தீர்த்தத்தின்மேல் ஆணையிட்டு சபதம் செய்தார்கள்.

மக்களெல்லோரும் டில்லியை நோக்கினார்கள். சரித்திரப் புகழ் பெற்ற பெருந் தலைநகரான டில்லியைக் கைப்பற்றுவதால் ஏற்படும் லாபத்தை ஹிந்துக்களும் முக மதியர்களும் அறிந்தார்கள். பாஊ டில்லியைத் தாக்கு வதற்கு ஷிந்தியா, ஹோல்கல், பலவந்த் ராவ் மேஹேந் தலே இவர்களது படைகளை அனுப்பினார். அதைக் கைப் பற்றி யிருந்தப் பட்டாணியர்கள் வெகு மும்முரமாகப் போர் புரிந்தார்கள். ஆனால் அவர்களால் மராட்டியரை எதிர்த்து நிற்கமுடியாமல் போகவும் இறுதியில் அந் நகரை மராட்டியர் கையில் ஒப்புவித்தார்கள். அந்நகரின் கோட் டையும் மராட்டியருக்கு அகப்படாமல் இருந்தது. ஆனால் மராட்டிய பீரங்கிப் படைக்கு முன்னால் நிற்க இயலாமல் முகமதியர்கள் அக் கோட்டையையும் விட்டுவிட்டார்கள். டில்லி நகரும கோட்டையும் விழுந்த சேதி ஹிந்து மக்க ளுக்கு அளவற்ற குதூகலத்தை யளித்தது. மராட்டியப் படைகள் வெற்றியுடன் அத் தலைநகரில் பிரவேசித்தன. பாண்டவர்களின் தலைநகரமாகிய டில்லியின் கோட்டை மீது பாஊ மராட்டியக் கொடியை நாட்டினார். பிரிதிவி ராஜர் காலத்திலிருந்து அந்நாள்வரையில் 'ஹரிபக்தர்களா கிய' ஹிந்து மக்களின் படைகள் வெற்றியுடன் டில்லியில் பிரவேசித்து ஹிந்துக் கொடியை நாட்டியது இதுவே முதல் தடவை. பட்டாணியரும், ரோஹில்லரும், முகலா யரும், துருக்கியரும், ஷேய்க்களும், ஸையதுகளும் செய்த முயற்சிகள் யாவும் வீண்பட முகமதியப் பிறை அஸ்த மித்து, ஹிந்து சாம்ராஜ்யக் கொடி தோன்றி இந்திய சாம் ராஜ்யத்தின் தலை நகர்மீது உயர்ந்தது. அப்டாலியோ பெருத்த முகமதியப் படைகளுடன் யமுனையின் அக்கரை யிலிருந்தும் இதைத் தடுக்க முடியவில்லை.

தன் கண்ணெதிர் — ஒரு நாள்மட்டுமேனும் — தன் வாழ்க்கையின் கனவாகிய 'ஹிந்து சாம்ராஜ்யம்' மெய்ப் பட்டதாக சதாசிவ ராவ் பாஊ உணர்ந்தார். அந்த வாழ் வுக்கேனும் சமூகம் முழுதும் பாடுபட்டு வருவதே

கிலாக்கியமாகும். அந்த ஒருநாள் வாழ்வில் சமூக சரித் திரத்தின் நூற்றுக் கணக்கான வருஷத்திய தோல்விகளும் வெற்றிகளும் சுக துக்கங்களும் பொருந்தியுள்ளன. எழுநூற்றுண்டுகளாக முயன்றும் முகமதிய அடக்குமுறை களும் அதிகாரமும் ஹிந்துவின் ஆத்மாவை புத்துயிர் பெருத வண்ணம் நசுக்க முடியவில்லை என்பதை அந்த தினம் ஐயமற நிரூபித்துவிட்டது. ஹிந்துக்கள் தமது பகைவர்களுக்குத்தாம் சற்றும் இளைத்தவர்களல்லர் என்பதை மட்டுமின்றி அவர்களினும் தாங்கள் உயர்ந்த வர்களே என்பதையும் நிரூபித்துவிட்டார்கள்.

தமதிஷ்டப்படிவிட்டிருந்தால் பாலூவிஸ்வாஸ்ராவுக்கு அகில இந்திய மன்னுதிபராக முடி சூட்டி ஹிந்து சாம் ராஜ்யத்தைத் தகுந்த கொண்டாட்டச் சடங்குகளுடன் நாட்டியிருப்பார். ஆனல் அவ்விதம் செய்வதின் அரசியல் விவேகம் அவருக்குத் திருப்தியளிக்கவில்லை. ஏனெனில் மராட்டியருக்கு பயந்து அரசியல் கட்சிகளில் சேரத் தயங்கிய முகமதியர்களோடல்லாது வட நாட்டு ஹிந்து அரசர்களும் அத்தகைய காரியத்தினுல் துவேஷம் அடைவார்கள் என்று அவருக்குத் தெரியும். இருந்தாலும் ஜனங்களின் மனப்பான்மையைக் சோதிக்கவும்; அத் தகைய காரியத்தின் மகத்தான உட்பொருளை (நண்பர் களேனும் பகைவர்களேனும் சரி) ஹிந்துஸ்தானத்து மக்கள் எல்லோர் உள்ளத்திலும் பதிப்பிக்கவும் அத்தகைய அரிய சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொள்ள விரும்பி னுர். ஆதலால் அத்தகைய நிகழ்ச்சியின் பொருட்டு ஓர்பெரிய ராஜ சபை கூட்டி இளஞ்சிங்கமாகிய விஸ்வாஸ்ராவை அதற்குத் தலைமைவகிக்கச் செய்தார். மஹாராஷ்டிரர் முழுதுமே அங்கு வந்திருந்தது என்று சொல்லலாம். ஹிந்துக்களின் வீரமும் செல்வமும் அரசியல் வன்மையும் கல்வியறிவும் அங்கே திரண்டு வந்தன என்று கூறுவது மிகையாகாது. பெருங் குதூகலம் தொடங்கியது. ஆயிரக் கணக்கான ஊது கருவிகளும் கொம்புகளும் யுத்த பேரி களும் பீரங்கிகளும் முழங்க—கோதாவரியிலிருந்து வடக்கே சிந்துவரையிலும் தெற்கே கடல்வரையிலும் ஹிந்து வெற்றிக் கொடியை நாட்டிய ஆயிரக்கணக்கான

போர் வீரர்களும், குதிரைப் படைகளும், பீரங்கிப் படைகளும், ஆயிரக்கணக்கான குதிரைகளும் யானைகளும் ஜய கோஷங்களுக்கிடையே வாழ்த்துக் கூறி வந்தனம் அளித்தார்கள். பின்பு தமது சமூகத்துக்கே தலைமைவகித்த சக்ரவர்த்திக்கு வந்தனம் செலுத்துவது போல் சேனுதிபதிகளும் ராஜிய நிபுணர்களும் சர்தார்களும் மாகாணப் பிரதிநிதிகளும் பணிவுடன் முன்சென்று, மனமார்ந்த வணக்கத்தைத் தமது பிரியமுள்ள இளவரசருக்கு அளித்து ஜயவீரருக்குரிய மரியாதைகளை அவருக்குச் செலுத்தினார்கள். அந்த மகத்தான காட்சியைக் கண்டோர் யாவரும் அதன் உட் பொருளை அறிந்தார்கள். அவ்விள ஹிந்து அரசர் பகவத் கிருபையால் ஹிந்துஸ்தானத்தின் உத்தமமான ஹிந்து சாம்ராஜ்யாதிபதியாக முடி சூடப்போவதற்கு இது ஒத்திகையாகும் என்பது அதில் கலந்துக் கொண்ட எல்லோர்க்கும் தெளிவாயிற்று.

---

## 14. பானிப்பட்டு

> "தமது அழியாப் புகழை நாட்டிய அந்த அமர்க்களத்தே அவரை—அந்தோ!—தனிமையில் விட்டு வந்தோம்."

டில்லியில் நடக்கும் இந்த விசேஷ நடவடிக்கைகளின் உட் கருத்தை முகமதியர்கள் அறியாதிருக்க முடியாது மராட்டியர் தமதிளவரசரை ஹிந்துஸ்தானத்தின் சாம்ராஜ்யாதிபதியாக முடிசூடியதாகச் காட்டுத் தீ போல் செய்தி பரவியது. நஜீப்கானும் மற்ற முகமதியத் தலைவர்களும் இந்த நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டி, தாம் பயந்த அபாய நிலைமை வந்து விட்டதாகவும், தாம் முகமதியரைத் தட்டியெழுப்பச் செய்திருந்த முயற்சிகளெல்லாம்

சரியானவையே என்றும் சொன்னார்கள். இதனால் ஹிந்து சாம்ராஜ்யம் மட்டுமன்றி பார்ப்பன ஆதிக்கமே நிலைத்து விட்டதென்று மத வெறியுடன் புரளியாகப் பிதற்றி, நபியின் உபதேசத்தில் நம்பிய முகமதியர் யாவரும் இந்தக் காபிர்களின் படைகளைத் தாக்க வேண்டுமென்று பறை சாற்றினார்கள்.

இத்தகைய ஆவேச மயக்கங்களையும், இஸ்லாத்தின் பெயரில் நஸீப்பும் மௌல்விகளும் செய்து வந்த பிரசாரங்களையும் காட்டிலும் சுய நலமே ஸுஜா முதலிய முகமதியர்களைத் தூண்டி வந்தது. மதப்பித்தேறிய ரோஹில்லர்களும் இதைக் கேட்டு மதிமயங்கிப் போகவில்லை. அப்டாலி பலமாக எதிர்த்து வந்தும் அதனால் சற்றும் தோல்வியுறாமல் மராட்டியர் வெற்றி நாட்டி வருவதையும் இதைக் கண்டு தடுக்கச் சக்தியற்று அப்டாலி அஜாக்கிரதையாச் சோம்பித் திரிவதையும், கண்டு மராட்டியரைத் தடுத்து நிற்க அப்டாலிகுச் சக்தியில்லை என்று அவர்கள் நம்பினார்கள். ஸுஜாவோதான் அப்டாலியுடன் சேர்ந்தது தவறென்றும் அதற்குத்தான் பச்சாத்தாபப் படுவதாயும் பாவூக்கு எழுதினான். அவனைத் தமது கட்சியில் சேர்த்திக்கொள்ளக் கருதி பாவூ தன் தூதர்களின் மூலம் அறிவித்தார். முகலாய ராஜ்யத்தைக் கவிழ்க்கப் போவதில்லை என்றும் அப்டாலியை விட்டு ஸுஜா வந்தால் தாம் அரசனாய் அங்கீகரித்த ஷாஹ் ஆலம் மன்னனின் வஜீராக ஸுஜாவையே நியமிப்பதாயும் பாவூ அறிவித்தார், ரோஹில்லர்களும் தயக்கமுற்று அப்டாலியை விட்டு விடுவதாகப் பேசத் தொடங்கினார்கள். இவ்விதம் தனக்கெதிராகக் காரியங்கள் நடந்து வருவதைக் கண்டு அப்டாலி மராட்டியருடன் சமாதானப் பேச்சு நடத்த விரும்பி, சமாதான உடன்படிக்கையின் நிபந்தனைகளைப் பேசியறிய தூதர்களையும் மராட்டியரிடம் அனுப்பினான். ஆனால் பாவூ அப்டாலி கேட்டபடி பஞ்சாப்பைக் கைவிட மறுத்தார். மேலும் அவர் வெறும் பேச்சில் ஏமார்ந்து தகுந்த சமயத்தில் படையெடுக்காமல் இருந்து விடுபவர் அல்லர். ஆதலால் சமாதானப் பேச்சுகள் அரைமனதாய் நடந்து கொண்டிருக்கும்போதே வடக்கே படைகளை

அனுப்பி அப்டாலி குஞ்சபுராவில் அனுபவித்து விடா திருந்த முக்கிய ஸ்தலத்தினின்றும் அவனைத் துரத்தி விடுவ தென்று தீர்மானித்தார். ஸமத்கானின் தலைமையில் ஒரு பெரும் படை அதைக் காவல் புரிந்து வந்தது. குதுப்ஷா வும் அங்கே யிருந்தான். மராட்டியர் அதைத் தாக்க நிச்சயித்திருப்பதை யறிந்ததும் அதன் பாதுகாப்புக்கு வேண்டிய படைகளையும் ஏற்பாடுகளையும் செய்தார்கள். என்ன நேர்ந்தாலும் அதைக் கைவிடக் கூடாதென்றும் அவர்களது உதவிக்காகத் தான் படையனுப்பி யிருப்ப தாகவும் யமுனையின் அக் கரையிலிருந்து அப்டாலி ஸமத்கானுக்கும் குதுப்ஷாவுக்கும் உத்திரவு அனுப்பினான்.

டில்லியை நீங்கியதும் பொக்கிஷத்தை நிரப்புவது அவ சியம் என்று பாவூவுக்குத் தோன்றியது. கோவிந்த பந்த் பந்தேளா பின்புறத்திலிருந்து அப்டாலியின் படைகளைத் தாக்கிக் குழப்ப முண்டாக்கி அவனுக்கு வரும் யுத்த சாமான்களையும் ஆகாரங்களையும் கைப்பற்றி ஸுஜா, ரோஹில்லர் இவர்களது மாகாணங்களில் கலவரத்தை யுண்டாக்குவார் என்று பாவூ எதிர்பார்த்தார். ஆனால் கோவிந்த பந்தோ தமக்கு இடப்பட்ட இக் காரியங்களில் ஒன்றையேனும் நிறைவேற்றாமல் தவறினார். பந்தேளா விடமிருந்து பெருத்த பண உதவி யொன்றும் பெறாததால், பாவூ பொக்கிஷத்தை நிரப்ப வேறு வழியை யோசித்துக் கொண்டிருந்தார். பொக்கிஷமே யுத்த பலத்தின் மூல மாகும் என்று அவர் நம்பினார். லட்சக்கணக்கான ரூபாய் பெறுமான சக்ரவர்த்தியின் சிங்காதனத்தின் விலையுயர்ந்த வெள்ளிக் கூரையின் மீது அவரது நாட்டம் சென்றது. அதைத் தகர்த்து எடுத்துத் தங்கசாலைக்கு அனுப்பும்படி உத்திரவிட்டார், இதைக் கேட்டதும் அடிமைத்தனமும் மூட நம்பிக்கையும் கொண்டவர்கள் திடுக்கிட்டார்கள். கடவுளாலேயே இந்தியச் சக்ரவர்த்திகளாக நியமிக்கப் பட்டிருந்த முகலாயரின் சிங்காதனத்துக்கு இப்படி இகழ்ச்சி செய்வது பாவமாகும்என்று ஜாட் ஜாதியாரும் நம்பி பயந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படி யானால் மற்றவனது ராஜ்யத்தை அபகரிப்பது முதலிய காரியங்கள் பலித்துவிட்டதனால் அவை கடவுளின் இச்சை

யைத் தெரிவிப்பனவாய் தெய்வீகம் பொருந்தியனவாகி விடுமா? இந்த மூடக்கொள்கை உண்மையானல், மத வெறியாலும் கொடுங் கோலாட்சியாலுமன்றி தெய்வீக உரிமைகளாகிய சுதந்திரத்தையும், சுய பாதுகாப்பையும், சுதந்திர வாழ்வை நடத்தும் சமூகத்தின் விருப்பத்தையும் நாட்டுவதற்காகவே சிவாஜி ராயக்கட்டில் நாட்டிய வீர சிங்காதனமும் சாதிக்கப்பட்டு பலித்ததனல் தெய்வீகம் பொருந்தியதேயாகும் என்பதை ஜாட் ஜாதியார் அறிந்திருக்க வேண்டும். கையில் துப்பாக்கியும் கத்தியும் தாங்கிய மத வெறி பிடித்த படைகளுடன் ஔரங்கசீப் தக்காணத்துக்கு வந்து ஆக்கிரமித்து ஹிந்துக்களின் சமூக வாழ்வை நசுக்கி அச்சிறு ஹிந்து நாட்டின் சுதந்திரத்தை யுடைக்க வந்தபோது ஔரங்கசீப் சிவாஜியின் தெய்வீகச் சிங்காதனத்தை யுடைத்து எறிந்துவிடச் சற்றேனும் தயங்கினனா? அப்படியிருக்க மூகலாயரின் சிங்காதனத்துக்கு அணுவளவேனும் ஏன் மரியாதை காட்ட வேண்டும்? ஜாட் ஜாதியார் உட்பட ஹிந்து மக்கள் யாவருக்கும் அம் மூகலாயச் சிங்காதனம் ஒரு கொடிய துராகிகாரத்தின் காரணமாயும், வெற்றிக்குறியாகவும் தோன்றவில்லையா? அந்தச் சிங்காதனத்தினலன்றோ ஆயிரக் கணக்கான ஹிந்துக்கள் ரத்தம் சிந்தி ஆத்மத்தியாகம் செய்ய நேர்ந்தது? அதனல் எத்தனை ஹிந்து ஆலயங்களும் வீடு வாசல்களும் அழிந்திருக்க வேண்டும்? அந்த மூகலாய சிங்காதனம் நிலைத்து நின்றதால் ஹிந்து மக்களின் சமூக அரசியல் சுதந்திரமே அடியோடு நிர்மூலமாகிவிட வில்லையா? ஹிந்து சாம்ராஜ்ய சிங்காதனத்தைப் பிளக்கக் கருதி ஔரங்கசீப் கையில் சம்மட்டி யெடுத்து ஓங்கினன். ஆனல் காலச் சக்கரமும் தெய்வப் பழியும் ஹிந்து ஸ்தானத்தின் குல தெய்வமும் அவனது கையினின்றும் அக் கொடிய ஆயுதத்தைப் பிடுங்கி, இன்று அவனது சிங்காதனத்தையே உடைத்துப் பொடியாக்கி விட்டன.

பாஹு தமது படை வீரர்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பள பாக்கியைக் கொடுத்து, குஞ்சபுராமீது படையெடுத்தார். ஷிந்தே, ஹோல்கர், விட்டல் ஷிவதேவ் இவர்கள் படையின் முன்னணியில் சென்றார்கள். பட்டாணியர்

வீரயுத்தம் புரிந்தார்கள். அக்கோட்டையும், நகரும் இயற்கை பலம் பொருந்தியன. ஆனால் விந்தே முதலிய சேனாதிபதிகளின் படைகளது ஆதரவுடன் மராட்டியர் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவே, முகமதியரால் நீண்ட நேரம் எதிர்த்து நிற்க முடியவில்லை. முகமதிய அரண்களில் சில பிளவுகள் தோன்றியதும், தமாஜி காயக்வாட் அவைகளைத் தாக்குமாறு தமது படைக்கு உத்திரவிடவும், அவர்கள் தங்களது குதிரைகளின் மீதேறி ஹர! ஹர! என கோஷமிசைத்து அப்பிளவுகளின் வழியே உள்ளே பாய்ந்தார்கள். கொடிய போர் தொடங்கியது. ஆயிரக் கணக்கான பட்டாணியர்கள் வாளுக்கு இரையானார்கள், மராட்டியர் கோட்டையைக் கைப் பற்றி முகமதிய யுத்த கூடாரத்தைக் கொள்ளையிட்டு, நூற்றுக் கணக்கான முகமதிய வீரர்களைக் கைப்பற்றினார்கள். முகமதியத் தலைவனை ஸமத்கானும் மராட்டியர் கைபில் அகப்பட்டான். ரகுநாத் ராவ் சென்ற தமது படை யெடுப்பில் அவனை ஒரு தடவை கைப்பற்றி யிருந்தார். ஆனால் அப்போது பிரதிக்கிரயம் கொடுத் தனுப்பினான். மராட்டியரை விடாமல் எதிர்த்து வந்த ஸமத்கான் இப்போது அவர்களது கையில் மீண்டும் அகப்பட்டான்.

போரில் வெற்றிபெற்று முடிந்ததும், பாவு, ஹோல்கருக்கும் விந்தேவுக்கும் சில கட்டளைகளைச் சொல்லி, பகைவர்கள் போர் முடியப் பல மாதங்களாகும் என்று நம்பியிருந்தும் மூன்றே நாளில் போரை முடித்து வெற்றி சூடிய தமது படை மக்களைப் புகழ்ந்து கொண்டிருந்தார். அப்போது யானைகளின்மீது இரு யுத்தக் கைதிகள் அவர் முன்பு கொண்டுவரப் பட்டார்கள். அவர்களுள் ஒருவன் குஞ்சபுராவை ஆண்டுவந்த பட்டாணியச் சேனாதிபதியான ஸமத்கான். இன்னொருவன் நஸீப்கானின் குருவாகிய குதுப்ஷா. பட்டாணிய சூழ்ச்சியில் தலைமை வகித்து வீர தத்தாஜி இறக்கும் தறுவாயில் அவரை உதைத்து ஏளனம் செய்த மனிதப்பதர் அவனே.

குதுப்ஷாவைக் கண்டதும் மராட்டியரின் ரத்தம் கொதித்தது. தத்தாஜியின் நினைவு தோன்றி பழிக்குப் பழி கேட்டது. "எமது தத்தாஜி யிறக்கும் தறுவாயில்

அவரைக் காபிர் என்று உதைத்தவன் நீதானே?" "ஆம். எங்கள் மதத்தில் விக்கிரக ஆராதனை செய்பவனைக் கொன்று காபிர் என்று அவனை யிழிவாக நடத்துவது புண்ணியமென்று சொல்லப் பட்டிருக்கிறது" என்றான் குதுப்ஷா. "அப்படியானால் நாய்போல் இறந்து ஒழி" என்று பாவூ சீறவும் அருகிருந்த போர்வீரன் அவனைச் சற்று அப்பால் இழுத்துச் சென்று அவனது தலையை அறுத்தெறிந்தான். தத்தாஜிக்கு இழைக்கப்பட்டிருந்த அநீதிக்குப் பழி வாங்கியாய் விட்டது. ஸமத்கானுக்கும் அதே தண்டனையிழைக்கப்பட்டது.

நஸீப்கானும் அவனது மாப்பிள்ளையும் மற்ற உறவும் உட்பட அவன் குடும்பம் மராட்டியர் கையில் அகப் பட்டது. ஆனால் குதுப்ஷாவைப்போல் அவர்களைக் குரூர மாக நடத்தவில்லை. அவ் விதம் குரூரமாக நடத்தி யிருந் தாலும் மராட்டியர் மீது குறை சொல்ல அப்டாலிக்கு வாயேது? அவனும் அவனைச் சேர்ந்த முகமதிய அரசர் களும் இதனிலும் கொடிய குரூரங்களைச் செய்துள்ளார் கள். அவர்கள் பஞ்சாப்பிலும், பாதனிலும், மற்ற இடங்களிலும், நடந்த போர்களில் கைப்பற்றிய மராட்டி யர்களது மூக்குகளை அறுத்திருந்தார்கள். இது மட்டு மன்றி அவர்களது சிரங்களை யறுத்து, அச் சிரங்களை அரசனது கூடாரத்துக்கு முன்பு அடுக்கி, ஜயஸ்தம்ப மென்ன அதைக் கண்டு மகிழ்ச்சியடைந்து வந்தார்கள். இத்தகைய கொடிய காரியங்களை மராட்டியரும் செய் திருக்க முடியும். ஆனால் அவ் விதம் செய்யாமல் தங்கள் கோபத்தை யடக்கிக் கொண்டார்கள். நியமம் தவறாமல் அப்டாலிகளும், ஔரங்கசீப்புக்களும், நாதிர் ஷாக்களும் மற்ற முகமதியர்களும் செய்ததைப்போல் மராட்டியர் மசூதிகளை இடிக்கவில்லை; குரானைப் பொசுக்கி எரித்திட வில்லை; தெய்வ ஸ்தலங்களில் பாவ காரியங்களைச் செய்ய வும் இல்லை.

குஞ்சபுராவின் வீழ்ச்சியால் அப்டாலியின் போர்ப் புகழே குன்றி விட்டது. 10000 உள்ள அவனது படை களை முறியடித்து மராட்டியர் ஜய கோஷத்துடன் விஜய தசமி விழாவைக் குதூகலத்துடன் அவன் கண்ணெதிரே

நடத்தினார்கள். தேர்ச்சி பெற்ற சேனாதிபதியான அப்டாலியோ தான் ஆபத்துக் கஞ்சாமல் சீக்கிரம் துணிந்து ஏதேனும் பெரிய வீரச் செயல் ஒன்றைச் செய்தாலன்றி தன் கட்சி ஜெயிக்காது என்று அறிந்து கொண்டான். பகத் அருகுள்ள பாலத்தைக் கொண்டு எவ்விதமேனும் யமுனையைத் தாண்டி டில்லியை ஆதார ஸ்தலமாகக் கொண்டு குஞ்சபுராவிலுள்ள மராட்டியப் படையைத் தாக்குவதாய் உடனே தீர்மானித்தான்.

அவன் அவ்வாறே செய்து லட்சம்பேர் கொண்ட தனது பெருஞ் சேனையை மராட்டியருக்கும் அவர்களது ஆதார ஸ்தலமாகிய டில்லிக்கும் நடுவே நிறுத்தினான். இதனால் மராட்டியருக்கு டில்லியிலிருந்து யுத்த உதவி வர முடியாமல் போய்விட்டது. ஆனால் ஸுஜாவின் நாடுகளுக்கும், அப்டாலிக்கும் நடுவேயுள்ள பாதையும், ரோஹில்லருக்கும் அப்டாலிக்கும் இடையே உள்ள பாதையும், அப்டாலியின் பாதுகாப்பிலே இருந்தபடியால் யுத்தத்தில் சைன்ய பலத்தைக் காட்டிலும் மிகுந்த சௌகரியம் அவனுக்கு ஏற்படலாயிற்று. இதை அவன் தனது சாமர்த்தியத்தால் சாதிக்கவில்லை. பாவூவின் உத்திரவுப்படி கோவிந்த பந்த் அப்டாலியைத் தாக்கி அவனது படைக்கு உதவி வர முடியாமல் தடுத்திருந்தால் இது கைகூடியிருக்காது.

மராட்டியர் தன்னைப் போரில் சந்திக்கத் தயாரா யிருப்பதை அப்டாலி யறிந்தான். பகத் என்னுமிடத்தில் அவன் யமுனையைத் தாண்டியதும், புகழ் பெற்ற போர்க் களமான குரு க்ஷேத்திரத்தில் பாவூ அவனைச் சந்திக்க முற்பட்டு பானிப்பட்டில் கூடாரம் அமைத்தார். கோவிந்த பந்தும், கோபால கணேஷும் அப்டாலியின் பின் படைகளைத் தாக்கி அவனுக்கு வரும் யுத்த சாமான் களையும் ஆகாரங்களையும் தடுத்து நின்றால் அப்டாலியைத் தாங்கள் நிச்சயமாய் நசுக்கலாம் என்று மராட்டியர் நம்பினார்கள். ஆனால் கோவிந்த பந்த் அக்கக் காரியத்தைச் செய்ய முற்றிலும் தவறினார். பாவூ தன்னாலான மட்டும் சொல்லி பயமுறுத்திப் பார்த்தார். ஆனால் கோவிந்த பந்தோ முயற்சி செய்யாமல் வாளா யிருந்தார். ஏற்கனவே

ஜாட் அரசர் மராட்டிய கூடாரத்திலிருந்து விலகிச் சென்று தமது தலைநகரான பரத்பூரிலிருந்து போர் நிகழ்ச்சிகளை கவனித்து வந்தார். எனினும் அவர் மராட்டியருக்கு அவ்வப்போது யுத்த சாமான்களை அனுப்பி யுதவினர். ஆனால் ராஜ புத்திரர்களோ அது கூடச் செய்யவில்லை. அவர்களுள் ஒருவரேனும் மராட்டியரை எதிர்க்க முற்படா விட்டாலும் அவர்கள் அழிந்துவிட வேண்டும் என்று விரும்பி வந்தார்கள். இந்த ஹிந்து அரசர்களின் ஆத்ம ஹத்தியான துராசை எவ்வளவு தூரம் நிறைவேறியது என்று எதிர்காலச் சரித்திரத்தினல் தெரிய வரும். இரு திறத்தாரும் மற்றவர்களின் போக்கு வரவுப் பாதைகளைப் பிளந்து அதனல் அவர்களைப் பட்டினி போட முயன்றார்கள். பல நாள் இவ்வாறு செல்லவும் இதனல் அப்டாலியைவிட மராட்டியரே பட்டினி கிடக்க நேர்ந்தது தெரியவந்தது.

கடைசியில் நவம்பர் 22-ம் தேதி ஜன்கோஜி ஷிந்தியா தமது கூடாரத்திலிருந்து கிளம்பி முகமதியப் படைகளைத் தாக்கினர். போர் மும்முரமாக நடந்தது. மராட்டிய இளஞ் சிங்கத்துக்கும் அவரது தேர்ச்சி பெற்ற படைத் தலைவர்களின் வீரத்துக்கும் முன்னே நிற்க இயலாமல் முகமதியர்கள் மாலைநேரம் நெருங்கியதும் பின் வாங்கவே, மராட்டியர் துரத்தி வரவும் அவர்கள் தமது பாசறைக்குள் புகுந்து கொண்டார்கள். இரவின் இருளால் முகமதியர்கள் தோல்வியினின்றும் தப்பினர்கள். வெற்றியுடன் திரும்பி வந்த தமது வீரர்களை மராட்டியர் ஜய கோஷத்துடன் வரவேற்றார்கள். இந்தத் தோல்வியினல் தனது படைகள் மனந்தளர்வதை யறிந்து அப்டாலி இரு வாரங்களுக்குப் பிறகு தன் படைகளின் முக்கிய பாகங்களை அனுப்பி இரவில் இருள் சூழ்ந்ததும் மராட்டியப் படையின் நடு பாகத்தைத் தகர்த்திடும்படி உத்திரவிட்டான். ஆனல் அவர்கள் அப்படியே முற்பட்டு வரவும் தங்கள் வரவை எதிர்பார்த்து பலவந்த ராவ் மேஹேந்தளே 20000 போர் வீரர்களுடன் போர் புரியத் தயாராயிருப்பதை அறிந்தார்கள். உடனே பட்டாணியர் தமது பீரங்கிகளால் மராட்டியரைத் தாக்கினர்கள்.

மராட்டியரோ தமது பீரங்கிப் படைகளைக் கொண்டு வரவில்லை யாதலால் துன்பமடைந்தார்கள். மராட்டியர் தயங்கி விடுவார்போல் தோன்றியது. ஆனல் மராட்டியப் படைத் தலைவர் மின்னலைப்போல் கிளம்பி முன் சென்று, தமது கொடியின் புகழுக்குக் குறை செய்யக் கூடாதென்று எல்லோருக்கும் ஆவேசத்தை மூட்டி, மராட்டியர் யாவரையும் திரட்டி, வாளை யுயர்த்திப் பகைவர்களைத் தாக்கும்படி உத்திரவிட்டார். உடனே மராட்டியர் சீறிப் பகைவர் மீது பாய்ந்து அவர்களது பீரங்கிகளை யடக்கிக் கடும் போர் தொடுத்தனர். எல்லோருக்கும் முதல் சென்றவர் அவர்களது வீரப்படைத் தலைவரான பலவந்தராவ் மேஹேந்தளே. அக் கொடிய போரிலே அவர் மீது ஒரு குண்டு படவும் அவர் மடிந்து மண்மீது வீழ்ந்தார். அதைக் கண்டதும் முகமதியர்கள் அவர் மீது பாய்ந்து அவரது சிரத்தை யறுத்து எடுத்துச் செல்ல வந்தார்கள். ஆனல் நிம்பால்கரோ தமது படைத் தலைவரின் உடலுக்கும் முகமதியர்களுக்குப் நடுவே நின்று போர் புரிந்து தேகம் துளைந்து போயினும் மராட்டியர் வந்து கொண்டு போமளவும் அதைக் காத்தார். இதற்குள் ஆயிரக் கணக்கான பட்டாணியர் இறந்திடவும், முகமதியரால் எதிர்த்து நிற்க முடியவில்லை. அவர்கள் தமது படை வீரர்களில் பலரை ரணபலியாகக் கொடுத்துத் தோல்வி யுண்டு தளர்ந்து தயங்கி தமது கூடாரங்களுக்குத் திரும்பி ஓடிவிட்டார்கள். இப் பெரும் போரில் மராட்டியர் வெற்றி யடைந்தாலும் ஒரு பெருந் தலைவரை யிழக்க நேர்ந்தது. மராட்டியர் அவரது சவத்தை அன்புடன் கூடாரத்துக்கு எடுத்துச் சென்று வெற்றி வீரருக் குகந்த சைன்ய மரியாதைகளைச் செய்தார்கள். இதை யறிந்து பாவூ துடித்தார்; உத்திரகிரியைகளுக்கும் தானே நேரில் வந்தார். இறந்துபட்ட அவ் வீரரின் மனைவியோ பாவூ என்ன சொல்லியும் கேளாமல் உடன்கட்டை யேறினர். படைகள் முழுவதும் வந்து வணங்கின. அப்பெரு வீரரையும் அவரது தலையை யணைந்த வண்ணம் அவருடன் உடன் கட்டை யேறிச் சாவிலும் பிரியாத அக் கற்பரசியையும் சூழ்ந்து நின்று ஆயிரக்கணக்கானவர்கள் வந்தனம் செய்தார்கள்.

இவ்விதம் அப்டாலி இருமுறை போர் தொடுத்து இரு முறையும் தோல்வியுண்டான். ஆனால் இதனால் மராட்டியரது பட்டினியைத் தீர்க்கும் மார்க்கம் கிடைக்க வில்லை. இப்போது கோவிந்த பந்த் சுறுசுறுப்பாய் அப்டாலியின் உணவுப் பொருள்களைக் கைப்பற்ற முயன்றது உண்மையேயாயினும் ஏற்கனவே வெகு தாமதம் ஆகியிருந்தது. மேலும் அவர் அனுப்பிய ஆகார வஸ்துக்களும் சீக்கிரம் தீர்ந்து போயின. அட்டாய்கான் பொய்க் கொடி தாங்கி 10000 போர் வீரர்களுடன் கோவிந்த பந்தைத் தாக்கினான். ஹோல்கரின் கொடியைப் பார்த்து மராட்டியர்கள் அணுகிவரும் பட்டாணியரை நண்பர்கள் என்று நினைத்து நெருங்கவும், அவர்கள் மீது முகமதியப் படை பாய்ந்தது. கடைசியில் கோவிந்த பந்தும் தாக்குண்டு இறந்தார். பாஹுவின் உத்திரவுப்படி நான்கு மாதத்துக்கு முன்னால் கோவிந்த் பந்த் அபாயத்துக்குத் துணிந்து நடந்திருந்தால், தம்மையும் தேசத்தையும் பெருத்த அபாயத்தினின்றும் காப்பாற்றி யிருக்கலாம். அவரது சிரத்தைப் பட்டாணியர்கள் அறுத்துப் போனார்கள். அதை அப்டாலி தற்புகழ்ச்சியுடன் பாஹுவுக்கு அனுப்பினான். அப்டாலி கடுங்காவல் செய்து வந்தும் மராட்டியர் அவனை யின்னமும் வெல்வதற்கு வழியிருந்தது. மராட்டியரின் நிலைமையின் சேதி தக்காணத்தை யடையவும், அவர்களின் உதவிக்காக பாலாஜி 50000 போர் வீரர் கொண்ட பெரும் படையுடன் புறப்பட்டு வந்தார். பானிப்பட்டில் மராட்டியர் இன்னும் ஒருமாத காலம் போர் புரியக் கூடுமானால் அவர்களது இரு பெரும் படைகளுக்கும் நடுவே அப்டாலி நசுங்குண்டு போவது திண்ணம். ஆனால் மாரட்டியரோ உணவுப் பொருளின்றி சிக்கிக் கொண்டார்கள். நூற்றுக்கணக்கான சுமைப் பிராணிகளே யன்றி தினந்தோறும் குதிரைகளும் உண வில்லாமல் இறந்து வந்தன. அவைகளின் பிண நாற்றம் பரவி படைகளின் ஆரோக்கியத்துக்கே ஆபத்து விளைவித்தது. சீக்கிரம் போர் புரிவதுவே சிறந்த வழியாகத் தோன்றிற்று. மராட்டியப் போர் வீரர்கள் தினந் தோறும் பாஹுவைச் சூழ்ந்து பட்டினி கிடப்பதைக் காட்டிலும் பகைவர் மீது பாய்ந்து போர் தொடுத்து

இறப்பதே மேலாகும் என்று சொன்னார்கள். இன்னொரு வழியுண்டு. அதாவது தமது முன்னோர்கள் தலைமுறை தோறும் போர் புரிந்து உயிரையும் ஈந்த ஹிந்து லக்ஷியத்தைத் துறந்து சரண் புகுவதே. தமது சமூகச் சுதந்திரத்தைப் பறி கொடுத்து அப்டாலியை இந்திய சக்ரவர்த்தியாக அங்கீகரிப்பார்களா? மராட்டியன் எவனும் இதற்கு ஒருகாலும் இணங்கமாட்டான். பட்டினியால் பலம் குன்றியிருந்தும் மராட்டியர்கள் போர் புரிந்து வெற்றி பெறாமல் இறப்பதானாலும் வெற்றியினால் பகைவனுக்கு லாப மில்லாதபடி செய்து விடுவார்கள். தளராத வீரமுள்ள பாவூ பலக்குன்றாக விளங்கினார்; தமது மக்களின் தேசியப் புகழுக்குக் கேடு விளைவிக்கவல்ல எதையும் செய்ய மறுத்தார். பட்டினியிலிருந்து தப்ப வழியில்லாவிடில் போர் தொடுத்துப் பகைவரைத் தாக்கி யிறப்பதே சரி. அத்தகைய தோல்வி தமது நாட்டு எதிர்கால மக்கள் யாவருக்கும் பெருமையையும் ஆவேசத்தையும் அளிக்குமன்றோ?

ஒரு அவசர யுத்த சபை கூட்டி, போருக்கு ஆயத்தமாய் படைகள் டில்லியைக் நோக்கிச் செல்வதென்றும், அப்டாலி எதிர்த்தால் அவனது படைகளைத் தாக்கிப் பிளந்து டில்லிக்குப் போவதென்றும் மராட்டியர்கள் தீர்மானித்தார்கள். அப்டாலி எதிக்காமல் சும்மா இருக்கத்தக்க மூடனா?

ஆயிரக்கணக்கான ஹரி பக்தர்களாகிய ஹிந்து போர் வீரர்கள் 'ஜரிகைப்பட்டான' தமது காவிக் கொடியைச் சூழ்ந்தார்கள். முதல் படைத் தலைவரான பாவூ சபையின் தீர்மானத்தை அறிவித்தார். யுத்தம் செய்வதென்ற தீர்மானத்தைக் கேட்டதும் படை வீரர்களெல்லோரும் குதூகலத்துடன் ஆரவாரம் செய்தார்கள். தலைவர் போர் முறையை விளக்கித் தமது உன்னத தேசக் கொடியின் சரித்திர மேன்மையைப் புகழ்ந்தார். ஹிந்து சாம்ராஜ்யமாகிய ஸ்வதர்ம ராஜ்பத்தை நாட்டுவதான லக்ஷியமே வாழ்க்கையின் கருத்தாகும் என்பதை ஞாபகப்படுத்துவதற்காக ராம்தாஸர் சிவாஜிக்கு அருளிய தருமக்கொடி! முன்னோர்கள் போர் பல புரிந்து வெற்றிசூடி அட்டக்

முதல் ஆற்காடுவரை ஹிந்துஸ்தானம் முழுவதையும் வென்று நாட்டிய விஜயக் கொடி! ஹிந்து ஆட்சியின் பகைவரைப் பதைக்கச் செய்யும் பிரதாபக் கொடி! இப்போது அந்த மகத்தான கொடியைத் தாழ்த்தி, அது காட்டிய லக்ஷியத்தைத் துறந்து, பகைவரைப் பணிவோரும் உளரோ? லக்ஷம் போர் வீரர்களும் ஏகோபித்து ஹரஹர மஹாதேவ் என்று ஆரவாரித்துக் கத்தியுயர்த்தித் தமது கொடிக்கும், அக் கொடியின் லக்ஷியத்துக்கும், வெற்றியிலிருந்து வெற்றிக்குத் தம்மை நடத்திவரும் தலைவருக்கும், தமது பக்தியையும் மாறாத விசுவாசத்தையும் ஆணையிட்டுக் கொடுத்தார்கள்.

ஜனவரி மாதம் 14-ம் தேதி காலை மராட்டியர் போர்க் கோலத்துடன் தமது கூடாரத்திலிருந்து புறப்பட்டுக் கிளம்பினார்கள். பாஹுவும் விஸ்வாஸ் ராவும் ஹோல்கரும் வலதுபுற அணிகளையும், தமாஜி காயக்வாட், யேஷ்வந்த் ராவ் பவார், அந்தாஜி மங்கேஷ்வர், விட்டல் ஷிவ்தேவ், ஸம்ஷேர் பகதூர் இவர்கள் படையின் இடது புறத்தையும் நடத்தி வந்தார்கள். தமது ஒப்பற்ற பீரங்கிப்படையை இப்ராஹிம்கான் கார்டியின் தலைமையின் கீழ், படைகளுக்கு முன்பாகவே, வைத்திருந்தார்கள். இவ் வீரர் முகமதியராயினும் சாகும் வரையில் தமது மராட்டியத் தலைவர்களுக்குத் துரோகம் நினைக்காமல் விசுவாசத்துடன் சேவையளித்து வந்தார். இவ்விதம் காண்போர் அஞ்சும் படிப் போர்க்கோலம் புனைந்து மராட்டியப் படை கிளம்பவும் நூற்றுக்கணக்கான யுத்த பேரிகைகளும் வாத்தியங்களும் கொம்புகளும் திடீரென்று கோஷம் செய்தன.

மராட்டியர் படையெடுப்புடன் வருவதை யறிந்து அப்டாலியும் முன் வந்து அவர்களைச் சந்தித்தான். அவனது படைகளின் மத்திய பாகத்தை அவனது வஜீரான ஷாஹனுவாஜ்கான் நடத்தினான்; படைகளின் வலது புறம் ரோஹில்லரும் இடது புறம் நஸீப்கானும் ஸுஜாவும் வந்தார்கள்; மராட்டியரைப்போல் அப்டாலியும் தன் படைகளின் முன் புறம் பீரங்கிப் படையை நிறுத்தினான்.

உடனே போர் மூண்டது. பீரங்கிகளின் சப்தம் எண் திசைகளையும் பிளந்தது. பெரும் படைகள் எழுப்பிய புழுதியும் பீரங்கிகள் கக்கிய புகையும் வானில் சூழ்ந்து பகலவனையும் மறைத் தொளித்தன. இவை சற்று அடங்கியதும் யேஷ்வந்த் ராவ் பவாரும் விட்டல ஷிவ் தேவும் முதலில் சென்று தாக்கினார்கள். போர் முற்றியது. மராட்டியர் ஒரே பாய்ச்சலில் தாக்கவும் ரோஹில்லரில் 8000 பேர்கள் பொக்கென உயிரைக் கக்கி விழ மற்றவர்கள் பின் வாங்கினார்கள். மராட்டியர் தாக்கியதால் அப்டாலியின் படைகளின் வலது புறமே ஒடிந்து சிதறிப் பின் வாங்கிற்று. முகமதியப் படையின் மத்திய பாகத்தை பாவூவும், இளஞ் சிங்கமாகிய விஸ்வாஸ் ராவும் ஆவேசத்துடன் தாக்கிப் புடைக்கவும், கைகலந்த துவந்த யுத்தம் தொடங்கிற்று. பட்டாணியர் வீரராதலின் எதிர்த்து நின்றார்கள். ஆனால் பாவூவும் விஸ்வாஸ் ராவும் நடத்தி வந்த மராட்டியரோ வீரமும் வலிவும் செறிந்தவர்கள். பாவூவும் விஸ்வாஸும் ஒரு மணி நேரம் கடும்போர் புரிந்து வஜீர் நடத்திய பட்டாணியப் படையை உடைத்து விட்டார்கள். ரணகளத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் இறந்து விழுந்தார்கள். வஜீரின் மகன் கொல்லப்பட்டான். வஜீரின் குதிரை பிறக்க அவன் வாகனமின்றி நின்றான். முகமதியரின் மத்தியப் படை பின் வாங்கலாயிற்று. பாவூவும் விஸ்வாஸும் முன் சென்று பகைவர்களை ஒவ்வொரு ஸ்தானத்திலிருந்தும் துரத்தி வந்தார்கள். இதைக் கண்டு வஜீருக்கு உதவி செய்யும் பொருட்டு நஸீப்கான் முன் வந்தான். ஆனால் அவனைப் பின் பற்றிய வண்ணம் இளஞ் சிங்கமாகிய ஜன்கோஜி கடிதே வந்து பாவூவுக்கு உதவியாக நின்றார். போரின் குரூரம் அதிகரித்தது. ரணகளமெங்கும் புராணங்களில் சொல்லப்படும் கை கலந்த யுத்தம் தொடங்கிற்று. அப்டாலி தனது படைகளின் வலது இடது பாகங்களும் மத்திய பாகமும் பின் வாங்கிச் சிதறியோடும் நிலைமையில் இருப்பதைக் கண்டான். அவனது வீரர்களில் பலர் போர்க்களத்திலிருந்து ஓடவும் தலைப்பட்டார்கள். ஆனால் அவன் அஞ்சிடாமல் உறுதியாக நின்றான்; படையை விட்டு ஓடுவோரை உடனே வெட்டி வீழ்த்தும்படி உத்திரவு

இட்டான். காலை எட்டு மணிக்கு ஆரம்பித்த போர் மாலை இரண்டு மணி ஆகியும் முடிவு பெருமல் கொடுமையுடன் நடந்து வந்தது. போர் வீரர்கள் ஓய்வின்றி யுத்தம் செய்தார்கள். ரணகளமே இரத்தப் பிரவாகத்தில் மூழ்கியிருந்தது. அடிபட்டு விழுந்தவர்களின் அலறலும், இறப்பவர்களின் கூச்சலும், யுத்த பேரிகையின் சீற்றமும்; துப்பாக்கிச் சப்தமும், பீரங்கிகளின் இடித்தலும், போர் வீரர்களின் யுத்த கோஷமும் சேர்ந்து எண் திசைகளையும் நடுங்கச் செய்தன.

பிற்பகல் மணி இரண்டாயிற்று. மராட்டிய வீரமும் தளராத எதிர்ப்பும் பகைவர்களின் படைகளில் பெரும் பிளவுண்டாக்கின. போரில் தேர்ச்சி பெற்றுள்ள அப்டாலியும் கவலைகொண்டு யமுனையைத் தாண்டி அக்கரை செல்ல விரும்பினுன். ஆனுல் அவன் தேவையான சமயத்தில் உபயோகிப்பதற்கென்றே கையிருப்பில் 10000 வீரர் கொண்ட ஒதுக்குப் படையை நிறுத்தி வைத்திருந்தான். அப்டாலி இதுதான் தக்க சமயம் என்று பாஹுவைத் தாக்கும்படி அப்படைக்கு உத்திரவு தரவும், அது மின்னல் வேகத்துடன் மராட்டியர்மீது பாய்ந்தது.

காலை முதல் விடாமல் ஓய்வின்றிப் போர் புரிந்து வந்த பாஹுவும் அவரது வீரர்களும் இதுகண்டு தளரவில்லை. அப்படை தாக்கியும் இவர்களுள் பிளவு ஏற்பட வில்லை. நடந்த போரில் மராட்டியரே வெற்றி பெறுவார்கள் என்று தோன்றியது' அப்டாலியின் கடைசித் துருப்பும் வெற்றி நாட்ட முடியவில்லை.

ஆனுல் அப்போது பகைவர் விட்ட குண்டு ஒன்று மராட்டியரது வீர இளவரசரான விஸ்வாஸைத் தாக்கவும் அவர் அடியுண்டு யானைமீது அம்பாரியில் வீழ்ந்தார். அழகும் வீரமும் செறிந்து மராட்டியரது ஆசையின் அணிகலனுய் விளங்கிய அவ்விளவரசர் மரண அடியுண்டு வீழ்ந்தார். தமது போர் வீரர்களுக்கு உற்சாகவார்த்தை சொல்லி, பகைவரைப் பிளந்து, அந்நாள் வரையில் உலகமே கண்டிராத அற்புதப் போரை நடத்திக் கொண்டிருந்த பாஹு இச் சேதியைக் கேட்டதும் இடி விழுந்தவர் போல் கலங்கினுர். விஸ்வாஸின் அருகே சென்று அவர்

அம்பாரியில் மரண காயம்பட்டு ரத்த வெள்ளத்தில் சாய்ந்திருந்ததைக் கண்டதும் அந்த உக்கிர் வெற்றி வீரரின் கல்நெஞ்சும் உருகிக் கண்ணீர் ததும்ப "விஸ்வாஸ்! விஸ்வாஸ்!" என்று தேம்பியழுதார். மரணத் தறுவாயிலிருந்த இளவரசர் கண் விழித்து கம்பீரமாக, "சிற்றப்பா ஏன் சும்மா நின்று கொண்டிருக்கிறீர்கள்? தலைவரான நீர் போர்முனையில் இல்லாவிடில் நமக்குத் தோல்வி ஏற்படலாகுமே!" என்றுரைத்தார். மரணவஸ்தையிலும் தமது கடமையை மறவாதவராகி மஹாராஷ்டிரத்தின் வீர இளவரசர் தான் இறந்த பின்பேனும் தமது படைகள் வெற்றி பெற வேண்டும் என்று விரும்பினர். அவரது வீர வார்த்தைகளால் மனந்தேறிய பாவு உறுதி பெற்று, 'நடந்தது நடக்கட்டும்; நான் ஒருவனாகவே நின்று போர் புரிந்து பகைவரை யழிப்பேன்" என்று வீராவேசத்துடன் முன்னே பாய்ந்து சென்று படைதிரட்டினார். மராட்டிய வீரர்கள் இன்னும் தளராமல் கடும்போர் புரிந்து வந்தார்கள். அவர்களே வெற்றி பெறுவார்கள் போல் தோன்றிற்று.

ஆனால் விஸ்வாஸ் இறந்த சேதி காட்டுத் தீ போல் மராட்டியப் படையெங்கும் பரவி ஏற்கனவே மிகக் களைத்திருந்த அவர்களது மனதில் அதைரியத்தை விளைவித்தது. அப்போது இன்னொரு துரதிர்ஷ்டம் ஏற்பட்டது. இரண்டொரு மாதத்துக்கு முன்பு அப்டாலியின் படையினின்றும் நீங்கி 2000-பட்டாணியர் மராட்டியர் படையில் சேர்ந்திருந்தார்கள். பகைவர்களான முகமதியர்களிடமிருந்து அவர்களை அடையாளம் கண்டு கொள்ளும் பொருட்டு மராட்டியர் அவர்களின் தலையணிமீது மராட்டிய காவி வர்ணத் துண்டுகளைக் கட்டியிருந்தார்கள். முன்னடியே வஞ்சகம் செய்வதாய் அப்பட்டாணியர்கள் சதியாலோசனை செய்திருந்தார்கள். அவர்கள் இப்போது மராட்டிய காவி வர்ணத் துண்டுகளை வீசியெறிந்து விட்டு; விஸ்வாஸ் இறந்துவிட்டதாகச் சொல்லி, மராட்டியப் படையில் கலவரத்தைப் பரப்பி, படைகளுக்குப் பின் சென்று, அங்கிருந்த மராட்டிய கூடாரத்தில் கொள்ளையிட்டு மராட்டியப் போர் வீரர்களைக் கொல்லத்

தொடங்கினார்கள். பட்டாணியரைப் படைக்குப் பின்புறம் கண்டதும் மராட்டியர் மனந்தளர்ந்தனர். படைக்கு முன்னணியில் போர் புரிந்து வந்த மராட்டியர் இப்பட்டாணியரைக் கண்டு பகைவர் தமது படைகளைப் பிளந்து விட்டதாக எண்ணி ஓடத் தலைப்பட்டார்க்ள்.

இந்த எதிர்பாராத காட்சியைக் கண்டும் பகைவனான அப்டாலி தன் கண்களை நம்ப மறுத்தான், ஏனெனில், தான் தோல்வியடைவது யுறுதியென்று நம்பியிருந்தான். மராட்டியரோ வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் படையின் மத்திய பாகத்திலும் வெற்றி பெற்று வந்தார்கள். அதைக் கண்டு அப்டாலியின் கட்சியிலிருந்தவர்களே சிதறி ஓடவும்; அவன் வெகுண்டு பின்வாங்கி யோடுவோரைக் கொல்லும்படிக் கட்டளையிட்டதால் அவனது படை முறிந்து குலையாமல் இருந்தது. அவ்வித மிருக்க திடீரென்று மராட்டியப் படையில் குழப்பந் தோன்றி மராட்டியர் சிதைவுற்று ஓடுவதைக் கண்டதும் அப்டாலியின் படைகள் தைரியம் பெற்று ஓடும் மராட்டியரைத் துரத்தி தாக்கினார்கள். இதனால் மராட்டிய எதிர்ப்பே முறிந்து விட்டது. வலதுபுறமிருந்த அவர்களது படைகள் யாவும் கலைந்து சிதறுண்டு தாறுமாறாய் ஓடலாயின.

ஆனால் பாஹூவும் அவரது வீர புருஷர்களும் நின்றிருந்த இடத்தில் இன்னும் போர் நிற்கவில்லை. இறக்கும் வரையில் தமது தேசக் கொடியைக் காத்திட உறுதி கொண்டு அவர்கள் தளராமல் போர் புரிந்து வந்தார்கள். "மடக்கு, குத்து, கொல்லு" என்று தைரியவுரை கூவி வந்த பாஹூவின் குறலும் கம்மிற்று. பேசவும் முடியாமல் போய்விடவே, தலையை யாட்டிச் சமிஞ்ஞை செய்து தமது வீரர்களுக்கு உற்சாகம் மூட்டிய வண்ணம் பாஹூ மரணத்தின் வாயில் பாய்ந்தார். அவரது ஆவேசத்தைக் கண்டு முகுந்த ஷிந்தே துணிவு கொண்டு அவரது குதிரையைப் பிடித்து நிறுத்திப் பணிவுடன், "தலைவரே; உமது வீரம் அமானுஷியமானது. நமது வீரர்கள் தம்மாலானமட்டும் போர் புரிந்தார்கள் இந்தச் சமயத்தில் பின்தாங்குவது உத்தமமன்றோ?" என்றுரைக்கவும், பாஹூ புகன்றார்: "என்ன, பின்வாங்குவதா? சேனாபதி விஸ்வாஸும்

மற்றும் நமது படையின் வீர ரத்தினங்களும் போரில் இறந்ததை அறியீரோ? என் ஆஞ்ஞைக்கு உட்பட்டு படைத் தலைவர்கள் யாவரும் ஒருவர்பின் ஒருவராகப் பகைவரைத் தாக்கிப் போரில் இறந்தார்கள். இப்போது நான் எவ்வாறு ரணகளத்தினின்று ஓடிப் பிழைத்து முகத்தை நானா ஸாஹிபுக்கும் எனது சமூகத்துக்கும் காட்டுவேன்? ஆதலால் என் கடைசி யுத்திரவு இதுவே. பகைவரை விடாமல் தாக்கி வீழ்த்திக் கொல்லுங்கள்.''

தலைவரை நமஸ்கரித்து அவரது கடைசி உத்திரவின் படி முகுந்த ஷிந்தே தன் குதிரையினின்றும் இறங்கி ஹரஹரமஹாதேவ் என்ற கோஷத்துடன் வாளுயர்த்தி பகைவர் நடுவே பாய்ந்தார். இளஞ் சிங்கமாகிய ஜன் கோஜியேஷ்வந்த் ராவ் பவார் முதலிய எஞ்சியிருந்த வீரர்கள் எல்லோரும் ஒருவர்பின் ஒருவராக அப்படியே செய்தார்கள். யுத்த வெறி ததும்பிய பாவூவும் பகைவர் நடுவே பாய்ந்து, தான் உத்திரவு இட்டபடி, மரணபரியந் தம் பகைவரைத் தாக்கி வீழ்த்தியழிக்கத் தொடங்கினார்.

பானிப்பட்டில் ஹிந்துப் படைகளின் தளகர்த்தரைப் பற்றி நமக்குத் தெரிந்த கடைசி சேதி யிவ்வளவே. அவ் வீரசிகாமணி பானிப்பட்டில் நேர்ந்த நஷ்டத்தினின்றும் தமது குன்றாத வீரசக்தியாலும் மரணத்திலும் தவறாது கடமையை நடத்திய தருமத்தினாலும் தமது சமூகத்தை ஈடேற்றி விட்டார்.

## 15. தோல்வியையளித்த வெற்றி

"மலையைப் பிளப்பதில் யானையின் கொம்பு உடைதலும் நன்றே"

**பா**வும் அவரது வீரர்களும் தமது தேசியக் கொடியின் கீழ் அளவற்ற பகைவர்களுடன் போர்புரிந்து கொண்டிருந்த போதும், மராட்டியப் படைகள் சின்னா பின்னமாகச் சிதறியோடவே பகைவர்கள் துரத்தி வந்தார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் இறந்து வீழ்ந்தார்கள். பகைவர்கள் ஆயிரக் கணக்கானவர்களைக் கைதியாக்கி அடுத்த நாள் காலை அவர்களை வரிசையாக நிறுத்திக் கொலை செய்தார்கள். ஆப்கானியர் அடித்த கொள்ளையும் அபரிமிதமானது.

ஆயினும் மராட்டியர் தமது வீரத்தால் பகைவருக்கு இழைத்த சேதமும் அதிகமே. பட்டாணியர்கள் வெற்றி பெற்றும் தோல்வியினின்று தப்ப முடியவில்லை. கடைசி நாள் போரில் மட்டும் முகமதியப் படையில் 40000-பேர்கள் இறந்தார்கள். கோவிந்தபந்தின் சிரமறுத்த அட்டாய் கான், உஸ்மான் முதலிய முகமதியப் படைத்தலைவர்களும் இறந்தார்கள். நஸீப் பலத்த காயமடைந்து விழுந்தான். முகமதியர்கள் தமது வெற்றியின் காரணம் தமது வீரமும் தமது தளகர்த்தரின் வன்மையுமன்றி தமது அதிஷ்டமுமாகும் என்று அறிந்தார்கள்.

போரில் மராட்டியர் தோற்றும், பகைவரைத் தாக்கி பலத்த காயமிழைத்து அதற்குப் பிறகு அவர்களால் மீண்டும் படை யெடுக்க முடியாதபடி முறியடித்து விட்டார்கள்.

பானிப்பட்டில் தோல்வி யுற்றதால் என்ன? பானிப்பட்டில் மராட்டியர் முறிவுற்றாலும் மஹாராஷ்டிரம் நிலைத்து நின்றது. மஹாராஷ்டிரத்தில் உள்ள ஒவ்வொரு வீடும் பானிப்பட்டுகொடும்போரில் ரணபலிக்கு ஒவ்வொரு வீரனை யளித்திருந்தது. தமது நாட்டின் கௌரவத்தை நிலைநாட்டி பானிப்பட்டில் அன்று தம்மவர் புரிந்த

பிராணத் தியாகம் வீண்போகாமல் அவர்கள் உயிர் கொடுத்த உயர்ந்த லக்ஷியத்தை நிலை நிறுத்துவ தென்று மஹாராஷ்டிரத்திலுள்ள ஒவ்வொரு வீடும் சபதம் கொண்டது. ஏற்கனவே அப்டாலியின் மனக்கோட்டையை இடித்துத் தகர்ப்பதற்கு பேஷ்வா 50000 வீரர் கொண்ட மராட்டியப் படையுடன் கிளம்பி நருமதையைத் தாண்டி யிருந்தார். தம் மக்களுக்கும் குலத்துக்கும் ஏற்பட்ட நஷ்டத்தையும் துக்கத்தையும் அறிந்து அவர் பானிப்பட்டில் நேர்ந்த தோல்வியையும் கருதாமல் முற்பட்டு, அத்தோல்வியினால் அப்டாலி லாபமடையும் முன்பே அவனது படைகளை யழித்து, வடநாடுகளில் உள்ள மராட்டியப் படைகள் மனம் முறிந்து போகாமல் உற்சாகமும் வீரமும் அடையச் செய்ய வேண்டு மென்று தீர்மானித்தார். விஸ்வாஸ் இறந்ததால் ஏற்பட்ட துக்கம் தாங்க முடியாமல் ஆரோக்கியம் கெட்டு இருந்தும் பொருட் படுத்தாமல் தம் மக்களுக் கிழைக்கப்பட்ட பழிக்குப் பழி வாங்கி அப்டாலியை முறியடித்துத் துரத்துவதென்று மன உறுதி கொண்டார். வடநாட்டு ஹிந்து அரசர்களுக்குக் கடிதம் எழுதினர். ஹிந்து தருமத்தையும் ஆட்சியையும் அழித்து ஹிந்து சுதந்திரத்தை நசுக்க வேண்டுமென்று முகமதியர்கள் யாவரும் ஒன்றுபட்டு படை யெடுத்து வரும்போது ஹிந்து மன்னர்கள் ஒன்றுபட்டு வராமல் தனித்திருப்பது ஆத்ம ஹத்தி யாகும் என்று அவர்களுக்கு வீரமொழி அனுப்பினர். அவர்களை ஹிந்து விடுதலைப் போரில் சேரும்படி வற்புறுத்தி, பானிபட்டில் நேர்ந்த தோல்வியினால் ஹிந்து ஆட்சி கவிழ்ந்துவிடாது என்றும், முகலாய சாம்ராஜ்ய ஸ்தானத்தில் இப்போதும் முகமதிய ஆதிக்கத்தை மீண்டும் நாட்டுவதாய் அப்டாலி மனக் கோட்டை கட்டினால் அதைத் தாம் பகற் கனவாக்கி விடுவதாகவும் உறுதி மொழி கூறினர். "அபிமன்யுவைப்போல் எனது இளஞ் சிங்கமாகிய விஸ்வாஸும் போர்புரிந்து இறந்து வீரசுவர்க்கம் சென்றான். எனது சகோதரான பாவுவுக்கும் வீர ஜன்கோஜிக்கும் என்ன நேர்ந்ததோ எவரும் அறியார்— பல படைத்தலைவர்களும் போர் வீரர்களும் போர்முனையில் மடிந்தார்கள். ஆனல் அதனல் என்ன? இதெல்லாம் யுத்தத்தில்தானே நடந்தது? பகவத் கிருபையின்படியே

யுத்தத்தில் வெற்றியும் தோல்வியும் ஏற்படுகின்றன. ஆதலால் தோல்வியினால் மனந்தளராமல் மீண்டும் வீர முயற்சி செய்வோமாக.''

தமது சமூகத்துக்கு நேர்ந்த பெரிய கஷ்ட காலங்களிலும் மராட்டியர் இத்தகைய உறுதியையும் விடா முயற்சியையும் கைவிடாதிருந்ததால்தான் அவர்களால் இந்தியாவை ஆள முடிந்தது. அவர்களது தீரமும் திறமையும் அப்டாலி யறிந்திருந்தான். பானிபட்டில் வெற்றி கிடைத்ததும், தான் உடனே தன்னாட்டுக்குத் திரும்பிப் போகாவிடில் கிடைத்ததை யெல்லாம் கக்கவேண்டிவரும் என்றுணர்ந்தான். பானிப்பட்டு யுத்தத்தில் தப்பிப் பிழைத்த சர்தார்களையும் போர் வீரர்களையும் நானா சஹிப் திரட்டினார். மல்ஹோர் ராவ் ஹோல்கர், விட்டல் ஷிவ்தேவ், நரோ ஷங்கர், ஜனோஜி போஸலே இன்னும் பல படைத் தலைவர்களும் தத்தம படைகளுடன் குவாலியரில் கூடியிருந்தார்கள். அவர்களுடன் சேர்ந்து டில்லியின்மீது படை யெடுப்பதாக நானா ஸாஹிப் பயமுறுத்தினார். மராட்டியரது இந்தக் கருத்தை யறிந்த ஸுஜாவும், நஸீப்கானும் நடுங்கினார்கள். பானிப்பட்டுப் போரில் வெற்றி பெற்றதனால் மராட்டியரை வென்றுவிட முடியாது என்று அவர்களுக்கு உறுதியாய் தோன்றிற்று. ஆதலால் அவர்கள் தனித்தனியே மராட்டியருடன் இரகசியமாக சமாதானப் பேச்சு தொடங்கி, குவாலியருக்கு வந்துள்ள நானா ஸாஹிபைப் புகழ்ந்து வாழ்த்தவும் ஆரம்பித்தார்கள். அப்டாலியால் தனித்தோ அன்றி மற்ற முகமதியர்களுடன் சேர்ந்தோ ஹிந்துக்களை நசுக்கி, ஒடிந்து விழுகிற முகமதிய சாம்ராஜ்யத்தை இந்தியாவில் மீண்டும் நிலைநாட்ட முடியாது என்று ஸுஜா நன்றாக அறிந்துகொண்டான். முகமதியப் படைகளும் சின்னா பின்னமாயின. அவர்களுள் ஒவ்வொருவரும் தன் க்ஷேமத்தையே தனித்துக் கருதி, தான் பிழைத்தால் போதும் என்று விரும்பினார்கள். அப்டாலியின் கட்சியிலிருந்தும் ஸுஜா விலகிக்கொண்டான். அப்டாலி டில்லிக்கு வந்து சில வாரங்கள் தங்கி யிருந்தான். நானா 50000 படைகளுடன் அவனைத் தாக்கத் தொடங்கினார். பாரசீகர்கள் தனது ராஜ்யத்தின்மீது

படையெடுத்து வந்து விட்டதாய்க் கேள்வியுற்றதும், அப்டாலி டில்லியையும் இந்திய விவகாரங்களையும் விட்டு நீங்கிப்போகத் தீர்மானித்து, தான் கட்டிய மனக் கோட்டை யொன்றும் பலிக்காதது கண்டு, 1761-வது வருஷம் மார்ச்சு மாதம் சிந்து நதியைத் தாண்டிச் சென்றான்.

வெளி நாட்டில் உள்ள மத வெறிபிடித்த தமது முகமதியச் சகோதரர்களுடன் சேர்ந்து, தமது ஆதிக்கத்தையும் சாம்ராஜ்யத்தையும் காக்கக் கருதி, இந்திய முகமதியர்கள் செய்த முயற்சிகளில் இதுவே கடைசியானது. அவர்கள் பானிப்பட்டில் வெற்றியடைந்தும் அதே வெற்றியின் காரணத்தினால் மஹாராஷ்டிர மண்டலத்தின் ஹிந்து அதிகாரத்தை நசுக்கவோ அல்லது தமது முகமதிய சாம்ராஜ்யத்தை அழிவிலிருந்து காக்கவோ உள்ள அரிய சந்தர்ப்பத்தை யிழந்து விட்டார்கள்.

பட்டாணியரால் மீண்டும் டில்லியின் மீது படையெடுக்க முடியவில்லை. அவர்கள் மீண்டும் சிந்து நதியைத் தாண்டி வரவில்லை.

ஏனெனில் பானிப்பட்டில் நேர்ந்த தோல்வியினால் தளர்ந்திடாமல் ஹிந்து ஆட்சி பஞ்சாபில் வெகு துரிதமாய்த் தோன்றியது. அதுவே சீக்கியரின் ஐக்ய ஆட்சி. அவர்களது மதம் பஞ்சாப்பில் பரவிற்று. அதற்காக அவர்களில் அநேக வீர புருஷர்கள் ஆத்மத் தியாகம் செய்திருந்தார்கள். இப்போது அவர்களின் சைன்ய பலம் அதிகரித்து வந்தது. அவர்களது பத்தாவது குருவாகிய கோவிந்தசிங்கு என்ற புருஷ சிங்கத்தையும் தலைவரான பந்தா என்னும் ஆத்மத் தியாகியான தீர புருஷரையும் ஹிந்து மக்கள் யாவரும் என்றென்றும் தமது சமூகத்தின் வீர ரத்தினங்களாகக் கருதித் தொழுது வருவார்கள். குரு கோவிந்தஸிக்கு, பந்தா இவர்களது தலைமையின் கீழ் சீக்கியர்கள் பஞ்சாப்பில் ஹிந்து சுதந்திரத்துக்காகப் போர் புரிந்து வந்தார்கள். பந்தாவின் தலைமையின் கீழ் சீக்கியர் பஞ்சாப்பில் ஒரு பாகத்தில் விடுதலை நாட்டினார்கள். ஆனால் பஞ்சாப்பில் முகமதிய அதிகாரத்தை யழித்து வேதங்கள் கொண்டாடும் ஐந்து புண்ணிய நதிகளையும் கொண்ட அந்த மாகாணத்தில்

ஹிந்து ஆட்சியை நாட்டியவர்கள் மராட்டியர்களே. தமது நாட்டினின்றும் வெகு தூரத்தில் போர் புரிவதில் அநேக கஷ்டங்கள் இருந்தும் அவற்ருல் சிந்தை தளராமல் போர் புரிந்து பகைவரை யழித்து ஹிந்து ஜயக்கொடியை அட்டக் மீது நாட்டியவர்கள் மராட்டியர்களே. பிரிதிவி ராஜர் காலத்திலிருந்து அந் நாள் வரையில் அந் நாட்டில் ஹிந்துக் கொடி தாழ்ந்தே யிருந்தது. நாதிர்ஷா, அப்டாலி, இவர்களின் தலைமையின் கீழ் முகமதியர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து இந்தியாவில் முகமதிய அதிகாரத்தை மீண்டும் நாட்டுவதற்குப் பல முறை முயன்றும் அம் முயற்சிகளெல்லாம் மராட்டியரது தளராத எதிர்ப்பினுல் வீணுயின. சீக்கியர்களும் அக் காலத்தில் வாளா இருந் திடாமல் தமது பலம் பொருந்திய ஐக்ய ஆட்சியைப் பஞ்சாப்பில் நாட்டினுர்கள். பானிப்பட்டில் வெற்றி பெற்றதற்குக் கைம்மாருகப் பஞ்சாப்பைத் தான் அடைய லாம் என்று அப்டாலி மனக் கோட்டை கட்டியிருந்ததை யெல்லாம் இந்தப் புதிய ஹிந்து ஆட்சி தோன்றி இடித்து அழித்து விட்டது. பஞ்சாப் நாடு மஹாராஷ்டிரத்தின் ஹிந்து மக்களது கையிலிருந்து நழுவிய போதிலும் அது முகமதியரது கையில் அகப்படவில்லை. ஏனெனில் அப்டாலி இந்தியாவிலிருந்து திரும்பிப் போனதும் பஞ்சாப் ஹிந்துக்கள் அவனது கோட்டை கொத்தளங் களைக் கைப்பற்றி விட்டார்கள். அதற்கப்புறம் அப்டாலி இருமுறை சிந்து நதியைத் தாண்டி வந்தும் ஹிந்து மக்களது பிடியிலிருந்து பஞ்சாப்பை அகற்ற முடிய வில்லை. மராட்டியர்களும் டில்லியில் மீண்டும் பிரவேசித்து ஹிந்துஸ்தானத்தின் முக்கிய ராஜ்யமாகி விட்டார்கள், பஞ்சாப்புக்கு வெளியே கிழக்குத் திசையில் டில்லிவரை யிலேனும் சீக்கியர் கைப்பற்ற முடியவில்லை என்ருலும் அவர்கள் தமது சைன்ய பலத்தை யதிகரித்து இந்தியா வின் எல்லைக்கப்பாலிருந்து வந்த பகைவர்களை யடித்துத் துரத்தித் தமது சுதந்திரத்தைப் பாதுகாத்து வந்தார்கள். பேராசையினுலும் மத வெறியாலும் தூண்டப்பட்டு பட்டாணியரோ, துருக்கியரோ இனி ஒருநாளும் சிந்துவை தாண்டி இந்தியாவின் மீது படையெடுத்து வரத் துணிய மாட்டார்கள். அதற்குப் பதிலாகச் சீக்கியர்கள் ஹிந்துக்

கொடியைத் தாங்கிச் சிந்துவை தாண்டி அப்பாலும் சென்று வெற்றி சூடிக் காபூல் நதிக்கரையிலும் ஹிந்துக் கொடியை நாட்டி முகமதியர்களுக்கு பதிலுக்குப் பதில் கொடுத்து வந்தார்கள். எல்லைப்புறத்தில் இருக்கும் முகமதியக் கூட்டத்தாரின் மத வெறியைச் சீக்கியர்கள் அறவே அடக்கிவிட்டார்கள். சீக்கியரது பெயரைக் கேட்ட அளவில் ஒவ்வொரு பட்டாணியனும் பயந்து நடுங்கலானன்.

ஆதலால் முகமதியர்கள் தாம் விரும்பிய காரியத்தைச் சாதிக்கத் தவறினர்கள். பானிப்பட்டில் அவர்கள் வெற்றி பெற்றிருந்தும் அதனல் முகமதிய ஆட்சியை நாட்ட முடியவில்லை. ஹிந்து ஆட்சியை நாட்ட அம் மக்கள் செய்த முயற்சிகளை எதிர்த்து நீண்ட காலம் அவர்களுடன் போர் புரிந்து முகமதியர் பெற்ற வெற்றியெல்லாம் வீணயிற்று. முகமதியர்கள் பானிப்பட்டில் வெற்றி பெற்றிருந்தும் ஹிந்துக்களே அட்டக் முதல் கடல் வரையிலுள்ள ஹிந்துஸ்தானம் முழுவதிலும் தமதாட்சியை நிலை நிறுத்திக் கொள்ள முடிந்தது.

இவ் விதம் வடநாடுகளில் ஹிந்துக்கள் தமது முகமதியப் பகைவருடன் மகத்தான தேசியப் போர் நடத்தி வந்தபோது இதில் கலவாமல் தனித்து நின்று தன் காரியத்தில் கண்வைத்துச் சாதித்து வந்தவன் ஆங்கிலேயனே. பானிப்பட்டில் இரு திறத்தாரும் அடிப்பட்டு விழவும், மராட்டியர் வங்காளத்தின் மீது படையெடுப்பதை நிறுத்தி வைத்தார்கள். இதனல் சற்று முன்பு ஆங்கிலேயர் பிளாஸி யுத்தத்தில் வெற்றி பெற்று வங்காளத்தில் நாட்டியிருந்த ஆட்சி தப்பிப் பிழைத்தது. பானிப்பட்டுப் போரில் வெற்றி பெற்றவன் யாரென்றால் ஹிந்துவுமன்று; முகமதியனும் அன்று; போர் புரிந்த இரு திறத்தாருக்கும் வெற்றி பயன்படவில்லை. இருதிறத்தவர் கட்சியிலும் சேராமல் தனித்து நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டு இருதிறத்தாரின் பலமும் ஒடுங்கியதனல் லாபம் அடைந்தவன் மூன்றும் மனிதனகிய ஆங்கிலேயனே.

பானிப்பட்டு யுத்தத்தால் மராட்டியர் உடனே ஆங்கிலேயரைத் தாக்கித் துரத்திவிட முடியாமல்

போயிற்று. ஆதலால் தடங்கலின்றி ஆங்கிலேயரின் கிழக்கிந்திய கம்பெனி கொஞ்சகாலம் இருக்க முடிந்தது. ஆனால் இதனால் மட்டும் ஆங்கிலேயருக்கு நீண்ட லாபம் கிடைக்கவில்லை. ஏனென்றால் பானிப்பட்டுத் தோல்வியின் அதிர்ச்சியினின்றும் மராட்டியர் சீக்கிரம் சமாளித்துக் கொண்டார்கள். ஆனால் அவர்களுக்குள் உள் நாட்டுப் போர் தொடங்கிற்று. அவர்களது தலைவர்களும் ஒருவர் பின் ஒருவராய்ச் சொற்பகாலத்தில் இறந்தார்கள். ஆதலால் அவர்களால் யாதொன்றும் செய்ய முடியவில்லை. இன்றேல் பானிப்பட்டுத் தோல்வியினாலும் தளராது போர் புரிந்து ஆங்கிலேயரை வென்றிருப்பார்கள். ஆதலால் ஆங்கிலேயரின் வெற்றியின் காரணம் மராட்டியர் பானிப்பட்டில் அடைந்த தோல்வியன்று—அவர்களுள் தொடங்கிய உள்நாட்டுக் கலகமும் போருமே.

மேஜர் இவான்ஸ்பால் எழுதுகிறார்: "பானிப்பட்டு யுத்தத்திலும் மராட்டியருக்கு வெற்றியும் மேன்மையுமே கிடைத்ததென்று சொல்லலாம். இந்தியாவுக்காக, இந்தியர்களுக்காக, அவர்கள் போர் செய்து தோல்வியடைந்தாலும், வெற்றி பெற்ற ஆப்கானியர் பின்வாங்கித் தமது நாட்டுக்கே திரும்பிச் செல்ல நேர்ந்ததன்றி அதற்கப்புறம் இந்திய விவகாரங்களில் தலையிடவும் முடியாமல் போய் விட்டது."

அப்டாலி திடீரென்று தன் நாட்டுக்குத் திரும்பியதையும், ஸுஜாவும் நஸீபும் சமாதானத்தை யாசித்து வருவதையும் கேட்டு மராட்டியர்கள் நல்லகாலம் வந்துவிட்டதென்று மகிழ்ந்தார்கள். பானிப்பட்டு யுத்தம் நடந்து இரு மாதங்களுக்குள் நரோஷங்கர் எழுதினார்: "கடவுள் தயவால் ஹரிபக்தர்கள் என்று ஹிங்கனேவால் கொண்டாடப்பட்ட மராட்டியர்கள் இன்னமும் இந்தியாவை ஆண்டுவரும் அதிபதிகளாகவே இருந்து வருகிறார்கள்." தமது பெருந் தலைவர் உரைத்த வீரவாக்கியத்தை மராட்டியர் யாவரும் சொல்லி வந்தார்கள்: "பானிப்பட்டில் தோற்றதால் என்ன? அது ஒரு யுத்தம் தானே. வெற்றி பெற மீண்டும் முயற்சி செய்வோம்."

இந்தச் சமயத்தில் நானாஸாஹிபின் ஆரோக்கியம் கெட்டுவந்தது. சென்ற இரண்டு வருஷங்களாகவே அவரது ஆரோக்கியம் ஒடுங்கிக்கொண்டேவந்தது. பானிப்பட்டின் துக்க சம்பவம் அவரை வாட்டிற்று. இந்த தேசக் கஷ்டங்களையும் விஸ்வாஸ் இறந்ததால் தனக்கு ஏற்பட்ட துக்கத்தையும் பொறுத்தவராய், பானிப்பட்டுத் தோல்வியினால் தமது சமூகம் மனந்தளர்ந்து சிதறுமல் காத்து, அதன் வீரத்தையும் பலத்தையும் அதிகரித்து, உற்சாக மூட்டிவந்தனர். ஆனால் விஸ்வாஸவும், பாவூவும் வீர ரத்தினங்களான படைத் தலைவர்களும், போர் வீரர்களும் இறந்த துக்கம் அவருள்ளத்தைத் துளைத்து வந்தது. ஆறுதல் அறியாராய், ஆரோக்கியம் தினேதினே குறையவும் மஹாராஷ்டிரத்தின் பெருந் தலைவர் 23—6—1761-இல் பரலோகம் சென்றார். இறக்கும்போது அவருக்கு 41 வயதுதான் ஆகியிருந்தது. அதற்குள் மஹாராஷ்டிரத்தின் அதிகாரத்தை இந்தியா முழுவதிலும் நாட்டிவிட்டார்.

இவ்விடம் அவரது வன்மையையும் குணத்தையும் பற்றிச் சொல்வது அனாவசியமே. அவரது வீரச் செயல்களிலிருந்தே இவைகள் நன்கு விளங்குகின்றன. அவரது துரைத்தன ஏற்பாடுகள் நியாயமாயும் பிரபலமாயும் இருந்தன. சர்வஜனங்களும் அவைகளைப் பிரியத்துடன் ஆமோதித்தார்கள். மராட்டிய மக்கள் இன்னமும் அவரது ஆட்சியை நினைத்துப் புகழ்கிறார்கள். அவர் சிவாஜியின் அபிலாஷையாகிய ஹிந்துசாம்ராஜ்யத்தை நாட்டுவதற்கே அவதரித்தார். உண்மையில் அவரே ஹிந்துஸ்தானம் முழுவதையும் முகமதியரது கையினின்றும் மீட்டவர். பிரிதிவிராஜருக்குப் பிற்பாடுள்ள ஏழு நூற்றாண்டுகளிலும் அடையாத மேன்மையை ஹிந்துமக்கள் அவரது தலைமையின் கீழ் அடைந்தார்கள். அக்காலத்தில் உலகிலிருந்த மகோன்னத பெரியார்களில் அவர் ஒருவராவர் என்று திடமாய்க் கூறலாம்.

பாலாஜி என்ற நானாஸாஹிபின் அகால மரணத்தினால் மராட்டியர்களுக்கு பானிப்பட்டுத் தோல்வியைப் போன்ற பெரிய நஷ்டம் ஏற்பட்டது. இவ்விரண்டு விபத்துக்களும் அடுத்தடுத்து நேர்ந்ததால் ஹிந்து மக்கள் அந்த அதிர்ச்சியினின்றும் தேறுவதற்கு இயற்கையாகவே கொஞ்சகாலம் பிடித்தது.

## 16. தருமாத்மா மாதவராவ்

"பாலராயினும் உலகாள் வல்ல அரசருக்கு,
தமதரசைத் தாமே வகிக்கும் இயல்பும் வன்மையும்,
வயதாலன்றி ஜாதியால்தான் வாய்ந்தன"

நாஞ்ஸாஹிப் இறந்ததும் மஹாராஷ்டிர மண்டலத்தை நடத்துவதற்கு உரியதலைவரில்லாது போகவே, பானிப்பட்டுத் தோல்வினால் அது முற்றிலும் முறிந்துவிடும் என்று பகைவர்கள் நம்பிக் கிளம்பி அதை நாற்புறமும் தாக்கினார்கள். சமயம் வாய்த்தது என்று ஹைதர் தன் எஜமானராகிய ஹிந்து மன்னரிடமிருந்து மைசூரைப் பிடுங்கித் தனது அரசாட்சியை நாட்டியதன்றி தெற்கிலிருந்து மராட்டிய நாடுகளின் மீது படையெடுத்து வந்தான். நிஜாம் தான் உக்கிரில் அடைந்த தோல்விக்கும் பழிதீர்க்கும் ஏற்பாடு செய்து வந்தான். இந்தக் கலவரத்தில் கூடு மட்டும் கொள்ளையிட ஆங்கிலேயர் விரும்பினார்கள். வடநாடுகளில் முகமதியரை யன்றி ராஜபுத்திரர்களும் ஜாட் ஜாதியாரும் இன்னும் பல சிற்றரசர்களும் ஆங்காங்கு தத்தம் அதிகாரத்தையும் ஆட்சியையும் ஸ்தாபித்துக் கொள்ளக் கருதி மராட்டியரின் ஆட்சி பகைவர்களுக் கெதிரே நிற்க முடியாமல் அழிவுற்று அத்துடன் ஹிந்து சுதந்திர இயக்கமும் வீழ்ச்சியடையுமோ என்று ஹிந்து மக்கள் பயந்து வந்த அக்காலத்தில் இவ்வளவும் போதாதென்று ரகுநாதராவின் வஞ்சகப் பேராசையினால் மராட்டியருக்குள் பிளவு ஏற்பட்டு உள்நாட்டுப் போரும் கிளம்பும் போல் தோன்றியது.

இத்தகைய கஷ்டதிசையில் மஹாராஷ்டிரத்தை நடத்தும் பொறுப்பு மாதவராவின்மீது வீழ்ந்தது. அவர் பாலாஜியின் இரண்டாவது குமாரர்; இப்போது பதினேழு வயதுள்ள இளைஞராயிருந்தார். அவர் ஒப்பற்ற திறமையும் வசீகரத் தோற்றமும் உடையவர்; தமது முன்னோர்கள் நிலைநிறுத்தப் பாடுபட்ட ஹிந்து சாம்ராஜ்ய ஸ்தாபனத்தில் ஊக்கமுள்ளவர்; அவரது தலைமையின் கீழ் மஹாராஷ்டிரம் பல கஷ்டங்களிலிருந்துத் தப்பி இந்தியாவின் பிரதான ராஜ்யமாகவே விளங்கிவந்தது.

மராட்டியரின் பலம் ஒடுங்கிவிட்டதென்று எண்ணி நிஜாம் நேரே பூனாமீது படையெடுக்கக் கருதினான்; மேலும் ஹிந்து தரும ரக்ஷகர் என்ற அவர்களுடைய பெருமையை உடைக்கவும் கருதி; அவன் டோங்க் நகரில் உள்ள ஹிந்துக் கோவில்களை அழித்தான். ஆனால் தமது தலைநகரைக் காப்பாற்றுவதற்காக 80000 மராட்டியர்கள் நாற்புறமிருந்து ஓடிவந்து திரண்டு கூடியதைக் கண்டு நிஜாம் ஏமாற்றமடைந்து, உரலி என்ற இடத்தில் தோல்வியுற்றுப் பின்வாங்கினான். ஆனால் மாதவராவின் சிற்றப்பனான ரகுநாதராவ் இழிவான வஞ்சனையுள்ளவனாதலால் மராட்டிய மக்களை மாதவராவுக்கு எதிரே கிளம்பிக் கலகம் செய்யுமாறு தூண்டிவந்தான். இந்தச் சமயத்தில் மராட்டியரை நசுக்க நிஜாம் பெரும் படையுடன் மீண்டும் வந்தான். போன்ஸ்லேவும் இன்னும் சில சர்தார்களும் அவனுடன் சேர்ந்துகொண்டார்கள். சுயநலத் துரோகச் சிந்தனைகள் தோன்றி அவ்வப்போது மராட்டிய மக்களின் ராஜிய ஒற்றுமையைக் குலைத்து வந்தாலும், அவர்களது இயற்கையான தேசீய உணர்ச்சி உடனே ஓங்கி, ஒற்றுமையை நாட்டி கெட்ட எண்ணங்களையும் திருத்திவிடுவதை நாம் மராட்டிய சரித்திரத்தில் அடிக்கடி காண்கிறோம். உள்நாட்டுச் சச்சரவுகளின் காரணத்தால் பேஷ்வாவுக்கெதிரே கிளம்பி நிஜாமுடன் சேர்ந்த மராட்டியச் சர்தார்கள் அவனுடன் உறவுகொண்டாடுவது தமது இயற்கைக்கே விபரீதமானது என்று கண்டு வெகு நெருக்கடியான சமயத்தில் அவனைவிட்டு மீண்டும் மராட்டியக் கட்சியில் சேர்ந்துகொண்டார்கள். நிஜாம் நிராதரவாய் நின்றான். 1763-வது வருஷத்தில் ராக்ஷஸ் புவனில் நடந்த பெரும் போரில் ஒன்று கூடிய மராட்டியர் நிஜாமின் படையைத்தாக்கி வெற்றி சூட்டினர். அப்போரில் நிஜாமின் திவான் இறந்தான்; அவனது 22 சர்தார்கள் அடியுண்டு கைதியானார்கள்; அவனது துப்பாக்கிகளும் சைன்ய சாமான்களும் மராட்டியரது கையில் அகப்பட்டன. உத்கீர் போர் முனையில்தான் தோற்று இழந்ததையெல்லாம் இப்போது மீண்டும் பெறுவதற்காகப் படையெடுத்து வந்து, பூனாவில் காரியஸ்தனை நியமிக்கவும் தனக்கு உரிமையுண்டு என்று இறுமாப்

புடன் கூறிவந்த நிஜாம் இப்போதும் தோல்வியினால் தாழ்வு பெற்று, மராட்டியர் கையினின்றும் தப்பிக்க 82 லக்ஷம் ரூபாய் வருமானம் உள்ள நாட்டை அவர்களுக்கு அளிக்கும்படி ஏற்பட்டது. இளவயதுள்ள பேஷ்வா போர் புரிந்து கீர்த்திபெற்ற முதல் யுத்தம் இதுவே. அவரது போர்த்திறனைக் கண்டு மராட்டிய மக்கள் தம்மைப் பகைவரெதிரே நடத்தி வெற்றி நாட்டவல்ல தலைவர் இவரே என்று அறிந்துகொண்டார்கள்.

பேஷ்வாவான மாதவராவ் இவ்விதம் பானிப்பட்டுத் தோல்வியினால் மராட்டியரது பலம் குன்றிவிடாமல் முன் போலவே ஓங்கியுள்ளதை நிஜாமுக்கு போதித்து அதே பாடத்தை ஹைதருக்கும் கற்பிக்க முற்பட்டார். ஹைதர் அலி பானிப்பட்டு யுத்தத்துக்குப் பிறகு ஏற்பட்ட கலவரத்திலும் குழப்பத்திலும் மைசூரில் உள்ள ஹிந்து ராஜ்யத்தை யழித்து அவ்விடத்தில் முகமதிய ஆட்சியை ஸ்தாபித்தது மட்டு மன்றி கிருஷ்ணா நதிவரையுள்ள மராட்டிய நாடுகளின் மீது படையெடுத்து வந்தான். 1764-வது வருஷம் மாதவராவ் படையுடன் ஹைதரை நோக்கிப் புறப்பட்டு தார்வாடை மீண்டும் கைப்பற்றவும், கோர்படே, வின்சூர்கோ், பட்வர்த்தன் முதலிய படைத் தலைவர்கள் ஹைதரை நாற்புறமும் தாக்கவும், தந்திரமுள்ள படைத் தலைவனும் விடாக் கொண்டனுமான ஹைதர் ரத்திஹள்ளியில் கடும் போர் புரிந்து, மராட்டியரை வெல்லுவது அசாத்தியம் என்று கண்டுகொண்டு, தந்திரமாய்ப் பின்வாங்க நினைத்தான். ஆனால் அதை முன்னடியே அறிந்திருந்த மாதவ்ராவ் அவனைப் பேடனூரில் தடுக்கவும் தப்பிக்க வழியின்றி ஹைதரும் போர் தொடுக்க, முகமதியப் படைகளுக்குப் பலத்த சேதம் உண்டாயிற்று. மாதவராவ் தானே வந்து படையை நடத்தித் தாக்கவும் ஹைதரின் சேனை முறிவுற்றுச் சிதறுண்டு முதுகு காட்டி ஓடிற்று. பிரெஞ்சுக்காரரால் பழக்கப்பட்டு வந்த அவனது படையும் தோல்வியுற்றது. ஆயிரக்கணக்கான குதிரைகளும் ஒட்டகங்களும் பீரங்கிகளும் வெற்றி பெற்ற மராட்டியரது கையில் அகப்பட்டன. இனி மராட்டியரை எதிர்ப்பதில் பயனில்லை

என்று கண்டு ஹைதர் சமாதானத்தை வேண்டி, மராட்டியரிடம் அவர்கள் ஜெயித்துள்ள நாடுகளைத் தந்ததுமன்றி, சௌத்துக்கும் அதன் பழைய பாக்கிக்குமாக 22 லட்சம் ரூபாயும் கொடுத்தான்.

தமதிஷ்டப்படி நடந்திருந்தால், மாதவராவ் ஹைதரை இந்த நிபந்தனைகளின் மீதும் விட்டிருக்கமாட்டார். ஆனால் ரகுநாதராவின் வஞ்சகப் பேராசையினால் மராட்டியப் படைகளுக்கு ஹைதர், நஸீப்கான் இவர்களைக் காட்டிலும் பெருத்த ஹானி ஏற்படும் போலிருந்தது. மாதவராவ் ஹிந்து ஆட்சியின் பகைவர்களைப் படையெடுத்து எதிர்த்து வெற்றிசூடி வருங்காலத்தில் ராகுநாதராவ் பல தடவை அவருக்கெதிரே கலகம் செய்து கிளம்பினான். அதிகாரம் செலுத்துவதற்குக் கொஞ்சமேனும் அருகனற்றவனாயிருந்தும் ரகோபா அதிகாரத்தில் அளவற்ற பிரியம் வைத்தவனாய் முகமதிய ராஜ்யங்களுடனும் பகைவர்களுடனும் ரகசியமாய்ச் சேர்ந்து கொண்டு மாதவராவைக் கவிழ்க்கச் சூழ்ச்சிகள் செய்யலானான். தோல்வியுற்றுக் கைதியாகிச் சிறையில் வைக்கப்பட்ட போதெல்லாம் அவன் பட்டினி கிடந்து சாவதாய்ப் பய முறுத்துவான். முகலாயரில் இவ் விதம் ஒருவன் அதிகாரப்பித்து பிடித்து இருந்து வந்தால் நயவஞ்சகமாகப் பாஷாணமிட்டோ அல்லது ரகசியத்தில் குத்தியோ அவனைக் கொன்றிருப்பார்கள். ஆனால் இளம் பேஷ்வாவோ தருமமும் பெருந்தன்மையும் உருவெடுத்து வந்தாற் போன்ற அந்தணர். ராஜ்யத்தை இரு பாகம் செய்து ஒரு பாகத்தைத் தனக்குக் கொடுக்கும்படி ரகோபா எழுதியதற்கு மாதவராவ் பதில் எழுதினார்: "ராஜ்யத்தை பாகம் செய்வதைப்பற்றி எழுதினீர். ஆனால் இந்த மகத்தான ராஜ்யத்துக்கு யார் அதிபதி என்று நினைக்கிறீர்? இது என்ன ஒருவருக்குத் தனிப்பட்ட சொத்தாகுமா? இதற்காக ஆயிரக்கணக்கானவர்கள் பாடுபட்டு இத்தகைய மேன்மையை நாட்டியிருக்கிறார்கள். ராஜ்யத்தின் சகல அதிகாரமும் ஒருவர் கையில்தான் என்றும் இருந்துவர வேண்டும். பூமி காணியைப்போல் இந்த ராஜ்யத்தையும் பாகம் பிரித்தால் இதன் மேன்மையும் பலமும் நிலைத்து

கிற்குமா? இதை இவ்விதம் பிளந்து பலவீனப்படுத்த மாட்டேன். அதற்குப் பதிலாக உம்மையே இதன் ஏகாதி பதியாகச் செய்வதானாலும் சரி. அதற்கொப்பி தலைவர் பதவிக்குள்ள எனது உரிமைகளை யிழந்து உமது சைன்யத் தில் ஒரு சாதாரணப் போர் வீரனாக இருந்து நீர் கொடுத்த ஆகாரத்தைக் கொண்டு பிழைப்பைத்தாட்டி வருவேனே யன்றி, சுயநலப் பேராசையினால் மஹாராஷ்டிர சாம்ராஜ் யத்தைப் பிரித்தவன் என்று மஹாராஷ்டிரத்தின் எதிர்கால மக்களிடமிருந்து அபகீர்த்தியை அடைவதற்கு ஒருகாலும் இணங்கமாட்டேன்.''

ஆனால் வீர புருஷரும் தருமாத்மாவுமான மாதவராவ் உயிருடன் இருக்கும் போது, மனவுறுதியும் வன்மையு மற்ற ரகோபாவைத் தலைவராகக் கொள்ள மராட்டிய மக்கள் ஒரு நாளும் இணங்கியிருக்க மாட்டார்கள்.

---

## 17. பானிப்பட்டின் பழிக்குப்பழி தீர்த்தது

''மராட்டியர் தமக்கு நன்றி செய்தார்க்கு நன்றி காட்டுவர்; பகைவருக்கு இரக்கம் காட்டார்; யாரே னும் தம்மை யிகழ்ந்தால், உயிரையும் மதியாமல் துணிந்து பழி வாங்குவார்கள்''.

—ஹியான்த் ஸாங்

மராட்டியர் தமது நாட்டில் ரகுநாதராவ் செய்து வரும் வஞ்சகச் சூழ்ச்சிகளாலும் உள்நாட்டுச் சச்சரவுகளா லும் மனம் தளரவில்லை; ஹைதர், திப்பு போன்ற புதிய எதிரிகளால் வீரம் குன்றவுமில்லை. பானிப்பட்டில் அன்று தாம் அடைந்த தோல்வியை அகற்றி பகைவர்

தமக்கிழைத்த பழிக்குப் பழி வாங்குவதை அவர்கள் ஒரு நாளும் மறக்க முடியாது. நாஜிபுஸா ஹிபின் மரணத்துக்குப் பிறகு மராட்டியச் சர்தார்களில் முக்கியர்களா யிருந்த ஹோல்கரும் ஷிந்தேயும் தமது தேசமேன்மையைத் தம்மாலான வரையில் வட நாடுகளில் காத்து வந்தார்கள். உள்நாட்டுக் கலகமும், ரகோபாவின் சூழ்ச்சியும் அபரிமிதமாய்த் தோன்றுவதன் முன்பு மாதவராவ் 1769-வது வருஷத்தில் பினிவாலே என்பவரின் தலைமையின் கீழ் படையனுப்பி வடநாடுகளில் உள்ள மராட்டியப்படைத் தலைவர்களை அதில் சேரும்படி உத்திரவு செய்தார். ஹிந்து சாம்ராஜ்யத்தை மீண்டும் நாட்டி கி. பி. 1761-வது வருஷம் முதல் அதையழிப்பதற்குப் பாடுபட்டு வரும் இந்திய சிற்றரசர்களைத் தண்டிப்பதற்காகவே அந்தச் சேனை புறப்பட்டது. நருமதையைத் தாண்டி பண்டில் கண்டை அடைந்து, ஆங்குள்ள கலகத்தை யடக்கி கலகக்காரச் சிற்றரசர்களைத் தண்டித்து, அச்சேனை சாம்பல் நதியை அடைந்தது. பானிப்பட்டு யுத்தத்துக்குப் பிறகு ஜாட் அரசன் பல கோட்டைகளைக் கைப்பற்றியிருந்தான். இப்போது அவன் அக்கோட்டைகளையும் ஆக்ராவையும் மராட்டியர் கையில் கொடுக்க மறுத்து போருக்கு வந்து பரத்பூர் அருகே வீரத்துடன் யுத்தம் செய்தான். ஆனால் மராட்டியரை எதிர்த்து நிற்க முடியாமல் ஜாட் படைகள் சின்ன பின்னமாய் ஓடின. ஆயிரக் கணக்கான ஜாட் வீரர்கள் போர்க்களத்தில் மடிந்தார்கள். யானைகளும் குதிரைகளும், யுத்தப் பொருள்களும் அடங்கிய அவர்களது கூடாரம் மராட்டியரது கையில் அகப்பட்டது. ஜாட் அரசனான நவாப்ஸிங்கு சமாதானத்தை யாசித்து தன்னிடமிருந்த மாரட்டியக் கோட்டைகளையும் நாடுகளையும் திருப்பிக் கொடுத்து அரசிறையின் பாக்கிக்காக 65-லக்ஷம் ரூபாயும் செலுத்தினான். பிறகு மராட்டியப் படை டில்லியை நோக்கிச்சென்றது. தமது ஜன்மசத்ருவாகிய டில்லி முகமதியன் சற்றேனும் எதிர்த்து நிற்பானென்று எதிர்பார்த்தார்கள். ஆனால் மராட்டியரது வெற்றிப்படைகள் வந்ததும் வஞ்சகத் தந்திரியான நஜீப்கான் தான் செய்த வஞ்சகத்துக்கெல்லாம் பச்சாதாபப் படுவதாய் தாழ்மையுடன் மராட்டியரது யுத்த

கூடாரத்துக்கே வந்து உயிர்பிச்சை கேட்டான். தான் பெற்றதையெல்லாம் திருப்பித்தந்து மராட்டியப் படை டில்லி செல்வதற்கு வேண்டிய உதவிகளும் புரிந்து என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாரயிருப்பதாயும் உயிர் பிச்சை கொடுத்தால் போதுமென்றும் மன்றாடினன். ஆனல் இந்தத் தடவை பானிபட்டுச் சூழ்ச்சியின் முக்கிய கர்த்தாவான நஸீப்கானுக்கு இரக்கம் காட்டக் கூடியவர் ஒருவரும் இல்லை. மராட்டியர் அவன் மீது பழிவாங்கு வதற்கு முன்னரே அவன் இறந்து தப்பினன்.

மராட்டியர் டில்லிக்குள் பிரவேசித்தார்கள். அக்பர், ஔரங்கசீப்பின் தலைநகராகிய அதைத் தன்னுடைய தென்று உரிமைபாராட்டக் கூடிய ஆசாமி ஒருவர் இல்லை. அஹமத்ஷா அப்டாலியும் இப்போது வழிக்கு வந்து, பேஷ்வாவுடன் சமாதானப் பேச்சு ஆரம்பித்து, பூனவுக்குத் தன் தூதர்களையனுப்பிக் கடைசியில் தான் இனி இந்திய விவகாரங்களில் தலையிடுவதில்லை என்று சத்தியம் செய்து, மராட்டியர்களே இந்திய சாம்ராஜ்யத்துக்கு அதிபதிகள் என்று ஒத்துக்கொண்டான். இவ்விதம் பானிப் பட்டு வெற்றி வீரனே அந்த வெற்றியினாலும் போரைக் கிளப்பிய பேராசையினாலும் தனக்கு யாதொரு பலனும் கிடைக்கவில்லை என்றும், ஹிந்து மக்களே ஹிந்துஸ் தானத்தின் பிரதான அதிகாரிகள் என்றும் ஒத்துக் கொண்டான். இவ்விதம் மராட்டியர் இந்திய விவகாரங் களிலிருந்து ஆப்கானியரை அகற்றி, டில்லியைக் கைப் பற்றி, ஹிந்துக்கள் சாம்ராஜ்ய அதிகாரம் பெறுவதை எதிர்க்கவல்ல இரு முகமதிய வகுப்பினரான பட்டாணியரையும், ரோஹில்லரையும் துணையில்லாத ஒண்டிகளாக்கியதும் அன்றி, பானிப்பட்டில் அவ்விரு வகுப்பினரும் மராட்டியருக் கிழைத்த இகழ்ச்சிகளையும் அவமானங்களையும் நினைந்து நினைந்து நெஞ்சைக்கல்லாக்கி, அவர்களின்மீது பூரண வஞ்சகத்தையும் தீர்த்துக் கொள்ளுவதற்கு உறுதியுடன் வந்தார்கள். இதைப் பட்டாணியரும் ரோஹில்லரும் நன்கறிந்தார்கள். ஆதலால் பானிப்பட்டில் யுத்தம் புரிந்துள்ள தமது பண்டைத் தலைவர்களான ஹபீஸ் ரஹிம்த், அஹமத்கான் பங்கஷ் தலைமையின் கீழ் கூடி மராட்டியரை எதிர்த்து நிற்பதாய்த் தீர்மானித்தார்கள்.

டில்லியில் சில நாள் தாங்கிவிட்டு, மராட்டியர் யமுனைக்கும் கங்கைக்கும் இடையே உள்ளச் சமவெளி யில் பிரவேசித்து, தமது பண்டைப் பகைவந்து படைகளை அதிகரித்து ஆரவாரம் செய்து வருவதைக் கண்டார்கள். 70000 முகமதியர்கள் ஆயுதம் தாங்கிவந்தார்கள். ஆனால் அவர்களை எண்ணிப்பார்க்க மராட்டியர் ஒரு கண மேனும் தாமதிக்கவில்லை. பல போர்கள் நடந்தன. ஒவ்வொரு போரிலும் பட்டாணியரும் ரோஹில்கண்ட் மீது படை யெடுத்து ரோஹில்லாது படைகளையும் அவ்வாறே துக ளாக்கினார்கள். நஸீப்கானே சாவினால் மராட்டியர் வஞ்சத்தினின்றும் தப்பினான். ஆனால் அவனது மகனை ஜாபேதாகான் தனது பாவங்களுக்கும், தனது தகப்ப னுடைய பழிகளுக்கும் தண்டனை அடைய வேண்டியிருந் தது, சுக்ரதால் என்ற பலத்த கோட்டையில் அவன் ஒளிந்து கொள்ளவும், மராட்டியர் அக்கோட்டையைத் தாக்கித்தமது பீரங்கிகளால் கோட்டையுள் ஒளிந்திருக்கும் பகைவரது படைகளைச் சின்னபின்னப் படுத்தவே, ஜாபே தாகான் எதிர்த்து நிற்கமுடியாதவனாய் ஒரு நாள் இரவு கோட்டையைவிட்டு ரகசியமாய்க் கிளம்பிப் புறப்பட்டு கங்கையைத் தாண்டி பிஜனூரில் பிரவேசித்தான். மராட்டி யப் படைகள் ஒருகணமும் தாமதியாமல் முகமதிய பீரங்கி களையும் குண்டுகளையும் பாராட்டாதவர்களாய் கங்கை யைத்தாண்டி பிஜனூர் நோக்கி வந்தன, முகமதியனது பீரங்கிகளைக் கைப்பற்றி, தம்மை எதிர்த்த இரு பெருஞ் சேனைகளையும் முறியடித்து, ஆயிரக்கணக்கான ரோஹில் லரை வாளுக்கிறையாக்கி, மராட்டியர் பிஜனூரில் பிர வேசித்தார்கள். அந்த ஜில்லா முழுதும் மராட்டியருக்கு அடங்கிற்று. ஜாபேதாகானே தஸீப்காட்டுக்கு ஓடினான். மராட்டியர் அவனையங்கும் பின்தொடர்ந்து போய் பத்தே காட்டைக் கைப்பற்றினார்கள். இவ்விடத்தில்தான் முன்பு பானிப்பட்டில் நஸீப்கானும் ரோஹில்லரும் மராட்டிய ரிடமிருந்து கைப்பற்றிச் சென்றிருந்த போர்ப்பொருள் கள்யாவும் மராட்டியரது வீரகரத்தில் மீண்டும் அகப்பட் டன அவர்களது வீரவெற்றி பூர்த்தியாயிற்று, ஜாபேதா கானின் மனைவியும் மக்களும் மராட்டியர் கையில் அகப் பட்டார்கள். பானிப்பட்டில் அன்று கோடி போரான

ரோஹில்லாது கையில் அகப்பட்டுக்குரூர தண்டனைகளையும் அநீதியான எளனங்களையும் இகழ்ச்சிகளையும் மராட்டிய ஸ்திரிகளும் நூற்றுக்கணக்கான மராடியச் சிறுவர்களும் அடைந்ததை நினைத்துப் பார்த்தால் இப்போது மராட்டியர் அத்தகைய கொடிய தண்டனைகளை ஜூபேதாகானின் மனைவிமார்களுக்கும், மக்களுக்கும் இழைத்திருந்தாலும் அது முற்றிலும் நியாயமாகவே தோன்றும். ஆனால் வெற்றியிலும் அடக்கத்தைக் காட்டும் தமது முன்னோர்களின் அநுதாப குணத்தையெண்ணி மராட்டியர்கள் அவர்களை பலவந்தமாக ஹிந்துக்களாக்கவும் இல்லை, அவர்களுக்குத்குரூர தண்டனைகளை யிழைக்கவும் இல்லை. அத்தகைய கொடிய அக்கிரமங்களைச் செய்யாமலிருந்தும் ஹிந்துக்கள் அந்நாட்டிலுள்ள ரோஹில்லர் பட்டாணியர் உள்ளத்தில் பேரச்சத்தை நாட்டிவிட்டார்கள். மராட்டியப் போர் வீரன் ஒருவனைப் பார்த்ததும் ரோஹில்ல முகமதிய கிராமமே புறங்காட்டி ஓடலாயிற்று. பிழைத்திருந்த ரோஹில்லத்தலைவர்கள் தோராய் வனங்களுள் ஓடிச் சென்று ஒளிந்து கொண்டார்கள். மழைக்காலம் தொடங்கிய காரணத்தினால் மராட்டியர் அவர்களை அத்துடன் விட்டு விட்டார்கள். இன்றேல் அவர்கள் மராட்டியாது வஞ்சத்தினின்றும் தப்பியிருக்க முடியாது. முகமதியர்கள் தாம் பானிப்பட்டில் நடத்திய அநீதிகளுக்கு அத்தகைய பழி கொடுக்க வேண்டியதாயிற்று.

இவ் விதம் மராட்டியர் தமது ஜயக் கொடியை தோராய்வனங்களின் எல்லைப்புறம் வரையில் தாங்கிச் சென்று பகைவர் யாவரையும் தாழ்த்தியதும், 1771-வது வருஷம் மராட்டியப் படை டில்லிக்குத் திரும்பிச் சென்றது. அங்கே அவர்களது அரசியல் நிபுணர்கள் ராஜாங்க ஏற்பாடுகளிலும் வெற்றியை நாட்டியிருந்தார்கள். ஸுஜாவும் ஆங்கிலேயரும் முகலாயச் சிங்காதனத்தின் உரிமையாளனான ஷாஹ் ஆலத்தைக் கைப்பற்றி இந்தியாவில் பிரதான ராஜாங்க அதிகாரங்களை அடைவதற்குச் சூழ்ச்சிகளைச் செய்திருந்தார்கள். ஆனால் மராட்டியரிடம் இவர்களின் தந்திரம் பலிக்கவில்லை. ஷாஹ் ஆலம் மராட்டியர் கையில் அகப்படவும் அவன் தனக்கு இந்திய

சக்ரவர்த்தி யென்ற பட்டம் கிடைத்தால் போதும் என்று இந்திய சாம்ராஜ்யத்தை நிர்வகித்துக் காப்பாற்றும் உரிமைகளையும், பொறுப்புக்களையும் மராட்டியருக்கே அளித்து விடுவதாய் விடுதலைப் பத்திரம் எழுதித்தந்தான். பானிப்பட்டு நாள் முதல் அன்றுவரையில் மராட்டியருக்குக் கொடுக்க வேண்டிய பாக்கி சாக்கிகளையும், சௌத் வரியையும் கொடுத்து இனி ஜெயிக்கப்பெறும் நாடுகளில் அரைப் பங்கையும் மராட்டியருக்கே அளிப்பதாய் வாக்குறுதி கொடுத்தாலன்றி ஷாஹ் ஆலம் இந்திய சக்ரவர்த்தி யென்ற வெறும் பட்டத்தையும் பெற்றிருக்க முடியாது. 1761-வது வருஷத்தில் அநேகமாய் முடிந்திருந்த காரியம் இன்று 1771-வது வருஷம் பூர்த்தியாய் முடிந்து விட்டது. ரோஹில்லரும் பட்டாணியரும் முறியடிக்கப்பட்டு துகளான பிற்பாடு ஹிந்துஸ்தானத்தில் ஹிந்துக்களின் ஆட்சியை எதிர்த்து ஆக்ஷேபிக்க வல்லவர் ஒருவரும் இல்லை— அந்த வருஷத்தில் முகமதியச் சுதந்திரமும் அதிகாரமும் பேராசையும் அடங்கியொழிந்தன. முகலாயர், துருக்கியர், ஆப்கானியர், பட்டாணியர், ரோஹில்லர், பாரசீகர் இன்னும் வடநாடு, தென்னாடுகளில் உள்ள முகமதியரின் பல வகுப்புக்களும், ஜாதிகளும், பிரிவுகளும் இந்திய சாம்ராஜ்ய அதிகாரத்தைக் கைப்பற்றி. தமது ஆட்சி நீங்கி ஹிந்து ஆட்சி ஓங்காமல் இருக்க வேண்டுமென்று பல முயற்சிகள் செய்தும், அவை யாவும் மராட்டியரின் முன்பு வீணாயின. அன்றியும் மராட்டியர் அன்று முதல் ஐம்பது வருஷங்களுக்கு மேலாக இந்திய சாம்ராஜ்ய ரக்ஷகர்களாய், இந்தியாவின் பிரதான ராஜாங்க அதிகாரிகளாய் நின்று, தமதாட்சியை எதிர்த்த பல பகைவர்களையும் வெட்டி வீழ்த்தினார்கள். 1771-வது வருஷத்துக்குப் பிறகு முகமதியர்கள் இந்திய ராஜாங்க விவகாரங்களில் யாதொரு அதிகாரமுமின்றி சுய ஆட்சியில்லாதவர்களாய்த் தாழ்ந்துவிட்டார்கள் என்று சொல்லலாம். மராட்டியர் அவர்களை யொழித்தகற்றி, அட்டக் முதல் கடல்வரை பரந்துள்ள ஹிந்துஸ்தானத்தையும் ஹிந்து மக்களின் சுதந்திரத்தையும் மீட்டார்கள். அதற்குப் பிறகு அவர்களை எதிர்த்துப் போர் தரித்தவர்கள் முகமதியர்களல்லர்; முகமதியர்களைக்காட்டிலும் இயற்கையிலும் குணத்திலும் வன்மையிலும்

முற்றிலும் வித்தியாசப் பட்டவர்கள் — அவர்கள் தான் ஆங்கிலேயர்.

மராட்டியரது இருபெரும் படைகள் இவ்வாறு வட நாடுகளுக்குச் சென்றிருந்தபோது, தெற்கே ஹைதர் அச் சமயத்தைப் பயன்படுத்தக் கருதி, தென்னாடுகளில் உள்ள மராட்டிய ஏகாதிபத்தியத்தைத் தாக்காமல் வாளா யிருந்திடுவானா? உடனே மாதவ ராவ் பெரும் படையுடன் துங்கபத்திராவைத் தாண்டி, கோட்டைகளை ஒவ்வொன்றாய்க் கைப்பற்றி: பகைவருக் கெதிரே போர் பல புரிந்து வந்தார். ஆனவாடி காடுகளில் ஹைதர் பிரவேசிக்கும் போது அவனது படைகளை நெருக்குவதற்கு இரண்டாவது மராட்டியப் படையொன்று ஸித்தமாயிருந்தது. ஒரு நாள் இரவு மட்டு அருகில் அப்படை தங்கி யிருக்கும்போது, ஹைதர் 20000 போர் வீரர்களுடன் அக்காடுகளிலிருந்து புலிபோல் பதுங்கி வந்து திடீரென்று எதிர்பாராத வண்ணம் மராட்டியப் படைமீது பாய்ந்தான். ஆனால் ஹைதரின் பீரங்கிவிட்ட முதல் குண்டைக் கேட்டதும் மராட்டியப் படைத் தலைவரான கோபால்ராவ் விழித்தெழுந்தார்; ஒரு துளி தயக்கமாவது பலவீனமாவது காட்டப்பட்டால் மராட்டியப் படை முழுவதும் சின்னாபின்னமாய்விடும் என்று உணர்ந்தார். உடனே குதிரை மீது பாய்ந்து கொடியை நாட்டித் தமது ஸ்தானத்தில் ஏறி நின்று யுத்த பேரிகளை முழக்கும்படி உத்திரவு செய்தார். அந்த சப்தத்தைக்கேட்டதும் போர் வீரர்களும் ஒருவர் தவறாமல் விழித்தெழுந்து படுக்கையினின்று போர்க்களத்துக்கு ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்தார்கள். வர வர ஹைதரின் பீரங்கி வெடி முற்றி வரவும் மராட்டியப் போர் வீரர்கள் ஒருவர் பின் ஒருவராய் வீழ்ந்து வந்தார்கள். ஆனால் மராட்டியர் தளரவில்லை. ஹைதரின் பீரங்கிகளும் துப்பாக்கிகளும் இடிபோல் முழக்கி மராட்டியரைப் பொடியாக்கி விடும் போல் இருந்தது. ஆனால் கோபால் ராவ் அசையாமல் தீரத்துடன் நின்றார். அவர் நாட்டிய கொடி தாழ்வதாய்க் காணோம். அவரது யுத்த பேரி இன்னும் முழங்கிக் கொண்டிருந்தது. அவரது மெய்க் காப்பாளன் அசையாமல் அவரருகே நின்றான். பீரங்கி குண்டொன்று பறந்து

வந்து வீழ்ந்து அவர் தலையை ஆயிரம் சுக்கலாக்கிற்று. ஊற்றுபோல் ரத்தம் கிளம்பி மராட்டியப் படைத் தலைவரைக் குளிப்பாட்டிற்று. ஆனால் பரசுராம் பாவூ தன் குதிரைமீது அசையாமல் நின்றார். ஒரு வெடி குண்டுபட்டு அவரது குதிரை விழுந்தது. அவர் வேறொரு குதிரை மீதேறி நின்றார். ஏறியதுதான் தாமதம், உடனே இன்னொரு வெடிகுண்டால் அடிபட்டு அந்தக் குதிரையும் வீழ்ந்திடவும், படைத் தலைவர் வாகனமில்லாமல் நின்றார். அவர் மீண்டும் வேறொரு குதிரைமீதமர்ந்து மரணம் வாய்திறந்து காத்திருந்தபோதும் அசையாமல் தமது ஸ்தானத்தில் நின்றார். அவர் கொஞ்சம் நடுங்கியிருந்தாலும் ஒரு அங்குலமேனும் இடம் பெயர்ந்திருந்தாலும் படை முழுவதும் பயந்து, நடுக்கம் கொண்டு பீதியுடன் தாறுமாறாய் ஓடி பகைவனுக்கு இரையாய் முடிந்திருக்கும். தலைவரது வீரம் படையெங்கும் பரவி எல்லோர் உள்ளத்தையும் நிரப்பவே, போர் வீரர்கள் பீரங்கி குண்டுகளையும் லக்ஷியம் செய்யாமல் அசைவின்றி நின்றார்கள். ஹைதர் அருகே வந்ததும் மராட்டியரின் தளராத தீரக் காட்சியைக் கண்டு அச்சமுற்றுப் பதைபதைத்து வந்தவழி பார்த்துத் திரும்பினான். படையெடுப்பு தொடர்ந்தது. பேதே, பட்வர்த்தன்; பான்ஸே முதலிய மராட்டியப் படைத் தலைவர்கள் சலிப்பு அறியாராய் ஹைதரைப் போர்க்களம் ஒவ்வொன்றிலும் துரத்தியடித்துக் கடைசியில் மோதி தலாட் என்னும் இடத்தில் அவனை விடாப்பிடியாகக் கைப்பற்றி விட்டார்கள். அவனது படையெல்லாம் முறிந்து சின்னபின்னமாகவும், ஆயுதங்களும் வெடி குண்டுகளும் நிரம்பிய அவனது யுத்த கூடாரம் மராட்டிய வெற்றி வீரர் கையில் அகப்பட்டது. ஹைதரை இனி தலையெடுக்க முடியாதபடி ஒழித்து விடுவதென்று மராட்டியர் முடிவு செய்திருந்தனர். ஆனால் அப்போது தான் பேஷ்வா வியாதி யதிகரித்து அபாய நிலைமையில் படுத்திருப்பதால் படையெடுப்பை அத்துடன் நிறுத்தித் தலை நகருக்குத் திரும்பி வர வேண்டும் என்ற உத்திரவுடன் பூனாவிலிருந்து அவர்களுக்குக் கடிதம் வந்தது. மனமில்லாமல் மராட்டியத் தலைவர்கள் உடன்படிக்கையொன்றை யெழுதி ஹைதரிடமிருந்து அதற்கு

முத்திரையும் வாங்கினார்கள். அதனால் ஹைதர் மராட்டிய ஸ்வராஜ்யத்துள் அடங்கியிருந்த நாடுகளை மராட்டிய ருக்கே திருப்பித்தந்து விட வேண்டும் என்றும், யுத்தச் செலவைத் தவிர பேஷ்வாவுக்கு 50 லட்சம் ரூபாய் கப்பம் கட்ட வேண்டும் என்றும் ஒப்பந்தம் ஆயிற்று.

இத்தகைய வெற்றிகளின் இடையே தலைவர் நோய்ப் பட்டிருந்த சேதி டில்லி முதல் மைசூர் வரையில் நாற் புறமும் இருந்த பல மராட்டியப் படைகளுக்கு எட்டியது. இதனால் தமது தேசத்துக்கே பெருந் துன்பம் நேர்ந்ததை மக்கள் உணர்ந்தனர். இத் தலைவரின் தலைமையிலன்றோ மராட்டியர் தமக்குப் பானிப்பட்டில் இழைக்கப் பட்டிருந்த அக்கிரமங்களுக்கு வஞ்சம் தீர்த்துச் சமூகத் தின் பழைய மேன்மையை நாட்டினார்கள்? மாதவராவின் மீது ஜனங்களுக்கு இருந்த அன்பின் காரணம் அவரது வீர குணங்களும் வீரச் செயல்களும் மாத்திரம் அன்று. அவரது தேசபரிபாலன நிர்வாக முறைகள் நியாயமும், தருமமும் பொருந்தியவை. தமது குடிகளுக்கும் சிற்ற ரசர்களுக்கும் விவசாயிகளுக்கும் மேன்மை செய்வதில் அவர் மாறாத சிரத்தை வாய்ந்தவர்; மக்களிடம் மாசற்ற ஆழ்ந்த பற்றுள்ளவர்; உயர்ந்தோரேனும் தாழ்ந்தோ ராயினும் பக்ஷபாத மின்றி யாவர்க்கும் பொதுவான நீதியை நிறுத்தப் பாடுபட்டவர்; குடிகளில் மிகத் தாழ்ந்த வரும் அவரையணுகித் தத்தம் குறைகளைக் கூறி அன்பை யும் ராஜபக்தியையும் காட்ட முடிந்தது. அவரது கண்டிப்பைக் கண்டு அதிகாரிகள் அஞ்சினர். அவரை ஏழைக் குடியானவர்கள் தமது நன்மையைக் காக்கும் தெய்வமாகக் கொண்டாடி அவரிடம் நம்பிக்கையும் விசு வாசமும் வைத்தனர். பானிப்பட்டுக்குப் பிற்பாடு பத்து வருஷங்களாக அவரது சிற்றப்பனது வஞ்சகச் சூழ்ச்சி களால் அவரது குடும்பத்தில் அநேக துன்பங்களுமன்றி நாட்டிலும் சண்டை சச்சரவுகளும் மனஸ்தாபமும் நேர்ந் தன. எனினும் பானிப்பட்டில் நேர்ந்த விபத்தையும் அவ மானத்தையும அவர் அகற்றிவிட்டார். ஜனங்கள் பானிப் பட்டை நினைந்து மனம் புண்ணாகாமல் அதன் அநீதிகளுக் குப் பழிவாங்கி,தோல்வியினால் தமது மேன்மையும்,வலிவும்

குன்றமல், ஹிந்து சுதந்திரத்தையும் ஆட்சியையும் எதிர்த்த பகைவர்களை முறியடித்துப் பண்டை உயர்வை மீண்டும் பெற்றதைக் கண்டு மனம் உவந்தார்கள். மாதவ ராவ் சிறு வயதில் செல்வமும் செல்வாக்கும் படைத்தவர்; பிதாவைக் காட்டிலும் அரிய பெரிய செயல்களை அவரிட மிருந்து ஜனங்கள் எதிர்பார்த்தனர். தமது 27-வது பிராயத்திலே அவர் க்ஷயரோகத்துக்கு ஆளானர். அவர் நோய் மிகவுற்று இருக்கும் போதும், நிஜாமுடன் சேர்ந்து கொண்டு ரகசியச் சூது செய்து வரும் தமது சிற்றப்பனைச் சமாதானப்படுத்தி நல்வழி திருப்ப முயன்றார்; ராஜாங்க கடன்களை யெல்லாம் தீர்த்தார்; மரண சமயத்திலும் பேச்சு நிற்காமல் இருக்க வேண்டும் என்று விரும்பி வைத்தியரை அதற்கு வேண்டிய மருந்தைக் கொடுக்கு மாறு கேட்டார்—ஏனெனில் மரணத்தறுவாயிலும் பகவானது திவ்ய நாமத்தைச் சொல்லவேண்டும் என்று ஆசை கொண்டார். அவர் நோயுற்றிருப்பதை யறிந்து நாற்புறத்திலிருந்தும் நாட்டு மக்கள் தமது தேச வீரரும் குடிகளுக்குப் பிதாவுமான அவரைக் கண்டு தரிசனம் செய்வதற்குக் கூட்டம் கூட்டமாகப் பூனுவுக்கு வந்தார் கள், அது கண்டு பேஷ்வா தமது அரண்மனை வாயில் திறந்தேயிருக்க வேண்டும் என்றும், குடிகளில் தாழ்ந்த வரும் தன்னைப் பார்ப்பதை யாவரும் தடுக்கக் கூடா தென்றும் ஆஞ்ஞையிட்டார். கார்த்திகை மாதம் 8-ம் தேதி (1772-வது வருஷம்) அவர் தருமம் அறிந்த கற்றோர் களைத் தமதருகே அழைத்தார்; அவர்களை நமஸ்கரித்து, தேவாலயத்தில் கூடுவது போல் அங்கு கூடியிருந்த தமது குடிகளிடம் விடை பெற்றுக்கொண்டார். "கடைசி யாத்திரைக்கு நான் செல்லுகிறேன்; நீவிர் அனைவரும் அன்புடன் விடை தருவீராக" பின்பு மகாயோகியைப் போல் கஜானன், கஜானன் என்று பகவத் நாமத்தைச் சொல்லிக்கொண்டே, அங்கு கூடியிருந்த ஜனத்திரளின் புலம்பலிடையே, அவ்விளஞ் சிங்கம் பரலோகம் சென்றார். அவருக்குப் புத்திரர் இல்லை. கற்பரசியான ராமாபாய் என்ற அவரது இளமனைவியார் தமது ஆடையணிகளை வறியோர்க்கு வழங்கி, யார் என்ன சொல்லியும் கேளாத வராய், உடன்கட்டையேறி அழிவற்ற கற்பின் ஒளியை

யும் தெய்விக அழகையும் உலகில் நாட்டினர். இந் நாள் வரையில் மாதவராவ், ரமாபாயின் நாமத்தைக் கேட்ட அளவில், மஹாராஷ்டிரம் கண்ணீர் உகுத்து அன்பினல் உருகி வருகிறது. "நமது வாழ்வின் ஒளி பறந்துவிட்டது; நமது இதயத்தின் அணிகலம் இழந்துவிட்டது" என்று இந் நாள்வரை மாராட்டியக் கவிகள் பாடிவருகிறார்கள்.

---

## 18. உள்நாட்டுப் போரும் புரட்சியும்

> "தாம் நின்றவிடம் இன்னதென்று அறியாராய் பகைவர்கள் தோல்வியுண்டனர்; அவரது போர் முறையை அவர்களால் அறிய முடியவில்லை. அறிவுக்கடலான நானுவைப்போல் இனி மாந்தருள் எவரேனும் இருப்பாரோ நாம் அறியோம்"

நாட்டு மக்கள் யாவரும் விரும்பிப் போற்றிய மாதவராவ் இளவயதில் இறக்கவும், அவர்கள் வெறுத்துச் சபித்து வந்த ரகோபாவோ இன்னும் ஒரு தலைமுறையிருக்கவும், நேர்ந்ததைப் பார்த்தால் தருமமே ஜெயம் தரும் என்னும் மூதுரையின் உண்மையில் சந்தேகம் தோன்றுகிறது.

மாதவராவின் மரணத்தைக் காட்டினும், ரகோபா உயிருடன் வாழ்ந்ததே தேசத்துக்குப் பெரிய விபத்தை விளைவித்தது. மாதவராவுக்குச் சந்ததியில்லாததால் அவர் இறந்த பிறகு அவரது இச்சைப்படியும் மக்களின் விருப்பப்படியும் அவரது இளைய சகோதரரான நாராயணராவ் தேசத்துக்கு அதிபதியானதும், ரகோபா தனது வஞ்சகச் சூழ்ச்சிகளைச் செய்யத் தொடங்கினன். அவன் அரண்மனைக் காவலாட்களைக் கையில் போட்டுக்கொண்டு,

இளம் பேஷ்வாவைக் கைப்பற்றி கைதி செய்ய உத்திர விட்டான். அவனது ராக்ஷஸ மனைவியான ஆனந்திபாய் அதனால் திருப்தியடையாமல் பேஷ்வாவைக் கொல்லும்படி தூண்டி வந்தாள். 30—8—1773 அன்று காவலாளர் திடீரென்று கலகம் செய்து நாராயணராவை மறித்து உடனே சம்பளம் கொடுக்கவேண்டுமென்று ஆரவாரித்தார்கள். பேஷ்வாவிடம் பக்தியுள்ள மெய்க் காப்பாளர் ஒருவர் அவர்களைத் தடுத்துப் பேசவும், அவரை அவர்கள் வாளினால் குத்திக் கொன்றார்கள். அதைக் கண்டு நடுங்கி இளம் பேஷ்வா அங்கிருந்து கிளம்பி அரண்மனையின் பல அறைகளிலும் ஓடவும் கலக்காரர்கள் அவரை விடாது பின்பற்றி வந்தார்கள். கடைசியில் அவர் ரகோபாவின் அறையை அடைந்து அவனது பாதத்தில் வீழ்ந்து அவனது இடையை இறுகத் தழுவிய வண்ணம் தம்மைக் கொல்லலாகாதென்றும் வேண்டினார்: "சிற்றப்பா, உமது குழந்தையான என்னுயிரைக் காப்பாற்றும். உம்மையே பேஷ்வாவாக நான் அங்கீகரிப்பேன். நான் வேண்டுவதெல்லாம் வயிறு நிரப்ப ஒருபிடி அரிசியே யாகும்." ஆனால் அதற்குள் கொலையாளிகள் அவர் மீது பாய்ந்து விட்டார்கள். ரகோபா அவரைத் தன் மடியினின்றும் உதறித்தள்ள, கொலையாளிகள் அவர் மீது வீழ்ந்தார்கள். சாபாஜி திலேகர் என்பவர் கொலையாளிகளைத் தடுத்து அதிபதியான பேஷ்வாவுக்கும் அவர்களது வாட்களுக்கும் இடையே நின்று பேஷ்வாவை மூடி மறைத்த வண்ணம் அவரை அநியாயமாய்க் கொல்லக் கூடாது என்று மன்றாடிக் கேட்டார். ஆனால் கொலை வெறிபிடித்த அவர்களது கத்திகள் பேஷ்வாவின் மீது பாய்ந்து அவரது உடலையும் சாபாஜியின் உடலையும் குத்தித் துளைத்தன. சாபாஜி மரணத்திலும் கைவிடாமல் பேஷ்வாவின் உடலைக் கட்டி மறைத்துக் கொண்டிருந்தார். உடனே கலகக்காரர்கள் ரகோபாவே பேஷ்வா என்று கோஷம் புரிந்து அரண்மனையைக் கைப்பற்றினார்கள்.

இக் கொலையின் சேதி தலைநகரில் பரவியதும் மக்களின் ரத்தம் கொதித்தது. அவர்கள் கூட்டம் கூட்டமாகக் கூடி கொலையாளியான ரகோபாவைத் தலைவனாக

அங்கீகரிக்க மறுத்தனர். மஹாராஷ்டிரத்தின் குன்றாத தேச பக்தி பயங்கரமான இந்த அரண்மனைச் சதியால் தளர்ந்து ஒடுங்கிவிடுமா? தலைவர்களும் பிரதான அதிகாரிகளும் ரகசியப் புரட்சிச் சங்கம் அமைத்து தேசத்தின் பிரதான நியாயவாதியான ராம சாஸ்திரியை இவ்வ நீதக் கொலையை விசாரித்து அறியும்படி வற்புறுத்தினார்கள். இவ் விழிவான கொலையின் கர்த்தா ரகோபாவும் அவனது துஷ்ட மனைவியான ஆனந்திபாயுமே என்று அவர் விசாரித்தறிந்தார். உடனே அஞ்சாநெஞ்சு படைத்த அவ்வந்தணர் அரண்மனைக்குச் சென்று பேஷ்வாவின் ஸ்தானத்தில் பரிவாரங்களுடன் அமர்ந்திருந்த ரகோபாவிடம் நேரே சென்று மஹாராஷ்டிர மண்டலாதிபதியான பேஷ்வாவைக் கொலை செய்தவன் அவனே என்று குற்றம் சாட்டினார். அங்குள்ள சிலர் அதற்குப் பரிகாரமாக ஏதாவது சடங்குகளைச் செய்து விடலாம் என்று கேட்கவும், ராம சாஸ்திரி சீறி, ''இத்தகைய இழிவான கொலைக்குப் பிராயச் சித்தமே கிடையாது. இதற்குத் தகுந்த பிராயச்சித்தம் உடனே கொலையாளியைக் கழுவில் ஏற்றுவதே'' என்று உரைத்தார். அருகில் இருந்தவர் இதனால் அபாயம் நேரும் என்று சொல்லவும், ராமசாஸ்திரி எதிர்த்துரைத்தார்: ''நான் ரகோபாவுக்கு அஞ்சுவோன் அல்லேன். எமது மக்களின் பிரதான நியாயவாதியான நான் எனது கடமையைச் செய்தே தீருவேன். இஷ்டப்பட்டால் ரகோபா என்னையும் கொன்று தன் பாவ மூட்டைகளை அதிகரித்துக் கொள்ளட்டும். இத்தகைய அநியாயக் கொலையாளி ஆட்சி புரியும் இந் நகரில் நான் உணவும் கொள்ளேன்; வசிக்கவும் மாட்டேன்'' இதைக் கேட்டதும் ரகோபாவும் அவனது சகாக்களும் திடுக்கிட்டுத் தெளிவதற்கு முன்பே அஞ்சுதலறியாத அவ்வந்தணர் தழல் விட்டெரியும் தரும கோபத்துடன் வெளியே சென்று அரண்மனையை நீங்கி நகரையும் விட்டு நீங்கினார். புண்ணிய நதியான கிருஷ்ணாவின் கரையை அடையும் மட்டும் அவர் அன்னபானம் செய்ய மறுத்தார்.

கொலையுண்ட நாராயணராவின் இள மனைவியான கங்காபாய் கருப்பம் தரித்திருப்பது அப்போது தெரிய

வந்தது. இதை யறிந்ததும் ரகசியப் புரட்சிச் சங்கத்தினர் மனம் தேறி உறுதி பெற்றார்கள். மொரோபாதாதா, கிருஷ்ணராவ்காளே, ஹரிபந்த படகே, திரிம்பக்ராவ் மாமா, பீரங்கிப் படைத் தலைவரான ராஸ்தே, பட்வர்த்தன் குடும்பத்தார், தாய்குடே, நரோ அப்பாஜி இன்னும் பல பிரதானப் பிரஜைகளும், அதிகாரிகளும், அரசியல் நிபுணோத்தமர்களான நானா பட்னவீஸ், ஸகாராம் பாபூ இவர்களின் தலைமையில் கூடி ரகோபாவைப் படையெடுப்புடன் இழுத்துச் சென்று, அவனை எதிர்த்துக் கலகம் செய்வ தென்று தீர்மானித்தார்கள். உடனே ரகோபாவை வற்புறுத்தி தென்னாடுகளில் படையெடுக்கச் செய்து, அவன் மஹாராஷ்டிரத்திலிருந்து வெளியே சென்றதும் அவர்கள் பூனாவில் கலகம் செய்து கிளம்பித் தலைநகரைக் கைப்பற்றி, கர்ப்பம் தரித்த கங்காபாயே தேசத்தின் தலைவரென்று பிரகடனம் செய்தார்கள். கலகம் தலைநகரிலிருந்து நாடு முழுவதும் பரவிற்று. ஒன்றன்பின் ஒன்றாக எல்லாக் கோட்டைகளும் நகரங்களும் புது அரசாங்கத்தையே அங்கீகரித்தன. இப் புது அரசியல் ஜன நாயகத்தைப் போன்றது. இதை "பன்னிருவர் (பார்பாயி) பரிபாலனம்" என்றும் குடியரசு என்றும் கொண்டாடினார்கள். இந்த தேசியக் கலகத்தைக் கேட்டதும் ரகோபா பூனா மீது படையெடுக்க விரும்பினான். ஆனால் அதற்குள் புரட்சிப் படைகளே தன்னைத் தாக்க வருவதைக் கண்டு தன் படையுடன் வடக்கே திரும்பி, யுத்த காலத்தில் அன்னியர் நாடுகளில் படையெடுப்பதைப்போல் கிராமங்களில் கொள்ளையிட்டு ஜனங்களைத் துன்புறுத்தத் தொடங்கினான். கங்காபாய்க்கு ஆண் சந்ததி பிறக்காவிடில் ஜனங்கள் தன்னையே பேஷ்வாவாக ஆதரிப்பார்கள் என்று நம்பி வந்தான். கோரிகயானில் புரட்சிப் படைகளைத் தாக்கி வென்று புரட்சி படைத் தலைவரான திரிம்பக் ரரவ் மாமா பேதேவைக் கொலை செய்தான். புரட்சியின் பெருந் தலைவரான பேதே கொலையுண்டதால் புரட்சிக் கட்சிக்குப் பெரிய நஷ்டம் ஏற்பட்டது. ஆனால் நானாவும் பாபுவும் தளராமல் போர் புரிந்து வந்தார்கள். தேசமக்கள் இவர்களுக்கு ஆதரவு காட்டினார்கள்.

இப்போது மஹாராஷ்டிர மக்களின் கவனமும் இந்திய மக்கள் எல்லோரது கவனமும் புரந்தர் நகர் மீது சென்றது. அங்கே கருத்தரித்த மராட்டிய அரசியான கங்காபாய் இருந்தார். அவரைச் சுற்றி நாணயமுள்ள காவல் வைக்கப்பட்டது. தேசமக்கள் அவரை இமை கொட்டாமல் காத்து வந்தனர். குழந்தை பிறக்கும் நாளும் நெருங்கி வந்தது. நாளாக நாளாகப் புரந்தரி லிருந்து சேதி வராததைக் கண்டு ஜனங்கள் கவலைகொண் டார்கள். அவர்களது ஆவல் கட்டுக் கடங்கவில்லை. கோவில்களிலும் தீர்த்தங்களிலும் மக்கள் திரள் திரளாய்க் கூடி வஞ்சகப் பாவியான ரகோபாவின் சூழ்ச்சிகள் தலை யெடுத்துப் பலிக்காமல் இருப்பதன் பொருட்டு புரந்தரில் இருக்கும் தமது இளவரசிக்கு ஆண் மகவு பிறக்க வேண் டும் என்று பிரார்த்தித்தார்கள். இந்தியாவெங்கும், குடிசையிலும் மாளிகையிலும், ஆவல் ஓங்கியது. டில்லி, இந்தூர், குவாலியர், பரோடா, ஹைதராபாத், மைசூர், கல்கத்தா முதலிய சகல இந்திய ராஜ சபைகளும் ஆவ லுடன் புரந்தர் சேதிக்காகக் காத்திருந்தார்கள். கடைசி யில் 18-4-1774 இல் ஆவலுடன் அனைவரும் எதிர் பார்த் திருந்த சம்பவம் நிகழ்ந்தது. புரந்தரில் உள்ள மராட்டிய அரசியான கங்காபாய்க்கு ஆண் மகவு பிறந்தது. மஹாராஷ்டிரம் முழுதும் அக் குழந்தையை தமது தேசத் தலைவரும் பிரதம மந்திரியுமான பேஷ்வா என்று அங்கீ கரித்தது. மக்களின் உற்சாகத்தைக் கண்டு அந்திய நாட் டுச் சர்க்கார்களும் அவ்விளங் குழந்தையை வாழ்த்தினார் கள். மஹாராஷ்டிரத்தில் புரட்சிக் கட்சியார் பெற்ற குதூகலமும், அவர்களது தேசிய அவாக்களும் அக்காலத் திய கடிதங்களிலிருந்து நன்கு விளங்குகின்றன. ஸாபாஜீ போஸலே தமது கூடாரத்திலிருந்து எழுதுகிறார்: "சேதியை அறிந்ததும் இந்தக் கூடாரத்தில் சுவர்க்கத்தின் சந்தோஷமே பரவியது. பகவான் நமது பிரார்த்தனை களைச் செவியுற்றார். இக் கூடாரம் முழுதும் குதூகலம் நிரம்பி யிருக்கிறது. சைன்ய சங்கீதம் நடக்கிறது. தலைவ ரது பிறப்பைக் கொண்டாடி பீரங்கிகள் கோஷம் செய் கின்றன. பகவத் கிருபையால் நமது அன்பின் செல்வ மாகிய பேஷ்வா தீர்க்காயுளுடன் வாழவேண்டும்.' இந்தச்

சேதியைக் கேட்டு நாற்புறமும் இருந்த புரட்சிப் படைகள் குதூகலம் அடைந்தன. "எமது படைத்தலைவரான ஹரிபந்த்தாத்யா இச்செய்தியைக் கேட்டதும் படைமுழுவதிலும் கொண்டாட்டம் நடைபெற வேண்டுமென்று உத்திரவு செய்தார். சைன்ய சங்கீதமும் வாத்தியங்களும் கோஷித்தன. படை வீரர்களின் குதூகலத்தை என்னவென்று சொல்வது. யானை அம்பாரியிலிருந்து படை முழுதும் சர்க்கரை விநியோகம் செய்யப்பட்டது." "பகவான் நமது கட்சியில்தான் இருக்கிறார். நமது மக்களின் பாதுகாப்புக்கும் மேன்மைக்கும், நமது தருமம் அழியாமல் ஓங்குவதற்கும், கடவுள் நமது முயற்சிகளுக்குப் பலனளித்தார். நமது மக்களின் கண்மணியான பேஷ்வா சிரஞ்சீவியாக வாழ்வாராக!"

குழந்தைக்கு மாதவராவ் என்று பெயரிட்டார்கள். ஆனால் அவரிடம் அன்பும் பக்தியும் வைத்த மக்கள் அவரை 'ஸவாயீ மாதவ் ராவ்' அதாவது பெரிய மாதவ ராவ் என்று அழைத்தார்கள். இவரது பிறப்பினால் இந்திய அரசியலின் எதிர்கால திட்டங்கள் மாறின. புரட்சிக் கட்சியாரது அதிகாரம் நிலைக்கவும், அவர்கள் ரகோபாவைப் பகிஷ்காரம் செய்து கண்ட இடத்தில் அவனைத் தூக்கிக் கைதுசெய்யும்படி மராட்டிய சர்தார்களுக்கு உத்திரவு பிறப்பித்தார்கள். அக் கட்சியின் தலைவர்கள் உயர்ந்த அரசியல் நிபுணர்கள்; தேசவீரர்கள்; நானா ஸாஹிப், பாலூ இவர்களது தலைமையில் ஹிந்து சாம்ராஜ்ய லக்ஷியத்தில் வளர்ந்தவர்கள்; ராஜ்ய பொறுப்பை ஏற்றுக் கொண்டு தமது சமூகத்தின் உயர்ந்த லக்ஷியங்கள் நீண்ட காலம் பழுதுபடாமல் நிலைநிற்க வேண்டும் என்று உறுதி கொண்டவர்கள்; மஹாராஷ்டிரத்தைப் பிரதான ஹிந்து ராஜ்யமாக நிலைநாட்டுவதற்குரிய தீர்க்க பார்வையும் வலிவும் அமைந்தவர்கள்; தனது மனைவியையே அடக்கியாளத் தெரியாத ரகோபாவின் ஆட்சிக்கு அவர்கள் ஒருகாலும் இணங்க மாட்டார்கள். நாராயணராவுக்கு ஆண் மகவு பிறந்ததைக் கேட்டு மஹாராஷ்டிரமன்றி ஹிந்துஸ்தானம் முழுவதுமே குதூகலத்துடன் கொண்டாடி வருகையில் ரகோபாவின் பேராசை மட்டும் அகலாமல் பெருகி

வளர்ந்தது. புரட்சிக் கட்சியாரால் தோல்வியடையவும் அவனது பகையும் வஞ்சகமும் தணியாமல் மேன் மேலும் பொங்கி வரலாயின. கடைசியில் மராட்டியர் எவரும் தனக்கு ஆதரவு அளிக்காததைக் கண்டு அவன் தனது தேசத்தின் கொடிய விரோதிகளிடம் சென்று உதவி கேட்கவும் தயங்கவில்லை.

இக்காலத்தில் இந்தியாவில் தமக்குப்பிரதான அரசியல் அதிகாரம் வேண்டுமென்று அநேகர் விரும்பியிருந்தும் மஹாராஷ்டிரத்தின் ஹிந்து சாம்ராஜ்யம் ஒற்றுமையுடன் நின்றிருந்தவரையில் அதை எதிர்த்துப் போராட அவர்களுள் ஒருவரும் துணியவில்லை. அவ்வாறு விரும்பி அநேகர் முயற்சித்தும் அவர்கள் யாவரும் மராட்டியர் முன்னே நிற்க முடியாமல் நசுங்கிடவோ அல்லது பின் வாங்கித் தணிந்திடவோ நேர்ந்தது. பட்டாணியராயினும், பாரசீகராயினும், முகலாயராயினும், துருக்கியராயினும் இந்தியாவுக்கு வெளியே இருந்து வந்தோராயினும் அல்லது இந்தியாவிலே இருந்தோராயினும் முகமதியரா யிருந்தோர் அனைவரும் மீண்டும் தலையெடுத்து ஹிந்து ஆட்சியை எதிர்த்திட முடியாதவாறு நசுங்குண்டு போனார்கள். இந்திய அரசியல் விவகாரங்களில் அவர்களுக்கு ஒரு அதிகாரமும் இல்லாமல் போய்விட்டது. ஒருகாலத்தில் ஆசியா கண்டத்தில் அரைப் பங்கு அரசாண்டுவந்த போர்த்துகீசரோ இன்று முறிந்து விழுந்தார்கள். கொங்கண நாட்டு விடுதலைக்காக மராட்டியர் நிலத்திலும் கடலிலும் நடந்த போர்களில் சிதறுண்ட போர்த்துகீசர் இன்று தலை நிமிர்த்தவும் சக்தியற்றுத் தாழ்ந்து விட்டார்கள். பிரெஞ்சுக்காரரோ மராட்டியரை நேருக்கு நேர் எதிர்த்திட ஒருகாலும் துணியவில்லையெனினும் ஹைதராபாத், ஆற்காடு மூலமாய் சூழ்ச்சி செய்து பூனாவின் அதிகாரத்தைக் கவிழ்த்திட அவர்கள் செய்துவந்த முயற்சிகளெல்லாம் இன்று வீணாயின. மேலும் ஐரோப்பா கண்டத்தில் நடந்த சேதிகளால் அவர்களுக்கு இந்திய விவகாரங்களில் தலையிடவும் முடியாமல் போய்விட்டது. அவர்களால் ஹிந்து சாம்ராஜ்யத்துக்கு ஆபத்து ஒன்றும் நேரிட முடியாது எனினும்

ஆங்கிலேயரின் பேராசை மதத்தை யடக்கும் விஷயத்தில் அவர்கள் இந்தியாவில் ஆங்காங்கு செய்துவந்த முயற்சிகளால் ஹிந்துக்களுக்கு நன்மையே உண்டாயிற்று என்று சொல்லலாம். மேற்குக் கரை நாடுகளில் ஆங்கிலேயரது அதிகாரம் சற்றுப் பரவியிருந்தது. அதனால் அவர்களை இந்திய மக்கள் விரும்பினார்கள் என்றோ அல்லது மராட்டியர் அவர்களது ராஜ்ய ஆசையை அறிந்திருக்கவில்லை என்றோ சொல்லமுடியாது. மராட்டியரோ ஆங்கிலேயரைக் காட்டினும் பலத்தவரும் அபாயத்தை விளைவிக்க வல்லவருமான பல பகைவர்களுடன் உடனே ஒரே காலத்தில் போர்புரிய வேண்டியிருந்தது. ஆங்கிலேயரிடமிருந்து யாதொரு ஆபத்தும் உடனே ஏற்படக்கூடியதாயில்லை. ஆதலால் அவர்களைப் பிற்பாடு கவனித்துக்கொள்ளலாம். ஒருகால் அவர்கள் அதற்குள் தலையெடுத்து வந்தால் அவர்களை அப்போது நசுக்கிவிடலாம் என்று மராட்டியர் இருந்துவிட்டார்கள். ஆங்கிலேயரும் தமது நிலைமையின் ரகசியத்தை முற்றிலும் அறிந்திருந்தார்கள். மராட்டியருக்கு உடனே வேறு காரியங்களை கவனிக்கவேண்டி யிருப்பதால்தான் தங்களது கையில் பம்பாய் இருந்து வருகிறது என்றும் மராட்டியர் எதிர்த்து வந்தால் தாங்கள் அதைக் கைவிட வேண்டிவரும் என்றும் அரசியலில் நுட்ப புத்தியுள்ள ஆங்கிலேயர் நன்கறிந்தனர். ஆதலால் மராட்டியரைத் தாக்க விருப்பமுள்ளோராயினும் ஆங்கிலேயர் அதற்குத் துணிந்து முற்படவில்லை. ஆங்கிரேவின் பலத்தையொடுக்குவதில் ஆங்கிலேயரின் உதவியை நானா ஸாஹிப் கேட்டிருந்தது உண்மையே. ஆனால் அதனால் மராட்டியரது லக்ஷியத்துக்குக் கேடொன்றும் நேராது. நானா ஸாஹிப் நினைத்து எதிர்பார்த்தபடி காரியங்கள் நடந்திருந்தால் அந்த ஏற்பாட்டினால் ஆங்கிலேயர் கையில் மராட்டியரது கப்பல்படை யதிகாரம் முழுதும் ஒருங்கே சேர்வது தடையுற்று அவ்வதிகாரம் முழுதும் மராட்டியச் சர்க்கார் கையில் சேர்ந்திருக்கும். அதனால் மராட்டிய ராஜாங்கத்தின் பலம் அதிகரித்திருக்குமே யன்றி ஒரு கெடுதலும் நேர்ந்திராது. ஆனால் அக்காலத்தில் யாவரும எதிர்பார்த்திராதபடி காரியங்கள் நடந்துவிட்டன. நானா

ஸாஹிப் ஆங்கிலேயருடன் இவ்வாறு ஏற்பாடு செய்திருந்ததனால் மேற்குக் கரையைப் பொறுத்தமட்டில் ஆங்கிலேயரது ஆட்சி பரவாமல் இருந்தது. அவர்களது ராஜ்யம் சிவாஜி காலத்தில் எப்படியிருந்ததோ அப்படியே இன்றும் வளர்ந்திடாமல் இருந்து வந்தது. ஆனால் வங்காளத்திலோ குருட்டு அதிஷ்டத்தால் கிளைவ் வெற்றி பெற்றுவந்தான். மராட்டியரது அதிகாரம் இல்லாதிருந்தால் கிளைவ் அன்றே டில்லிமீது படையெடுத்து வெற்றி பெற்றிருப்பான். இதனால் ஆங்கிலேயர் வங்காளத்தில் பெற்ற வெற்றி தகுதியற்றதென்று நாம் சொல்வதாய் நினைக்கவேண்டாம். தமது சக்தியாலல்லாமல் எதிரிகளின் அச்சத்தாலும், பலவீனத்தாலும் வெற்றிபெற்றிருந்தாலும் அவ் வெற்றியைப் பயன்படுத்திக் கொண்டது ஆங்கிலேயரின் சாதுரிய புத்தியையும் துணிவையும் அதிர்ஷ்டத்தையும் காட்டுகிறது. சென்னை மாகாணத்தில் ஆங்கிலேயர் தமது துணிச்சலால் பிரெஞ்சுக்காரரை வென்றனர்கள். மராட்டியரை வெளிப்படையாய் எதிர்த்திடாமல் ரகசியமாகவே வங்காளத்திலும் சென்னையிலும் ஆங்கிலேயர் தமது ஆட்சியை ஸ்தாபித்துக் கொண்டார்கள். ஆனால் ஆங்கிலேயர் வங்காளத்திலும் சென்னையிலும் ரகசியமாய் அதிகரித்துவரும் ஆட்சியை மராட்டியத் தலைவர்கள் அறியாதிருக்கவில்லை. ஹிந்து ஆட்சியை எதிர்க்க வல்லவர் வெளியில் பார்ப்பதற்கு மெலிந்தவர்போல் தோன்றினாலும் அவர்களது உண்மையான வலிவை அறியத் தவறி, தீர்க்கதரிசனம் உள்ள அரசியல் நிபுணர்களான நானாஸாஹிபும் பாபுவும் ஏமாறி விடமாட்டார்கள். வங்காளத்தில் ஆங்கிலேயரது அதிகாரம் ஓங்கி வருவது கண்டு, 1760-61-வது வருஷத்தில் வங்காளத்தில் இரு மராட்டியச் சேனையுடன் படையெடுத்து அம் மாகாணத்தினின்றும் அயலாராட்சியை அறவே யகற்றுவதென்று பாவூ தீர்மானித்திருந்தார். வங்காளத்தில் கடைசியாக அரசு புரிந்த ஹிந்து மன்னரான லக்ஷ்மண சிங்கு காலம் முதல் அம் மாகாணத்தில் அன்னியர் ஆட்சி பரவி வந்து இப்போது அம்மாகாணம் முழுதும் அன்னியருக்கு அடங்கித் துன்புற்று வருவதை பாவூ நன்கறிந்தார். 1760-வது வருஷம் தத்தாஜி ஷிந்தேவின் தலைமையின் கீழ்

மராட்டிய சேனைகளின் வடக்குப் பிரிவு படையெடுக்க ஆரம்பித்திருந்தது. ஆனால் அஹமத்ஷாவின் பெரும் படையெடுப்பை அறிந்ததும் அவனை முதலில் எதிர்த்துத் துரத்திய பின்பே வங்காளத்தைக் கவனித்துக் கொள்ளலாம் என்று மராட்டியர் தீர்மானித்தனர். பிறகு பானிப்பட்டு யுத்தமும் பாவூவின் மரணமும் நேர்ந்ததை வாசகர்கள் அறிவார்கள். இவ்விதம் மராட்டியருக்கு அடுத்தடுத்து நேர்ந்த விபத்துக்களை ஆங்கிலேயர் தந்திரமாகப் பயன்படுத்திக்கொண்டு வங்காளத்திலும் சென்னையிலும் உள்ள தமது அதிகாரத்தை பலப்படுத்தி வந்தார்கள். சமயம் வாய்த்தால் மராட்டியர் கையினின்றும் இந்திய சாம்ராஜ்ய அதிகாரத்தைப் பிடுங்கிக்கொண்டு டில்லியில் தமது ஏகாதிபத்தியத்தை நாட்டுவதற்கான முயற்சிகளையும் செய்து வந்தார்கள். ஆனால் பானிப்பட்டுத் தோல்வியிலும் மராட்டியரது வலிவு தளர்ந்திடாமல் இருந்து வருவதைக் கண்டார்கள். இன்னமும் ஹிந்துஸ்தானத்தில் பிரதான அரசியல் அதிகாரம் உள்ளவர்கள் மராட்டியரே. அவர்கள் ஒற்றுமையுடன் நின்றிருந்த வரையில் ஆங்கிலேயருக்கு அவர்களை எதிர்த்து நிற்க தைரியம் வரவில்லை. கல்கத்தாவில் ஆரம்பித்த ஆங்கிலேயர் ஆட்சி வங்காளத்தில் அரை பாகத்தை விழுங்கியிருந்தது. மதராஸில் ஆரம்பித்த ஆங்கிலேய ஆட்சி அம் மாகாணத்தில் அரை பாகத்தைப் பற்றிக்கொண்டுவிட்டது. ஆனால் பம்பாயிலோ அவர்களின் ஆட்சி சிவாஜிகாலத்தில் எவ்வாறு இருந்ததோ அவ்வாறே நானா பட்னவீஸ் காலம் வரையில் பெருகாமல் இருந்துவந்தது. இதர மாகாணங்களைக் கபளீகரம் செய்து வந்தும் ஆங்கிலேயரால் மேற்குக் கரையில் ஒரு சதுர அங்குலமேனும் பெற முடியவில்லை. ஏனெனில் இங்கே ஸஹ்யாத்ரி உச்சியிலிருந்து மராட்டிய வீரன் காவல் செய்து அன்னியன் உள்ளே தலை நீட்டினால் குத்திக் கொல்லக் கத்தியைத் தயாராய் வைத்துக் கொண்டிருந்தான். ஆதலால் ஐரோப்பா கண்டத்தவராயினும், ஆசியாக் கண்டத்தவராயினும், கிறிஸ்தவராயினும், முகமதியராயினும் அன்னியர் எவரும் மஹாராஷ்டிரத்தின் ஹிந்து சாம்ராஜ்யம் ஒற்றுமையுடன் நிலைத்து நின்றபோது அதன் ஏகாதிபத்தியத்தை ஆக்ஷேபிக்கவோ இந்தியாவின்

பிரதான ஆட்சியாயுள்ள அதன் அதிகாரத்தை எதிர்க்கவோ துணியவில்லை. பொதுவாக ஆங்கிலேயர் கள் தேசிய விஷயங்களில் தமது சுயநல ஆசைகளை யடக்கிப் பட்டத்துக்கும் பணத்துக்கும் ஆசைப்பட்டு தேச சுதந்திரத்தை விட்டு விடாமல் தேசிய உணர்ச்சிகளில் மராட்டியரைக் காட்டினும் சிறந்து இருந்தார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனல் தற்கால நிலைமையைக் கண்டு நாம் மராட்டியரைப் பற்றித் தப்பித மாக எண்ணக்கூடாது. காரியம் நடந்த பிற்பாடு காரணத் தைச் சொல்வதில் பிரயோசனம் இல்லை. அக்காலத்தில் இருந்த இரு திறத்தாரது ராஜாங்க சைன்ய பலத்தை யோசித்துப் பார்த்தால் இவ்விருவரில் இன்னவர்தான் கடைசியில் ஜெயிப்பார் என்று எந்த தீர்க்கதரிசியாலும் சொல்லியிருக்க முடியாது. அக்காலத்தில் ஆங்கிலேயர் மராட்டியரைக் காட்டிலும் விஞ்ஞான, அரசியல் துறை களில் மிக முன்னேற்றம் அடைந்திருக்கவில்லை. மேலும் ஆங்கிலேயருக்குப் பெருத்த பிரதிகூலங்கள் இருந்தன. அவர்கள் தமது தாய்நாட்டிலிருந்து பல ஆயிரம் மைலுக்கு அப்பாலுள்ள அன்னியநாட்டில், அதிலும் தமது சைன்ய மூலஸ்தானத்திலிருந்து ஆயிரக்கணக்கான மைல்களுக் கப்பால், போர் புரியவேண்டியிருந்தது. சமீப காலத்தில் ஜப்பான் ஐரோப்பிய தேசங்களைக் காட்டினும் விஞ்ஞான அறிவிலும் அரசியல் பயிற்சியிலும் பின்னடைந்திருந்தும் வெகு சீக்கிரத்தில்—சில வருஷங்களில்—அவர்களுக்குச் சமானமாகிவிட்டது, மேலும் இந்தச் சரித்திரக் காலத்தில் மராட்டியரைக் காட்டிலும் ஆங்கிலேயர் எவ்விதத்திலும் மிக முன்னேற்றமடைந்திருக்கவில்லை யாதலால் எல்லாத் துறைகளிலும் ஆங்கிலேயருக்குச் சமமாக மராட்டியரும் வெகு சீக்கிரம் மேம்பாடு அடைந்திருக்க முடியும். மூகலாயர், ஆப்கானியர், பாரசீகர், பிரெஞ்சுக்காரர், போர்த்துகீசர், ஆங்கிலேயர் இவர்கள் யாவரும் ஒரே காலத்தில் எதிர்த்து வந்தும் மராட்டியர் இந்திய சாம் ராஜ்ய ஆட்சியை நடத்தி வந்தார்கள் என்றால் அவர்களது திறமையை நாம் சந்தேகிக்க முடியாது.

இந்த உண்மையை ஆங்கிலேயரும் நன்கறிந்தார்கள். ஆதலால், உள்நாட்டுப் பிளவின்றி ஒற்றுமையுடன்

மராட்டிய அதிகாரம் நின்றபோது அவர்கள் அதை எதிர்க்கத் துணியவில்லை. மராட்டியருள் பிளவு தோன்றி உள்நாட்டுப் போர் தொடங்கிய காலத்தும் அவர்களை வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கையுடன் எதிர்க்க வல்ல திறனும் நுண்ணறிவும் ஆங்கிலேயருக்கே இருந்தது. வங்காளத்திலும் மதராஸிலும் சுலபமாகப் பெற்ற வெற்றிகளால் திமிர் அடைந்து ஆங்கிலேயர் மராட்டியருக்குள் பிளவும் சண்டையும் தோன்றியதைக் கண்டு அவர்களை பம்பாயில் எதிர்க்கத் துணிந்தார்கள். இதை யறிந்த ரகோபா, தம் மக்களாகிய மராட்டியர் தன்னைத் தாக்கித் தோல்வி யளித்துத் துரத்தியதும், ஆங்கிலேயரின் உதவியை நாடினன். மாராட்டிய மக்கள் விரும்பாவிட்டாலும் மஹாராஷ்டிரத்தை ஆள வேண்டும் என்ற ஆசைப்பித்து கொண்டவனுய் அவன் தனது சமூகத்தின் சுதந்திரத்தை அதன் கொடிய விரோதிகளான ஆங்கிலேயருக்கு விற்று விடுவதாய் வாக்களித்து மராட்டிய ஆட்சியின் கோட்டைக்குள் சகோதரஹத்தி செய்த தன் பாவகரங்கள் வெட்டிய பிளவுகளின் மூலம் அவர்களை நடத்தி வழிகாட்டினன். அப் பாவியின் கொலைப்பாதகக் கையை ஆங்கிலேயர் ஆவலுடன் இறுகப் பிடித்துக் கொண்டு இருபது இருபத்தைத்து லக்ஷம் ரூபாய் வரியளிக்கக் கூடிய ஸால் ஸெட், பேஸீன், படோச் என்னும் நாடுகளைக் கொடுத்தால் அவனை மராட்டிய மக்களின் பேஷ்வாவாக்குவதாய் உறுதி சொன்னர்கள். உடனே ரகோபாவுடன் ஆங்கிலப் படைகள் மராட்டியரைத் தாக்கி அவர்களது நாடுகளிலும் படையெடுப்பு ஆரம்பித்தன. ஆங்கிலேயருக்கும் மராட்டியருக்கும் போர் தொடங்கிய சேதியை அறிந்ததும், அடங்கி யிருந்த சிற்றரசர்கள் யாவரும் தைரியம் கொண்டு கலகம் செய்து கிளம்பி மராட்டியரை இந்தியாவில் எங்கும் தாக்கத் தலைப்பட்டார்கள். புரட்சிக் கட்சித் தலைவரா யிருந்து அரசாங்க அதிகாரத்தை நடத்தி வந்த நானுபட்னவீஸ் இவர்களுக்கு அஞ்சாமல் தீரத்துடன் நின்றர். பூனவில் புது ஆட்சி தொடங்கிய போது அரசியல் ஒழுங்கு கலைந்திருந்தும், தம்மால் கூடுமட்டும் படை திரட்டி ஹரிபந்த்பட்கேவின் தலைமையின் கீழ் சேனையனுப்பி கர்னல் கீடிங் நடத்தி வந்த ஆங்கிலேயப்

படையைத் தாக்கும்படி நானா உத்திரவு செய்தார். இக் காரியத்தை ஹரிபந்தும் அவரது வீரர்களும் செவ்வையாய்ச் செய்தனர். நாபார் முதலிய இடங்களில் ஆங்கிலேயப் படையில் பெருத்த சேதத்தையும் உண்டாக்கினார்கள். ஆனால் ஆங்கிலேயர் அதை தைரியமாய்ச் சமாளித்தனர். அதற்குள் 1777-வது வருஷம் இந்தியாவில் உள்ள ஆங்கிலேயச் சர்க்காரின் அரசியல் திட்டம் மாறிவிட்டது. கல்கத்தா கவர்னருக்கு பிரதான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. உடனே அவன் பம்பாய் கவர்னர் தொடங்கிய மராட்டியப் போரை நிறுத்துமாறு உத்திரவு இட்டு பூனாவுக்கு ஒரு தூதனை அனுப்பி மராட்டியருடன் சமாதானத்தைக் கேட்டான். ஆங்காங்கு கிளம்பிய கலகங்களை அடக்குவதற்குச் சற்று அவகாசம் கிடைத்ததென்று நானாவும் உடன்படிக்கைக்கு இணங்கவே, அதன்படி ஆங்கிலேயர் ரகோபாவைக் கை விட்டுவிடுவதென்றும் அதற்குப் பதில் மராட்டியர் ஆங்கிலேயருக்கு ஸால்ஸெட், படோச் நாடுகளைக் கொடுப்பதென்றும் ஏற்பாடாயிற்று.

ஆங்கிலேயருடன் போர் நின்றதும், நானா உடனே உள் நாட்டுக் கலகங்களை அடக்குவதற்காக மஹாதஜி ஷிந்தேவை அனுப்பி, மராட்டியர் நாட்டின்மீது படையெடுத்ததற்காக ஹைதரை தண்டிக்கும்படி பட்கே, பட்வர்த்தன் இவர்களுக்கும் உத்திரவு செய்தார்.

மராட்டிய படைத் தலைவர்கள் தத்தமக்கு இடப்பட்ட வேலைகளைச் செய்வதற்கு நாற்புறமும் போயிருக்கும் சமயம் பார்த்து அவர்கள் பூனாவுக்குத் திரும்பி வருவதற்கு முன்னால், ஆங்கிலேயர் திடீரென்று உடன்படிக்கையில் வாக்களித்தபடி ரகோபாவைக் கைவிட மறுத்து நானாவை நசுக்கி அடக்க கருதிப் போர் தொடங்கினர். மராட்டிய மக்களின் மனதில் பீதியைக் கிளப்ப நினைத்து 1779-ம் வருஷம் பூனாவைத் தாக்குவதற்காக கர்னல் எகர்டன் தலைமையின் கீழ் துணிகரமான படையெடுப்பு ஆரம்பித்தது. மராட்டியரும் புரந்தர் உடன்படிக்கையினால் திருப்தி அடையவில்லை. மேலும் இதற்குள் மஹாதஜியும் உள் நாட்டுக் கலகங்களைச் சற்று அடக்கிவிட்டார். ஆதலால் மராட்டியரும் வருவது வரட்டும் என்று ஆங்கிலே

யரை எதிர்த்து கொரில்லா (விஸ்மயப்) போர்முறையைக் கையாண்டு ஆங்கிலேயப் படைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக ஆசைக் காட்டி யிழுத்துச் சென்று அவைகளுக்கும் பம்பாயுக்கு முள்ள போக்குவரத்துப் பாதையையும் கைப்பற்றிவிட்டார்கள். பிவராவ்பான்ஸே ஆங்கிலேயப் படையை விடாமல் சுற்றிச் சுற்றிச் சென்று சமயம் பார்த்து திடீர் திடீரென்று தாக்கி வரவும், ஆங்கிலேயரால் மராட்டியருடன் போர் புரியவும் இயலாமல், அவர்கள் திடீரென்று தாக்கியபோது போரிலிருந்து தப்பவும் முடியாமல், தவித்தார்கள். மராட்டியர் ஆங்கிலேயரின் உதவிக்கு வந்தவர்களை மடக்கினார்கள்; யுத்த சாமான்களையும் உணவுப் பொருள்களையும் தடுத்துக் கைப்பற்றினார்கள். ஆங்கிலேயப் படைகள் கணவாய்களருகே வந்தபோது அவைகளுக்கும் பம்பாயிக்கும் போக்குவரவே இல்லாமல் போய்விட்டது. ஆனால் ஆங்கிலேயப் படைத் தலைவனோ தைரியம் குன்றாமல் மேன்மேலும் வந்து பூனாவுக்கு அருகே வரவும் மராட்டியரின் மன உறுதியும் ஆவேசமும் அதிகரித்தது. ஆங்கிலேயர் கையில் பூனா விழுவதைக் காட்டிலும் தேலகான் முதல் பூனா வரையுள்ள பிரதேசத்தையே மனுஷ்ய சஞ்சார மற்ற பாலைவன மாக்கி விட்டு அவசியமானால் பூனாவையும் கொளுத்திச் சாம்பலாக்கி விடுவது என்று மராட்டியர் தீர்மானித்தனர். கடுமையான இத்தகைய தேசிய உறுதியைக் கண்டதும் ஆங்கிலேயப் படைகளுக்கும் அறிவு வர ஆரம்பித்தது. கண்டாளா என்னும் இடத்தில் மராட்டியர் கர்னல் கே என்பவனைத் தாக்கி மரணகாயம் உண்டாக்கினார்கள். கிர்கீ என்னும் இடத்தில் காப்டன்ஸ்டூவர் என்ற இன்னொரு முக்கிய அதிகாரியும் பலத்த காய மடைந்தான். ஆங்கிலேயர் முன் செல்லச் செல்ல அவர்களுக்கு பலத்த சேதம் அதிகரித்து வந்தது. ஆனால் அவர்கள் ஒழுங்கு குன்றாமல் மேன்மேலும் சென்று தேலகானில் பிரவேசித்தார்கள். அங்கே மஹாதஜிஷிந்தே, ஹரிபந்த்பட்கே, இவர்களால் நடத்தப்பட்ட பலத்த மராட்டிய சேனை போருக்குச் சித்தமா யிருந்தது. உடனே ஆங்கிலேயர் அவர்களைத் தாக்கவும் மாராட்டியப் படை பின் வாங்கிய வண்ணம் பிரிவுண்டு நாற்புறமும் பரவி ஆங்கிலேயரைச் சூழ்ந்து

தாக்க ஆரம்பித்தன. சுற்றுப்புறங்களில் அதிக தூரம் வரையில் படைகளுக்கும் கால் நடைகளுக்கும் உணவே கிடைக்கவில்லை. இன்னமும் மேன்மேலும் சென்ருல் ஒரு தானியமேனும் கிடைக்காத பாலைவனமாகவே இருக்கும் என்று ஆங்கிலேயருக்குத் தெரிய வந்தது. ஆனல் மனந் தளராமல் அவர்கள் மேலும் முன் செல்ல முயன்ருர்கள்; மராட்டியரோ விடாமல் தொடர்ந்து சூழ்ந்து கொண்டு பகைவர் கையில் தலை நகரை விடுவதைக் காட்டிலும் அதைத் தீக்கிரையாக்கி விடுவதாய் உள்ள தம் மக்களின் உறுதியான தீர்மானத்தை அறிவித்தார்கள். ஆங்கிலேயப் படைத் தலைவனுக்கு மராட்டியரின் தன்மை நன்கு தெரியும்; பூனமீது படையெடுப்பது பிளாஸிமீது படையெடுப்பதைப் போல் அவ்வளவு சுலபமான காரியம் அன்று என்று அறிவான். ஆதலால் இந்த நிலைமையினின்றும் தப்புவதற்கு ஒரே வழியுண்டு—அதாவது பம்பாயிக்குத் திரும்பிச் செல்வதே. அவ்வாறு செய்வது இழிவான காரியம்தான். ஆனல் அதைத் தவிர வேறு கதியில்லை. பம்பாயிக்குப் படைத் திரும்புவதையும் ரகசியமாகவே செய்ய வேண்டும். வெளிப்படையாகி விட்டால் காரியமே அசாத்தியமாகிவிடும். ஆதலால் மராட்டியருக்குத் தெரியாத வண்ணம் ரகசியமாகப் பின் வாங்கி வரவேண்டியதென்று ஆங்கிலேயப் படைத் தலைவன் உத்திரவு செய்தான். ஆனல் மராட்டியரை ஏமாற்றுவது அவ்வளவு சுலபமான காரியம் அன்று. அவர்களுக்கு இந்த ஏற்பாடு முன்னடியே தெரிந்துவிட்டது. ஆங்கிலேயப் படை பின்னடைய ஆரம்பித்ததும் மராட்டியர் அதன் மீது பாய்ந்து தாக்கினர்கள். ஆங்கிலேயரும் பிடிவாதமாகப் போர் புரிந்து பார்த்தார்கள்; அவர்களைத் துரத்தி யோட்டுவது அசாத்தியமாயிற்று. கடைசியில் வடகான் என்னும் இடத்தில் தோல்வியுற்று முறிவுண்டு சிதறி 9000 போர் வீரர்களடங்கிய ஆங்கிலேயப் படை முழுவதும் நிபந்தனையாதுமின்றி மராட்டியரைச் சரணகதி யடைந்தார்கள். நானவும் பாபுவும், ஷிந்தேவும் தங்களிடம் ரகோபாவைக் கொடுத்துவிட வேண்டும் என்றும், புரந்தர் உடன்படிக்கையினல் ஆங்கிலேயர் அடைந்துள்ள மராட்டிய ஜில்லாக்களைத் திருப்பித் தர வேண்டும் என்றும் கேட்டார்கள்.

ஆங்கிலேயர் இந்த ஒப்பந்தப் பிரகாரம் நடக்கச் சம்மதித்து ஜாமீனாக இரு ஆங்கில அதிகாரிகளையும் மராட்டியரது காவலில் வைத்துப் போனார்கள். மராட்டிய வெற்றி வீரர்களிடம் ஒரு மாத காலத்துக்கு மேலாகக் கைதியாயிருந்து ஏங்கித் தவித்த ஆங்கிலேயப் படைத் தலைவனோ இவர்களது கையிலிருந்து தானும் தன் படையும் தப்பிப் பிழைத்து பம்பாயை அடைந்தால் போதும் என்று தேர்ந்து அதன் பொருட்டு இந்த நிபந்தனைகளுக்கு இணங்கி நடப்பதாய் வாக்களித்தான். இந்த உன்னத வெற்றியைக் கேட்டு மஹாராஷ்டிரமே குதூகலம் அடைந்தது. இவ்வளவு நாள் தலை நிமிர்ந்து இருந்த ஆங்கிலேயரின் கொடியாகிய யூனியன் ஜாக் கடைசியில் மஹாராஷ்டிரத்தின் காவிக் கொடிக்குத் தாழ்ந்து பணிய நேர்ந்தது. தம் மக்களுக்குள் ஒழுங்கு கெட்டு உள் நாட்டுச் சச்சரவுகள் நடந்து வந்த அந் நிலைமையிலும் மஹாராஷ்டிரம் தளர்ந்திடாமல் எதிர்த்து நின்று மதங் கொண்ட ஆங்கிலேயப் பகைவரையும் முறியடித்து வெற்றி நாட்டிவிட்டது. இத்தனை நாளாக ஆங்கிலேயர் மராட்டியரைத் தாக்கவோ இந்தியாவில் மராட்டிய ஆட்சியின் ஆதிபத்தியத்தை எதிர்க்கவோ துணியவில்லை. இப்போது துணிவு பெற்றுத் தாக்கவும் தோல்வி யுற்றுத் தாழ வேண்டி நேர்ந்தது. "நமது மக்கள் ஆங்கிலேயரை வீழ்த்தியதைப் போல் வேறெவரும் செய்திருக்க முடியாது. ஆங்கிலேயர் முற்றிலும் முறிந்து தாழ்மை யுற்றனர்கள்" என்று அக் காலத்தில் எழுதப்பட்ட கடிதம் ஒன்று கூறுகிறது. குழந்தைப் பருவத்திலிருந்த பேஷ்வாவின்மீது தமது ஆசை முழுவதையும் நாட்டி யிருந்த மராட்டிய மக்கள் இந்த வெற்றிகளுக்கு காரணம் அவருடைய அதிர்ஷ்டமே என்று கொண்டாடினார்கள்: "பிறவியிலிருந்தே எமது கண்மணி இளவரசரான பாலபேஷ்வா கோகுலத்துக் கண்ணனைப் போல் தெய்வீகம் திகழ்ந்து விளங்குகிறார். பகவத் கிருபையால் நமது பகைவர் முற்றிலும் தோற்று முறிந்தனர். இந்த தரும யுத்தத்தில் நமது ஹிந்து மதமும் சமூகமும் வெற்றி பெற்று வருகின்றன."

# 19. ஆங்கிலேயர் தாழ்வுற்றது

"கடல் பிராணிகள் தம்மைத் தாமே உண்டு வருகின்றன."

"ஆண்டுதோறும் தவருமல் ஏதேதோ படையெடுப்பு நடந்தே வந்தது. முகலாயனும் திப்புவும் தோல்வியுண்டு அழிந்தார்கள். என்னே, நம் மக்களின் பிரதாப மகிமை!"

இவ்வாறு ஆங்கிலேயப் பெரும் படை மராட்டியரிடம் சரணுகதியடைந்த சேதி கல்கத்தாவுக்கு எட்டியதும் ஆங்குள்ள ஆங்கிலேய அதிகாரிகள் கோபத்தால் வெறியடைந்து இழிவான காரியமும் செய்யத் துணிந்து வடகானில் தமது படைத் தலைவன் இணங்கிக் கையெழுத்திட்ட உடன்படிக்கையையும் உடைத்தெறியத் துணிந்தார்கள். அந்த உடன்படிக்கையின் படி மராட்டியர் தாம் கைப்பற்றிய ஆங்கிலேயப் படைகளையும் விட்டு விடவும் அது பம்பாயிக்குப் போய்ச் சேர்ந்தது. அதன் பிறகு ஆங்கிலேயர் தாம் அந்த உடன்படிக்கைக்குச் சம்மதிக்க முடியாதென்று சொல்லி, மராட்டியருடன் பகை பாராட்டிப் படையனுப்பிப் போர் புரியலானுர்கள். வேறு தேசங்களில் தேசத் துரோகமான பெருங் குற்றத்துக்காக ரகோபாவைச் சுட்டுக் கொன்றிருப்பார்கள். ஆனுல் மராட்டியர் அவனுக்குக் கடுந் தண்டனை விதித்திடாமல் விட்டு விட்டார்கள். அந்த நன்றிக்கெட்ட மனிதன் மீண்டும் வஞ்சகச் சூழ்ச்சி செய்யக் கருதி, காவலினின்றும் தப்பி, ஆங்கிலேயரது கூடாரத்துக்குப் போய் விட்டான். போர் கடுமையாக வளர்ந்து வந்தது. கோடார்ட் என்னும் ஆங்கிலத் தளகர்த்தன் குஜராத்தினின்று பேஷ்வாமீது படை யெடுத்து வந்தான். ராமச்சந்திர கணேஷ் என்னும் மராட்டியப் படைத் தலைவர் அவனை விடாமல் பல விடங்களில் தாக்கி எதிர்த்து வந்தார். கடைசியாக அவர் ஆங்கிலேயரைத் தாக்கியபோது அவரது வீரத்தையும் துணிவையும் கண்டு ஆங்கிலேயரே புகழ்ந்து பாராட்டினுர்கள். தேர்ச்சி பெற்ற இவ் வீரத்

தலைவர் துரதிஷ்ட வசமாய்ப் போர்முனையில் குண்டு பட்டு இறக்கவும், 1780-வது வருஷம் கோட்டார்ட் பேஸீனைக் கைப்பற்றினான். இதனால் தைரிய மடைந்து வடகான் உடன்படிக்கையால் தமக்கு ஏற்பட்டிருந்த அவமானத்தை நீக்கக் கருதி ஆங்கிலேயர் மராட்டியத் தலைநகரான பூனாவைக் கைப்பற்ற நினைத்தார்கள். இம் முயற்சியில் அவர்கள் முன்னொரு முறை தோற்று அவமானப் பட்டதை வாசகர்கள் அறிவார்கள். நானாவையும் மற்ற பெருந் தலைவர்களையும் பயமுறுத்திச் சரண்புகச் செய்யக் கருதி, ஆங்கிலேயர் பூனாமீது படை யெடுத்து வந்தார்கள். ஆனால் இணையற்ற தந்திரசாலியான அந்த மராட்டிய அரசியல் நிபுணர் இந்தியா முழுவதிலும் உள்ள ஆங்கிலேய ஆட்சியே ஒடுங்குவதற்கான சூழ்ச்சி வலை விரித்து ஆங்கிலேயரைப் பிடித்துவிடுவார்போலிருந்தது. மதராஸைத் தாக்குவதாய் ஹைதரை வாக்களிக்கச் செய்து, போஸ்லே வங்காளத்தைத் தாக்குவதற்கான ஏற்பாடும் செய்து, தானே பம்பாயில் ஆங்கிலேயரை நசுக்குவதென்று கிளம்பினார். அதன்படியே பிரெஞ்சுக்காரரின் உதவி பெற்ற ஹைதரும் மதராஸைத் தாக்கி வெற்றி சூடினான். பன்னீராயிரம் போர் வீரர்களுடன் பாசுராம் பாவு பூனாவை நோக்கி வரும் ஆங்கிலேயப் படையைச் சுற்றி வந்து அவர்களை நாற்புறமும் வழி நெடுகத் தாக்கி வந்தார். நானாவும் துகோஜி ஹோல்கரும், ஹரியந்த் பட்கேயும் 30000 படைகளுடன் ஆங்கிலேயரை எதிர்த்தார்கள். முன்னர் கர்னல் எகர்டன் அடைந்த நிலைமையை இப்போது ஜெனரல் கோர்ட்டார்டும் அடைந்தான். இன்னும் முன்னே சென்று கொண்டிருந்தால் எகர்டனுக்கு ஏற்பட்ட விபத்து தனக்கும் ஏற்பட்டுவிடும் என்று கோட்டார்ட் அறிந்தான். ஆனால் இவ்வளவு தூரம் முன் வந்தபிறகு பின் வாங்கித் திரும்புவதனால் அதில் அவமதிப்பு உண்டாவதன்றி அபாயம் இருப்பதையும் உணர்ந்து, கோட்டார்ட் அதே இடத்தில் நின்றவனாய்த் தன்னை பலப்படுத்தக் கருதினான்; ஆனால், தன்னால் நீண்ட காலம் அப்படியே நிற்க முடியாது என்று அறிந்தான். காப்டன் மக்கேயும், கர்னல் பிரௌனும் பம்பாயிலிருந்து உணவுப்பொருள்களைக் கோட்டார்டின் படைக்கு எடுத்து

வந்தபோது மராட்டியர் அவர்களைக் கடுமையாகத் தாக்கியதால் பம்பாயுடன் போக்குவரவு வைத்துக்கொள் வதே அபாயகரமாய் விட்டது. கடைசியில் இந் நிலைமையில் மராட்டியர் தலைநகர் மீது படையெடுப்பது முடியா தென்று கண்டு திறமை பொருந்திய ஜெனரல் கோட்டார் டும் படையெடுப்பை நிறுத்திப் பின் வாங்கத் தீர்மானித் தான். இப்படி ஆங்கிலேயப் படை இழிவுடன் திரும்பவும் பாஹு, துகோஜி ஹோல்கர் தலைமையின் கீழ் மராட்டியர் கள் அவர்களைத் தொடர்ந்தவண்ணம் நாற்புறத்திலும் தாக்கி வந்தார்கள். மராட்டியத் தலைநகரைக் கைப்பற்று வதாய் வாய்பிளக்கப் பெருமை பேசிவந்த ஆங்கிலேயப் படைத் தலைவன், வழி நெடுக நூற்றுக் கணக்கான போர் வீரர்களைப் பலிகொடுத்துப் பம்பாயை அடைந்து தப்பிப் பிழைத்தது புனர் ஜன்மம் என்று நினைக்கும்படி ஆயிற்று. வெற்றி வீரர்களான மராட்டியர்கள் துப்பாக்கிகளையும், குண்டுகளையும், கூடாரங்களையும், உணவுப் பொருள்களை யும், மாடுகளையும் பீரங்கிக் குண்டுகளையும், மற்ற சாமான் களையும் கைப்பற்றி விட்டார்கள். இவ்வாறு இருமுறை பூனாவைக் கைப்பற்றுவதாய் மதங் கொண்டு முன் வந்த ஆங்கிலேயர் அவ்விருமுறையும் தோல்வியுண்டு செருக் கழிந்து தாழ்ந்து பெருமை குன்றி பம்பாய்க்குத் திரும்பிப் போக நேரிட்டது. யுத்த சரித்திரத்திலே செருக்குடன் முன்வந்தவர்களுக்கு இத்தகைய அவகேடான தோல்வி நேர்ந்ததே இல்லை.

வட நாடுகளிலும் ஆங்கிலேயப் படைகள் தோல்வி யடைந்து வந்தன. மராட்டியருக்கு எதிராக ஆங்கிலேய ரைச் சேர்ந்துள்ள கோஹாத் ராணாவின் உதவியால் ஆரம்பத்தில் ஆங்கிலேயருக்குச் சில வெற்றிகள் கிடைத்தன. குவாலியர் கோட்டையும் கைப்பற்றப் பட்டது. ஆனால், மஹாதஜி ஷிந்தியாவின் படைகள் மேன்மேலும் தாக்கி வரவே, எதிர்த்து நிற்கமுடியாமல் கர்னல் கரக் தலைமையில் வந்த ஆங்கிலேயப் படை திணறிற்று. அவனுக்கு உதவி செய்ய முன்வந்த கர்னல் மூர் என்பவனும் ஏதொன்றும் செய்ய முடியாமல் தவித் தான். இவ்வாறு ஹைதரால் தெற்கிலும், துகோஜி

ஹோல்கர், பட்வர்த்தன் இவர்களால் பம்பாயருகிலும், மஹாதஜி ஷிந்தியாவால் வடக்கிலும் முறியடிக்கப்பட்ட ஆங்கிலேயர்கள் மராட்டியருக்குள்ளே மித்திர பேதம் செய்யவும் யத்தனித்தார்கள். மராட்டியர் ஆங்கிலேயருடன் தனியாகச் சமாதான ஒப்பந்தம் செய்துகொள்ளும்படி நானாவிடம் சொல்லி கேட்குமாறு ஆங்கிலேயர் மஹாதஜி ஷிந்தியாவைக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் நானாவோ ஹைதருடன் கலந்து முடிவுக்கு வராமல் ஆங்கிலேயருடன் தனி ஒப்பந்தம் செய்துகொள்ள மறுத்துவிட்டார். மராட்டியக் கப்பல் படையும் வெற்றி நாட்டிற்று. மராட்டியக் கப்பல் படைத்தலைவரான ஆனந்த ராவ் துலாப் துணிவுடன் தாக்கி வெற்றி சூடி ரேஞ்சர் என்ற ஆங்கிலேயப் போர்க் கப்பலைக் கைப்பற்றினர். சமாதானப் பேச்சு நடந்து கொண்டிருக்கும் போது ஹைதர் இறந்தான். ஆதலால் 1783-வது வருஷம் நானாவுக்கும் ஆங்கிலேயருக்கும் உடன்படிக்கை ஏற்பட்டுச் சமாதானம் ஆயிற்று. ஆங்கிலேயர் ரகோபாவை மராட்டியாது கையில் ஒப்புவித்து விடவேண்டும் என்றும், போரினாலும் புரந்தர் ஒப்பந்தத்தாலும் ஆங்கிலேயர் அடைந்துள்ள மராட்டிய நாடுகளில் ஸால்ஸெட் தவிர பாக்கி நாடுகளை மராட்டியருக்கே திருப்பித் தரவேண்டும் என்றும், ஆசியா கண்டத்தவர் எவரேனும் மராட்டியரை எதிர்த்து வந்தால் அந்நாட்டுக்கும், ராஜ்யத்துக்கும் ஆங்கிலேயர் உதவி புரிய மறுத்திடவேண்டும் என்றும், அவ்வாறே மராட்டியரும் ஆங்கிலேயர் அக்கறைக்கு விரோதமாய்க் கிளம்பும் ஐரோப்பிய நாட்டுக்கு உதவி புரியக் கூடாதென்றும் உடன்படிக்கை செய்து கொண்டார்கள். மேலும் டில்லியில் இந்திய அரசியல் காரியங்களில் தலையிடுவதை நிறுத்திவிடுவதாய் ஆங்கிலேயர் வாக்களித்து, மராட்டியருக்கே அவ் விவகாரங்களில் இஷ்டப்படி செய்யப் பூரண உரிமையுண்டு என்றும் அங்கீகரித்தார்கள்.

இவ்விதம் முதலாவது ஆங்கிலேய-மராட்டியப் போர் முடிந்தது. தம்மை எதிர்த்த ஐரோப்பியர்களான ஆங்கிலேயரை முறியடித்து, மராட்டியர் இந்தியாவின் பிரதான

ஆட்சிக்குள்ள தமது உரிமையையும் மேன்மையையும் வெற்றியுடன் நிலை நிறுத்தினர்கள். ஆங்கிலேயர்கள் வங்காளத்திலும் சென்னையிலும் தமது ராஜ்யம் பெருகிப் பலம் அதிகரித்து இருந்தும் மஹாராஷ்டிரத்தின் ஹிந்து சாம்ராஜ்யமாகிய கோட்டையைத் தாக்கினல் தமது தலையே பிளந்துவிடும் என்றும், புருஷத்தன்மையற்ற பேடிகளான வங்காளத்து, ஆற்காட்டு, நவாப்புகளைப் பயமுறுத்தியதைப் போல் மராட்டியரிடம் தமது செருக்கும் தந்திரமும் பலிக்காது என்றும், நன்ருகக் கண்டுகொண்டனர்.

ஸல்பை உடன்படிக்கைக்குப் பிறகு ரகோபாவும் இறந்தான். தன்னுட்டு மக்களுக்கெதிரே கிளம்பித் தன் தேசத்தை அதன் கொடிய விரோதிகளுக்குக் காட்டிக் கொடுத்தவன்; முன்னேர்கள் நாட்டிய உன்னத லக்ஷியத்தினின்றும் மராட்டிய மண்டலத்தின் முயற்சிகளை உள்நாட்டுச் சச்சரவுக்குத் திருப்பிய அயோக்ய துராசை கொண்டவன். அவனது வாழ்வினுல் மராட்டியருக்குப் பானிப்பட்டு யுத்தத்தைக் காட்டிலும் பெருத்த ஆபத்து ஏற்பட்டது. அதிஷ்ட வசமாய் ஸல்பை உடன்படிக்கைக் குப் பிறகு அவனது வாழ்வு முடிந்துவிட்டது. ஆனல் அவனுக்குப் பிறந்த குழந்தை அவனைக் காட்டிலும் கொடிய சாபமாகத் தோன்றினன். ரகோபாவின் வஞ்சகச் சூழ்ச்சிகள் பலித்திடாமல் ஒடுங்கி வந்த அக்காலத்தில் அவனுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந் திருந்தது. அதற்கு தாத்தாவான பாலாஜிராவின் பெய ரிட்டு பாஜிராவ் என்று அழைத்தார்கள். தோல்வியுற்று ரகோபாவும் கைவிட்ட துஷ்ட காரியத்தை அவனது மகன் மீண்டும் செய்து மஹாராஷ்டிரத்தின் சுதந்திரத்தை அன்னியனுக்கு விற்று ஹிந்து சாம்ராஜ்யத்தையே கவிழ்த்த கடும் பாவியாகத் தோன்றினன்.

ஆனல் நானவும் மஹாதஜி ஷிந்தியாவும் உயிரோடு இருக்கும் வரையில் அவ்வாறு ஒன்றும் நடக்க முடிய வில்லை.

# 20. ஸவாயீ மாதவராவ்—மக்கள் போற்றிய பேஷ்வா

"கலியுகத்தில் பிரதாபியான மாதவராவ் அவதரித்ததும் வறுமையின் காலமும் நீங்கிவிட்டது; அவர் அழகிய உருவமும் எழிலும் வாய்ந்தவர்; கோபம் நீங்கி அன்பு பொருந்தியவர்; அவரது கிரீடத்தில் மாணிக்கங்கள் ஜ்வலித்தன. பரசுராமரே நேரில்வந்து வெண்குடையைப் பிடித்தது போல் அவர் சிங்காதனம் ஏறியதும், உலகம் உத்ஸாகத்துடன் கொண்டாடிற்று"

ஹிந்து ஆட்சியின் மூளையும் கத்தியும் போன்றுள்ள நானாவும், மஹாஜீயும் தமது அகன்ற புஜங்களின் மீது உலகம் அது வரை கண்டிராத மகத்தான ராஜ்ய பாரத்தை ஏற்றுக்கொள்ள தீர்மானித்தார்கள். இந்தியாவை ஜெயிக்கும் பொருட்டு இங்கிலாந்து, பிரான்சு, ஹாலந்து, போர்த்துகல் அனுப்பிய பெரிய அரசியல் நிபுணர்களும் போர்வீரர்களுமான ஹேஸ்டிங்ஸ், வெல்லெஸ்லி, கார்ன் வாலிஸ் இவர்களுள் எவராலும் அவ்விரு மராட்டியத் தலைவர்களை ஏமாற்றவோ வெற்றியுடன் எதிர்க்கவோ முடியவில்லை. அவ்விரு வீரர்களும் ஹிந்து சாம்ராஜ்யத்தின் உன்னத காலத்தைக் கண்டவர்கள்; தமது சமூகத்தின் பண்டைக் கொள்கையிலும் லக்ஷியத்திலும் ஐதிகங்களிலும் பயிற்சி பெற்றவர்கள். வீர புருஷர்களான நானா ஸாஹிப், சதாசிவ பாவூ இவர்களிடமிருந்து ஹிந்து ஏகாதிபத்தியம் என்ற உயர்ந்த சேதியைக் கற்றவர்கள்; இருவரும் பானிப்பட்டில் போர் புரிந்து தப்பியவர்கள்; பானிப்பட்டுப் போர்முனையில் ஆத்மத்தியாகம் செய்த அரிய வீரர்களின் லக்ஷியத்தைக் கைவிடாமல் நாட்ட உறுதி கொண்டவர்கள்; தமது ராஜ்யத்தின் உண்மையான நிலைமையை அறிந்தவர்கள்; உள்நாட்டில் சச்சரவும் போரும் மூண்டு ராஜ்யமே அழிந்துவிடுமோ என்று மக்கள் அஞ்சினார்கள்; அரசரோ புகழற்றவர்; பேஷ்வாவோ சிறு வயதுள்ள பாலர்;

பகைவரோ பேராசையும் பலமும் பொருந்திய ஐரோப்பி யர். எனினும் தளராத தைரியமும் தேயாத மனத் தெளிவும் கொண்டு உள்நாட்டில் தோன்றிய கலகங்களை அடக்கினார்கள்; ஐரோப்பியராயினும் ஆசியாவினராயி னும் பகைவரை எதிர்த்துப் போர்புரிந்து முறியடித்துத் தாழ்த்தி வந்தார்கள்.

ஆரம்பத்தில் ரகோபாவுக்கு எதிரே நாட்டு மக்களைக் கலகம் செய்து கிளப்பினார்கள் என்றாலும், இப்போது புரட்சிக் கட்சியார் எதிரிகளை யடக்கி, மக்களின் சம்மதம் பெற்ற ஆட்சியை ஸ்தாபித்து, போரில் வெற்றி சூடி வரவும் அவ்வெற்றியைக் கொண்டாடுவது அவசியம் என்றுணர்ந்தார்கள். இத்தகைய பெருந் தேசிய கொண்டாட்டத்துக்கு இளம் பேஷ்வாவான ஸவாயி மாதவராவின் விவாகமே தகுந்த சமயம் என்று அறிந்தார்கள். அவ்விளம் பேஷ்வாவுக்காகவன்றோ மராட்டிய மக்கள் போருக்குச் சென்றார்கள்? அவரைக் கொல்வதற்குப் பல ரகசியச் சதி ஏற் பாடுகள் நடந்திருந்தன. பகைவர்கள் அவரைப் பாஷா ணத்தினாலும், கத்தியாலும் கொல்வதற்குப் பலமுறை முயன்றிருந்தார்கள். இந்த விபத்துக்களினின்று மல்லாமல் பெரும் போர்களினின்றும் தப்பிய தமது இளம் பேஷ் வாவை மராட்டிய மக்கள் கோகுல பாலனை கண்ண னுக்கு ஒப்பிடாமல் இருக்க முடியுமா? நாளொரு மேனி யும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்த அவர்மீது மக்கள் தமது அன்பை நாட்டி யிருந்தார்கள். பேஷ்வா வின் விவாகத்தைப் பார்க்க ஜனங்கள் நாற்புறங்களிலிருந் தும் பூனாவுக்கு வந்து கூடினார்கள். சிற்றரசர்களும், தலை வர்களும், கவிகளும், நூலாசிரியர்களும், படைத் தலைவர் களும், உக்கிர், அட்டக் போர் முனைகளில் வெற்றி சூடிய வீர புருஷர்களும், ராஜதந்திரிகளும், அரசியல் நிபுணர் களும் பேஷ்வாவைக் காண ஆவல் கொண்டு அவ் விவாகத் துக்கு வந்தார்கள். ஹிந்து சாம்ராஜ்யத்தின் ஒற்றுமையை யும் மேன்மையையும் உலகத்துக்கு அறிவுறுத்துவதற்கும், உள்நாட்டுப் போர்களால் மஹாராஷ்டிர மண்டலம் முறிந்து விடவில்லை என்பதை நிரூபிப்பதற்கும் கருதி நானா

மஹாராஷ்டிரச் சத்ரபதியையே பூனுவுக்கு அழைத்து வந்து சக்ரவர்த்திக்குரிய மரியாதைகளுடன் அவரை வரவேற்று, பேஷ்வாவின் விவாகத்துக்கு வந்திருந்து மணமக்களை வாழ்த்தும்படி கேட்டுக் கொண்டார்.

ராஜ சபாமண்டபத்தில் சத்ரபதி சிங்காதனத்தில் வீற்றிருந்தார். அவரைச் சூழ்ந்து நாற்புறமும் ராஜப் பிரதிநிதிகளும், சேனுதிபதிகளும், கப்பல் படைத் தலைவர்களும், அரசியல் நிபுணர்களும், சிற்றரசர்களும் இருந்தார்கள். அவர்கள் ஆட்சி புரிந்து வந்த மாகாணங்களோ ஐரோப்பா முதலிய கண்டங்களில் உள்ள ராஜ்யங்களைப் போல் பெரியவை. பட்டவர்த்தன், ராஸ்தே, பட்கே குடும்பத்தோரும் வந்திருந்தார்கள். ஹோல்கர், ஷிந்தியா, பவார், காயக்வாட், போஸ்லே இவர்களின் பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள். ஹரித்வாரம் முதல் ராமேசுவரம் வரையுள்ள வித்வான்கள் யாவரும் வந்திருந்தார்கள். ஜயபூர், ஜோத்பூர், உதயபூர் ஹிந்து அரசர்களுக்கும் அழைப்புச் சென்றிருந்தது. அவர்களது பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள். நிஜாமும் முகலாய அரசனும், மற்றும் இந்தியாவில் ஆட்சி புரிந்துவந்த ஐரோப்பியரும் தத்தம் தூதர் மூலமாய் வெகுமதிகளை அனுப்பியிருந்தார்கள். மஹாராஷ்டிரத்தின் கத்தியும் கேடயமும் போன்ற குதிரைப்படைகளும், பீரங்கிப் படைகளும், காலாட்படைகளும் பூனுவைச் சுற்றி வெகு தூரம் பரவியிருந்தன. கப்பல் படையின் பிரதிநிதிகளாக ஆங்கரேயும், துலாப்பும் வந்தார்கள். பேஷ்வாவின் சார்பாக வந்தோரை வரவேற்று உபசரிக்கும் பொறுப்பை ஆங்கரேவுக்கு அளித்தார்கள். ஆங்கு கூடியுள்ள மக்கள் அனைவருக்கும் உன்னத லக்ஷியமான ஹிந்து சாம்ராஜ்யத்து "ஸ்வதர்ம ஸ்வராஜ்யத்தை" நினைவூட்டுவதைப் போல் இந்த மகத்தான கூட்டத்துக்கு மேல் மராட்டிய வெற்றிக்கொடி—காவிக்கொடி—பறந்தது.

குதிரைப் படைகளும் காலாட்படைகளும் பீரங்கிப் படைகளும் "பேஷ்வாவுக்கு ஜே" என்றும் "ஜய ஜய" வென்றும் கோஷித்து வந்தனம் செய்தன. இளமையும் அழகும் பொருந்திய பேஷ்வா பரிவாரங்கள் சூழ ராஜ

சபைக்கு வந்தார். இத்தனை நாட்களாய்ப் பேஷ்வாவைத் தமது கற்பனைக் கவிதையின் நடு நாயகமாக வைத்துப் பாடி வந்திருந்த மக்கள் அனைவரும் எழுந்து நின்று கைகூப்பித் தலை வணங்கித் தமது ராஜபக்தியைத் தெரிவித்தார்கள். பாரத கண்டம் முழுவதிலும் ஆட்சி புரியும் அவ்விளம் பேஷ்வா கைகூப்பிய வண்ணம் சாத்தாரா அரசரான சத்ரபதியை அணுகி நமஸ்கரித்ததைக் கண்டதும் ஜனங்களின் ஆச்சரியத்துக்கு அளவே யில்லை. ஏனெனில் மஹாராஷ்டிரத்து அரசரின் முன்பு செல்லும்போதெல்லாம் பேஷ்வா இத்தகைய மரியாதை காட்டவேண்டுமென்பதே முறை. இந்தக் காட்சியைக் கண்டதும் போர் வீரரின் கண்களில் தேசிய உணர்ச்சியால் ஆனந்த பாஷ்பம் பெருகிற்று. அமைதி யகலாத அமைச்சரது கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் ததும்பிற்று. இந்த மகத்தான கொண்டாட்டத்திலும் சமூக லக்ஷியத்தின் ஒற்றுமை சிறந்து விளங்கியது. இதை மராட்டிய மண்டலத்தின் அங்கத்தினரான அரசர்களும் தலைவர்களும் அன்றி மற்ற இந்திய ஐரோப்பிய ஆட்சியாளரும் நன்கறிந்தனர். நானாவும் மற்ற மஹாராஷ்டிரத் தலைவர்களும் எதிர்பார்த்தபடி மக்களிடை உணர்ச்சி பரவிற்று. மஹாராஷ்டிர மண்டலத்தின் அங்கத்தினரான சிற்றரசர்களும் தலைவர்களும் தாம் தாம் தனித் தனியாக நிற்பதைக் காட்டிலும் ஒற்றுமையுடன் இருந்தால் அதிகமான பலத்தையும் மேன்மையையும் அடைய முடியும் என்பதை நன்கு அறிந்தார்கள்.

உள்நாட்டுப் போர்களும் கலகங்களும் அடங்கவும் மஹாராஷ்டிரத்தில் அமைதியும் சந்தோஷமும் மேன்மையும் வளப்பமும் தோன்றின. நானாவும் அவரது சகாக்களும் தேசத்தின் வரி திட்டங்களையும் பரிபாலனத்தையும் நியாய விசாரணை முறைகளையும் சீர்திருத்தம் செய்து, மஹாராஷ்டிரத்தில் மட்டும் அன்றி மராட்டியர் ஆட்சியில் உள்ள இந்திய நாடுகளில் எல்லாம் உயர்ந்த துரைத்தனத்தை நாட்டினார்கள். வரிகள் குறைந்தன. நியாயம் ஓங்கிற்று. குடியானவர் முதல் இளவரசர் வரை யாவரும் உயர்ந்த பதவிகளை அடைய முடிந்தது. தமது முனிவர்

களாலும் தெய்வங்களாலும் நாட்டப்பட்டு முன்னோர்கள் போருக்குச் சென்று பாதுகாத்த உயர்ந்த லக்ஷியத்தைப் பூர்த்தி செய்வதற்குத் தாம் அனைவரும் கருவிகளாயிருக்கிறோம் என்ற உணர்ச்சியும், ஹிந்து தருமத்தையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கும் சாம்ராஜ்யத்தைத் தாங்கும் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்ச்சியும், மக்களிடை பரவியது. இத்தகைய மகோன்னத காலத்தில் பிறவி எடுத்ததே, பெரும் பாக்கியம் என்று எல்லோரும் உணர்ந்தார்கள். மக்கள் மனதில் தேசிய மேன்மை துலங்கிற்று. யுத்த வெற்றிகளின் சேதிகள் வந்துகொண்டே இருந்தன. சாதாரண மக்களும் அக்காலத்தின் அபூர்வ விசேஷத்தை அறியாமல் இல்லை. இதெல்லாம் பேஷ்வாவாகிய ஸவாயீ மாதவராவின் அதிஷ்டத்தினுல்தான் என்று பேசிக்கொண்டார்கள். அன்னிய நாட்டு துரோகிகளான முகமதியரின் ஆட்சியை யழித்து ஹிந்துஸ்தானம் முழுவதிலும் தெய்விக ஹிந்து சாம்ராஜ்ய ஆட்சியை ஸ்தாபிக்கத் தவறிய முதலாவது மாதவராவே இப்போது தன் அவாவைப் பூர்த்தி செய்து நாட்டுவதற்காக இரண்டாவது மாதவராவாகப் பிறந்துள்ளார் என்றும், அதனுல்தான் ஸவாயீ மாதவராவின் பிறப்பிலிருந்து தமக்கு வெற்றிக்குமேல் வெற்றி வருகிறது என்றும் மக்கள் பேசிக்கொண்டார்கள். இத்தகைய நம்பிக்கையிலிருந்து தமது சமூகத்தின் லக்ஷியத்தை சாதாரண ஜனங்களும் ஒருவாறு உணர்ந்திருந்தார்கள் என்பதும், தமது தலைவர்கள் செய்துவரும் பெரும் முயற்சிகளிலும் ஏற்பாடுகளிலும் எத்தகைய மனப்பான்மை கொண்டிருந்தார்கள் என்பதும் தெரியவரும்.

ஸல்பை உடன்படிக்கைக்குப் பிற்பாடு, நானா பரசுராம் பாவூவையும் பட்வர்த்தனையும் திப்புவைத் தண்டிக்கும்படி உத்திரவிட்டு அனுப்பினர். ஹைதரின் மகனை திப்பு, ஹைதர் இறந்த பிறகு அரசனாய் முடி சூடி மராட்டியரது கொடும் பகைவனாய்த் தோன்றினான். 1784-வது வருஷம் திப்பு சிறு ஹிந்து நாடான நார்க்குண்டு மீது படையெடுத்துத் துன்புறுத்தவும் அந்நாட்டு மக்கள் மராட்டியரது உதவியை நாடினார்கள். உடனே யுத்தமும்

தொடங்கிற்று. பட்வர்த்தன், ஹோல்கர் இவர்களது தலைமையின் கீழ் மராட்டியர் போர் புரிந்தனர். நிஜாம் மராட்டியரது கட்சியில் சேர்ந்து கொண்டான். இனி எதிர்ப்பது அசாத்தியம் என்று கண்டுகொண்ட திப்பு உடன்படிக்கைக்கு இணங்கி மராட்டியருக்குச் செலுத்த வேண்டிய கப்பத்தில் பழைய பாக்கிகளைக் கொடுத்து விடுவதாகவும், நார்க்குண்டு நாட்டை இனித் துன் புறுத்துவதில்லை என்றும் வாக்களித்தான். ஆனால் மராட்டியர் திரும்பியதும், அவன் வஞ்சகம் செய்யத் துணிந்து நார்க்குண்டு கோட்டையை மீண்டும் கைப் பற்றியதன்றி அந்நாட்டு ஹிந்து அரசரையும் அவரது குடும்பத்தாரையும் முகமதிய முறையில் சித்திர வதை செய்து கொன்று, அந்த ஹிந்து அரசனின் ஒரே புதல் வியையும் தனது ஜனனவுக்குப் பலவந்தமாக இழுத்துச் சென்றான். இத்துடன் நில்லாமல் மூகமதிய மோட்சத்தை யும் அடையக் கருதி, முகமதிய மௌல்விகளும் சரித்திரக் காரர்களும் தன்னை தரும ரக்ஷகன் என்றும் நாஸ்திகசம் ஹாரன் என்றும் ஔரங்கஜீப் என்றும் தைமூர் என்றும் கொண்டாடும்படிக்கு திப்பு அநீதிகளைச் செய்யத் தொடங் கினன். கிருஷ்ணு, துங்கபத்திரா நதிகளுக்கு இடையே உள்ள சமவெளியில் வசித்து வந்த ஹிந்து மக்களின் மீது ராக்ஷஸ விதமான வஞ்சம் தீர்த்துக் கொள்ளத் தொடங்கி அம் மக்களைக் கத்தி முனையில் பலவந்தமாக முகமதியர் களாக்கி வந்தான். இஸ்லாம் பரவியதன் முக்கிய காரணம் இத்தகைய அநீதிகளே. இது மட்டுமன்று, ஹிந்து தரும ரக்ஷகர் என்ற மராட்டியரது உரிமையும் ஆக்ஷேபிக் கக் கருதியவன் போல் பல ஹிந்துக்களை சுன்னத்து செய்து கொள்ளும்படி பலவந்தப்படுத்தி, இத்தியாதி வருணிக்க முடியாத பல ஹிம்ஸைகளையும் துராக்கிரமங்களையும் செய்து வந்தான். துஷ்டனுக்கு எதிரே எல்லோரும் ஏகோபித்துக் கிளம்பி, தமது தருமத்தை யழிக்க வந்த பகைவனை யழித்து, அவனது தீச்செயல்களை எதிர்த்துத் தாக்கி யொடுக்க வேண்டும் என்று ராமதாஸர் ஹிந்துக் களுக்குச் சொல்லியும் மராட்டியருக்குப் புகட்டியும் இருந்தார். அவ்வாறு செய்யாவிடினும் திப்புவின் அநீதி களுக்கு பலியான ஹிந்து மக்கள் தமதுக் மதத்தைக்

கைவிடவும், சுன்னத்து முதலிய அவகேடான இழிவுகளைச் செய்து கொள்ளவும் மறுத்து, பிராணத்தியாகம் செய்யமுற் பட்டார்கள். அங்ஙனம் ஒருவர் இருவர் அல்லர்; 2000 பிராமணர்கள் இஸ்லாத்தில் சேர மறுத்துத் தமது மதத்திற் காக ஆத்மத் தியாகம் செய்தார்கள். திப்புவின் கோபத்தையும் சித்திரவதையையும் அவர்கள் லட்சியம் செய்ய வில்லை இந்தியாவில் மராட்டிய ஆட்சியும் அதி காரமும் தோன்றுவதன் முன் ஒவ்வொரு நாளும் இத் தகைய அநீதிகள் நடந்து வந்தன. இறந்தாலும் ஹிந்து மதத்தைக் கை விடக்கூடாது என்று ஒவ்வொரு ஹிந்துவும் சொல்லி வந்தான். ஆனால் ராமதாஸரோ ஸஹ்யாத்ரியின் மேல் நின்று, "அவ்வாறு சொன்னால் போதாது. இறக் காமலும் ஹிந்து மதத்தைக் கைவிடாமலும் முகமதிய துஷ் டர்களை எதிர்த்து நின்று தாக்கித் துகளாக்க வேண்டும். இப்படித் தரும யுத்தத்தில்தான் நாம் உயிர்தர வேண்டும்," என்று வீரப் பாடம் கற்பித்தார். அவரது நூற்றுக் கணக்கான சிஷ்யர்கள் இந்த யுத்த கோஷத்துடன் கிளம்பி, ரகசியமாய்ச் சென்று, ஹிந்து மடங்கள் வீடுகள் ஒவ் வொன்றிலும் இந்த வீரப் பாடத்தை நிரப்பி, தமது மதத்தின் பொருட்டுப் பகைவனது வாளுக்கு இரையாவதைக்காட் டிலும் அவனை எதிர்த்துத் தாக்கி நையப் புடைத்து வெற்றி சூடுவதோ அன்றிப் போரில் இறப்பதோ சிலாக்யமாகும் என்று பறைசாற்றி வந்தார்கள். இத்தகைய வீர சிவாஜியின் சந்ததியார் பூனாவில் அரசாளும்போது ஔரங்கஜீப்பைப்போல் திப்புவும் ஹிந்துக்களைச் சித்திர வதை செய்து பலவந்தமாக இஸ்லாத்தில் சேர்த்துவரு வதைக் கண்டு மராட்டியரது வீர ரத்தம் பொங்கிற்று. திப்புவின் மத வெறிக்கும் மிருகத் தன்மையான அநீதி களுக்கும் பலியான ஆயிரக்கணக்கான பிராமணர்கள் முதலிய கர்னாடக, ஆந்திர தமிழ் ஹிந்துக்களின் பரிதாப மான சோகக் குரல் பூனாவுக்கு எட்டியதும் முகமதியக் கொடுங்கோல் ஆட்சியையே நசுக்கிவிட வேண்டும் என்ற ஆரவாரம் பொங்கி எழுந்தது. கிருஷ்ணா நதிக்கு அப்பால் உள்ள தமது ஹிந்து சகோதரர்களின் கஷ்டங் களைக் கேட்டு மஹாராஷ்டிரத்தின் ஹிந்து சாம்ராஜ்பம் சகிக்குமா? மராட்டியரது ஹிந்து சாம்ராஜ்யத்தையே

ஏளனம் செய்ததுபோல் ஆனதன்றோ? தமது படைகள் வடநாடுகளில் மகத்தான போர்புரிந்து கொண்டிருந்தாலும் கர்னாடக ஹிந்து மக்களைக் காப்பதற்குஒரு ஹிந்து சேனையை அனுப்புவதென்று நானா தீர்மானித்தார். நிஜாமின் உதவியைக் கருதி அவனுக்குத் திப்புவின் ராஜ்யத்திலிருந்து ஜெயிக்கும் நாடுகளில் மூன்றில் ஒரு பங்கு தருவதாக வாக்களித்து, நானா மதப் பித்து பிடித்த திப்புவை பலமாக எதிர்த்துத் தாக்குவதற்கு மராட்டியப் படைகளை அனுப்பினார். பட்வர்த்தன், பேஹரே முதலிய மராட்டியப் படைத் தலைவர்கள் சென்று, தனியாகவும் ஒன்று கூடியும் படையெடுப்புச் செய்து, பகைவனுக்குச் சேர்ந்த பாதாமி முதலிய ஸைன்ய ஸ்தலங்களைக் கைப்பற்றி, அடிக்கடி பல போர் முனைகளிலும் அவனது படைகளைச் சின்னா பின்னப் படுத்தி ஆவேசத்துடன் நெருக்கி வரவே, அவன் மலைப் பிரதேசங்களுக்குச் சென்று தலைமறைந்து தப்பினான். அங்கும் ஹிந்துப் படைகள் அவனை விடாமல் துரத்திவரவும், இத்தனை நாளாக மனம் கூசாமல் ஹிந்து ஸ்திரீகளையும் குழந்தைகளையும் துன்புறுத்தி, ஹிந்து அர்ச்சகர்களைச் சித்திரவதை செய்து, ஹிந்துப் பெண்மணிகளின் கற்பையும் அழித்து, இத்தகைய கொடிய அநீதிகளால் பெருமை கொண்டு வந்த இஸ்லாம் வீரச் சிங்கமான திப்பு இப்போது அதே ஹிந்துக்கள் மேன் மேலும் வெற்றி சூடித் தனது முதுகையே பிளந்து விடுவார்கள்போ லிருப்பதைக் கண்டதும் 'புத்தி, புத்தி' என்று கன்னத்தில் அறைந்துகொண்ட வண்ணம் சமாதானத்தை யாசித்தான். ஆயிரக் கணக்கான ஹிந்து ஏழைகளும் ஹிந்து ஸ்திரீகளும் எதிர்த்து நிற்காமல் துன்புற்று வருந்தி யழிந்ததைக் கண்டும் திப்புவின் மதவெறி யடங்காமல் மேன்மேலும் குமுறிக்கொண்டே வந்தது. ஆனால், எதிர்த்து நிற்காத ஆயிரக்கணக்கான ஏழைகளின் ஆத்மத் தியாகத்தினால் செய்ய முடியாத அரிய காரியத்தை மதப் பாதுகாப்புக்காக எதிர்த்துத் தாக்கிப் போர் புரியும் ஹிந்துப்படைகள் இப்போது செய்தது மல்லாமல் இனித் தீங்கு செய்ய முடியா வண்ணம் கொடுங்கோ லாட்சியை நசுக்கிவிட்டன. திப்பு நார்க்குண்டு, கிட்டூர், பாதாமி நாடுகளை மராட்டியர் வசம் கொடுத்து; மராட்டிய ஹிந்து

ஆட்சிக்குத் தான் கட்டவேண்டிய கப்பத்தின் பாக்கிக்காக முப்பது லட்சம் ரூபாயை ரொக்கமாகத் தந்ததுமன்றி, ஒரு வருஷத்தில் இன்னும் பதினைந்து லக்ஷம் கொடுப்பதாகவும் வாக்களித்தான். முகமதியரைப்போல் மராட்டியரும் இருக்க விரும்பி இருந்தால் அவர்கள் முகமதிய ஜனத்தொகை முழுவதையும் ஹிந்துமதத்துக்குப் பலவந்தமாகக் கொண்டுவந்திருக்க முடியும். திப்பு சுல்தானின் ஆதரவின் கீழ் வெறிபிடித்து ஹிந்துக்களின் மீது அநேக அநீதி யட்டூழியங்களைப் புரிந்து வந்த அந்த மொல்விகளையும் மௌலானுக்களையும் மராட்டியர் ஹிந்து முறைப்படி சிகை வைத்துக்கொள்ள வேண்டுமென்று பலவந்தப்படுத்தியிருக்க முடியாதா? ஆனால் மராட்டியர்கள் மசூதிகளை இடிக்கவில்லை; முகமதிய ஸ்திரீகளைத் தமது அந்தப்புரத்துக்கு இழுத்துச் செல்லவில்லை. பிற மதத்தினரைக் கத்தி முனையில் ஹிந்து மதத்தைத் தழுவும்படி பலவந்தப்படுத்தி அநீதிகளைச்செய்யவு மில்லை. ஏனெனில் தைமூர்களையும் திப்புக்களையும் அல்லாவுதீன்களையும் ஔரங்கசீப்புக்களையும் போல் அவர்கள் குரானைப் படித்திருக்க வில்லை. 'அல்லாவின் பக்தர்களே' இத்தகைய துஷ்டச் செயல்களையும் துராக்கிரமங்களையும் செய்ய யோக்கியதை பெற்றவர்கள். 'காபிர்' களுக்கு இந்த உரிமை என்றும் கிடையாது.

இவ்வாறு மராட்டியப் படைகள் திப்புவின் மத வெறியினின்றும் ஹிந்து மக்களைக் காப்பாற்றி வரும் போது, வடநாடுகளில் மராட்டியரின் பகைவர்கள் ஒன்று சேர்ந்து எதிர்க்க ஆரம்பித்தார்கள். அவர்களை மஹாதஜீ ஷிந்தியா ஒருவரே தனியாக எதிர்த்துத் தடுத்து வந்தார். அவர் ஸல்பை உடன்படிக்கைக்குப் பிறகு வடக்கே சென்றார். ஐரோப்பியத் தலைவர்களின் கீழ்ப் பயின்ற படைகள் அற்புதமான திறமையும் ஒழுங்கும் பெற்றிருப்பதையறிந்துணர்ந்தார். இதை இந்திய படைத் தலைவர்களுள் முதன் முதலாகப் பானிபட்டு யுத்த வீரரான சதாசிவ பாவூ உணர்ந்திருந்தார். ஐரோப்பிய முறையில் பெருஞ் சேனைகளைப் பழக்குவதற்கு அவர் ஏற்பாடும் செய்திருந்தார். சதாசிவ பாவூவின் திட்டத்தை மஹாதஜீ அமுலுக்குக் கொண்டு

வந்தார்; டீ பாயின் என்ற பிரெஞ்சுத் தளகர்த்தரைக் கொண்டு பெருஞ் சேனையை ஐரோப்பிய யுத்த முறைகளில் பழக்கியது மன்றி அதற்கு வேண்டிய யுத்த ஆயுதங்களையும் மற்றக் கருவிகளையும் அமைத்து எந்த ஐரோப்பியச் சேனையும் அதைக் கண்டு நடுங்கும்படியும் செய்தார். இத்தகைய பெருஞ் சேனையைக் கண்டு வடக்கிலுள்ள எதிரிகள் அச்சமடைந்து மஹாதஜியின் சொல்லுக்கு அடங்கி நடந்தார்கள். ஆங்கிலேயர் இனிமேல் தாம் டில்லியின் ராஜாங்க விவகாரங்களில் தலையிடுவதில்லை யென்றும் மராட்டியர் அதில் இஷ்டப்படி செய்யலாம் என்றும் உடன்படிக்கையில் வாக்களித் திருந்தும், ரகஸிமாய்ச் சூழ்ச்சிகளைச் செய்து தம்மால் கூடு மட்டும் மஹாதஜி ஷிந்தியாவுக்குக் கஷ்டங்களை அளித்து வந்தார்கள். மேலும் சக்ரவர்த்தியான ஷாஹ் ஆலம் என்பவனைக் கைப்பற்றி அவன் மராட்டியரது கையில் அகப்படாம லிருப்பதற்கு வேண்டிய முயற்சிகளையும் செய்து வந்தார்கள். ஆனால், டில்லி அரசியல் விவகாரங்களில் மஹாதஜிக்குத்தான் பிரதான அதிகாரம் இருந்து வந்தது. அவர் டில்லிச் சக்ரவர்த்தியைக் கைப்பற்றி, வஜீர் பதவிக்கு உரிமை பாராட்டிய முகமதியர்களை வென்று, தம்மையே சக்ரவர்த்தியின் ஜீராகநியமிக்கும்படி சொல்லவும், சக்ரவர்த்தியானஷாஹ் ஆலமும் அதற்கிணங்கி மஹாதஜியைத் தனது வஜீராக்கி, தமது படைகளுக்கு அவரைத் தலைவராக்கி, அவருக்கு டில்லி ஆக்ரா இரு மாகாணங்களையும் கொடுத்தான். இதைக் கண்டு முகமதியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் கோபம் பொங்கி வந்தது. இந்த ஏற்பாட்டினால் முகமதிய ஏகாதிபத்தியமே அழிந்து விட்டது என்று சொல்லலாம். அது மட்டு மன்றி முகலாயச் சக்ரவர்த்தி பேஷ்வாவுக்கு வஜீர்-இ-முடாடிக்என்ற கௌரவத்தையும் அளித்தான். அதனால் சக்ரவத்தியின் பெயராலும் மஹா ராஜாதிராஜர் என்றப் பட்டத்தினாலும் பேஷ்வா இந்தியா முழுவதிலும் ஆட்சி புரிய முடிந்தது. இதற்குக் கைம்மாருகத் தன் செலவுக்கு 65000 ரூபாயும் சக்ரவர்த்தி யென்ற பட்டமும் ஷாஹ் ஆலத்துக்கு இருந்து வந்தன. இந்தப் புதிய அரசியல் திட்டத்தைப் பற்றி அக்காலத்து மராட்டியக் கடிதத்தி :லிருந்து நன்கறியலாம்: "இந்திய சாம்ராஜயம் நம்முடையதாகி விட்டது. முக

லாயக் கிழவனே விருப்பத்துடன் நம்மிடமிருந்து உபகாரச் சம்பளம் பெற்று வருகிறான். அவனுக்குச் சக்ரவர்த்தி என்ற பட்டம் இருந்து வருகிறது என்றாலும் அதுவே அவனுக்குப் போதுமான திருப்தியை அளித்து வருகிறது. இந்த நாடகத்தை நாம் சில நாள் வரையில் நடத்தியே தீர வேண்டி யிருக்கிறது." இதே மாதிரியுள்ள சந்தர்ப்பங்களில் ஆங்கிலேயரும் இத்தகைய நாடகத்தையே 1857-வது வருஷம் வரையில் நடத்தி வந்தார்கள். இந்த விசேஷ நிகழ்ச்சியான ஹிந்து ஆட்சியின் உண்மையை எல்லா ஹிந்து நாடுகளிலும் அறிவுறுத்துவதற்காக மஹாதஜி இந்திய நாடுகளில் பசுக்களையும் மாடுகளையும் கொல்வதைத் தடுக்கும் திட்டத்தை அமைத்தார். மேலும் அவர் அரசியல் முறையில் பெற்ற அந்தஸ்தைச் சொல்லளவில் அனுபவித்துத் திருப்தி யடையாமல், எதிர்த்து நின்று கலகம் புரிந்த சிற்றரசர்களையும் அடக்கி, மகத்தான மஹாராஷ்டிர மண்டலத்தின் ஆதரவின் கீழ் அவர்களை அங்கமாக உடைய ஹிந்து சாம்ராஜ்யத்தை நாட்டத் தலைப்பட்டார். சக்ரவர்த்திக்கு அத்தனை நாள் ஆங்கிலேயர் கப்பம் கட்டாமல் இருந்தார்கள். அதன் பாக்கியையும், சௌத், ஸர்தேஷ்முகி வரிகளையும் கட்டும்படி மஹாதஜி ஆங்கிலேயருக்கு உத்திரவு அளித்தார்; பின்பு வரி விதித்து, சுயேச்சையதிகாரம் செலுத்தி வந்த ராஜப் பிரதிநிதிகளையும் ஜமீன்தார்களையும் அடக்கினார். இதனால் வட நாடுகளில் பெருத்த எதிர்ப்புத் தோன்றியது. பிரபுக்களும், அமீர்களும், கான்களும் மராட்டியர் எதிரே கலகம் செய்து கிளம்பிப் போருக்கு வந்தார்கள். அதுமட்டு மல்லாமல் இந்தியாவில் ஹிந்து சாம்ராஜ்யத்தை நாட்டவல்ல ஒரே ஹிந்து ராஜ்யமான மஹாராஷ்டிரத்துக்கு எதிராக ராஜாக்களும் ராவ்களும் கிளம்பி முகமதியர்களுடனும் ஆங்கிலேயருடனும் சேர்ந்து கொண்டார்கள். இந்த துரதிருஷ்டமான நிலைமை இயற்கையானதே. இரு பெரிய ராஜபுத்திர ராஜ்யங்களான ஜயபூரும் ஜோத்பூரும் மராட்டியருக்கு எதிராக ஒன்று சேர்ந்து வடநாடுகளில் உள்ள முகமதியப் படைகளுடனும் சேர்ந்துகொண்டு ஷிந்தியாவின் சேனையை எதிர்த்து லால் ஸோட் என்ற இடத்தில் பெரும்போரையும் நடத்தினார்கள். இந்த ராஜபுத்திர சிம்மங்கள் முகலாயருக்

கும் ஆங்கிலேயருக்கும் எதிரேனும் இவ்விதம் ஒற்றுமைப் பட்டிருந்ததே யில்லை. போர் முனையில் மஹாதஜியின் தலைமையில் இருந்த சக்ரவர்த்தியின் முகமதியப் படைகள் மராட்டியரை விட்டு ராஜபுத்திரர் கட்சியில் சேர்ந்து கொண்டார்கள். இவ்வாறு திடீரென்று கைவிடப்பட்ட மராட்டியர் தோல்வியுண்டனர். ஆனால் மராட்டியத் தலைவர் மன உறுதி சிதறவில்லை. அவர் அஞ்சாமல் மீண்டும் மராட்டியப் படைகளைத் திரட்டினார். லகோபா தாதா என்ற மராட்டியச் சேனதிபதி ஆக்ரா கோட்டையில் இருந்தார். முகமதியர்கள் அதைச் சூழ்ந்து தாக்கினார்கள், ஆனால் அவர் தைரியத்துடன் விடாமல் எதிர்த்து வரவும், எதிரிகளின் வெற்றி குன்றிப்போயிற்று. அப்போது மராட்டிய மக்களால் என்றும் மறக்க முடியாத நஜீப்கானின் பேரப் பிள்ளையான குலாம்காதர் என்பவன் ரோஹில்லருடனும் பட்டானியருடனும் வந்து மஹாதஜியின் கையி லிருந்தும் டில்லி ராஜ்ய அதிகாரத்தைக் கைப்பற்ற விரும்பினான். மூடாத்மாவான சக்ரவர்த்தியின் தூண்டுதலால் அவன் டில்லிக்குள் நுழைய முடிந்தது. அப்போது ஆக்ராவைச் சுற்றி முகமதிய ராஜபுத்ர சேனைகளுடன் மஹாதஜி போர் புரிந்து வந்தார். அவர் வடநாடுகளில் நேர்ந்த துரதிஷ்ட நிகழ்ச்சியை நானாவுக்குத் தெரிவித்து இதற்கெல்லாம் காரணம் ஆங்கிலேயரின் பேராசையே என்றும் எழுதினார். மராட்டியரைப் போர் முனையில் நேருக்கு நேர் சந்தித்து அதன் ருசியை அனுபவித் திருந்த ஆங்கிலேயரோ இப்போது அவர்களைப் போர் முனையில் நேரே சந்திக்க தைரிய மற்றிருந்தார்கள். மராட்டியர் இன்னும் கொஞ்சம் நாள் இப்படிச் சக்ரவர்த்தியின் பெயரால் சர்வ அதிகாரங்களையும் நடத்தி வந்தால், அவர்கள் அப் பதவியை விடாமல் பிடித்துக் கொண்டு, அவ் வதிகாரங்கள் யாவையும் தாங்களே தங்கள் பெயரால் சுதாவாக நடத்த ஆரம்பித்து விடுவார்கள் என்று ஆங்கிலேயர் அறிந்தார்கள். உண்மையில் மராட்டியரும் அவ்வாறே வெளிப்படையாக அதிகாரம் செலுத்த ஆரம்பித் திருந்தார்கள். ஆதலால் எவ்விதமேனும் முகலாயக் கிழவனான சக்ரவர்த்தியைக் கைப்பற்ற வேண்டும் என்று ஆங்கிலேயர் விரும்பினார்கள்

நாஞவுக்கு எழுதிய கடிதத்தில் மஹாதஜீ தமது நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்தார்: "நமது மகத்தான சாம்ராஜ்யத்துக்காகவே நாம் வாழ்ந்து போர் புரிந்து இறப்போம். இந்த சாம்ராஜ்யத்தின் தலைவரே நம் யாவருக்கும் பொதுவான தலைவராவர். அவருக்கே நமது விசுவாசத்தைத் தருவோம். நம்முள் பொறாமையையும் சுயநல லாபத்தையும் அறவே ஒழிப்போமாக. என் கருத்தைப் பற்றி யாருக்கேனும் சந்தேகம் தோன்றினால் அதை இப்பொழுதே அகற்றி விடுங்கள். என்னைப்பற்றி யாரேனும் புகார் சொன்னால் அதை நீங்கள் செவிசாய்த்துக் கேட்க வேண்டாம். ஏனென்றால் அந்தப் பொய்யர்தான் நம்முள் பிளவு செய்து தத்தம் சுயநல நோக்கத்தைப் பூர்த்தி செய்து கொள்ள விரும்புகிறார்கள். நமது சாம்ராஜ்யத்துக்காக நான் செய்த தொண்டுகளைக் கவனித்துப் பார்த்தால் இவர்கள் சொல்வதெல்லாம் புரட்டு என்று தெரியவரும். காலத்துக்கேற்ற அறிவும் வன்மையும் அமைந்தோராய் தேசீயக் கொடியின் கீழ் திரண்டு நிற்போமாக! ஹிந்துஸ்தானம் முழுவதிலும் நமது முன்னோர்கள் நாட்டிய உன்னத தேசிய லட்சியத்தைப் பரப்புவோமாக! இந்த மகத்தான சாம்ராஜ்யம் ஒற்றுமை சிதறி அழிந்து போகாதவாறு நாம் இதைக் காப்பாற்றுவோமாக!" தேசத்துக்குப் பெருத்த ஆபத்து நேரிடும்போல் இருக்கும்போது நாஞ இத்தகைய வேண்டுகோளைச் செவியுற்று வாளா இருந்திடுவாரா? நாம் முன் சொல்லியவாறு நாஞ படை அனுப்பித் தீப்புவின் மதத்தை யடக்கித் தாழ்த்தியதும், அவர் ஹோல்கர் அலிஜா பகதூர் இருவரையும் மஹாஜிக்கு உதவி செய்யுமாறு அனுப்பினார். தமது முன்னோர்களின் ஆசைக் கனவான ஹிந்து சாம்ராஜ்யத்தை நாட்டி ஹிந்துஸ்தானம் முழுவதையும் அதன் ஆதிக்கத்துக்குள் ஒற்றுமைப் படுத்த முயற்சிகள் செய்து வரும் இத்தகைய சமயத்தில் ராஜபுத்திரரும் மராட்டியரும் போர்க்களத்தே எதிர் எதிராக நிற்பதால் தான் ஹிந்து ஆட்சியின் பகைவர்கள் தலைதூக்கத்தொடங்கினார்கள் என்று அறிந்து நாஞ வருத்தப் பட்டார். ஆதலால் அவர் ராஜபுத்திரர்களுடன்—அதிலும் முக்கியமாக ஜயபூர் அரசருடன்—பேஷ்வாவின் பெயரால் சமாதானப்

பேச்சுத் தொடங்கி, அவர்கள் ஹிந்து ஆட்சியின் சத்துருக்களிடம் உறவு கொண்டாடலாகாது என்றும், அவர்கள் எவ்விதத்தாலாவது மராட்டியர் நாட்டிய ஹிந்து சாம்ராஜ்யத்துடன் ஒத்துழைத்துச் சமரஸம் கொண்டாட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். பூனவிலிருந்து உதவிக்குவந்த மராட்டியப் படைகளின் ஆதாரவைப் பெற்று மஹாதஜியும் தமது பகைவர்களை முறியடித்துத் தாழ்த்தினர்; பின்பு அவர் டீ பாயினல் பயிற்சிபெற்ற இரு படைகளை பனகான், அப்பாகாண்டேராவ் முதலிய மராட்டிய சேனதிபதிகளின் கீழ் அனுப்பிப் பானிப்பட்டு யுத்தத்தின் காரண பூதனான நஸீப்கானின் பேரப்பிள்ளையான குலாம் காதரை எதிர்க்கச் செய்தார். முகம்தியர் போர் தொடுக்கத் தீர்மானித்தனர். இரு போர்கள் மும்முரமாக நடக்கவும் முகமதியர் சிதறுண்டு முறிவுற்று நாற்புறமும் ஓடினர்கள். இஸ்மாயில் பேக், குலாம்காதர் இருவரும் டில்லியை நோக்கி ஓடவும், மராட்டியர் அவர்களைத் துரத்தி வந்தார்கள். சக்ரவர்த்தியான ஷாஹ் ஆலமோ நடுங்கினன். குலாம்காதர் பணம் கொடு என்று ஆரவாரித்தான். அந்தச் சக்ரவர்த்தியினிடமோ ஒரு செப்புக் காசுகூடக் கிடையாது. இதைக் கண்டு கோபத்தால் வெறி கொண்டு கொடிய மூர்க்கனன அந்த ரோஹில்லத் தலைவன் ஆங்குள்ள யாவரையும் விடாமல் படுகொலை செய்து, அங்கு அகப்பட்டதையெல்லாம் கொள்ளை கொள்ளவும் ஆரம்பித்தான்; அந்தச் சக்ரவர்த்தியைச் சிங்காதனத்தினின்றும் கீழே தரைமீது தள்ளி, அவனது மார்பின்மீது முழங்காலை யூன்றி, கத்தி யெடுத்து, அக்பர் ஔரங்கசீப்பின் வம்சாவளியைச் சேர்ந்த திக்கற்ற அக் கிழட்டுச் சக்ரவர்த்தியின் கண்களைப் பிடுங்கி யெறிந்து விட்டான்; இத்தகைய குரூரம் செய்தும் திருப்தியடையாதவனாய், குலாம்காதர் சக்ரவர்த்தியின் மனைவிகளையும் பெண்களையும் ஜனனவிலிருந்து இழுத்து வந்து நிருவாணமாக்கித் தன் கண்ணெதிரே அவர்களின் கற்பை யழிக்கும்படி சேவகர்களுக்குக் கட்டளையிட்டான். அவனது இத்தகைய மிருகத்தன்மையான வெறியின் காரணங்களுள் ஒன்று என்னவென்றால் அவன் யுவ பருவத்தில் இருந்தபோது சக்ரவர்த்தி ஷாஹ் ஆலத்தின் உத்திரவின்படி அவனது பீஜத்தை யறுத்து

ஆண்மையை ஒழித்திருந்ததுதான். டில்லியிலோ கொள்ளை ஓங்கிவிட்டது. அந்திய மதத்தினர் மீது மதத்தின் பெயரால் முகமதியர்கள் செய்துவந்த அட்டூழியங்களைப் போல், இப்போது அவர்கள் தமது மதத்தினர் மீதே அக்கிரமங்களைச் செய்தார்கள். அன்னியருக்குக் கொடுமை யிழைப்பவன் தம்மவருக்கே கொடுமை விளைவிப்பான் என்பது விளங்குகிறதன்றோ? இவ்விதம் கொடியவர்கள் தங்களது கொடுமைகளுக்குத் தாங்களே பலியாகி விடுகிறார்கள். ஆனால் இத்தகைய ஆபத்துக் காலத்தில் முகமதியச் சக்ரவர்த்தியையும், குடிகளையும், முகமதிய ஸ்திரீகளையும் இஸ்லாத்தின் பக்தர்கள் செய்துவந்த குரூர சித்திரவதையினின்றும் கொடிய அநாகரிக அவகேட்டினின்றும் காப்பாற்றுபவர் யாவர்? காபிர்களே-அதிலும் ஹிந்துக்கள் அதிலும்—மராட்டியர்கள்—அவர்களைத் தவிர வேறு யாருளர்? இந்த டில்லி சிங்காதனத்தை யலங்கரித்து வந்த முகலாயர்களும் மற்ற முகமதிய சிகாமணிகளும் ஹிந்துக்களின் தெய்வ ஆலயங்களைத் தரையோடு மட்டமாக்கி, ஹிந்துக்கள் தொழுதுவந்த விக்கிரகங்களை உடைத்தெறிந்து, ஹிந்து அரசிகளையும் அரசிளங் குமரிகளையும் தமது ஜனானாவுக்குப் பலவந்தமாய் இழுத்துச் சென்று, ஹிந்து ஸ்திரீகளின் கற்பையும் ஹிந்து சிறுவர்களின் தருமத்தையும் குலைத்து அழித்து, தாயைவிட்டுக் குழந்தையையும் அண்ணனிடமிருந்து தம்பியையும் அகற்றி, ஹிந்து ரத்தப் பிரவாகத்தில் தமது கரங்களைக் கழுவி, அதனால் நாஸ்திக ஸம்ஹாரி (காஜி) என்றும் தரும ரக்ஷகன் என்றும் இவ்வுலகில் வெற்றிப் பட்டங்கள் சூடி, மறுவுலகில் இப் புண்ணியச் செயல்களுக்கு வெகுமதிகளையும் எதிர்ப்பார்த்து வந்தார்களல்லவா? இப்பொழுதோ அதே ஹிந்துக்கள் டில்லிக்கு வருகிறார்கள்—மசூதிகளைத் தரைமட்டமாக்குவதற்கு அன்று; முகமதியச் சமாதிகளையும் பிறைகளையும் உடைத்தெறிவதற்கு அன்று; முகமதிய அரசிகளின் கற்பைக் கெடுப்பதற்கு அன்று; முகமதிய அரசிளங் குமரிகளையோ அன்றி முகமதியக் குடிசைகளில் வசிக்கும் ஏழைப் பெண்ணையேனும் கையினால் தொடுவதற்கு மன்று; பெற்றோர்களிடமிருந்து குழந்தைகளைப் பலாத்காரமாகப் பிடுங்கிச் சென்று தமது மதத்தில் சேர்ப்ப

தற்கும் அன்று; படுகொலை என்னும் கள் உண்பதற்கு மன்று; ரத்த வெறி பிடித்து அவர்களைக் கொல்வதற்கு மன்று; எதிரிகளைக் கொன்று அவர்களது சிரங்களை அறுத்து, அடுக்கி மலைபோல் குவித்தோ அன்றி எதிரிகளின் தலை நகரைத் தீக்கிரையாக்கியோ தமது வெற்றியின் பெருமையை அளந்து காட்டுவதற்கும் அன்று— அவ்வாறு மாராட்டியர் செய்திருந்தனரேல் முகமதியர்களுக்கு அதில் குறை கூற உரிமையே இல்லை. டில்லியின் சிங்காதனத்தை இன்னமும் அலங்கரித்து வந்த முகமதியனையும் அந் நகரத்தாரையும் முகமதியர்களது கொடிய சித்திரவதைகளி லிருந்தும் காப்பாற்றுவதற்காகவே இப்போது ஹிந்துக்கள் டில்லியை நோக்கி வருகிறார்கள். டில்லி நகரே மாராட்டியரது வரவை எதிர்நோக்கி ஏங்கியிருந்தது. அந் நகரத்துக் குடிகளான ஹிந்துக்களும் முகமதியர்களும் ஹிந்து சாம்ராஜ்யத்தின் படைகள் நகர வாயிலுள் பிரவேசித்ததும் ஆவலுடன் வரவேற்றுக் கொண்டாடினார்கள். அலிஜா பஹதூர், அப்பாகாண்டேராவ், ராணாகான், டீ பாயின் இவர்கள் டில்லியைக் கைப்பற்றினார்கள். ஆனால் பாவியான குலாம்காதர் அங்கிருந்து தப்பியோடிவிட்டான். நஜீபகானின் சந்ததியைச் சேர்ந்த அவனுக்கும் மாராட்டியருக்கும் தலைமுறையான கடும் பகையிருந்தது. அவன் தன் பாவங்களுக்குத் தக்க தண்டனையிலிருந்தும் தப்பி ஓடமுடியாது. ஔரங்கசீப்பின் வம்சாவளியைச் சேர்ந்த ஷாஹ் ஆலம் தனது முகமதியச் சகோதரர்களிடமிருந்து அடைந்திருந்த துன்பத்தை நீக்கும்பொருட்டு மாராட்டியர் ஜீவகாருண்யம் கொண்டவராய்த் தம்மாலான அளவு உதவி செய்தார்கள். முன்பு பானிப்பட்டில் நஜீப்கான் ரகசியமாய்ச் சதி செய்ததைப்போல் இப்போது ஷாஹ் ஆலம் மாராட்டியரிடம் ரகசியமாய்ப் பகை வைத்து, குலாம்காதருடன் சேர்ந்து மாராட்டியருக்கெதிரே பகைக் கூட்டத்தைக் கிளப்பக் கருதியிருந்தான். இதை மாராட்டியரும் அறிவார்கள். குலாம்காதர் மீரத் கோட்டைக்குள் புகுந்து கொண்டதும் அவனை மாராட்டியப் படை தாக்கிற்று. ஆனால், அவன் மும்முரமாக எதிர்த்து நின்றான். மாராட்டியருக்கு முன்னால் நீண்டகாலம் நிற்கமுடியாமல், அவன்

பிழைத்தால் போதுமென்று குதிரையின் மீதேறி ஓடவும் மாராட்டியர் துரத்தி வரவே அர்த்தக் கலவரத்தில் அவன் குதிரையிலிருந்து கீழே விழுந்து ஸ்மரணை தப்பினான். அவனைக் கண்டு அடையாளம் அறிந்த சில கிராமவாசிகள் அவனை மராட்டியரது கூடாரத்துக்கு எடுத்துச் சென்றார்கள். முகமதிய ஜனங்களே அக்கொடிய பாவிக்குத் தகுந்த தண்டனையை விதிக்க வேண்டும் என்று ஆரவாரித்தார்கள். ஷிந்தேவின் முன்னிலையில் அப் பாவியைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். அடுத்தடுத்து மூன்று தலைமுறைகளாய்க் குலாமின் குடும்பம் ஷிந்தே மீது கடும் பகை பாராட்டி வந்தது. அவன் தனது அக்கிரமங்களுக் கெல்லாம் தகுந்த தண்டனையை அடையாமல் தப்பிக்க முடியுமா? அவனது அங்கங்களைப் பயங்கரமான முறையில் அறுத்துத் தள்ளினார்கள். ஆனால் அவன் இன்னும் மராட்டியரைப் பழிப்பதைக் கண்டு அவனது நாவையும் கண்களையும் பிடுங்கி எறிந்தாகள். கடைசியில் அங்க ஹீனமடைந்து உருவழிந்து போன நஸீப்கானது பேரப் பிள்ளையான குலாம் காதரைச் சக்ரவர்த்திக்கு அனுப்பினார்கள். தனக்குக் குரூர சித்திரவதைகளைச் செய்த அந்த மனிதப் பிசாசு தக்க தண்டனை யடைந்து இறந்ததைக் கேட்டு ஷாஹ் ஆலத்துக்குச் சந்தோஷம் உண்டாயிற்று. இவ்விதம் பானிப்பட்டில் மராட்டியரை அழிப்பதாக வீரவாதம் பேசிய நஸீப்கானின் குலமே மராட்டியரது கையில் அழிவுற்றது. அவனது குலமும் ராஜ்யமும் இருந்த இடம் தெரியாமல் அடியோடு அழிந்துவிட்டது.

1789-வது வருஷத்தில் மஹாதஜி மற்ற மராட்டியப் படைத் தலைவர்களுடன் சேர்ந்து முகமதியப் பகைவர்களையும் அவர்களது கட்சியைச் சேர்ந்த ராஜபுத்திர அரசர்களையும் வென்றிடவும், அதைக் கண்டு ஆங்கிலேயரும் போருக்கு வாராமல் அடங்கிவிட்டார்கள். மராட்டியர் கிழட்டுச் சக்ரவர்த்தியை மீண்டும் கைப்பற்றவும், அவன் வக்கீல் - இ - முடாலிக் என்ற பெருங் கௌரவத்தையும் பதவியையும் மஹாதஜிக்குக் கொடுக்க விரும்பினான். ஆனால் அவர் அப் பதவியை ஏற்க மறுத்து, முன்

போலவே பூனுவிலிருக்கும் தமது இளம் பேஷ்வாவுக்கே அதைக் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தினர்.

இவ்விதம் வட நாடுகளில் மராட்டியப்படை போர் நடத்திக்கொண் டிருக்கும்போது, திப்பு மீண்டும் போர் புரிய விரும்பினன். ஆனல் 1798-வது வருஷம் அவன் மராட்டியரது நாடுகளைக் கைப்பற்ருமல் திருவாங்கூர் ஹிந்து ராஜ்யத்தின் மீது படையெடுத்தான்; வடபுறம் கிருஷ்ணு நதிக்கப்பாலுள்ள மராட்டியரை ஜெயிப்பது முடியாத காரியம் எனினும் தென் புறத்திலாவது பலமற்ற திருவாங்கூர் ராஜ்யத்தை ஜெயித்துவிடலாம் என்று கருதினன். ஆனல் நான உடனே நிஜாமுடனும் ஆங்கிலேயருடனும் சேர்ந்து திப்புவின்மீது போர் தொடுக்கவும், பட்வர்த்தன் திப்புவின் ராஜ்யத்தின் மீது படை யெடுத்தார். மராட்டியர் வந்ததும் திப்புவின் குடிகள் அவனுக்கு எதிராக அவர்களுடன் சேர்ந்து கொண்டு, திப்புவின் அதிகாரிகளைத் துரத்தி, வரி வசூலித்து, மராட்டியருக்கு உதவி புரிந்தார்கள். ஹுப்ளி, தோளவட், மிஸ்ரிகோட் இவைகளைக் கைப்பற்றி மராட்டியர்கள் மேன்மேலும் வந்து திப்பு கைப்பற்றியிருந்த தார்வாட் கோட்டையை முற்றுகை யிட்டார்கள். அங்கிருந்த முகமதியச் சேனதிபதி விடாமல் எதிர்த்தான். மராட்டியப் படைத் தலைவர் சொன்னதையும் கேளாமல் ஆங்கிலேயர் அக் கோட்டையைத் திடீரென்று பலக்கத் தாக்கிக் கைப்பற்ற முயன்றும் முடியாமல் தவறி விட்டார்கள். இரு திறத்தாரும் பிடிவாதத்துடன் போர் புரிந்து வந்தனர். கடைசியில் மராட்டியர் விடாமல் வீரவன்மையுடன் தாக்கிக் கோட்டையைக் கைப்பற்றினர்கள். பான்ஸே, ராஸ்தே முதலிய மராட்டியப் படைத் தலைவர்கள் துங்கபத்திரா நதியைத் தாண்டிவந்து ஸாந்தி, படனூர், மைகோடா, ஹபேனூர், சேங்கிரி முதலிய சத்துருஸ்தானங்களைக் கைப்பற்றினர்கள். மராட்டியக் கப்பல் படையும் சும்மா இருக்கவில்லை. அது கடல்கரையைக் காத்துக் காவல் புரிந்து சுற்றி, கார்வார், ஹன்ஸார் முதலிய இடங்களில் உள்ள முகமதிய அதிகாரிகளைத் துரத்திற்று. நரஸிங்கராவ் தேவோஜி, கணபதிராவ்

மேஹேந்தனே முதலிய மராட்டிய அதிகாரிகள் சந்தாவர், ஹோணவர், கிரிஸப்பா, தாரேஷ்வப், உத்கினி முதலிய இடங்களைக் கைப்பற்றி வரவும், மராட்டியப் படைகள் சீரங்கப் பட்டணத்தின் மீது படையெடுத்தன. இன்னொரு புறத்தில் கார்ன்வாலிஸ் தலைமையின் கீழ் ஆங்கிலேயரும் படையெடுத்துவந்தார்கள். ஆனால், திப்புவின் சூழ்ச்சிகளால் அவர்கள் ஆகாரம் இன்றிப் பட்டினியோடு வெகு நாள் இருக்கவேண்டி நேர்ந்தது. உணவில்லாததால் குதிரைகள் இறந்து குவிந்தன. ஆகாரப் பொருள்களும் மற்றச் சுகங்களும் குறைவின்றி யமைந்தோராய் மராட்டியினர் சந்தோஷத்துடன் உற்சாகமாய் வருவதைக் கண்டதும், ஆங்கிலேயருக்கு உயிர் வந்தது. ஹரிபந்த் படகே அவர்களுக்குக் கருணையுடன் வேண்டிய உணவுப் பொருள்களையும் தந்தார். இரு படைகளும் அங்கே பத்து நாள் தங்கியிருந்தன. மராட்டியர் இஷ்டப்பட்டிருந்தால் திப்புவின் ராஜ்யத்தையே அழித்திருக்க முடியும். ஆனால் நானா அவ்வாறு செய்ய விரும்பவில்லை. மதராஸில் ஆங்கிலேயர்கள் செய்துவரும் பேராசைச் சூழ்ச்சிகளுக்குத் தடையாய் அவன் இன்னும் கொஞ்சகாலம் இருந்து வரவேண்டுமென்று நானா விரும்பினர். ஆனல் இவ்விதம் ஆங்கிலேயராலும் மராட்டியராலும் உதையுண்டு திப்பு சமாதானத்தை யாசிக்கவும், பரஷ்ராம் பாவூவும், ஹரிபந்த் படகேயும் அவனுடன் உடன்படிக்கை செய்துகொள்ளும்படி ஆங்கிலேயரைத் தூண்டினர்கள். ஆனல் ஆங்கிலேயர் அவனது ராஜ்யத்தையே அழித்துவிட விருமபினர்கள். இந்த உடன்படிக்கையால் திப்பு தன் ராஜ்யத்தில் அரைப் பங்குக்கு மேலாக மராட்டியருக்குத் தந்து, அபராதமாக மூன்று கோடி ரூபாயும் அவர்களுக்குச் செலுத்தி, இனி ஹிந்து ராஜ்யமான திருவாங்கூரின் மீது தான் படை எடுப்பதில்லை என்று வாக்கும் அளித்து, அதற்கு ஜாமினாகத் தனது இரு புதல்வர்களையும் அடைக்கலம் செய்தான். லாபத்தை மராட்டியரும் ஆங்கிலேயரும் நிஜாமும் சமமாகப் பிரித்துக் கொண்டார்கள். மராட்டியருக்கு 90 லட்சம் ரூபாய் வருமானமுள்ள பிரதேசமும் அபராதத்தில் ஒரு கோடி ரூபாயும் கிடைத்தது. இவ்வாறு திப்புவின் மூன்முவது கடும் போர் முடிந்தது. 1792-வது வருஷம்

மாராட்டியப் படைகள் வெற்றியுடனும் போர்ப் புகழுடனும் தமது தலை நகரை யடைந்தன.

மாராட்டிய சாம்ராஜ்யத்தின் வட நாட்டுப் படைத் தலைவரான மஹாதஜியும் வெற்றியும் போர்ப் புகழும் பெற்று தலை நகரான பூனாவை நோக்கிப் பெரும் படையுடன் திரும்பி வந்தார். தெற்கில் திக்கு விஜயம் செய்து, தென்னாடுகளைத் திப்புவின் மதவெறியி லிருந்தும் காப்பாற்றிய படகே, ராஸ்தே இவர்களது பெருஞ் சேனைகளும், - வடக்கில் திக்கு விஜயம் செய்து முகமதியச் சக்ரவர்த்தியையே ஹிந்து சாம்ராஜ்யத்தின் உபகாரச் சம்பளம் வாங்கும் ஊழியனாக்கி, ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரர் பாட்டானியர் ரோஹில்லர் இவர்கள் யாவரும் எதிர்த்து நின்று தடை செய்தும் அவர்களெல்லோரையும் முறி யடித்துச் சாம்ராஜ்ய அதிகாரத்தை நாட்டி வந்த மஹாதஜியின் சேனைகளும் - இவ்விரு பெருஞ் சேனைகளும் பூனாவில் கூடவும் இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள ராஜ்யங்கள் எல்லாம் இனி என்ன நடக்குமோ என்று எதிர்பார்த்தார்கள். இந்தக் கூட்டத்தின் கருத்து என்ன? இந்த மாராட்டிய மண்டலத்தின் அடுத்த காரியம் என்னவாயிருக்கும்? இந்த பலாட்டியர்கள் இனி யாரைத் தாக்கப் போகிறார்கள்? எல்லா மக்களும் பூனாவை நோக்கினர். ஏனெனில் டில்லிக்கு முன்னிருந்த மகத்துவமெல்லாம் போய்விட்டது. பூனாவே இந்திய அரசியல் ஏற்பாடுகளுக்கு முக்கிய ஸ்தலமாகிவிட்டது. இத்தகைய வெற்றிகளின் நடுவே மஹாராஷ்டிர மக்களின் மனதில் வேறு விதமான கவலைகள் தோன்றின. இரு பெருந் தலைவர்களான நானாவும் மஹாதஜியும் நேருக்கு நேர் சந்திக்கப் போகிறார்கள். சிறந்த தேச பக்தர்களாயிருந்தும், இவர்களது மனதில் பரஸ்பர பொறாமையும் பகையும் இருக்குமோ? ஹிந்து ஆட்சியைச் சூழ்ந்திருந்த பகைவர்களை முறியடிக்கும் அவசியத்தினால் இருவரும் இந் நாள் வரையில் ஒருவரை ஒருவர் எதிர்க்காமல் இருந்தார்களோ? இருவரும் தமது முன்னோர்கள் நாட்டியிருந்த ஹிந்து ஆட்சியைக் காப்பாற்றி நிலை நிறுத்த மனப் பூர்வமாய் உழைத்திருக்கிறார்கள். இத்தனை நாள் அடங்கி

யிருந்த பகை இப்போது வெளியே பொங்கி விடுமோ? அவ்வாருயின் ஹிந்து சாம்ராஜ்யத்துக்கே அழிவு காலம் வந்துவிடுமே! இதை நினைக்கவும் மராட்டிய மக்கள் அஞ்சி, தமது அரசியல் நிபுணர்களுக்கும் போர் வீரர் களுக்கும் பெருந் தலைவர்களான இவ்விருவருக்குள் நடக்கும் சச்சரவைக் கவலையுடன் கவனித்து வந்தார்கள்.

மராட்டியரது தயவினுல் சக்ரவர்த்தி யென்ற பட்டத்தை வகித்துவந்த அந்த கிழட்டு முகலாயன் தன்னுல் அளிக்கக்கூடிய வக்கில் - இ - முடாலிக், மஹாராஜாதி ராஜா என்ற பெரும் பட்டங்களை மஹாதஜிக்குக் கொடுக்க விரும்பியதையும், அவர் அவைகளைத் தாமே வகிக்க மறுத்து தமது தலைவரான பூனுவிலுள்ள இளம் பேஷ்வாவுக்கே வாங்கித் தந்ததையும் நாம் முன்னமே சொல்லி யிருக்கிறோம். வன்மையும் அதிகாரமும் அற்ற ராஜ சேவகனுக்கு இத்தகைய பட்டங்கள் அளிக்கப்பட் டிருந்தால் அவைகளுக்கு மதிப்பே யில்லாமல் இருந்திருக் கும். ஆனுல், இப்போது அவைகள் வீண் பட்டங்களாக இருக்க முடியாது. அவைகளால் சக்ரவர்த்தியின் பெயரால் ஆட்சி புரியப் பட்டதாரிக்கு உரிமை கிடைத்தது மன்றி, சக்ரவர்த்திக்குத் தானுகவே எதையும் செய்ய அதிகாரமில்லாமல் போய்விட்டது. சாம்ராஜ்ய அதிகாரத் தின் பொருட்டு ஆங்கிலேயரும் மராட்டியரும் மற்றவரும் போர் புரிந்தும் கிழட்டு முகலாயனைத் துரத்துவதற்கு யாதொரு ஏற்பாடும் நடக்கவில்லை. அதிகாரத்தில் சக்ர வர்த்தியா யில்லாவிடினும் அவன் பெயரளவில் சக்ரவர்த்தி யாகவே இருந்து வந்தான். சக்ரவர்த்தியின் முழு அதிகார மும் மராட்டியரது கையில் இருந்து வந்தாலும், அவர்கள் சக்ரவர்த்தி யென்ற பட்டத்தையும் பெற்றிடுவார்களே யாயின் அதை அப்புறம் ஒருகாலும் கைவிடமாட்டார்கள் என்று ஆங்கிலேயருக்குத் தெரியும். ஆதலால் வேண்டும் என்றே ஆங்கிலேயர்கள் அந்தக் கிழட்டு முகலாயனையே சக்ரவர்த்தி யென்று அங்கீகரித்து வந்தார்கள். ஆதலால், அவர்கள் வடக்குச் சர்க்கார் மாகாணத்தைக் கைப் பற்றி ஆண்டு வந்தார்கள். எனினும், அதற்காகச் சக்ரவர்த்தியான ஷாஹ் ஆலத்தின் சம்மதம் வேண்டு

மென்று விரும்பினார்கள். இதிலிருந்தே அக் காலத்திய பொய்ப் பட்டத்து அரசியல் ஏற்பாடுகளை நன்கறியலாம். இந்தச் சாணக்யத் தந்திரத்திலும் மராட்டியர்கள் கை தேர்ந்தவர்கள்; இந்திய சாம்ராஜ்ய அதிகாரம் முழுவதை யும் வெகு நாளாகத் தங்கள் கையில் கெட்டியாகப் பிடித் திருந்தும், அந்தக் கிழட்டு மூகலாயன் தாங்கிவரும் மித்தையான அதிகாரப் பட்டத்தையும் தங்கள் ஆதரவில் வைத்துக்கொண்டு, கூடுமானால் அதனாலும் அனுகூலங் களை யடையத் தயாரா யிருந்தார்கள். இந்தக் காரணத்தி னால்தான் மராட்டிய மண்டலாதிபதிக்குச் சக்ரவர்த்தி யின் வக்கீல் - இ - முடாலிக் என்றும் மஹா ராஜாதி ராஜர் என்றும் பட்டமும் அதிகாரமும் வழங்குமாறு மஹாதஜி சக்ரவர்த்திப் பட்டத்தைத் தாங்கிவந்த கிழட்டு மூகலாயனை வற்புறுத்தினார். இவ்வளவு வருஷங்களாய் வட நாடுகளில் போர் பல புரிந்து வெற்றி பல சூடிவந்த மஹாதஜிக்கு இப்போது பூனா சென்று தமது அருமையான பேஷ்வா குழந்தைப் பருவத்தி லிருந்து யுவ பருவத்தை யடைந்திருப்பதைத் தமது கண்களால் பார்த்து ஆனந் தித்து வரவேண்டும் என்று ஆசை தோன்றிற்று. ஆதலால் அவர் தாம் சக்ரவர்த்தி யிடமிருந்து வாங்கிய பெரும் சாம் ராஜ்யப் பட்டங்களையும் அதிகாரங்களையும் நேரில் பேஷ்வாவுக்குத் தகுந்த கொண்டாட்டத்துடன் கொடுப்ப தென்று நிச்சயித்தார்.

இவ்வாறு மகாதஜியோ மஹாராஜாதிராஜர் என்ற சக்கரவர்த்தியிட மிருந்து பெற்றுவந்த பட்டத்தைப் பேஷ்வாவுக்கு அளிக்க வேண்டும் என்று கருதவும், பிரா மணரான நானாவுக்கு இது பிடிக்கவில்லை. இப்பட்டத் தால் ஸாதாரா அரசருக்கு அவமதிப்பே ஏற்படும் என்று அவர் சொன்னார். சுதந்திர நாட்டுக் குடிகளும் அதிகாரி களும் அன்னிய நாட்டு அரசனிடமிருந்து பட்டம் பெறு வதிலும் அன்னிய அரசனிடம் அதிகாரம் பார்ப்பதிலும் தவறு இல்லை, தனது சமூகம் நாடு இவைகளின் நன் மைக்கு விரோதமாக ஒன்றும் செய்யாமல் அவைகளின் மேம்பாட்டையே கருதி அன்னிய அரசனிடம் பத வியையும் கௌரவத்தையும் அதற்குமுன் அநேகர்

வகித் திருந்தனர். எனினும், மஹாதஜி தான் பிரேரேபித்த ஏற்பாட்டினல் தமது தேசமக்களுக்கு இகழ்ச்சி ஏதும் வரலாகாது எனக் கருதி, அதற்கு மராட்டியரின் சத்ரபதி யான ஸாதாரா மகாராஜாவிட மிருந்து சம்மதத்தையும் பெற்ருர். இவ்வாறு அரசியல் விஷயமான தடையும் நீங்கி விடவும், அப் பட்டங்கள் பேஷ்வாவுக்கு ஆடம்பரக் கொண்டாட்டத்தின் நடுவே அளிக்கப்பட்டன. தமது சந்ததியாரும் பாரம்பரியமாய் அடைந்து பராதீனப் படுத் தாமல் அனுபவித்தற் குரிய இனமாக வக்கீல்-இ-முடாலிக் என்ற சக்ரவர்த்தி யளித்த கௌரவத்தையும் பதவியையும் பேஷ்வா அங்கீகரித்தார். இதனல் இனி அவர் சக்ரவர்த்தி யின் பெயரால் ஆட்சி புரிந்துவர உரிமை பெற்ருர். மேலும், முகமதியச் சக்ரவர்த்திக்கு வார்சாக அவனது புத்திரர்களில் ஒருவனைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரமும் மஹாதஜிக்கு வழங்கப்பட்டது. இந்தக் காலத்தில்தான் இந்திய சாம்ராஜ்யத்தில் பசுக்களையும் மாடுகளையும் எவ னும் கொல்லலாகாது என்ற உத்தரவு பிரகடனம் செய்யப் பட்டது. இந்தியாவும், நாஜ பட்னவீஸும், இன்னும் பல அரசாங்க அதிகாரிகளும் பேஷ்வாவுக்கு வெகுமதிகளை வழங்கி வாழ்த்தினர்கள். இந்திய அரசியல் விவகாரங்களில் சர்வ அதிகாரத்துக்கும் சட்டப்படி உரிமை யுள்ளவர் சக்ர வர்த்தியே என்று ஆட்சேபித்து மராட்டியரது ஆட்சிக்குத் தடை செய்ய வந்த பகைவர்கள் ஐரோப்பிய ராயினும் அன்றி ஆசியாக்கார ராயினும் இனி வாலாட்டுவதற்கு வகையில்லை. மராட்டியர் இப்போது பேஷ்வா பெற்றுள்ள பதவியைக் கொண்டே அப் பகைவர்கள் யாவரையும் அழித்து ஒழித்துத் தமது ஆட்சியை நிறைவுற நாட்ட வகை ஏற்பட்டது. ஏனெனில், அரசியல் விவகாரங்களில் இனி மராட்டியர் என்ன செய்தாலும் அது இந்தியச் சக்ரவர்த்தியே செய்ததுபோ லாகும். மராட்டியரே சக்ரவர்த்தியின் படைகளுக்குச் சேனதிபதியாவர்; மராட்டியரே இந்திய சாம்ராஜ்யத்தின் வஜீர்; சாம் ராஜ்ய சிங்காதனத்துக்கே வார்சு தேர்ந்தெடுக்கும் உரி மையும் மராட்டியருடையதே. மேலும், வக்கீல்—இ— முடாலிக், மஹா ராஜாதி ராஜ் என்ற இரு பட்டங் களையும் பதவிகளையும் பராதீனப் படுத்தாமல் பாரம்

பரியமாய் அனுபவித்தற்கு உரிமையுள்ளோரும் மராட்டியரே.

இந்தக் கொண்டாட்டங்கள் முடிந்தவுடன் பேஷ்வா அரண்மனைக்குத் திரும்பிப் பவனி போவதைக் காண ஜனங்கள் திரள் திரளாய்க் கூடி யிருந்தார்கள். தலைவர்கள் விரும்பியபடி ஜனத் திரளின் ஆரவாரத்தினாலும் பீரங்கிகளின் சப்தத்தினாலும் மக்கள் மனத்தில் தேசிய உணர்ச்சி ததும்பி மேலோங்கியது. ஊர்வலம் அரண்மனையை அடைந்ததும், பேஷ்வா மஹாதஜிக்குப் பெரிய கௌரவங்களை வழங்கினார். பின்பு இந்திய சாம்ராஜ்யத்துக்கே சேனாதிபதியான மஹாதஜி தமது பரிவாரங்களையும் அதிகாரத்தையும் நீக்கித் தனியே கை கூப்பி முன் சென்று, பேஷ்வாவின் பாதுகைகளைக் கையில் எடுத்து அணைந்த வண்ணம் பணிவாய்ப் பேசலானார்: "எந்தாய்! மஹாராஜா! சிற்றரசர்களும் அதிபதிகளும் ராஜாக்களும் ராணுக்களும் முகலாயரும் துருக்கியரும் ரோஹில்லரும் முகமதியரும் ஆங்கிலேயரும் தோல்வியுற்று ஹிந்து சாம்ராஜ்யத்தின் தலைவரான உம்மைத் தாழ்மையுடன் பணிய வேண்டி ஏற்பட்டது. நீர் பிறந்தது முதல் உமது பணியாளனான நான் கையில் கத்தி யேந்தி, தூர தேசங்களுக்குச் சென்று, பல போர் புரிந்து நமது சாம்ராஜ்யத்துக்குப் பல ஆண்டு ஊழியம் செய்திருக்கிறேன். பட்டங்களையும் பதவிகளையும் பெற்றும், திக்கு விஜயம் புரிந்து அதிகாரங்களை அடைந்தும், அதனால் அடியேனது ஆசை தணியவில்லை. அந்த ஆசை என்ன வென்றால் உமது திருவடியில் அமர்ந்து எனது முன்னோர்களைப்போல் உமது பாதுகைகளைச் சுமந்துசெல்வதே யாகும். முகலாய சாம்ராஜ்யத்தின் பிரதான மந்திரி, வஜீர், என்ற பட்டத்தைக் காட்டினும் சாதாரண மராட்டியப் படேல் என்ற பட்டமே எனக்குக் குதூகலத்தை யளிக்கிறது. ஆதலால் என்னைத் தூர தேசங்களுக்குச் சென்று போர் புரியும் கடமையி லிருந்து விலக்கி, உமதருகே யிருந்துகொண்டு எளிய மெய்ப் பணியாளனாகத் தொண்டுபுரிந் திருக்க அனுமதி தருவீராக."

அழகாக வார்த்தை யடுக்குவதில் மஹாதஜி வெகு சமர்த்தர். ஸவாயீ மாதவராவோ மேன்மையான குணம்

பொருந்திய பேஷ்வா; இளம் பிராயத்தவர்; நற்குணம் வாய்ந்தவர்; கபடம் அறியாதவர்; அரசியல் விஷயங்களில் உள் நோக்கம் பயின்றவர். அவர்மீது மஹாதஜிக்கு அதியந்தப் பிரியம் இருந்தது. இளம் பேஷ்வாவும் மஹாதஜி மீது பிரியம் வைத்தார். இதனால் தைரியமடைந்து, நாஞ பட்னீஸ் தற்போது அனுபவித்துவரும் அதிகாரங்களைக் கைப்பற்றி, மஹாராஷ்டிர மண்டலத்துக்கே பிரதான மந்திரியாக இருக்கக் கருதி, மஹாதஜி முயற்சி செய்யலானார்; நாளாக நாளாகச் சில சந்தர்ப்பங்களில் வெளிப்படையாகவே நாஞ பட்னவீஸ் செய்த தீர்மானங்களை ஆட்சேபித்துக் கண்டிக்கவும் ஆரம்பித்தார். ஒரு நாள் மஹாதஜி தம்முடன் இளம் பேஷ்வா குலவி வரும்போது இதைப் பற்றி வெளிப்படையாகவே பேசவும், நற்குணம் வாய்ந்த பேஷ்வா உறுதியாய், "ஐயா, கேட்பீராக. நாஞவும் மஹாதஜியும் எமது ராஜ்யத்துக்குக் கரங்களைப் போன்றவர்கள். நாஞ வலது கரம் என்றால் மஹாதஜி இடது கரம் ஆவார். அவரவர் கடமையைச் செய்வதற்கு அவரவரே தகுதி யுள்ளவர். அவர்கள் இருவரும் ஒற்றுமைப்பட்டு உதவிபுரிந்தால் அன்றி இந்தச் சாம்ராஜ்யம் செழித்திடாது. அவர்களுள் ஒருவருக்கு ஒருவரை மாற்ற முடியாது. அவர்களுள் ஒருவரை ஒடுக்காமல் இன்னொருவரை அடக்கவும் முடியாது." என்று உடனே பதில் உரைத்ததைக் கேட்டதும், மஹாதஜி திகைத்துவிட்டார்.

இச்சேதி ஒற்றர் மூலம் நாஞவின் காதுக்கு எட்டிற்று. இதை யறிந்ததும் நாஞ, ஹரிபந்த் பட்கே, முதலிய பூனவிலுள்ள மந்திரி வர்க்கத்தாரே அஞ்சினார்கள். பேஷ்வாவின் தலைமையின் கீழ் மஹாராஷ்டிரத்தின் ஹிந்து சாம்ராஜ்யத்தில் இந்தியா முழுவதையும் சேர்ப்பது என்றும், இந்த விஷயத்தில் தம்முள் எவரும் தனிச் சுதந்திரத்துக்காக எதிர்த்து நின்றால் அவரை அடக்குவது என்றும், உள்ள தமது வாழ்நாளின் முக்கிய லட்சியமே அபாயத்தி லிருக்கிறது என்றும் அறிந்தார்கள். அவர்கள் உயிருள்ள வரையில் அத்தகைய விபத்துக்கு இடம் கொடுப்பதற்கு இணங்க மாட்டார்கள். தாங்கள் அதிகாரத்தி லிருந்து விலகுவதால் தேச நன்மைக்கு ஹானி ஏற்படலாமாயினும் அப்

படிச் செய்வதால் உள்நாட்டுச் சச்சரவுகளைத் தடுக்கக் கூடுமானால், அவ்வாறு செய்ய அவர்கள் ஒரு நாளும் பின் வாங்கமாட்டார்கள். ஆதலால், உடனே நானா சகல விஷயங்களையும் பேஷ்வாவிடம் கலந்து பேச வந்தார்; பேஷ்வா பிறந்தது முதல் தாம் அவருக்காகவும் தேசத்துக்காகவும் செய்துள்ள தொண்டுகளை எடுத்துச் சொல்லி, ஷிந்தியா அதிகாரத்தில் ஆசை வைத்துச் செய்யும் சூழ்ச்சிகளுக்குப் பேஷ்வா இணங்கினால் அதனால் உண்டாகும் விபத்துகளையும் தெரிவித்து, அத்தகைய சூழ்ச்சிகள் பலிக்குமானல் முகலாயச் சக்ரவர்த்தியைப்போல் பேஷ்வாவும் மஹாதஜியின் கையில் ஆதரவற்ற பொம்மையாகி விடுவார் என்றும் நானா அறிவுறுத்திக் காட்டினார். இத்தகைய நூதன ஏற்பாட்டைத் திடீரென்று மஹாராஷ்டிர மண்டல அரசியல் திட்டத்தில் அமைக்க முற்பட்டால் பெருத்த உள்நாட்டுக் கலவரமும் போருமே நேர்ந்திடும். மராட்டிய மக்கள் தலைமுறை தவறாமல் பாடுபட்டு நாட்டிய மகத்தான சாம்ராஜ்யம் உள்நாட்டுப் போரால் அழிந்து விடுவதன்றி முகமதியரும் ஆங்கிலேயரும் தத்தம் ஆட்சியை நிலைநிறுத்திவிடுவார்கள். ஏற்கெனவே ஹைதராபாத்தில் முகமதியர்கள் ஹிந்து ஆட்சியைக் கவிழ்க்க முயற்சிகள் செய்து வந்தார்கள். மஹாராஷ்டிரத்து ஹிந்து சாம்ராஜ்யத்தைக் கவிழ்ப்பதில் ஆங்கிலேயருக்கு ஆவலும் வன்மையும் உண்டு. பேரமைச்சரான நானா பின்னும் கண்ணீர் உகுத்து உணர்ச்சி மிகுந்து உரைத்தார்: "நான் அதிகாரத்திலிருந்து விலக வேண்டும் என்று நீர் விரும்பினால், இதோ இப்பொழுதே என் ராஜினாமாவை எழுதித் தருகிறேன். நான் விலகுவதால், தேசம் பிளவுறாமல் மேன்மையடைந்து உமக்குத் திருப்தியையும் அளிக்குமானால், இந்த எனது ராஜினாமாவை உடனே அங்கீகரித்திடுவீர். நான் காசிக்குச் சென்று சன்னியாச ஆஸ்ரமம் வாங்கிக் கொள்ளுகிறேன்." இதைக் கேட்டதும் இளம் பேஷ்வாவான மாதவராவ் உணர்ச்சியால் மனம் மாறினார். மராட்டிய சாம்ராஜ்யத்துக்கே ஸ்தம்பம் போன்ற அந்தப் பேரமைச்சரது உருக்கமான வேண்டுகோளைக் கேட்டு பேஷ்வா மனம் விண்டு கூறினார்: "உமக்கு இத்தகைய எண்ணம் தோன்றுவ

தேன்? நீர் எனக்கு மந்திரியாக மட்டும் அன்றி, ஆப்த நண்பராகவும், வழி காட்டும் குருவாகவும், நுண்ணிய உண்மைகளை அறிவுறுத்தும் ஆசிரியராகவும் இருந்து வருகிறீர். இந்தச் சாம்ராஜ்யம் உமது பெருந் தோள்மீதே நின்று வருகிறது. நீர் விலகினால் இது உடனே விழுந்து உடைபடும்.' இதைக் கேட்டு நானா உணர்ச்சியால் நாத் தழுத்து, "ஐயா, நீர் பிறப்பதற்கு முன்னால் தொட்டு இந்நாள் வரை நான் உமக்கும் இந்தச் சாம்ராஜ்யத்துக்கும் கடமை தவறாமல் சேவை செய்து வருகிற காரணத்தினால் அநேகருக்கு என்மீது துவேஷம் உண்டாயிருக்கிறது. இப்போது எனது தொண்டுகள் யாவும் மறக்கப்பட்டன. எதிரிகளே மிகுந்து வருகிறார்கள்" என்று உரைக்கவும் தாராளச் சிந்தையுள்ள அவ்விளங் குமரர், மனக் கவலையால் தாம் பேஷ்வா என்பதையும் நானா தமது அமைச்சர் என்பதையும் மறந்து, அன்பின் ஆர்வத்தினால் நானாவின் கழுத்தை யணைந்த வண்ணம் தேம்பிச் சொன்னார்: "என்னைக் கைவிடாதீர்கள். கவலை யொழியுங்கள். எனது குழந்தைப் பருவத்தி லிருந்தே நீங்கள் எனக்கு வெறும் அமைச்சராக மட்டும் அன்றிப் பிதாவாகவும் இருந்து வருகிறீர்கள். மனம் தடுமாறி அறியாமையால் நான் தவறு செய்திருந்தாலும் தாங்கள் மன்னிக்க வேண்டும். உங்களை அதிகாரத்தி னின்றும் விலகவிட மாட்டேன். உங்களை நான் என்றும் கைவிடேன்."

இவ்விதம் பேஷ்வா உருக்கமாக வாக்குறுதி செய்ததால், மனந் தேறி, நானா, ஹரிபந்த் பட்கே முதலிய அமைச்சர் தலைவர்கள் மஹாதஜியையும் அணுகினார்கள். அதிகாரத்தில் அபிமானம் கொண்டவ ராயினும் மஹாதஜி தமது சமூகம் நாட்டிய ஹிந்து சாம்ராஜ்யத்துக்கு அரிய தொண்டுகளைப் புரிந்தவர். ஹிந்து ஆட்சியை அகற்றி அன்னியர் ஆதிக்கம் பெற முயன்றால் அதைத் தடுக்க அவர் தம் உயிரையும் தியாகம் செய்யப் பின்வாங்கமாட்டார். ஒருகாலும் மஹாதஜி ரகோபாவைப்போல் தேசத்தைக் காட்டிக்கொடுப்பவர் அல்லர். மராட்டிய அரசாங்க அதிகாரம் முழுவதும் தமது கையில் அடங்கவேண்டும் என்று பேராசை கொண்டவ ராயினும், அவர் அதன்

பொருட்டு மராட்டியருள் பிளவுண்டாக்கி உள்நாட்டுப் போர் தொடங்க மனம் துணியார். நானாவின் கட்சியுடன் சமரசமாய் இருந்து பேஷ்வாவின் சொற்படி நடப்பதா யும் வாக்களித்தார். ஒரு நாள் ஹரிபந்த் பட்கே முதலி யோர் அவரை அணுகி, அவர் மராட்டிய அரசாங்க அதி காரம் முழுவதையும் அடைய விரும்பி வருவதால் அவ ருக்கும் நானாவுக்கும் போட்டி ஏற்பட்டுப் பிளவுண்டா கும் என்றும், அதனால் பகைவரின் பலம் அதிகரித்து அவர்களது அருமையான ஹிந்து சாம்ராஜ்யத்துக்கே பெருத்த தீங்கு ஏற்படும் என்றும், ஆனால் மராட்டிய மக்களுள் உள்நாட்டுக் கலவரத்தையும் போரையும் கிளப் புவதற்கு நானா ஒருகாலும் இணங்கிடமாட்டார் என்றும், அதற்குப் பதிலாய் நானா பல ராஜ்யங்களை ஆக்கவும் அழிக்க வும் சக்தியுள்ள தமது அரசியல் அதிகாரத்தையே ராஜி னாமாச் செய்துவிடப் போவதாயும் சொன்னார்கள். இதைக் கேட்டதும் மஹாதஜியின் மனம் உருகிவிட்டது. அவர் இனி நானாவையும் அவரது கட்சியையும் எதிர்ப்பதில்லை என்று வாக்குறுதி செய்தார். மராட்டியச் சரித்திரத்தில் பற்பல சமயங்களில் ஏற்பட்டதைப்போல் இப்போதும் உன்னத தேசிய உணர்ச்சிகளைப் போற்றி, மக்களின் சுய நல எண்ணங்களையடக்கி மேலோங்கி நிற்கவும், இவ்விரு பெருந்தலைவர்களும் பகை மறந்து மீண்டும் நட்புக் கொண் டார்கள். இருவரும் பேஷ்வாவின் பாதங்களில் அமர்ந்து, தம் முன் நடந்ததையெல்லாம் மறந்துவிட்டு, தமது பொதுத் தலைவருக்கும் ஹிந்து சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்து ஹிந்து தருமத்தைக் காத்து வளர்ப்பதையே லட்சியமாகக் கொண்ட தமது உன்னத மஹாராஷ்டிர மண்டலத்துக்குமே ஊழியம் செய்வதென்று சபதம் செய்து கொண்டார்கள்.

தலைவர்கள் பகை மறந்து மீண்டும் நட்புக் கொண் டதைக் கேட்டு மஹாராஷ்டிரம் முழுவதும் மகிழ்ச்சி யடைந்தது. மஹாராஷ்டிரத்தின் மகா அரசியல் நிபுணர் களில் ஒருவரான கோவிந்தராவ் காளே எழுதிய கடிதத்தி லிருந்து ஹிந்து மக்கள் அடைந்த குதூகலத்தைப்பற்றித் தெரிந்துக் கொள்ளலாம். காளே நிஜாமின் தலைநகரில் மராட்டிய சாம்ராஜ்யப் பிரதிநிதியாக இருந்தார். அவர் நானாவுக்கு நிஜாமின் தலைநகரிலிருந்து எழுதினார்:

"உமது கடிதத்தைப் படித்ததும் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டேன். அதைப் படிக்கும்போது என் மனத்தில் அடுக்கடுக்காக எண்ணங்கள் தோன்றின. அட்டக் நதியிலிருந்து ஹிந்து மகா சமுத்திரம் வரை யுள்ள இப் பரந்த நாடு முழுதும் ஹிந்துக்களுக்கு உரிய ஹிந்து ஸ்தானமேயன்றித் துருக்கியருக்குச் சேர்ந்த துருக்கிஸ்தானமன்று. பாண்டவர் காலம் முதல் விக்கிரமாதித்தியர் காலம் வரையில் நமது சாம்ராஜ்யத்தின் எல்லைகள் இது வரையில் பரந்திருந்தன. அவர்கள் பகைவர்களை முறியடித்து இந்நாடு முழுவதிலும் ஹிந்து ஆட்சியையே நாட்டியுள்ளனர். ஆனால், அவர்களுக் கப்புறம் வந்தவர்களோ பலமற்றவர்களா யிருந்ததனால் அன்னியர்களான யவனர்கள் நம்மை வென்று நமது சுதந்திரத்தையும் கைப்பற்ற நேரிட்டது. டில்லியாகிய ஹஸ்தினபுர ராஜ்யத்தைப் பாபரின் சந்ததியார் கைப்பற்றினர். ஔரங்கசீப்பின் அரசாட்சிக் காலத்தில் நமக்கு மத விஷயங்களிலும் சுதந்திரமில்லாமல் போய்விட்டது. பூணூல்போட்ட பார்ப்பனரின் மீது தலைவரி விதிக்கப் பட்டதுமன்றி அவர்களை அசுத்தமான ஆகாரத்தை வாங்கி யுண்ணும்படியும் பலவந்தப் படுத்தி வந்தார்கள்.

"இந்த நெருக்கடியான காலத்தில் ஹிந்து மத ரட்சகரான சிவாஜி பிறந்து புது சாகப்தத்தையே நாட்டினார். அவர் பரத கண்டத்தில் ஒரு பாகத்தில் சுதந்திரத்தை நாட்டவும் ஆங்கே தமது மதமும் தருமமும் ஓங்க ஆரம்பித்தன. அதன் பிறகு மஹா சக்தி பொருந்திய வீரர்களான நானா சாஹிபும் பாபூஸாஹிபும் தோன்றவும் மக்களிடை அவர்களது பிரதாபம் சூரிய காந்தி போல் பிரகாசித்தது. இப்போது மாட்சிமை தங்கிய நமது பேஷ்வாவின் ஆதரவில் மஹாதஜி ஷிந்தியாவின் ஒப்பற்ற சைன்ய பலத்தாலும் அரசியல் நுட்ப அறிவாலும் நாம் இந் நாள் வரை இழந்தவை யெல்லாம் மீண்டும் பெற்றுள்ளோம். ஆனால், இந்த மகத்தான வெற்றிகளுக்கெல்லாம் காரணம் என்ன? வெற்றியின் மேன்மையால் நாம் வெற்றியின் காரணங்களையே மறந்து விடுகிறோம். முகமதியர்கள் இத்தகைய வெற்றி சூடி யிருந்தால் அவர்களைச் சரித்திரப் புத்தகங்

கள் எல்லாம் புகழ்ந்துபாடி யிருக்கும். முகமதியருள் நடந்த சிறு காரியமும் பிரமாதமாகப் புகழப்பட்டு வருகிறது. ஆனால், ஹிந்துக்களான நம்மவருக்குள் எத்தகைய அற்புதமான வீரச் செயல்கள் நடந்தும் அதைப்பற்றி ஒரு வரியேனும் எழுதப்படுவதில்லை. ஆனால், இப்போது உண்மையில் அதியற்புதமும் நடந்துவிட்டது. அடைய முடியாததையும் அடைந்துவிட்டோம். நமது நாடுகள் யாவும் அழிந்து காபிர்களின் கையில் அகப்பட்டு, காபிர் ஷாஹி (ஆட்சி) நிலைத்து விட்டதே என்று முகமதியர்கள் வெளிப்படையாகவே புலம்புகிறார்கள்.

"ஹிந்துஸ்தானத்தில் நமது ஆட்சியை எதிர்த்து நின்ற எல்லோருடைய சிரத்தையும் மஹாதஜீ உருட்டி விட்டார். மனிதரால் முடியாத பெருங்காரியத்தையும் நாம் செய்துள்ளோம். பண்டைக் காலத்தில் நமது சக்கரவர்த்திகள் செய்ததைப்போல் நாமும் நமது நாடுகளை ஒன்றுசேர்த்து ஒழுங்கு செய்து சாம்ராஜ்ய ஆட்சியையே நாட்டியுள்ளோம். எனினும், இன்னும் செய்யவேண்டிய காரியமோ மிகுதியாகவே இருக்கிறது. நமது வெற்றிகள் எப்போது எவ்விடம் குன்றி விடுமோ—எவரும் அறியார். பாவிகளின் திருஷ்டியால் எத்தகைய ஆபத்து நேரிடுமோ எவரும் அறியார். நமது ஆட்சியின் முக்கியக் கருத்து, கேவலம் நாடுகளை ஒவ்வொன்றாய் ஜயித்து ஆளுவது மட்டுமன்று; வேதங்களையும் மற்றும் ஹிந்து நாகரிகம் தொகுத்த சாஸ்திரங்களை ஆதரிப்பதும், தர்மத்தை வளர்த்துக் கற்றோரையும் பசுக்களையும் நல்லோரையும் ஏழைகளையும் காத்து ரட்சிப்பதும், பெரிய சாம்ராஜ்யத்தையே ஜெயித்து அதில் தேசிய ஆட்சியை நாட்டுவதும், திக்குவிஜயம் புரிந்து ஹிந்துக்களின் புகழை உலகெங்கும் பரப்புவதுமே நமது ஆட்சியின் முக்கிய நோக்கங்கள். ஹிந்துக்கள் இத்தகைய அபூர்வ பலன்களை அடைந்ததன் ரகசியம் நீரும் மஹாதஜியும் செய்துவரும் அரிய பெரிய செயல்களே. உம்மிருவருள் மனஸ்தாபமோ பிளவோ தோன்றினால் நமது பகைவர்களுக்குக் கொண்டாட்டம்தான். கொடிய ரகசியப் பகைவர்கள் நம்மை நாற்புறமும் சூழ்ந்திருப்பதால், நீங்கள்

இருவரும் சமரசப்பட்டதைக் கேட்டுக் கவலை தணிந்தேன். நமது படைகள் லாகூருக்கும் அதற்கப்பாலும் சென்று எல்லைப்புறத்தையே காப்பாற்ற வேண்டும். நம்மவருக்குள் பிளவு தோன்றி நமது படைகள் தம்மைத் தாமே மாய்த்துக் கொள்ளும் என்று எதிர்பார்த்து வந்த பகைவர்கள் மனம் முறிந்து மடியவேண்டியதே. என் மனத்தில் இத்தனை நாள் பெருங்கவலை இருந்து வந்தது. உமது கடிதத்தைப் பார்த்ததும் அந்தக் கவலையெல்லாம் ஒழிந்தது.'' அக் காலத்தில் முக்கிய அதிகாரி ஒருவரால் எழுதப்பட்ட இக் கடிதத்திலிருந்தே நமது சரித்திரத்தின் ஊக்கமும் சாரமும் தெளிவாக விளங்குகிறது.

ஆனல், மஹாதாஜி 12—2—1794-இல் திடீரென்று கடுஞ் சுரங்கண்டு பூனவருகே வானவாடியில் இறந்தார். இதையறிந்து மஹாரஷ்டிரம் முழுவதும் கவலையில் மூழ்கியது.

இவரது மரணத்தினல் மஹாராஷ்டிரத்துக்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. இந்த நஷ்டத்திலிருந்து மஹாராஷ்டிரம் சமாளிப்பதற்கு முன்னரே அதன் ஆட்சியையும் அதிகாரத்தையும் நசுக்கிவிடுவதற்குப் பகைவர்கள் சூழ்ச்சி செய்யலானர்கள். மராட்டியத் தலைவர்களுள் முதன்மை பெற்றிருந்த மஹாதஜி இறந்ததால் மஹாராஷ்டிரமே ஒடுங்கிவிட்டது என்று அவர்கள் நம்பினர்கள். இப் பகைவர்களுள் முக்கியஸ்தனன ஹைதராபாத் நிஜாம் தலைமுறை தலைமுறையாகத் தன்னை யடக்கி யொடுக்கிச் சிற்றரசனய் வைத்திருந்த இந்த ஹிந்து ஆட்சியை வேருடன் அழித்து வஞ்சம் தீர்த்துக்கொள்ள ஏற்பாடுகளைச் செய்துவந்தான். அது வரையில் இரண்டு படைகள் கொண்டுள்ள தனது சேனையை அவன் இப்போது ஒரு பிரஞ்சுத் தளகர்த்தரின் தலைமையின்கீழ் இருபத்துமூன்று படைகள்கொண்ட ஒரு பெருங் காலாட் படைச் சேனையாக அதிகரித்தான். அவனது மந்திரியான மிஸ்ரூல் முல்க் என்பவனும் பேராசை பிடித்த முகமதியன்; மராட்டியர் சார்பாக மஹாதஜி சாம் ராஜ்ய அதிகாரங்களையும் பதவிகளையும் அடைந்ததைக்

கண்டு மனம் பொறுக்காதவன். அந்நாட்டு முகமதிய மக்களிடை யுத்தக் கிளர்ச்சியைத் தோற்றுவித்து, காபிர் ஷாஹி—ஹிந்து ஆட்சி—முடிவுபெற்றுப் பூனா மீது முக மதியப் பிறைக்கொடி பறக்கும் காலம் வந்துவிட்டது என்று மக்களிடையே புரட்டுப் பிரசாரத்தையும் நடத்தினார்கள். நிஜாமின் மந்திரிக்குப் போர்வெறி அதிகரித்தது. மராட்டியருக்குக் கொடுக்கவேண்டிய சௌத் வரியைத் தரும்படி நிஜாமை மஹாராஷ்டிர சாம்ராஜ்யப் பிரதிநிதி கேட்கவும், நிஜாமின் மந்திரி சீறி, "நாணாவே நேரில் வந்து சௌத்துக்கு உள்ள மராட்டிய உரிமைகளை நாட்ட வேண்டும். இங்கு நாணா வர மறுத்தால் அவனை இங்கு கொண்டுவருவதற் கேற்ற மார்க்கம் எனக்குத் தெரியும்" என்று கர்ஜித்தான். மராட்டியரைப் போருக்கு இழுக்க இது போதாது என்று எண்ணி நிஜாம் ஒரு நாடகக் காட்சியை ஏற்பாடுசெய்து, அதற்கு ராஜ தூதர்களையும் பிரதிநிதிகளையும் வேண்டுமென்றே அழைத்து, அவர்களது முன்னிலையில் பேஷ்வாவான ஸவாயி மாதவராவ், நாணா இவர்களைப்போல் வேடந்தரித்து ஹாஸ்யம் செய்யும்படி தனது சேவகர்களைத் தூண்டினான். இதைப் பார்த்து முகலாய ராஜ சபையார் பரிகாசமாய் நகைத்து மகிழ்ந்தார்கள். உடனே நிஜாமின் தர்பாரிலுள்ள இரு மராட்டிய ராஜப் பிரதிகளான கோவிந்தராவ் பிங்களே, கோவிந்தராவ் காளே இருவரும் எழுந்து தமது நாட்டுத் தலைவர்களுக்குக் காட்டப்பட்ட இந்த இழிவான அவமரியாதையைக் கண்டித்து, "மிஸ்ரூல் முல்கே, கேளாய்: மஹாராஷ்டிரத்தின் பேரமைச்சரான நாணாவை இவ்விடம் இழுத்து வருவேன் என்று பலமுறை பெருமை பேசியிருக்கிறாய். எமது தலைவரைப்போல் நடிகரையும் நடிக்கச்செய்து ஏளனம் செய்தாய். இப்போது நான் கூறும் சபதத்தைக் கேட்பாயாக. உன்னை மராட்டியர் உயிருடன் கைப்பற்றி ஹிந்து சாம்ராஜ்யத்தின் தலைநகரின் தெருக்களில் இழுத்துச் செல்லாவிடில் எனது பெயர் கோவிந்தராவ் காளே அன்று." இத்தகைய அமங்களமான வார்த்தைகளுடன் மராட்டிய ராஜதூதர்கள் நிஜாம் தர்பாரைவிட்டுக் கிளம்பி பூனாவை அடைந்து நிஜாமுடன் போர் தொடங்குமாறு வேண்டினார்கள். இத்தகைய

சந்தர்ப்பங்களில் மத்தியஸ்தம் பேச ஆங்கிலேயர் முயன்ற போதெல்லாம் மராட்டியர் அவர்களை எதிர்த்துத் தூஷித்து வந்ததனால் இப்போது ஆங்கிலேயர் மராட்டிய விவகாரங்களில் தலையிடுவதற்கும் அஞ்சினார்கள். நிஜாம் அவர்களைப் பலதடவை வேண்டியும், அவர்கள் அவனுக்குப் பரிந்து பேசத் துணிவுபெறாமல் மறுத்தார்கள். நிஜாமும் யுத்தத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலானான். இது காபிர்களை முறியடிப்பதற்கான தரும யுத்தம் என்று பறைசாற்றித் தன் நாட்டு முகமதிய மக்களின் உணர்ச்சிகளை எழுப்பினான். அவர்கள் பூனாவைத் தாக்கித் தீக்கிரையாக்கிக் கொள்ளையிடுவதாய் வீரவாதம் பேசினார்கள். மிஸ்ரூல் முல்கின் வீண் கர்வம் தலைக்குமேல் ஏறிவிட்டது; மராட்டியக் கொடுங்கோல் ஆட்சியினின்றும் முகலாய அரசனை மீட்டு, முகலாய ஆட்சியை நாட்டி, பார்ப்பனச் சிறுவனான பேஷ்வாவைக் கந்தையோடு வீடு வீடாய்ச் சென்று சுற்றிப் பிச்சை வாங்கும்படி காசிக்கு ஓட்டிவிடுவதாய் வெளிப்படையாகவே ஆரவாரித்தான்.

இவ்வாறு ஹைதராபாத்தில் முகமதிய மந்திரி வீண் கர்வம் பேசி இறுமாப்பு அடைந்தபோது, பூனாவில் உள்ள ஹிந்து மந்திரியோ சைன்யங்களைக் கணக்கிட்டவண்ணம் வாய் மூடித் தமது யுத்த முறைகளைப்பற்றி யோசித்து வந்தார். தமது ஒப்பற்ற பெருந் தலைவரான மஹாதஜீ இறந்தும் மராட்டியர் மனந்தளராமல் சமயத்துக்கேற்றவாறு காரியத்தை நிர்வகிக்கும் சக்தியைக் காட்டினார்கள். இப்போது நானாவின் ஒப்பற்ற திறமை பிரகாசித்தது. அவரது சொல்லுக்கு மக்கள் எவ்வளவுதூரம் கட்டுப்பட்டிருந்தார்கள் என்பதும் விளங்கிற்று. அவர் பரந்த மராட்டிய ராஜ்யத்தின் பல தலை நகரங்களிலிருந்தும் வரும் படைகளுக்கு உத்தரவு செய்தார். அவரது அறிவின் திறமையால் மராட்டிய மக்களுள் இருந்த சச்சரவெல்லாம் பறந்து ஒற்றுமை நிலவியது. பூனாவில் தேசியப் போர்க் கொடி விரிக்கப்பட்டதும் மஹாராஷ்டிரப் படைகள் பல திக்குகளிலிருந்தும் அங்குக் கூடி ஹிந்து சாம்ராஜ்யத்தில் உறுதி கொண்டனர். மஹாதஜிக்குப் பின் அவரது பதவிக்கு

வந்துள்ள தௌலத்ராவ் ஷிந்தியாவும், ஆக்ராவைக் காத்த ஜீவபா தாதா பக்ஷீயும், பட்டாணியரையும் ரோஹில்லரையும் துருக்கியரையும் வடநாடுகளில் வென்று அடக்கிய அவரது படைத் தலைவர்களும், போர் வீரர்களும் அழைக்கப்பட் டிருந்தார்கள். துகோஜி ஹோல்கர் ஏற்கனவே தமது படைகளுடன் வந்திருந்தார். ராகோஜி போஸலே ஒரு பெருஞ் சேனையுடன் நாக்பூரி லிருந்து புறப்பட்டார். காயக்வாட் தமது பலத்த படையுடன் பரோடாவி லிருந்து வந்தார். பட்வர்த்தன், ராஸ்தே குடும்பத்தினரும், ராஜேபஹதூர், வின்சூர்க்கர், காடகே, சவான், டாபலே, பவார், தோராட், பாடன்கர் இன்னும் பல தலைவர்களும் அதிகாரிகளும் படைத் தலைவர்களும் உத்தரவு வந்ததும் புறப்பட்டு வந்தார்கள். தமது பேரமைச்சர் பின்தொடர, பேஷ்வா தமது படைகளுடன் கிளம்பினர். இளம் பேஷ்வா படையெடுப்பில் கலந்து வந்தது இதுதான் முதல் தடவை. படைகளின் நடுவே தமது பேரரசர் வருவதனல் போர் வீரர்கள் குதூகலமடைந்தனர். அதனல் மக்கள் அந்தப் படையெடுப்பில் விசேஷ கவனம் கொண்டார்கள். நிஜாமும் யுத்தத்துக்குத் தயாராக விருந்தான். அவனது பெருஞ் சேனை, குதிரைப் படையும் காலாட் படையும் சேர்ந்து, லட்சத்துப் பத்தாயிரம் இருந்தது. அவனது பெரும் பீரங்கிப் படையோ ஆற்றலும் பலமும் கொண்டிருந்தது. அவனது சேனையின் யுத்த படாடோபத்தையும் மத வெறியையும் பார்த்து வெற்றிபெறுவது உறுதி என்று முகலாயர் நம்பினர். மராட்டியப் படைகளின் பெரும்பாகம் இந்தியா முழுதும் பரந்துள்ள அவர்களது சாம்ராஜ்பத்தின் பல எல்லைகளையும் காக்கவேண்டி யிருந்தாலும், ஒரு லட்சத்து முப்பதினயிரம் போர்வீரர்கள் படையெடுப்பில் சேர்ந்துகொண்டார்கள். இருதிறத்துப் படைகளும் பராந்தா என்னும் இடத்துக்கு அருகேயுள்ள மராட்டிய நாட்டின் எல்லைப்புறத்தில் சந்தித்தன. நான முக்கியப் படைத் தலைவர்களிடமிருந்து சிறந்த போர் முறைகளைப் பற்றி அபிப்பிராயங்களை எழுதிவாங்கி, அவைகளில் மிகச் சிறந்ததைத் தேர்ந்தெடுத்தார்; மராட்டியரது படைகள் யாவுக்கும் முதல் சேனதிபதியாக பரஷ்ராம் பாவூ பட்வர்த்தனை நியமித்தார்.

இருதிறத்தோர் படைகளும் நெருங்கியதும் போர் தொடங்கிற்று. முதலில் நடந்த சிறு போர்களில் பட்டாணியர் தாக்கவும் மராட்டியரது சிறு படைகள் பின்வாங்கின. அவை நடுவே மேற்பார்வையிட வந்த பரஷ்ராம் பாஹூவைக் கண்டதும் இதைப் பெருமித வெற்றி யென்று கருதி முகமதியர்கள் முகலயாயக் கூடாரத்தில் ஒரு தர்பார் கூட்டிக் கொண்டாடத் தொடங்கினர். ஆனால் மராட்டியப் பெரும் படை நெருங்கிவரவும் நிஜாம் தனது தவற்றை உணர்ந்தான். அஹமத் அலிகான் பொறுக்குத் தரமான 50,000 போர் வீரர்களுடன் சீற்றத்தோடு மராட்டியப் படையை எதிர்த்தான். ஆனால்,போஸ்லேவின் மராட்டியப் படைத் தொகுதி அவர்களை ஆகாய வாண வெடியுடன் வர வேற்கவும், ஷிந்தியாவின் பீரங்கிகள் வெடித்து, குண்டு மாரி பொழிந்தன. போரும் பயங்கரமாய் மூண்டது. மராட்டியரின் பீரங்கிகளின் நடுவே அகப்பட்டுக்கொண்ட முகமதியர்கள், அல்லாஹு அக்பர் என்று வாய்பிளக்கப் பல தடவையும் கூவியும், தப்ப வழி யில்லாமல் தவித்து முறிவுறவும், அவர்களது குதிரைப் படை சின்னபின்ன மாயிற்று. மேலும் மராட்டியர்கள் அவைகளை நாற்புறமும் சூழ்ந்துகொள்ள, நிஜாமும் பயத்தால் திகைத்துப்போய் இன்னது செய்வது என்று அறியாறாய்ப் பின்வாங்கி ஓடலானான். இரவு தொடங்கியதால் இருளில் அவன் உயிர்தப்ப முடிந்தது. இரவு முழுவதும் ஒழுங்கில்லாமல் நடந்த போரிலும் முகலாயப் படைகளில் பெருஞ் சேதமும் குழப்பமும் தோன்றியது. மௌல்விகள் இது தரும யுத்தம் என்றும் இதில் அல்லாவின் அருளால் வெற்றி கிடைப்பது நிச்சயம் என்றும், வாயில் நுரைதள்ளக் கூச்சலிட்ட தெல்லாம் வீணாயிற்று. அல்லாவின் முகமதிய வீரர்கள் தமது கூடாரத்தில் இருந்த பொருள்களைத் தாங்களே கிடைத்த வரையில் லாபம் என்று கொள்ளையிட்டுப் போர்க்களத்தினின்றும் ஓடத் தொடங்கினார்கள். ஆனால், மராட்டியக் கூடாரக் காவலாளர்கள் அவர்களைத் தொடர்ந்து வந்து அப் பொருள்களைப் பிடுங்கிக் கொண்டார்கள். காலையானதும் கர்டா என்னும் மிடத்தில் ஒரு கிராம மதிலுக்குப் பின் நிஜாமின் படை நின்றது. சுமார் பத்தாயிரம் பேர்

கொண்ட படை போர்க் கோலத்துடன் நிற்பதைக் கண்டதும் மராட்டியர் ஆங்கு அருகுள்ள ஒவ்வொரு குன்றிலும் மேட்டிலும் தமது பீரங்கிகளை வைத்துப் பயங்கரமாய்க் குண்டு மாரி பொழிந்தார்கள். முகலாயனால் இரண்டு நாளுக்குமேல் நிற்கமுடியவில்லை; மராட்டியரது பீரங்கியால் அவனது தாடி மட்டும் அல்லாமல் மனோ தைரியமும் பொசுங்கிவிட்டது; கடைசியில் மூன்றாவது நாளில் தாகத்தால் நா வறள, நெஞ்சு துவள, திக்குமுக் கடைந்து கண்டம் நெருங்க நசுக்குண்டு, போரை நிறுத்த வேண்டுமென்று மன்றாடினான். மராட்டியரோ, "முதலில் மிஸ்ரூல் முல்கை எமது கையில் ஒப்புவித்து விட்டுப் பிற்பாடு பேச்சு ஆரம்பியுங்கள். அவன் மராட்டியத் தூதருக்கும் பேரமைச்சருக்கும் காட்டிய இழிவான அவமரியாதைக்குத் தகுந்த சிட்சை யடைய வேண்டும்.'' என்று பதில் சொல்லவும், முகமதியன் தைரிய மிழந்து மனங் குன்றித் தளர்வுற்று தனது அருமை மந்திரியான மிஸ்ரூல் முல்கை மராட்டியரது கையில் ஒப்பு வித்து, மராட்டியர் கேட்கும் எந்த நிபந்தனைக்கும் தான் இணங்குவதாயும், தன்னை உயிருடன் விட்டால் போதும் என்றும் கெஞ்சினான். "பரந்தா, தபதி நதிகளுக்கிடையே உள்ள நாடுகள் மராட்டியருக்குக் கொடுக்கப்பட்டன. மேலும் சௌத் வரியின் பழைய பாக்கிக்காகவும் யுத்த அபராதத்துக்குமாக மூன்று கோடி ரூபாயும் கொடுக்கப் பட்டது. இது தவிர போஸ்லேவுக்கு 29 லட்சம் ரூபாய் தனியாகக் கொடுக்கப்பட்டது.'' இந்த நிபந்தனைகளின் மீதுதான் மராட்டியர், பூனாவை எரித்துக் கொள்ளை யிட்டுப் பேஷ்வாவைக் காசிக்குப் பிச்சைக்காக அனுப்பு வதாய் வீரவாதம் பேசிவந்த பகைவனை மீண்டும் அவனது தலை நகருக்கே அனுப்பச் சம்மதித்தார்கள்.

வெற்றி சூடிய காபிர் வரிசைகளின் நடுவே மிஸ்ரூல் முல்க் மராட்டியக் கூடாரத்துக்கு இழுத்துச்செல்லப் பட்டான். அவன் கைதியாகச் செல்வதைக் கண்ட போர் வீரர்கள் 'ஹர ஹர மஹாதேவ்' என்று அடக்க முடியாத ஜய கோஷம் புரிந்தார்கள். நானாவைக் கைதியாக்க வந்த வனைக் கைதியாக்கி, தமது ராஜ தூதர்களின் சபதத்தை

நிறைவேற்றியதும், உத்தம சீலரான மராட்டியப் பேரமைச்சரும் அன்பின் அவதாரமுமான பேஷ்வாவுக்கும் தோல்வியுண்ட பகைவனுக்கும் மரியாதை காட்டினார்கள். தங்களால் அவனைப் பூனாவுக்கு இழுத்துச் சென்று தெருக்களில் நிறுத்தி ஏளனம் செய்யமுடியும் என்பதை அவனுக்கு எடுத்துக்காட்டி, பின்பு அவமரியாதையாக வேனும் ஒன்றும் செய்யாமல், அவனை மன்னித்து விட்டார்கள். தம்மால் பகைவனைத் தண்டிக்க முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியதும் மராட்டியர் பகைவனை மன்னித்து அனுப்பிவிடுவார்கள். அதுபோலவே நானாவும் மிஸ்ரூல் முல்கை மன்னித்து அனுப்பினார்.

பேஷ்வா தமது அதிகாரிகளுடன் மஹாராஷ்டிரத்தின் தலைநகரில் பிரவேசித்து ஜய கோஷத்துடன் ஊர்வலம் வந்தார். நாற்புறங்களி லிருந்தும் ஜனங்கள் திரள் திரளாய்க் கூடி, பூனாவுக்கு வந்த தமது அரிய இளம் பேஷ்வாவுக்கும் போர் வீரர்களுக்கும் தேசிய நல் வரவு தந்தார்கள். மராட்டியர் பூனாவை அலங்கரித்துத் தமது விஜய வீரர்களை மனமார்ந்த குதூகலத்துடன் வரவேற்றார்கள். ஹிந்துஸ்தானத்துச் செல்வக் களஞ்சியமான பூனா நகரத்தில் மாடமாளிகைகளிலும் கூடகோபுரங்களிலும் கூரையின் மேலும் மாதர் நெடுக நின்று புஷ்பங்களையும் மங்களகரமான அட்சதையையும் போர் வீரர்களின் மீதும் படைத் தலைவர்களின் மீதும் அரசியல் நிபுணர்களின் மீதும் பேஷ்வாவின் மீதும் மழை போல் வருஷிக்கவும் ஊர்வலம் இனிது நடந்தது. இளம் பெண்களும் சிறுமிகளும் தத்தம் வீடுகளின் வாயிலில் நின்றுகொண்டு இளம் பேஷ்வாவுக்கு மங்கள கர்ப்பூர ஹாரத்தி எடுத்தார்கள். மக்களின் வந்தனோபசாரங்களைப் பெற்றவண்ணம் பேஷ்வாவும் தமது அரண்மனைக்குச் சென்றார். சாம்ராஜ்யத்தின் பல படைத் தலைவர்களும் அதிகாரிகளும் தமது பெரிய வெற்றிப் படைகளுடன் தமது தேசியத் தலைநகரைச் சுற்றி நாற்புறத்திலும் கூடாரமடித்துத் தங்கினார்கள். இந்த வீரவிஜய ஒற்றுமைக் காட்சியைக் கண்டதும் நானாசாஹிப் ஆட்சிசெய்து பாஜு படைகளை நடத்திய காலத்தில் மகத்தான ஹிந்து சாம்ராஜ்யம் அடைந்திருந்த உன்னத நிலைமையை உலகம் நினைத்தது.

இனி நாம் இவர்களைச் சற்று விடுவோம்—இளம் பேஷ்வா தமது மக்களின் ராஜபக்தியை அனுபவித்து ஆனந்த மடையவும், அவரது பேரமைச்சர் வெற்றியின் லாபங்களைச் சாம்ராஜ்யத்தின் பல பாகங்களுக்கும் பங்கிட்டு அரசியல் விவகாரங்களை நிச்சயித்து ராஜ தூதர்களுடனும் ராஜப் பிரதிநிதிகளுடனும் படைத்தலைவர்களுடனும் கலந்து யோசித்து ஹிந்து சாம்ராஜ்ய அபிவிருத்திக்காக மஹாராஷ்டிர மண்டலம் செய்யவேண்டிய ஏற்பாடுகளைத் திட்டம் செய்யவும், மஹாராஷ்டிர மக்கள் தாம் பாடுபட்டு நாட்டிய வெற்றியை அனுபவித்து ஆனந்திக்கவும், கவிகள் இன்றும் கேட்போர் மனதை யுருக்கும் கீதங்களில் மராட்டிய மக்களின் அற்புத வீரச்செயல்களைப் பாடவும், ஜனங்கள் இப் போர்க் கீதங்களைப் பாட அதில் தமது அல்லது தம் படையின் வீரம் புகழப்பட்டிருப்பதைக் கேட்டுப் போர் வீரர்கள் பெருமையுடன் மீசை முறுக்கிப் புன்முறுவலெய்தவும், பூனாவில் நானா ஆட்சி புரியும் வரையில் தனக்குக் கேடொன்றும் வாராது என்ற நம்பிக்கையுடன் குடியானவன் கலப்பை யிழுத்து ஆனந்தகீதம் பாடவும், ஆயிரக் கணக்கான ஜனங்கள் கூடித் தமது காணிக்கைகளையும் பிரார்த்தனைகளையும் செலுத்திவருவதால், ஹிந்துக் கோவில்கள் பயமின்றித் தலை நிமிர்ந்து நிற்கவும், ஹரித்வாரம்முதல் ராமேசுவரம் வரையில் யாத்திரிகர்களும் சன்னியாசிகளும் முனிவர்களும் வேதாந்திகளும் சாதுக்களும் தம் இஷ்டப்படி சுற்றித் தருமோபதேசம் செய்துவரவும், சாஸ்திர விருத்திக்காகச் சீமான்கள் நாடு முழுவதிலும் பாடசாலைகளையும் மடங்களையும் கட்டி ஆதரிக்கவும், அந்த சாஸ்திர, கலா ஸ்தாபனங்கள் கவலையின்றி வளர்ந்துவரவும், அவைகளில் பண்டிதரும் நிபுணரும் கலைகளையும் சாஸ்திரங்களையும் படித்தும் போதித்தும் மக்களிடை அறிவைப் பரப்பிவரவும், போர் வீரனும் கப்பல் மாலுமியும் வீடு சேர்ந்து தன் பிரதாபங்களைக் காதலிக்கும் தாயாருக்கும் சொல்லி எதிரிகளிட மிருந்து தான் கைப்பற்றிவந்த பொற் குவியலையும் முத்து மாலைகளையும் காட்டித் தான் சொன்னதெல்லாம் முற்றும் உண்மையே என்று நிரூபித்து வரவும், —சாம்ராஜ்யத்தின் தலைநகர், பட்டினங்கள், கிராமங்கள்

யாவும் முன்னோர் பாடுபட்டு நாட்டிய சுதந்திரத்தையும் மேன்மையையும் அடைந்து சுகமாய் இருக்கும் உன்னத நிலைமையில் அவர்களை விட்டு வருவோம். இது நீடித்த நாள் இருக்கமுடியாது என்றறிந்தும் புகழின் உச்சியில் உலவுவதற்குக் கற்பனையும் ஆவல் கொள்ளுகிறது. விதி வசத்தால் ஹிந்து சாம்ராஜ்யம் வீழ்ச்சி யடைய வேண்டி யிருந்தாலும் அது நிலைத்து நிற்கும்போது நாடெங்கும் குதூகலம் பரவி வரட்டும்.

இந்தப் பிற்கால மஹாராஷ்டிரத்தின் சரித்திரத்தை மீண்டும் ஆராய்வோம். இதன் முக்கிய நிகழ்ச்சிகளைச் சீர்தூக்கி, இதற்கும் உன்னதமான ஹிந்துஸ்தானத்தின் சரித்திரத்துக்கும் உள்ள அன்னியோன்யமான தொடர்பையும் கவனிப்போம்.

# இரண்டாம் பாகம்

## சமஷ்டி விமரிசனை

"சுதந்திரத் தேவியே, உனது புன்னகையை நாங்கள் என்றும் மறந்திடோம். அடிமைத் தளையில் ஒரு விநாடியேனும் உறங்குவதினும், உனது ஆலயத்தே வாணாள் முழுதும் இரத்தம் சிந்துவ தாயினும், அதுவே எமக்கு இன்பம் தருவதாகும். எம்மீது படையெடுத்துத் தாக்கும் போர்வீரரிடம் இதை நீ உரைத்திடுவாயாக."

# 1. லட்சியம்

(மஹாராஷ்டிரத்தின் தலைமையின்கீழ் அகில பாரத ஹிந்து சாம்ராஜ்யம்)

"ஸ்வாமி! ஹிந்துராஜ்ய காரிய துரந்தரரே! ராஜ்ய அபிவிருத்தி கர்த்தாவே! உமது பெரு முயற்சிகளால் இவை யனைத்தும் சாதிக்கப்பட்டன. ஹிந்துஸ்தானம் முழுதும் துன்பத்தினின்றும் காப்பாற்றப் பட்டது. தேசம் முழுவதையும் கோட்டைகள் எல்லாவற்றையும் மீட்டுக்கொண்டு காசியில் ஸ்ரீவிசுவேசுவரரையும் ஸ்தாபித்துள்ளோம்"

(ராமச்சந்ரபந்த் அமாத்யா)

பிற்காலத்திய மஹாராஷ்டிரத்தின் உன்னதமான வரலாற்றை நாம் ஹிந்து சமூக சரித்திரத்தின் ஓர் அத்தியாயமாகவே கருதவேண்டும். முதல் பாகத்தில் அந்த வரலாற்றின் பல நுண்ணிய விவரங்கள் கூறப்பட்டுள்ளன. எனினும் அவைகளில் மிக முக்கியமான சரித்திர நிகழ்ச்சிகளைக் கோவையாக எடுத்து ஆராய்ந்து, அவைகளின் சரித்திரத் தத்துவத்தை அறிய வேண்டியது முற்றிலும் அவசியமேயாகும். அதற்காகவே இவ்விரண்டாம் பாகத்தில் பிற்காலத்திய மஹாராஷ்டிரத்தின் சரித்திர விமரிசனத்தைச் செய்வோம். மராட்டிய இயக்கத்தின் மூல காரணத்தையும், மராட்டிய மக்கள் தளராமல் தியாகம் செய்து போர் புரிந்து மகத்தான ஹிந்து சாம்ராஜ்யத்தை நாட்டிய கருத்தையும் அறியவேண்டியது அவசியமே. ரானடே போன்ற பண்டிதர்கள் சிவாஜி, ராஜாராம் காலத்துச் சரித்திரத்தை உள்ளபடி எடுத்துச்சொல்லி விளக்கி யிருப்பதனால், நாம் இந் நூலில் அதைச் சுருக்கமாகவே எழுதினோம். பாலாஜி விஸ்வநாதரும் மஹாராஷ்டிர மண்டலமும் தோன்றிய பிறகுள்ள சரித்திரத்தையே விரிவாக

எழுதியுள்ளோம். இக்காலத்தில் ஹிந்து சாம்ராஜ்யத்தில் மஹாராஷ்டிரமே பிரதான அதிகாரம் வகித்து வந்தபடியால், இக் காலத்திய மஹாராஷ்டிர சரித்திரம் பாத கண்டத்தின் சரித்திரமே யாகும்.

இந்தக் காலத்தில் மஹாராஷ்டிரத்தில் நடந்த ஹிந்து இயக்கத்தின் தத்துவத்தை அவ் வியக்கத்தை நடத்திய மக்கள் எழுதிய நூல்களி லிருந்தே தெரிந்து கொள்ளலாம். இடை விடாது போர்புரிந்து சமூகத்தின் லட்சியத்தை நாட்டுவதில் கண்ணும் கருத்துமா யிருந்த இம் மக்களுக்குப் பல நூல்கள் எழுதவும் அவகாசம் இருந்திருக்க முடியாது என்பது உண்மையே. மேலும், வீண் வார்த்தைகளைக் காட்டிலும் இம் மக்கள் புரிந்துள்ள அரிய வீரச் செயல்களி லிருந்தே அவர்களது உன்னத லட்சியம் தெளிவாய் விளங்குகிறது. இம் மக்கள் எழுதியுள்ள நூல்கள் சிலவே எனினும் அவைகளி லிருந்தே உண்மை நன்கு புலப்படுகிறது. இந்த மூல சாஸனங்களிலிருந்து மராட்டியப் பெருங் காப்பியத்தின் உட்பொருளை அறியலாம். ராமதாஸர், சிவாஜி இவர்களின் காலம்தொட்டு மராட்டிய இயக்கத்தின் உன்னத லட்சியம் என்னவென்றால், அன்னியர் ஆட்சியினின்றும் ஹிந்து நாடுகளை விடுவித்து, பலத்த ஹிந்து சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்து, அன்னியரது ஆக்கிரமிப்பி லிருந்தும் மதவெறியினின்றும் ஹிந்து நாகரிகத்தையும் ஹிந்து தருமத்தையும் காப்பாற்றுவதே. இவ் வுன்னத லட்சியமானது ஷாஹஜியின் "ஸ்வதர்மராஜ்யத்" திலிருந்து சிவாஜியின் "ஹிந்துஸ்வராஜ்ய" மாகப் பெருகிக் கடைசியில் பாஜிராவின் மகத்தான "ஹிந்து சாம்ராஜ்யமாக" நாட்டப்பட்டதும், 1795—வது வருஷம் கோவிந்தராவ் காளே வெற்றியுடன் உறுதியாக "இது ஹிந்துஸ்தானமே; ஒரு நாளும் துருக்கிஸ்தானம் ஆகாது" என்று கூறினார். தெய்விக தர்ம ஆராதனைக்கு என்றே அர்ப்பணம் செய்யப்பட்ட ஹிந்து சாம்ராஜ்யத்தையே லட்சியமாகக் கொண்ட மராட்டிய இயக்கத்தில் இவ் வுன்னதக் கருத்தை நன்கு காணலாம். ஒரு நூற்றாண்டுக்கு மேலாக ஒரு சமூகத்தின் மக்கள் அனைவரும் ஸ்வதர்ம, ஸ்வராஜ்ய, சுதந்திரக் கொள்கையை நிலைநிறுத்தி வந்தார்கள்.

இவ் வுன்னத லட்சியத்துக்காகப் பாடுபட்டவர் ஒருவர் இருவர் அல்லர்; ஒரு தலைமுறை மாத்திரம் அன்று, ஒரு குல சந்ததியார் மட்டுமல்லர்; ஒரு பெருத்த சமூகமே இந்த லட்சியத்துக்காகப் போர்புரிந்து வந்ததைத் தமிழ் வாசகர்கள் அறிய வேண்டும். ஹிந்து விடுதலைப் போரை ஆரம்பித்தவர்கள் சிவாஜியும் ராமதாசருமே என்றாலும், அப் போர் அவர்களுடன் நின்றுவிடாமல் அவர்கள் இறந்த பிறகும் அந் நாட்டு வீர மக்களால் நடத்தப்பட்டு வெற்றியை அளித்தது. இப் பெரும் தேசிய இதிகாசத்தின் மகிமை என்னவென்றால் ஆயிரக் கணக்கான அரிய வீர ரத்தினங்களான ஆடவரும் பெண்டிரும் மகா மேதாவிகளான அரசியல் நிபுணர்களும் ராஜ தந்திரிகளும் அஞ்சா நெஞ்சு படைத்த போர் வீரரும் மன்னர்களும் ராஜ்ய கர்த்தாக்களும் பண்டிதர்களும் கூட்டம் கூட்டமாய்த் திரண்டுவந்து ஹிந்து சாம்ராஜ்யக் கொடியைச் சூழ்ந்து விஜயகோஷம் புரிந்து நிற்பதுவே.

மேலும், அரசரின் அதிகாரத்தால் ஆட்சி செய்யப்பட்ட மராட்டிய அரசியல் திட்டத்திலும் ஒரு முக்கிய மாறுபாடு ஏற்பட்டது. மராட்டிய மக்களுள் ஒற்றுமை ஓங்கி, ராஜாங்கக் கட்டுப்பாடு தோன்றவும், மஹாராஷ்டிர மண்டலம் ஏற்பட்டது. அதனால் மஹாராஷ்டிரத்தின் அரசாங்க அதிகாரத்தை யெல்லாம் மஹாராஷ்டிர மண்டலமே நடத்திவர முடிந்தது. மஹாராஷ்டிரத்தில் உள்ள பற்பல சிற்றரசர்களும் அதிகாரிகளும் போர்த் தலைவர்களும் அரசியல் விஷயங்களில் மஹாராஷ்டிர மண்டலத்தின் தலைமை யதிகாரத்துக்கு அடங்கி நடந்துவந்தார்கள். இதிலிருந்து மராட்டிய இயக்கம் கேவலம் சில மனிதரால் நடத்தப்பட்டதன்று என்றும், ஒரு தேசிய இயக்கமே என்றும், அதில் தேச மக்கள் யாவரும் ஒற்றுமையுடன் ஈடுபட்டிருந்தார்கள் என்றும் ஐயமற விளங்குகிறது. மஹாராஷ்டிர மண்டலம் தோன்றியதனால் இந்தியர் வாழ்க்கையிலேயே அரசியல் எண்ணங்களிலும் பயிற்சியிலும் முன்னேற்றம் ஏற்பட்டது. ஏனென்றால், இந்திய சரித்திரத்தில் இந் நாள்வரை, மக்களுள் இத்தகைய ஒற்றுமையும் கட்டுப்பாடும் அரசியல் முறைகளில் ஏற்பட்

டிருந்ததில்லை. மராட்டியர் தொகுத்த சாம்ராஜ்யத்தில் அரசியல் அதிகாரம் அரசரது கையில் இல்லாமல் மக்கள் கையிலேயே இருந்தது. தேசியக் குடியரசின் தத்துவத்தை மக்கள் அறிந்து, மராட்டிய மண்டலத்தின் ஒவ்வோர் அங்கத்தினரும் தத்தம் கடமைகளைச் செய்து உரிமைகளைப் பாராட்டி வந்தார்கள். இத்தகைய அரசியல் அனுபவம் பெற்ற மக்களால் சுலபமாகவே ஜனநாயகத்தையும், ஐக்கிய சமஷ்டி ஆட்சியையும் நாட்ட முடிந்திருக்கும். அரசியலில் அரசரது அதிகாரத்தை அனுசரித்துவரும் மக்களால் குடியரசையும் கட்டுப்பாட்டையும் நிலைநிறுத்துவது அவ்வளவு சுலபமான காரியமன்று. மராட்டியரைப்போலவே சீக்கியரும் தம்முள் ஒப்பந்த சமஷ்டி அரசியல் திட்டத்தைப் பிற்பாடு நாட்டினார்கள். ஆனால் அவர்களது அரசியல் திட்டத்தில் மராட்டியரின் ஒழுங்கும் நியமமும் முறையும் ஏற்பட்டிருக்கவில்லை. மேலும், அவர்கள் நாட்டிய ஆட்சி மராட்டியரது ஆட்சியைப்போல் நீண்ட காலம் நீடித்திருக்கவும் இல்லை. ஆனால், சீக்கிய இயக்கத்தின் கொள்கைகளும் லட்சியங்களும் மராட்டிய லட்சியங்களைப்போல் மேன்மையும் தேசபக்தியும் பொருந்தியனவாதலால் சீக்கியர் இயக்கத்தையும் ஹிந்து சமஷ்டி ஆட்சியின் முக்கிய உதாரணமாகக் கருத வேண்டும்.

மராட்டிய இயக்கத்தின் தேசிய ஹிந்து மனப்பான்மையையும் லட்சியத்தையும் நாம் அறிந்துள்ளோம். இதனால் மராட்டிய மக்கள் யாவரும் சுயநலங் கருதாது பொது ஹிந்து நன்மையைக் கருதியே பாடுபட்டு வந்தார்கள் என்று சொல்ல முடியாது. சிற்சில சமயங்களில் உள்நாட்டு மனஸ்தாபங்களும், சச்சரவு கலகம் போர்களும் நடந்தே வந்தன. எனினும், அக் காலங்களிலும் அனேகர் ஹிந்து தருமத்துக்காகப் பாடுபட்டுத் தியாகம் செய்யாமல் இருக்கவில்லை. உண்மையில் நாம் மராட்டியர்களை முதலில் ஹிந்துக்களாகவே கருதவேண்டும். ஆதலால் ஹிந்து சமூகத்தில் பொதுவாகக் காணப்படும் நல்ல குணங்களையன்றிக் குறைகளையும் மராட்டியரிடம் காணலாம். முதன் முதலில் முகமதியர்கள் இந்தியாவுக்கு வந்தபோது

அவர்களுள் பலத்த ஒற்றுமையும் சமூக ஐக்கியமும் வீர உணர்ச்சியும் செறிந்து இருந்ததால், அத்தகைய நல்ல குணங்களின் அணுவளவும் அமையப்பெருத ஹிந்துக்கள் அவர்களை எதிர்த்து நிற்க முடியாமல் சிதறுண்டார்கள். பிரிதிவிராஜர், முகமதுகோரி இவர்களது காலத்தில் இருந்த ஹிந்து முஸ்லிம் சமூகங்களின் குணங்களையும் குறைகளையும் சீர்தூக்கி ஆராய்ச்சி செய்ய இது சரியான சந்தர்ப்பம் அன்று. முகமதியர்கள் தமது மதவிஷயதில் போர்வெறியைக் காட்டி, இஸ்லாம் தவிர மற்ற மதங்களெல்லாம் அதர்ம பாவ மார்க்கங்களே என்று சொல்லி, பிற மதங்களின் முக்கிய ஸ்தாபனங்களை நயவஞ்சகத்திஞலோ அன்றி பலவந்தத்திஞலோ உடைத்தெறிவதால் முகமதியன் மோட்ச நிலைக்கு அருகன் ஆகிருன்என்று தம்மக்களுக்குப் போதித்தும் வந்தார்கள். இதஞல் அவர்கள் புரிந்த ஒவ்வொரு யுத்தமும் மதயுத்தமாகவே, அவைகளில் முகமதிய மக்கள் மத ஆவேசத்திஞலும் மிருக வீரத்திஞலும் வெற்றி பெற்றுத் தமது ஆட்சியை ஆங்காங்கு நாட்ட முடிந்தது. ஆஞல், ஹிந்துக்களோ மதவிஷயங்களில் யுத்த எண்ணங்களைத் தவிர்த்து, பலாத்காரத்தை எவ்விதத்திலும் கையாள மறுத்து வந்தார்கள்; பிராணபத்துக்கு அஞ்சிக் கத்திமுனையில் பிற மதங்களைத் தழுவ நேர்ந்த தமது சகோதரர்களையும் மீண்டும் தமது மதத்திலும் சமூகத்திலும் சேர்க்க மறுத்து வந்தார்கள். மேலும், யாவரும் ஒருமித்துக் கூடி மசூதியில் பிரார்த்தனை செய்வதே தனது முக்கியக் கடமை என்று முகமதியன் கருதி வர, ஹிந்துவோ தனது பூஜைகளையும் பிரார்த்தனைகளையும் தனிமையில் செய்து வந்தான். இதஞல் ஹிந்துக்களுக்குள் மத உரிமைகளைக் காப்பாற்றும் பொது ஸ்தாபனம் இல்லாமல் போய்விடவே, பொதுஜன முயற்சிகளில் ஒற்றுமையை நாட்டுவதிலும் பெருங் கஷ்டங்கள் தோன்றலாயின. மேலும், ஹிந்துக்களுக்குள் பொதுவான தாய்நாடு என்றும், பொதுவான சமுதாயம் என்றும், பொதுவான அரசாட்சி அல்லது சாம்ராஜ்யம் என்றும் பொதுவான உணர்ச்சிகளும் கொள்கைகளும் இல்லாமல் போகவே, அவர்கள் ஒற்றுமை குன்றிச் சிதறுண்டு தமது மதத்தையும் அரசியல் அதிகாரத்தையும் காப்பாற்ற முடி

யாமல் போய்விட்டது. அல்லாவின் தலைமையின்கீழ்ப் பரந்த சாம்ராஜ்யத்தை நாட்டி உலகம் முழுவதையும் அதன் ஆட்சியின்கீழ் அடக்கிவிட வேண்டும் என்றும், அத்தகைய முகமதிய ஆட்சியே தெய்விக ஆட்சி என்றும் தேவாதிபத்தியம் என்றும் முகமதியர்கள் நம்பிவந்ததால் அவர்களுள் லட்சிய ஒற்றுமையும் மதாவேசமும் பெருகி வந்தன. ஆனால் ஹிந்துக்களோ வியக்தி சுதந்திரவாதிகள்; வாழ்க்கையில் வேதாந்த விசாரணை கொண்டு, பிரபஞ்சத்தின் மூல தத்துவத்தைத் தேடுவதில் ஆர்வம் கொண்டவர்களாய், தமது சமூகத்தின் சேவைகளையும் சமூகக் கடமைகளையும் மறந்து, பொது ஸ்தாபனங்களுக்கு ஆதரவு காட்டாமல், ஒவ்வொருவரும் தனிப்பட்ட தனது மோட்சத்தில் கருத்து வைத்து, ஒற்றுமை குன்றினார்கள். அது மட்டுமன்றிப் பலவிதமான மூடநம்பிக்கைகளும் ஹிந்து மக்களிடை தோன்றத் தலைப்பட்டன. தமது நாட்டின் எல்லையைத் தாண்டுவதும் பாவமாகும் என்ற எண்ணம் தோன்றவே, அவர்களுள் அன்னியர்மீது படையெடுக்கும் வீரமும் குன்றி விட்டது. அவர்களது அரசியல் திட்டங்களில் சமுதாய ஒற்றுமையே மறைந்திருந்ததால், ஹிந்து ஆட்சியானது ஒற்றுமை பெறாமல் பல சிறு ராஜ்யங்களாகப் பிளவுண்டிருந்தது; தம்முள் நிலவும் பொது நாகரிகத்தையும் கட்டுப்பாட்டையும் உணராதவர்களாய் மாகாண ஜாதி வித்தியாசங்களையே பெரிதும் பாராட்டத் தலைப்பட்டார்கள். ஹிந்து மக்கள் யாவரையும் ஒரு பொது ஹிந்துக் கொடியின்கீழ்க் கூட்டச் சிலர் செய்து வந்த முயற்சிகளும் முகமதியனின் மதவெறியின் முன்பும் போராசை பிடித்த வீரத்தின் முன்பும் சிதறுண்டன. ஆனால் ஹிந்து மக்களுள் ஒவ்வொருவரையும் தனித் தனியே எடுத்துப் பார்ப்போமானால் ஒவ்வொரு ஹிந்துவும் எந்த முகமதியனைக்காட்டிலும் வீரமும் சமுதாய பக்தியும் அமைந்திருந்ததை நாம் நன்கறியலாம். ஆனால் ஹிந்து ஜாதியாருடன் முகமதிய ஜாதியாரை ஒப்பிட்டுப் பார்ப்போமானால் ஹிந்து ஜாதியாரிடம் காணப்படாத சில அரிய குணங்கள் முகமதிய ஜாதியாரிடம் இருந்ததை அறிகிறோம். அதாவது முகமதிய ஜாதியாரிடம் இருந்த கொடிய ஒற்றுமையானது அவர்களது மதவெறியாலும் ஆவேசத்

தாலும் மகத்தான பலத்தையடைந் திருந்தது. அதனால் அல்லாவின் கொடியின் கீழ்ப் போர்புரிந்து இறப்பதில் அவர்களுக்குக் கருத்தை நாட்டி, நம்பிக்கையற்ற காபிர்களை வென்று முறியடித்து அடக்கி, உலகெங்கணும் அல்லாவின் ஆட்சியைப் பரப்புவதே வாழ்க்கையின் முக்கிய லட்சியமான தரும யுத்தமாகும் என்ற நம்பிக்கையினால் தீவிர முயற்சியுடன் போர் புரிவதிலும் அவர்களை ஈடுபடச் செய்தது. ஆனால், நாளடைவில் ஹிந்துக்களும் இந்தப் பாடத்தைக் கற்றுக் கொண்டார்கள்; தமது ஜாதிக்கும் தேசத்துக்கும் நேர்ந்துள்ள பொது அபாயத்தை உணர்ந்து தம்முள் பிளவுண்டாக்கும் வேற்றுமைகளைக் காட்டிலும் தம்மை ஒரே சமூகத்தினராய்க் கட்டுப்படுத்தும் ஒற்றுமையே அதிகமா யிருப்பதை அறிந்து, அந்த ஒற்றுமையே பெரிதும் பாராட்டத் தலைப்பட்டார்கள். தாம் முதன் முதலில் ஹிந்துக்களே என்பதை யுணர்ந்து, தமது சமூக வாழ்வில் தோன்றித் தம்மைப் பிரிவுபடுத்திக் குலைத்திடும் சில்லறைச் சச்சரவுகளைத் தவிர்க்கலானார்கள். தம்முள் நிலவும் ஒப்பற்ற சமுதாயக் கட்டுப்பாட்டையும் ஒற்றுமையின் பெருமையையும் பெரிதும் பாராட்டி வளர்த்திடத் தொடங்கினார்கள். முகமதியரின் பெருமித வெற்றியின் காரணங்களை யறிந்துணர்ந்து அவைகளைத் தாமும் அனுஷ்டிக்கலானார்கள். இதனால் அகில பாரத ஹிந்து இயக்கமே ஏற்படவும், ஹிந்துக்கள் தமது அரசியல் சுதந்திரத்தைக் காத்து மகத்தான ஹிந்து சாம்ராஜ்யத்தை நாட்டப் போர் புரியலானார்கள். அக்காலத்தில் ஹிந்து உலகம் அடைந்து இருந்த ராஜிய நிலைமையை யோசித்துப் பார்த்தால், ஹிந்து விடுதலைப் போரைச் செவ்வனே நடத்தி வெற்றி நாட்டுவதற்கு மஹாராஷ்டிரமே தகுதி பெற்றிருந்தது நன்கு விளங்குகிறது. பரதகண்டம் முழுதும் யாத்திரை செய்து திரும்பி வந்தபோது ராமதாஸர் மன வருத்தத்துடனும் நம்பிக்கையுடனும் சொன்னார்: "முகமதியக் கொடுங் கோலின் அடிமைத்தனத்தினின்றும் நமது நாட்டையும் சமூகத்தையும் காத்து ரட்சிக்கவல்ல சக்தியோ அவாவோ ஒரு ஹிந்துவின் இடத்திலும் நான் காண முடியவில்லையே. மஹாராஷ்டிர மக்களால்தான் ஏதாவது நன்மை ஏற்படலாமென்று எண்ண முடிகிறது." இந்த நம்பிக்கையுடன்

தான் அவரும் அவரது சிஷ்யர்களும் முதலில் மஹாராஷ்டிரத்தில் ஒற்றுமையையும் உற்சாகத்தையும் நாட்டத் தலைப்பட்டார்கள். பிற்பாடு அகில ஹிந்துஸ்தானத்தில் சுதந்திரத்தை மீட்பதற்குத் தரும யுத்தம் புரிந்து, அன்னியரது ஆட்சியினின்றும் ஹிந்து ராஜ்யத்தையும் தருமத்தையும் ஹிந்து தேவாலயங்களையும் சிங்காதனங்களையும் ரட்சிக்கும் பொருட்டுப் பரதகண்டம் முழுவதிலும் ஒற்றுமையும் பலமும் பொருந்திய மராட்டிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபிப்பதில் அவர்கள் தளராத உறுதி கொண்டார்கள். அத்தகைய மராட்டிய சாம்ராஜ்யத்தினுல்தான் ஹிந்து மதமும் ஹிந்து சமூகமும் சிதறுண்டு போகாமல் தலைநிமிர்ந்து நிற்க முடியும் என்று நம்பினுர்கள். ஆனுல், இந்த முயற்சிகளால் ஹிந்துஸ்தானத்திலும் மஹாராஷ்டிரத்திலும் உள்ள ஹிந்து ஜாதியாரிடையே உள்ள சச்சரவுகளை நீக்கி உடனே ஒற்றுமையை ஸ்தாபிக்க முடியவில்லை. ஆயினும் அவர்களால் ஒன்று மட்டும் செய்ய முடிந்தது—மராட்டிய மக்களிடம் தேச பக்தியையும் சமுதாய ஆவேசத்தையும் கிளப்பி, சுயநலத்தையும் சச்சரவுகளையும் தலையெழவொட்டாமல் செய்தார்கள். அற்ப சுயநலத்துக்காக நாட்டையும் மதத்தையும் காட்டிக் கொடுக்கக் கூடாது என்ற மனப்பான்மை மராட்டிய மக்களிடம் வேரூன்றிற்று. மராட்டிய சரித்திரத்தில் அவ்வப்போது உள்நாட்டுச் சச்சரவு ஏற்பட்டு வந்தது. ஆயினும் தேசத்தின் நெருக்கடியான சமயங்களிலெல்லாம் மராட்டியரிடம் ஹிந்து தேசிய எண்ணங்கள் ஒடுங்கிடாமல் மேலோங்கியே இருந்தன. இதனுல் சுயநல அற்பர்கள் அவ்வப்போது அன்னியருக்கு நாட்டைக் காட்டிக் கொடுக்க முற்பட்டிருந்தும் அதனுல் மராட்டிய மக்களிடையே தேச பக்தியும் மதாபிமானமும் குன்றுமல் இருந்து வந்தன. எவ்விதமேனும் பரதகண்டத்தில் ஹிந்து ஆட்சியை நாட்டி, அன்னியர் ஆட்சியை அறவே ஒழிக்க வேண்டுமென்ற ஆவேசம் மராட்டியரிடையே பரவி வரவும், அவர்கள் தமது சுயநல எண்ணங்களையாவையும் மறந்து தேசத்தின் மேன்மையையே கருதி வந்தார்கள். முகமதியரைக் காட்டிலும் மராட்டியர்கள் அதிகமான தேச பக்தியும் மதாவேசமும் கொண்டார்கள்.

ஹிந்துஸ்தானம் முழுவதிலும் ஹிந்து சாம்ராஜ்யத்தை நாட்டுவதற்கு மராட்டியரே தகுதியுள்ளோ ராயினர். ஆதலால், அவர்கள் நாட்டிய சாம்ராஜ்யம் மராட்டிய சாம்ராஜ்யமாகவே இருந்தது.

ஹிந்து ஆட்சியை நாட்ட மராட்டிய மக்கள் பல வருஷங்கள் முயன்று வந்தார்கள். அவர்களுடைய முயற்சிகள் வீணுகாமல் வெற்றிகரமாய் முடிந்தன. அக் காலத்தில் ஹிந்துஸ்தானம் இருந்த நிலைமையில் மராட்டிய சாம்ராஜ்யம் ஒன்றே பலிக்கக் கூடியதா யிருந்தது. அந்த மராட்டிய சாம்ராஜ்ய ஸ்தாபனத்தில்தான் ஹிந்து ஆட்சியும் ஹிந்து சாம்ராஜ்யமும் நிறைவேற்றப்பட்டன. இத்தகைய ஹிந்து சாம்ராஜ்யத்தில் ஈடுபட்டு அதை என்றும் குன்ருத பலமுடையதாகச் செய்தாலன்றி, ஹிந்து சுதந்திரத்தையும் ஹிந்து ஆட்சியையும் அன்னியர் களின் ஆக்கிரமிப்பி லிருந்து பாதுகாத்து ஹிந்துக்களால் அரசியல் வாழ்வில் தலை நிமிர்ந்து உன்னத பதவியில் இருப்பது முடியாத காரியமாகிவிடும். அநேக நூற்றுண்டு களாக அரசியல் அடிமைத்தனத்தில் ஆழ்ந்திருந்த ஹிந்து ஜாதியாரை மேன்மைப்படுத்தும் இந்த மகத்தான காரியத்தை அக் காலத்தில் சாதிக்க வல்லவர் மராட்டியரே. ஹிந்துஸ்தானம் அக் காலத்தில் இருந்த நிலைமையை யோசித்துப் பார்த்தால் மராட்டியரை அன்றி வேறு ஹிந்து மக்கள் எவராலும் அதைச் சாதித்திருக்க முடியாது என்று உறுதியாய்க் கூறலாம். முகமதியரை விட அவர்கள் தேசிய வீரம் செறிந்து விளங்கினர். ஏனைய ஹிந்து மக்களைக் காட்டினும் அவர்களிடமே ஒற்றுமையும் அரசியல் விருப்பமும் ஹிந்து விடுதலைப் போரை நடத்த வல்லமையும் அதிகமாக இருந்தன. ஆயினும் அக் காலத்தில் ஆங்கிலேயரிடம் காணப்பட்ட உன்னத தேசிய உணர்ச்சி மராட்டியரிடமும் இருக்க வில்லை. ஆதலால் நீண்ட போரில் ஆங்கிலேயரே ஜெயிக்க முடிந்தது. எனினும், ஹிந்து இயக்கத்தை நடத்தி ஹிந்து ஆட்சியை நாட்டி நடத்தும் தலைமை யதிகாரம் தமக்கே உரியது என்று மராட்டியர் மேற்கொண்டதும் முற்றிலும் சரியானதே. ஹிந்து ஆட்சியின் பொருட்டு முதலில்

முற்பட்டுக் கிளம்பியவர்கள் அவர்களே. மகத்தான தியாகம் செய்து அம்முயற்சிகளில் வெற்றி பெற்றவர்களும் அவர்களே. ஆதலால் ஹிந்துஸ்தானம் முழுவதையும் தமது கொடியின்கீழ் நாட்டி, ஒற்றுமைப்படுத்தி, ஹிந்து மக்களின் பலத்தையும் அதிகாரத்தையும் தமது கையில் வைத்தவராய், சிறு ஹிந்து ராஜ்யங்களைத் தமது ஆட்சியில் அடக்குவதே நியாயமாகும் என்றும், அதுவே தமது கடமை யென்றும் மராட்டியர் நம்பி முயற்சி செய்ததில் தவறேதும் இல்லை. ஹிந்து லட்சியத்தைப் போர் புரிந்து காத்திடும் உரிமையை அவர்கள் ஏற்றுக் கொண்டதில் நியாயமும் அவசியமும் இருந்தது. பகைவரை முறியடித்துச் சிதைத்து அக் காரியத்தைச் சாதிப்பதில் உள்ள தமது ஒப்பற்ற வல்லமையை மராட்டியர்கள் தமது வெற்றிகளால் நிரூபித்துக் காட்டினார்கள். இதைப் போலவே ஏனைய ஹிந்து மக்களில் எவரேனும் முதலில் துணிந்து முற்பட்டு இத்தகைய அரிய காரியங்களைச் சாதித்து, தாம் நாட்டிய ஹிந்து ஆட்சியில் மராட்டிய மக்களும் அடங்கி நடந்துவர வேண்டுமென்று வற்புறுத்தியிருந்தால் அதிலும் நியாயம் இருக்கும். ஹிந்துஸ்தானம் முழுவதிலும் ஹிந்து ஆட்சியை ராஜபுத்திரர்களேனும், சீக்கியரேனும், தமிழரேனும், வங்காளத்தவர்களேனும் நாட்டி ஹிந்து மக்களையும் ராஜ்யங்களையும் தமது சாம்ராஜ்ய ஆட்சியில் அடக்கியாண்டு, ஹிந்து லட்சியத்தைப் பாதுகாத்து வந்திருப்பார்களேயானால் அவர்களுக்கும் இத்தகைய கௌரவத்தை ஹிந்துக்களாகிய நாம் அனைவரும் கொடுத்துப் பாராட்டுவோமே யன்றி அதை ஒரு மாகாணத்தார் அல்லது ஒரு ஜாதியாரின் ஆட்சியென்று குறைகூற மாட்டோம்.

## 2. காலத்துக்கேற்ற உத்தம மார்க்கம்

"நாம் மேற்கொள்ளும் பெருங் காரியங்களில் வெற்றியும் தோல்வியும் கலந்தே இருக்கின்றன." "சில நாளேக்கேனும் நாம் அச்சமின்றி ஸ்வராஜ்யத்தை அனுபவித்துள்ளோம்." "மக்களின் வறுமையைப் போக்கினோம்." "ஹைதரும் நவாபும் ஆங்கிலேயரும் நம்முடன் போர்புரிந்து தளர்ந்து விட்டார்கள். பூனாவின் செல்வத்தைக் கொள்ளை கொள்ளத் துராசை கொண்டு முன்வந்தோர் யாவரும் அழிந்துவிட்டார்கள்."

ஹிந்து சாம்ராஜ்யத்தை நாட்டும் முயற்சியில் மராட்டியர் பல ஹிந்து ராஜ்யங்களுடன் போர்புரிய வேண்டியிருந்தது. இவ்விதமின்றி மராட்டியர் ஹிந்துஸ்தானத்தில் உள்ள பல பிரிவுகளைச் சேர்ந்த ஹிந்துக்களையும் பலவந்தம் செய்யாமல் இதோபதேசத்தினால் ஹிந்து சாம்ராஜ்யத்தை நாட்டியிருந்தால் இதனிலும் சிறந்ததாய் இருக்குமன்றோ? அத்தகைய ஹிந்து சமஷ்டி ஆட்சியிலே மராட்டியரும் வங்காளியரும் பஞ்சாபிகளும் மேல் ஜாதியாரும் கீழ் ஜாதியாருமான பலவகைப்பட்ட ஹிந்துக்களும் தத்தம் மாகாண, ஜாதி, குலப் பெருமைகளைப் பாராட்டாமல் ஹிந்து ஆட்சியின் வெற்றியில் ஹிந்துக்கள் என்ற முறையில் ஈடுபட்டிருந்தால் அதனிலும் சிலாக்கியம் இருக்குமல்லவா? ஆம்; அவ்வாறு நடந்திருந்தால் அதைச் சிறந்த தேசியப் பெருங் காரியமென்றே கருதவேண்டும். ஆனால், ஹிந்துக்கள் தம்முள் இருக்கும் சிறு வித்தியாசங்களைப்பாராட்டாமல் தேசாபிமான ஒற்றுமையில் இழைந்து நின்றிருந்தார்களேயாயின், அன்னியர்களான முகமதியர்கள் சிந்து நதியைத் தாண்டியிருக்க முடியுமா? ஆதலால் நடந்ததை நடந்தவாறே ஆராய்ச்சி செய்யவேண்டும். மக்களையும் அவர்களது மனப்பான்மையையும் அவரவர் காலத்துக்கேற்றவாறுதான் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அந்தந்தக் காலங்களில் உள்ள எண்ணங்களுக்கு ஏற்றவாறுதான் ஒவ்வொரு ஜன சமூகமும் அரசியலும் மற்றத் துறை

களிலும் விளங்கமுடியும். மராட்டியர் நடத்திய ஹிந்து இயக்கம் யாதொரு குறையும் இன்றி உன்னதமாய் நடந்தது என்று சொன்னால் அது முற்றிலும் தவறாகும். ஏனெனில், உண்மை அவ்வாறு இல்லை. மற்ற மக்களைப்போல் மராட்டியரும் சாதாரண மனிதர்களே அன்றித் தேவர்கள் என்று யாரேனும் சொல்ல முடியுமா? ஆதலால் ஏனைய ஹிந்துக்களிடையே பெரும்பாலும் பொதுவாகக் காணப்படும் அரசியல் குறைகள் அவர்களிடமும் இருந்தன. அதனால் மேற்கூறியவாறு இதோபதேச மார்க்கத்தினால் ஹிந்துக்களுள் ஒற்றுமையையும் ஹிந்து ஆட்சியையும் நாட்டும் உன்னத தேசிய முறையை அவர்களால் கையாள முடியவில்லை. அத்தகைய உன்னத மார்க்கம் ஏனைய ஹிந்து மக்களாலும் சாதிக்கப்பட்டிருந்ததில்லை. உண்மையில் ஏனைய ஹிந்து மக்கள் மராட்டியரைப் போல் தேசாபிமான முயற்சியில் ஈடுபட்டிருக்கவில்லை. மற்றும் இதோபதேசத்தால் மட்டும் ஒருகாரியத்தைச் சாதிப்பதென்றால் அது போதிப்பவரின்வல்லமையையே பொறுத்ததன்று; போதனை அடைவோர்கள் சுயநலமற்றுத் தூய உள்ளத்தில் சிரத்தை வைத்தாலன்றி வெறும் பிரசாரத்தினால் நற்பயன் ஏதும் கிட்டாது. மராட்டியர் பலவந்தத்தைக் கையாளாமல் தேசிய மார்க்கத்தைப் போதித்து வந்திருந்தால் ஏனைய ஹிந்து மக்கள் தத்தம் சில்லறைப் பெருமைகளை அறவே துறந்து ஹிந்து சாம்ராஜ்யத்தில் பொதுவான பொறுப்பும் உரிமையும் ஏற்றுத் திருப்தி அடைந்திருப்பார்களா? இத்தகைய தேசிய உணர்ச்சி அவர்களுள் ஒருவரிடமும் இல்லை. சிறு ஹிந்து ராஜ்யங்களிலோ சிங்காதனத்துக்காக அடிக்கடி உள்நாட்டுப் போர்கள் நடந்து வந்தன. மற்றும் அவர்கள் தமது சச்சரவுகளில் தலையிட்டு மத்தியஸ்தம் செய்யுமாறு முகமதியரையும் ஆங்கிலேயரையும் அடிக்கடி அழைத்திடவும் தயங்கவில்லை. உடன்பிறந்த சகோதரனை வணங்க மறுத்து அவர்கள், தமது ஆலயங்களையும் விக்கிரகங்களையும் உடைத்தெறிந்து வேதங்களைமிதித்த முகலாயனுக்கு அடிமை செய்யவும் முற்பட்டார்கள் என்றால் அதிகம் சொல்லுவானேன்! இத்தகைய மக்களிடத்தில் உயர்ந்த அரசியல் மனப்பான்மையையும், தேசாபிமானத்தையும் எதிர்பார்ப்

பது வீணாகும். ஆதலால் ஏனைய ஹிந்து மக்கள் தேசிய உணர்ச்சி சிறிதும் இன்றிச் சுயநலப் பிரியர்களாய் தேசத்தைக் காட்டிக்கொடுக்கவும் கூசாமல் முற்பட்டு வந்தபோது, மராட்டியரிடம் மட்டும் குறை சொல்லி, அவர்கள் இதனிலும் உயர்ந்த வழியில் காரியத்தை நடத்தியிருக்கலாமே என்று குறை சொல்வது முற்றிலும் மதியீனமாகும். சிறந்த ஹிந்து சாம்ராஜ்யத்தை நாட்டுவதன் பொறுப்பு ஹிந்து மக்கள் எல்லோருக்கும் பொதுவானதால், அதற்குத் தகுந்த உயர்ந்த மார்க்கம் கையாளப்படாவிடில், அதன் குறை எல்லா ஹிந்து மக்களையும் சார்ந்ததேயாகும்; மதவெறிபிடித்த அன்னியரது கொடுங்கோல் ஆட்சியை யகற்றி, ஹிந்து சாம்ராஜ்ய ஆட்சியை நாட்டுவதில் மாராட்டியரைப்போல் முயற்சி செய்யாத ஏனைய ஹிந்து மக்களையே அந்தத் தவறு சார்ந்ததாகும்.

இவ்வாறு இருந்தும் மராட்டியர் ஹிந்து ஆட்சியை நாட்டும் மகத்தான காரியத்தில் தம்முடன் ஒத்துழைக்கும்படி ஹிந்து சகோதரர்களை அடிக்கடி வேண்டி வந்தார்கள். இந்த வேண்டுகோளைக் கேட்டு இத்தகைய உன்னத லட்சியத்தில் ஈடுபட்டுச் சில ராஜபுத்திரர்களும் பந்தேனர்களும் ஜாட்களும் மற்றும் வடநாட்டு தென்னாட்டு ஹிந்து தோழர்களில் பலரும் ஒத்துழைக்க முன்வந்துள்ளார்கள். இக்காலத்திய சரித்திரத்தில் இதற்கேற்ற உதாரணங்கள் பல உள்ளன. அவைகளில் சிலவற்றை நாம் மீண்டும் வாசகர்களுக்கு எடுத்துக் காட்டுவோம்.

அக்காலத்தில் ஹிந்து மக்கள் அரசியல் துறையில் முன்னேற்றம் பெற்றிருந்து, மராட்டிய மண்டல ஆட்சியும் நீண்ட நாள் நிலைத்திருந்ததால், ஹிந்துஸ்தானம் முழுதும் ஹிந்து சாம்ராஜ்யமாக நிலைத்திருந்தது. ஹிந்து ஜனநாயக சாம்ராஜ்ய ஆட்சி ஏற்பட்டிருக்கும் என்று நிச்சயமாய்க் கூறலாம். மராட்டிய மண்டல ஆட்சி முன்னேற்றமடைந்து வந்த காலத்திலும் அதனால் தக்காணத்திலும் வட நாட்டிலும் உள்ள பற்பல சிறிய பெரிய ஹிந்து ராஜ்யங்கள் யாவும் அடங்கி,மராட்டியர் தொகுத்த சாம்ராஜ்ய ஆட்சியிலே பொதுவான உரிமைகளையும்

பொறுப்புக்களையும் பெற்று விளங்கியதைப் பார்த்தால், நாளடைவில் மராட்டிய ஆட்சியால் இத்தகைய அரசியல் ஏற்பாடு கண்டிப்பாய் ஏற்பட்டிருக்கும் என்று கூறுவது மிகையாகாது. சுயஉரிமை பெற்ற சமஷ்டி சாம்ராஜ்ய ஆட்சியில் ஒற்றுமையுடன் வாழ்வதற்கு மராட்டியர் ஏனைய ஹிந்து ராஜ்யங்களை அடிக்கடி அழைத்து வந்தார்கள். உண்மையாகக் கூறுமிடத்து, 1800-வது வருஷம் நானாபட்னவீஸ் இறந்த போது, ஹிந்துஸ்தானம் முழுவதும் ஹிந்து மன்னர்களின் கையில் இருந்தது. நேபாளம் முதல் திருவாங்கூர் வரையிருந்த இந்திய ராஜ்யங்கள் எல்லாம் ஹிந்து அரசர்களால் மராட்டிய மண்டலத்தின் தலைமையின் கீழ் ஆளப்பட்டு வந்தன. அந்த நெருக்கடியான சமயத்தில் மராட்டியரையும் ஏனைய ஹிந்து மக்களையும் காட்டிலும் சிறந்த தேசிய குணங்களும் வன்மையும் சாதுரியமும் உள்ள ஆங்கிலேயர் இந்தியாவில் தோன்றியிராவிட்டால்; மஹாராஷ்டிரத்து ஹிந்து சாம்ராஜ்யம் ஹிந்துஸ்தானத்தின் ஹிந்து சாம்ராஜ்யமாக நிலைத்திருக்கும். மராட்டியரும் அரசியல் துறைகளில் முன்னேற்றமடைந்து, பற்பல மாகாணங்களில் உள்ள தனித்தனி ஹிந்து ராஜ்யங்களையும் ஒன்றுபடுத்தி, ஹிந்துஸ்தானம் முழுவதிலும் ஐக்கிய ஹிந்து ராஜ்ய ஆட்சியை நிலைநிறுத்தியிருப்பார்கள். முகமதியரிடம் ஹிந்துக்கள் தோல்வியுண்டிருந்ததில் ஒரு நல்ல பலன் ஏற்பட்டது. அந்தத் தோல்வியினால் ஹிந்துக்கள்—அதிலும் மராட்டியரும் சீக்கியரும்—நல்ல பாடங்களைக் கற்றுக் கொண்டார்கள். முகமதியரின் வெற்றிக்குக் காரணமாயிருந்த ரகசியங்களை அவர்கள் சீக்கிரம் செவ்வனே அறிந்ததுமன்றி, அந்தப் புதிய அறிவைப் பயன்படுத்தி, தமது மக்களையும் சமூகத்தையும் சீர்திருத்தி வரவும் அவர்களால் நாளடைவில் முகமதியர்களை முறியடிக்கவும் இயன்றது. அதே போல் அவர்கள் ஐரோப்பிய எதிரிகளிடம் இருந்த உயர்ந்த அரசியல் யுத்த விஷயங்களையும் தெரிந்து கொண்டிருப்பார்கள். அதுமட்டுமல்லாமல் ஜப்பான் செய்ததுபோல் அவ்வறிவையே பயன்படுத்தி ஐரோப்பியர்களையும் முறியடித்துத் துரத்தித் தமது மகத்தான சாம்ராஜ்யத்தை மீண்டும் நாட்டியிருப்பார்கள். யுத்தத்தில் ஐரோப்பியர்கள் அடைந்துவந்த வெற்றிக்கு முக்கிய

காரணம் அவர்களது படையில் இருந்த கட்டுப்பாடான ஒழுக்கமும் அணிவகுப்புப் பயிற்சியுமே என்ற ரகசியத்தை யறிந்து, மாராட்டியர் தமது படைகளுக்கும் ஐரோப்பிய முறையில் கட்டுப்பாடான ஒழுக்கத்தையும் அணிவகுப்புப் பயிற்சியையும் அளித்து அவைகளிலும் தமது படைகளை ஐரோப்பியப் படைகளைவிடச் சிறந்து விளங்கும்படி செய்துவிட்டார்கள். இதுமட்டுமன்றி மகாதஜீ ஷிந்தியா, பக்ஷி முதலிய பெருந்தலைவர்களின் தலைமையில் புதிய ஐரோப்பிய யுத்தக் கருவிகளைக் கையாளுவதிலும், அக் கருவிகளை யுண்டாக்கி அமைப்பதிலும் ஐரோப்பியர்களைப் போல் திறமை யடைந்திருந்தனர். இதிலிருந்தே ஹிந்து சாம்ராஜ்யமாக வளர்ந்த மராட்டிய மண்டலம் நாளடைவில் யுத்தமுறையிலும் அரசியல் துறையிலும் ஐரோப்பியர்களிடம் உள்ள சிறந்த விஷயங்களைத் தேர்ந்து அறிந்து, அவைகளைத் தாமும் பயின்று, முகமதியரைப்போல் அன்னியரான ஐரோப்பிய எதிரிகளையும் முறியடித்துச் சின்னபின்னப்படுத்தித் துரத்தி ஜர்மனியில் உள்ளதுபோன்ற சமஷ்டி ஐக்கிய ஆட்சியையும் இந்தியாவில் நாட்டி, ஹிந்து ராஜ்யங்களெல்லாம் ஒன்று சேர்ந்த ஹிந்து சமஷ்டி சாம்ராஜ்ய ஆட்சியையும் நிலைநிறுத்தி யிருப்பார்கள் என்பது நன்கு விளங்கவில்லையா?

ஆனால் இவ்வாறு ஊகம் செய்வதால் பயன் இல்லை. சரித்திரத்தில் நடந்ததை நடந்தவாறே ஆராய்ந்து, அந்தந்தக் காலத்துக் கேற்றவாறு அவைகளைச் சீர்தூக்கிப் பார்ப்பதுவே சிலாக்கியமாகும். ஆதலால், ஹிந்துக் குடியாட்சியை நாட்டாத தவறை நாம் மராட்டியர்மீதோ அன்றி ஏனைய ஹிந்து மக்கள்மீதோ சாட்ட முடியாது. ஏனெனில், ஜனங்கள் குடியாட்சியின் தத்துவத்தை அக்காலத்தில் அறிந்திருக்கவில்லை. சிவாஜி மோட்டார் கார் சவாரி செய்யவில்லையே என்றும், ஜயசிங்கு ஹிந்துப் பிரசாரத்துக்காகத் தமது ராஜ்யத்தில் ஒரு அச்சுக்கூடம் வைக்கவில்லையே என்றும் நாம் குறைகூற முடியுமா? அவ்வாறு ஒரு குறை இருக்குமாயின் அது யாவரையும் சேர்ந்ததாகுமன்றோ? எல்லா விஷயங்களையும் சீர்தூக்கி ஆராய்ந்து பார்த்தால் ஒரு விஷயம் தெளிவாகிறது. அதாவது தமது

உன்னத லட்சியத்துக்காகத் தமது சுயநலங்களையும் மாகாண ஜாதிப் பெருமைகளையும் அறவே துறந்து, அரிய பெரிய தியாகங்களைச் செய்வதற்கு ஹிந்து மக்களிடையே தகுந்த மனப்பான்மை அக்காலத்தில் ஏற்பட்டிருந்த தில்லை. ஏனைய ஹிந்து மக்களைக் காட்டிலும மராட்டிய ரிடம் அதிகமான தேசிய உணர்ச்சி யிருந்தது. மதவெறி யுள்ள அன்னியரது ஆட்சியினின்றும் ஹிந்து தருமத்தை யும் ஹிந்து சமூகத்தையும் காப்பதுவே தமது லட்சிய மெனக் கொண்ட மராட்டியரிடத்தும் மனப்பான்மையும் ஒற்றுமையும் பூரணமாக அமைந்திருக்கவில்லை. எனினும் ஹிந்துஸ்தானத்தி லிருந்த பல மக்களையும் ராஜ்யங்களையும் எடுத்துச் சீர்தூக்கிப் பார்ப்போமானால், அன்னிய எதிரி களை எதிர்த்து வெற்றி நாட்டி ஹிந்துப் புனருத்தாரணம் செய்ய வல்லவர் மராட்டியர் ஒருவரே என்பது வெளிப் படையாகிறது. ராமதாஸர், சிவாஜி இவர்களின் கருத்து என்னவென்றால், மராட்டிய மக்கள் அனைவரையும் ஹிந்துக் கொடியின்கீழ்த் திரட்டி முதன் முதலில் பலமும் சுதந்திரமும் பொருந்திய மராட்டிய ராஜ்யத்தை ஸ்தா பித்து, பிற்பாடு அதை ஹிந்து சமூக உத்தாரணத்துக் காகப் பயன்படுத்தி, ஹிந்து விடுதலைப் போரை மஹா ராஷ்டிரத்தின் எல்லைப்புறத்துக்கு வெளியே வடக்கே நருமதை முதல் அட்டக் வரையிலும் துங்கபத்திராவைத் தாண்டி தெற்கே கடல் வரையிலும் தளராது நடத்தி வந்து, நாளடைவில் ஹிந்துஸ்தானத்தில் உள்ள ஹிந்து ராஜ்யங்களை யெல்லாம் ஒன்று சேர்த்து, இந்திய சாம் ராஜ்ய மெங்கும் ஹிந்து ஆட்சியையே நாட்டி நிலைநிறுத்து வதேயாகும்.

அந்தக் காலத்தில் இருந்த சந்தர்ப்பங்களில் இத்தகைய ஏற்பாடே வெற்றியளிக்க வல்லதா யிருந்தது. அக் காலத் தில் நடந்தவற்றையும் அவைகளின் பலனையும் யோசித் துப் பார்த்தால், இந்த மார்க்கமே வெற்றியின் காரணமா யிருந்ததை அறிகிறோம். சில ஹிந்து மக்களும் ராஜ்யங் களும் அவ்வப்போது மராட்டியரது முயற்சிகளை எதிர்த்து வந்ததும் தவிர்க்க முடியாததே என்றும் உணருகிறோம். இவர்களில் சிலர் முகமதியரது ஆட்சியில் நீண்டகாலம்

இருந்த காரணத்தால் தமது அடிமைத் தனத்தையும் உணராதவராய் அந்த அடிமைத் தனத்தில் பெருமை பாராட்டவும் ஆரம்பித்தார்கள். முகமதியனை அண்டிப் பிழைப்பவனென்றும் முகமதிய நிஜாமுக்கோ நவாபுக்கோ கப்பம் கட்டிச் சேவகம் செய்பவனென்றும் டில்லி முகமதிய பாதுஷாவின் குடி என்றும் அடிமையென்றும் தம்மைச் சொல்லிக்கொள்ளவும் இவர்கள் கூசவில்லை. ஆனால், ஹிந்து சமூகத்தின் கௌரவத்துக்கும் உரிமைகளுக்கும் போராடி வரும் ஹிந்து சாம்ராஜ்யத்துக்குப் பணிய வேண்டுமென்று மராட்டியர் சொன்னால் இவர்களுக்குக் கோபமும் துவேஷமும் தலைக்குமேல் ஏறிவந்தது. ஆனால், மராட்டியம் போர்வீரர்கள் அவர்களையும் சும்மாவிடாமல் தகுந்த தண்டனையை அளித்துவந்தார்கள். கடைசியில் மராட்டியரிட மிருந்து தப்ப வழியில்லை என்றும் தமது முகமதியப் பாதுஷாவும் மராட்டி ஆட்சிக்குக் கப்பம் கட்டி வருகிறான் என்றும் அறிந்து அவர்கள் மராட்டியர் தொகுத்த ஹிந்து ஆட்சிக்குக் கீழ்ப்படிந்து நடக்கலானார்கள். ஆனால், மராட்டியரை எதிர்த்த சில ஹிந்து சகோதரர்கள் ஹிந்து இயக்கத்தின் உட்பொருளை அறிந்தவர்களாய், அன்னியாது ஆட்சியை வேருடன் பிடுங்கி மராட்டியரைப்போல் ஹிந்து சுதந்திரத்தை மீண்டும் நாட்டுவதில் ஆர்வம் கொண்டிருந்தார்கள், எனினும், மராட்டியர் இந்த ஹிந்து விடுதலைப் போரின் தலைமையைத் தாங்களே வகித்து, மற்ற ஹிந்து மக்கள் யாவரும் தமது சாம்ராஜ்ய ஆட்சிக்கே உட்படவேண்டுமென்று உரிமைபாராட்டி வந்ததின் ரகசியம் இவர்களுக்குப் புலப்படவில்லை. ஏனைய ஹிந்து மக்களாகிய தாங்கள் ஏன் பிரதான அரசியல் அதிகாரத்தை வகிக்கக்கூடாது என்று அவர்கள் ஆட்சேபிக்கலானார்கள். அவர்களில் சிலரது முன்னோர்கள் சரித்திரத்தில் அதற்கு முன்னால் இருந்த நெருக்கடியான காலங்களில் ஹிந்து ஆட்சிக்காகப் போர்புரிந்து பாடுபட் டிருந்தார்கள். முகலாய ஆட்சி தளர்ந்திடவே அவர்கள் எல்லோரும் தத்தம் சக்திக்கு ஏற்றவாறு ஆங்காங்கு ஹிந்து ராஜ்யங்களைத் தொகுத்திடத் தொடங்கினார்கள். மராட்டியர் செய்து வந்ததும் இதுபோன்றதொரு ஏற்பாடுதானே.

அவ்வாருயின் மராட்டியர் இவர்களை ஏன் அடக்கி வர வேண்டும்? இவர்கள் இவ்விதம் ஆட்சேபித்ததில் நியாயம் இருந்தது. ஆனுல் மராட்டியர் பாராட்டிவந்த உரிமையிலும் அநியாயம் ஒன்றும் இல்லை. முகமதிய ஆட்சியை எதிர்த்துத் தாக்கிப் பிளப்பதில் அவர்களில் ஒவ்வொருவருக்கும் சம உரிமை மட்டுமன்றிச் சமமான கடமையும் இருந்தது. தளர்வுருத ஹிந்து சாம்ராஜ்ய ஆட்சியை நாட்ட முடியா விட்டாலும், ஹிந்து மக்கள் முகமதிய ஆட்சியை உடைத்தெறிந்து ஆங்காங்கே கூடியமட்டும் சிறிய பெரிய ஹிந்து ராஜ்யங்களை வரையறுத்துக் கொள்ளுவதில் அவசியமும் நியாயமும் இருந்தது. ஆனுல் இந்த ஹிந்து ராஜ்யங்களை யெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு மகத்தான ஹிந்து சாம்ராஜ்ய ஆட்சியையே ஹிந்துஸ்தானம் முழுவதிலும் நாட்டுவதான முயற்சியில் அவர்களுக்குள் ஒற்றுமை தோன்றவில்லை. அத்தகைய சாம்ராஜ்ய ஆட்சியில் பிரதான அரசியல் அதிகாரம் வகிக்க ஏனைய ஹிந்துக்களுக்குள்ள சக்தியையும் உரிமையையும் ஆட்சேபித்தவர்களாய் ஒருவரை ஒருவர் சந்தேகிக்கவும் தலைப்பட்டனர். மராட்டியரோ தமது ஒப்பற்ற தேசிய வீரத்திலும் காரியசித்தியிலும் ஹிந்து சாம்ராஜ்ய ஆட்சியை வகிக்கும் உரிமையைத் தாங்கள் நாட்டி விட்டதாய்க் கருதினர்கள். உண்மையாகவே மராட்டியர் ஹிந்து ஆட்சியின் எதிரிகளான முகமதியர், போர்த்துகீசர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் இவர்களுக்கு எதிரே தளராமலும் குன்ருமலும் விட்டுக் கொடுக்கமாலும் சதா போர் புரிந்து வெற்றியை நாட்டியுள்ளனர். ஆனுல் இந்தக் காரணத்தினுல் மற்ற ஹிந்து ராஜ்யங்களை அடக்கவும் அவைகளிலிருந்து சௌத் வரி வசூலிக்கவும் மராட்டியருக்குப் பிரத்தியேக உரிமை எங்ஙனம் ஏற்பட்டது? இவர்கள் இப்படிக் கேட்பது முற்றிலும் இயற்கையானதே. ஆனுல் ஹிந்து லட்சியத்துக்காக அவ்வளவும் சாதித்து இன்னும் சாதித்திட விரும்பிய மராட்டியர் பாராட்டிய உரிமையும் இயற்கையானதே—ஹிந்து மக்கள் ஒரு சமூகமாய் நின்று தமது சுதந்திரத்தையும் அரசியல் வாழ்வையும் காப்பாற்ற விரும்பினுல் அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு ஹிந்து சாம்ராஜ்ய

ஆட்சியை இந்தியா முழுவதிலும் நாட்டினாலன்றி வேறு மார்க்கம் இல்லை. அத்தகைய சாம்ராஜ்ய ஆட்சியை நாட்டுவதானால் அதற்கு எல்லா ஹிந்து ராஜ்யங்களும் அடங்கிப் பணிந்து வருவது அவசியமே. அதற்கு மற்ற வர்கள் இணங்காவிடில் அவர்களைப் பலவந்தப்படுத்துவது முற்றிலும் நியாயமானதாகும் என்றே மராட்டியருக்குத் தோன்றிற்று. ஹிந்து மக்கள் யாவரிலும் இத்தகைய சாம்ராஜ்ய ஆட்சியை நாட்ட வல்லவர் மராட்டியரே. ஆதலால் ஹிந்து ஆட்சியின் பொருட்டுத் தமது சாம்ராஜ்ய ஆட்சிக்கு ஏனைய ஹிந்து மக்கள் பணிந்தே தீர வேண்டும் என்று மராட்டியர் கருதினார்கள். தாங்கள் இவ்வளவு நாள் ஹிந்து சமூகத்துக்கும் தருமத்துக்கும் போர் பல புரிந்து பாடுபட்டு அரிய பெரிய தியாகம் செய்து அன்னியப் பகைவர்களை முறியடித்து நாட்டியுள்ள ஹிந்து சாம்ராஜ்ய ஆட்சியின் அதிகாரத்துக்கு ஏனைய ஹிந்து மக்களைக் காட்டினும் தமக்கே பூரண உரிமை யுண்டு என்றும், அத்தகைய அதிகாரத்தை நிர்வகிக்கச் சக்தி யுள்ளோரும் தாங்களே என்றும் மராட்டியர் நம்பினார் கள். ஆனால் மற்ற ஹிந்துக்கள் இந்த மராட்டியரது உரிமையை ஆட்சேபித்தார்கள். அன்னிய சத்துருக்களை முறியடித்துத் துரத்தி அரிய பெரிய வீரச் செயல்களை மராட்டியர் செய்ததுபோல் தம்முள் யாவரும் செய்ய வல்லவர் அல்லர் என்று அவர்கள் அறியாமல் இல்லை. ஆனால் இந்த மகத்தான உரிமையை மராட்டியருக்கு விட்டுக்கொடுக்கவும் அவர்களுக்கு மனம் வரவில்லை. ஆதலால் இந்தச் சந்தர்ப்பங்களில் ஹிந்து சாம்ராஜ்யத்தை ஆளும் உரிமை யாரைச் சார்ந்தது என்பது யுத்தத்தால் தான் தீர்மானம் ஆக வேண்டியிருந்தது. ஆகவே ஹிந்து ராஜ்யங்களை ஆங்காங்கு நாட்டி வந்த ஏனைய ஹிந்து மக்களுக்கும் மராட்டியருக்கும் போர் நடந்தே தீர வேண்டி நேர்ந்தது. தேசிய அரசியல் துறையில் மக்களின் ஒற்றுமை நாட்டும் காரியத்தில் இத்தகைய உள் நாட்டுப் போர் அவசியமாகவே இருக்கிறது. தேசிய லட்சியத்தில் மக்களுக்கு ஆர்வமும் தியாக உணர்ச்சியும் அதிகரித்து வரவே இந்த அவசியமும் அதிகரித்தே வருகிறது.

மராட்டியரையே எடுத்துக்கொள்ளுவோம்-மஹாராஷ்டிரத்தின் முகமதிய அரசர்களுக்குப் பணிந்து சிற்றரசர்களாய் இருந்த ஹிந்து ஜமீன்தார்களும் பிரபுக்களும் இப்போது ஆங்காங்கே தத்தம் சுதந்திரத்தை நாட்டி முகமதிய ஆட்சியை விலக்கி, சிவாஜியின் வம்சத்தினரான போஸ்லேக்களைப் போல் தமது ராஜ்யங்களில் சுயேச்சையாய் ஆட்சி செய்ய விரும்பினார்கள். ஆனால் அவர்களில் சிலருக்கு அன்னிய அடிமைத்தனத்தில் அலாதிப் பிரியம் இருந்தது. இன்னும் சிலருக்குத் தாங்களே இந்த அன்னிய ஆட்சியைத் தகர்த்திட வேண்டும் என்ற பேரவா இருந்தது. சிவாஜி மஹாராஷ்டிரம் முழுவதையும் ஒன்றுபடுத்தித் திரட்டி ஹிந்து ராஜ்யத்தை நாட்டச் செய்துவந்த முயற்சிகளை இத்தகையோர் எதிர்த்து நின்று சிவாஜியின் நல்ல எண்ணங்களையே சந்தேகிக்கலானார்கள். வேண்டும் என்றே தேசிய ஹிந்து ஒற்றுமை, ஹிந்து சுதந்திரம் என்ற பொய்ப் பிரசாரத்தைக் கிளப்பிவிட்டு, சிவாஜி தமது அதிகாரத்தை விருத்தி செய்து நிலைநாட்டக் கருதுவதாயும் சிலர் நினைத்தார்கள். இன்னும் சிலர் கேட்கலானார்கள்—ஹிந்து சாம்ராஜ்ய ஆட்சியை நாட்டுவதே சிவாஜியின் கருத்தானால் அவர் தம்மைப் பணியும்படி தம்மிலும் அந்தஸ்தில் உயர்ந்த ஏனைய மராட்டியரை ஏன் வற்புறுத்த வேண்டும்? தாம் நாட்டும் ஹிந்து சாம்ராஜ்ய ஆட்சியில் மற்றவர்களைத் தலைமை வகிக்கும்படி ஏன் கேட்டுக்கொள்ளக் கூடாது—என்று அவர்கள் கேட்டார்கள். இழிந்த குணம் உள்ள ஹிந்துக்கள் சிவாஜியை எதிர்க்குமாறு முகமதியப் படைகளை அழைத்து உதவி செய்யவும் தயங்கவில்லை. ஏனையோர் இவ் வியக்கத்தை நடத்திய சிவாஜியின் உரிமையையும் சக்தியையும் ஆட்சேபித்தவர்களாய் அவரை எதிர்த்துப் போராடினார்கள். ஆதலால் தமது ஹிந்து சகோதரர்களையே எதிர்த்துப் போர் புரியும் அவசியம் சிவாஜிக்கு ஏற்பட்டது. இதனால் ஹிந்து சமூக உத்தாரணராயும் ஹிந்து தரும ரட்சகராயும் மராட்டிய ராஜ்யத்தையும் மக்களையும் தொகுத்த மஹா புருஷராயும் இருந்த சிவாஜியிடம் ஒரு குறையும் கூற முடியாது. தேச நன்மைக்காகச் சிற்றரசர்கள் ஒன்றுபட்டு ஒற்றுமை

கொண்டு தேசிய ஆட்சிக்கு அடங்கவேண்டியது அவசியமே. ஏனைய ஹிந்து அரசர்கள் சக்தியுள்ளோராயின் அவர்கள் சிவாஜிக்கு முன்னடியே அன்னியரது ஆட்சியை எதிர்த்துப் போர் புரிந்து மஹாராஷ்டிரத்தில் ஹிந்து சுய ஆட்சியை நாட்டியிருக்கலாம். அவர்கள் அவ்வாறு செய்திருந்தால் ஹிந்து சரித்திரத்திலே சிவாஜியைப்போல் அவர்களுக்கும் உன்னத ஸ்தானம் கிடைத்திருக்கும். அங்ஙனம் இல்லாத பட்சத்தில் அவர்கள் இத்தகைய மகத்தான காரியத்தை நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சிவாஜிக்குத் தலைமை யதிகாரத்தை யன்றி மஹாராஷ்டிர அரசராய் முடிசூடும் உரிமையையும் அளித்திருக்க வேண்டும். தேச நன்மையைக் கருதி முடிசூட வல்லாரே அரசராதல் வேண்டும்.

தமது மராட்டியச் சகோதரருடன் போர் புரிய வேண்டிய அவசியம் சிவாஜிக்கு ஏற்பட்டிருந்ததில் அவரிடம் குறை கூற முடியாது. தமது சீக்கியச் சகோதரரிடம் போர் புரிய வேண்டிய அவசியம் ரணஜித்சிங்குக்கு ஏற்பட்டிருந்ததில் அவரிடம் குறை கூற முடியாது. அதே போல் தமது ஏனைய ஹிந்து சகோதரர்களுடன் போர் புரிய மராட்டிய மண்டலத்துக்கும் அவசியம் ஏற்பட்டதால், அவர்களிடத்தும் குறை கூற முடியாது. மராட்டிய ஆட்சியை எதிர்த்துப் போராடிய சில ஹிந்து மக்களிடமும் நாம் குறை கூறுவதற்கில்லை. ஏனெனில் அகில பாரத ஹிந்து உணர்ச்சி ஓங்கியிராத அக்காலத்தில் அவர்கள் தங்களது தனிச் சுயேச்சையில் ஆர்வம் கொண்டிருந்தார்கள். ஆனல் ஹிந்து மக்கள் ஒரு சாதியாராக, ஒரு சமூகமாக நிலைத்து நிற்க வேண்டுமானல், ஹிந்து தருமமும் நாகரிகமும் அழியாதிருக்கவேண்டுமானல், அகில பாரத ஹிந்து சாம்ராஜ்ய ஆட்சி முற்றிலும் அவசியமாகும். அத்தகைய ஆட்சியில் அதிகாரம் ஒரு சக்ரவர்த்தியிடமோ அல்லது ஒரு கட்சியாரிடமோ அல்லது பிரஜைகளிடமோ இருக்கட்டும்; அதனல் பரவாயில்லை. அத்தகைய ஆட்சியில் பிரதான அதிகாரம் வங்காளியரிடமோ ராஜபுத்திரரிடமோ தமிழரிடமோ தெலுங்கரிடமோ இருக்கட்டும்; அதனல் பாதகமில்லை. ஹிந்து மக்களின் ஒற்றுமையின்

உருவாக அகண்ட சாம்ராஜ்யம் இருப்பது ஒன்றே அவசியம். ஆதலால் ஹிந்துஸ்தானத்திலிருந்து அன்னிய ராட்சியை அறவே ஒழித்து, ஹிந்து சாம்ராஜ்ய ஆட்சியை நாட்டிய மராட்டியர் ஏனைய ஹிந்து மக்களின்மீது போர் புரிந்த காரணத்தினால் குறை கூறுவது நியாயமாகாது; அது ஒரு குறையாயின், அது எல்லா ஹிந்துக்களுக்கும் பொதுவானதே யாகும்; மராட்டியரை மட்டும் சார்ந்ததன்று. ஹிந்து விடுதலைப் போரை நடத்தி மகத்தான ஹிந்து சாம்ராஜ்யத்தை நாட்டிய காரணத்தினால் மராட்டியருக்குப் பிரதான அதிகாரத்தின் உரிமையுண்டு. மற்ற ஹிந்துக்கள் தத்தமது சுய நலங்களையும் சுயேச்சையையும் கருதாமல் மராட்டிய ஆட்சிக்கு அடங்கியே தீரவேண்டும். இன்றேல் மராட்டியர் அவர்களைக் கட்டாயப்படுத்தி அடக்குவாராயின் அதில் தவறேதும் இல்லை.

---

## 3. புராதன, நவீன சரித்திர ஒளியில் ஆராய்ச்சி

> "ஸ்ரீராமர் வானரர்களின் உதவியைக்கொண்டு இலங்கையை வென்றதுபோல், பாஜிராவும் அவதார புருஷர்களின் உதவியைக்கொண்டு வட நாடுகளை ஜயித்தார். போர்புரிந்த வீரர்கள் பாக்கியசாலிகளே—போர் முனையில் இறந்த வீரர்கள் இவ்வுலகில் அழியாப் புகழை நாட்டி வீரசொர்க்கம் அடைந்தனர். போர்க்களத்தே வெற்றி சூடிய ஆர்வமும் ஆண்மையும் எவரும் கற்பனையிலும் கண்டிருக்கமாட்டார்கள்." (பிரமேந்திரஸ்வாமி)

இந்தக் காரணங்களினால்தான் நமது முன்னோர்கள் 'சக்கிரவர்த்தித்துவம்' நியாயமானதென்று சொல்லி வெகுவாகப் புகழ்ந்துகொண்டாடி யுள்ளனர். எல்லா நாடுகளையும் வெல்லும் விஜய வீரனுக்கு ஹிந்துஸ்தானத்தின்

உயரிய ஆட்சி அதிகாரத்தில் முழு உரிமையுண்டு என்று கூறியுள்ளார்கள். இந்தத் திட்டத்தில் அநேக கெடுதல்களும் அபாயங்களும் இருந்தாலும், இதனால் நமது முன்னோர் காலத்தில் நம்மவருக்குள் தேசிய அரசியல் ஒற்றுமையை நாட்ட முடிந்தது; இதனால் மக்களுள் சிறந்தவரே ஹிந்து சமூகத்தை நடத்த உரியவர் என்று உறுதியாயிற்று. சாதாரண வல்லமையுள்ளவர்கள் வீண் ஆசைப்பட்டுத் தேச மேன்மைக்குக் கேடாகும் வண்ணம் முற்படாமல் இருக்கவும் உதவியா யிருந்தது. நாட்டின் பாதுகாப்பை அவ்வக்காலத்தில் மிக்க பலமும் தகுதியும் உள்ளவர் கையில் சேர்க்கவும் உதவிற்று. மற்றும் சமூகத்திலுள்ள வீர மக்களின் உதவியைத் தொகுத்து, வல்லமையற்ற வீண் பெருமைக்காரர்களை யடக்கி, பரம்பரைப் பெருமைகளையும், துவேஷ புத்தியையும் ஒடுக்கி, ஆண்தகையின் ஆட்சிக்கு மற்றோர் பணிவதே கடமையாகும் என்பதையும் அறிவுறுத்திவர உதவிற்று. ஹிந்து சாம்ராஜ்ய ஆட்சியை நாட்டி, அதை எதிர்த்த அன்னியர்களை அவ்வப்போது முறியடிக்கவல்ல ஆண்தகையாளர் பல காலங்களில் பல மாகாணங்களிலும் தோன்றியுள்ளார். ஹிந்து மக்களின் சாம்ராஜ்ய ஆட்சியின் அதிகாரமும் காலத்துக்கேற்றவாறு ஒவ்வொரு மாகாணத்திலும் நிலைநின்றது. ஹஸ்தினபுரத்தி லிருந்து பாடலிபுரத்துக்கும், பாடலிபுரத்தி லிருந்து உஜ்ஜயினிக்கும், உஜ்ஜயினியி லிருந்து பிரதிஷ்டானத்துக்கும், பிரதிஷ்டானத்தி லிருந்து கனோஜிக்கும்—இவ்வாறே மாகாணத்தி லிருந்து மாகாணத்துக்கு சாம்ராஜ்ய ஆட்சியின் அதிகாரம் சென்று வந்தது. தேசத்தின் நெருக்கடியான சமயங்களில் பலத்த சாம்ராஜ்ய ஆட்சியின் அவசியம் தோன்றிய போதெல்லாம் ஹிந்து மக்கள் தேசிய ஆவேசம் பெற்று, ஹிந்துச் சக்ரவர்த்தியின் விஜயக் கொடியின் கீழ் ஒருமித்து நின்று, அவரது ஆட்சியை எதிர்த்த ஹிந்து சிற்றரசர்களைத் தாழ்த்தி, தாய்நாட்டின், தாய்ச் சமூகத்தின் மேன்மையைக் காப்பாற்ற வல்லவர் இவரே எனத் தேர்ந்து, அவரை ஆதரிப்பதே உத்தமமார்க்கமும் கடமையுமாகும் என்று உணரும்படியாகச் செய்வதற்கு இதுவே சிறந்த வழியா யிருந்தது. போர்க்களத்தே

தமது வல்லமையை நாட்டும் வரையில் அவரை எதிர்த்த அரசர்களையும் அவர்கள் குறை கூறவில்லை. தமது ஆதிக்கத்தை வட நாடுகளில் நாட்டுவதற்கு ஹர்ஷ சக்ரவர்த்தி ஹிந்து சகோதர அரசர்களுடனும் ஜாதியாருடனும் உற்ருருடனும் போர் புரிய வேண்டியே இருந்தது. அதே போலச் சாளுக்கிய மன்னரான புலிகேசியும் தம்மை யெதிர்த்த சொந்த ஜாதியாரையும், உற்ருரையும் வென்றே தென்னுடுகளில் சாம்ராஜ்ய ஆட்சியை நாட்டினுர். அவர்களை எதிர்த்துப் போர் புரிந்தவர்களிடம் நாம் குறை சொல்லமுடியாது. தமது ராஜ்யத்தின் சுதந்திரத்துக்காகப் போர் புரிந்த அம் மக்களை நாம் மெச்சுகிருேம். எனினும் அவர்களை வென்று தாழ்த்தி, இந்திய மக்களின் அரசியல் வாழ்வையும் ஒற்றுமையையும் பலப்படுத்தி, உன்னத சாம்ராஜ்யங்களை நாட்டிய வீரர்களான ஹர்ஷர், புலிகேசி இவர்களது பெருந் தேசத் தொண்டுகளை நாம் மெச்சிப் பாராட்டுகிருேம். இதுமட்டுமன்றி, பிற்பாடு ஹர்ஷரும் புலிகேசியும் ஒருவரை யொருவர் எதிர்த்து நின்று போர் புரிந்ததற்கும் நாம் மனவருத்தம் கொள்ள மாட்டோம். குஸ்தி பழகும் நண்பர் ஒருவரை ஒருவர் எதிர்த்துச் சண்டை யிடுவதைப்போல் இவர்கள் புரிந்த போரினுல் வல்லமையும் தகுதியும் மிகுந்த ஆண்தகையாளர் இன்னுர் என்று கண்டுகொள்ள முடிகிறது. அத்தகைய பலாட்டியரிடமே தேசத்தின் சுதந்திரத்தை ஒப்படைக்க வேண்டும். கொடிய எதிரிகள் படையுடன் தாக்கியபோதெல்லாம் தாய்நாட்டைக் காக்க வல்ல வீர புருஷருக்கே சாம்ராஜ்ய ஆட்சியை வகிக்கும் அதிகாரம் கொடுக்கவேண்டும். இந்தியாவிலும் ஹிந்து சமூகத்திலும் தோன்றிய பல பிரிவுகளின் இடையே ஹிந்து மக்களுள் இன்றும் இரத்தத்திலும், பாஷையிலும், மதத்திலும் பழக்க வழக்கங்களிலும், மனப்பான்மையிலும் மற்றும் பல துறைகளிலும் பலத்த ஒற்றுமை நிலவி வருகிறது என்ற உணர்ச்சி இன்னமும் நமக்கிருந்து வருமாயின் அதற்குக் காரணம் என்னவென்ருல் பல சாம்ராஜ்யங்களுக்கும் அடிப்படையான 'சக்கிரவர்த்தித்துவம்' என்ற திட்டமே. ஹிந்து சாம்ராஜ்ய ஆட்சியின் அதிகாரம் காஷ்மீரத்திலிருந்து கனேஜிக்கும், பாடலிபுரத்

துக்கும், காஞ்சீபுரிக்கும், வீரத் தமிழரின் மதுரைமா நகருக்கும், கல்யாணிக்கும், இடம் பெயர்ந்தபோதெல்லாம ஹிந்து மக்களின் மாகாண வாழ்வில் உள்ள எண்ணங்களெல்லாம் ஒருமித்துக் கலந்து, ஒற்றுமை தோன்றி, தேசிய உணர்ச்சியும் வளர்ந்தோங்கி வரமுடிந்தது. இந்தக் காரணத்தினுல்தான் நமது நாட்டின் சரித்திரத்தில் தோன்றிய பற்பல புராதனச் சக்ரவர்த்திகளையும் அவர்களை எதிர்த்துப் போராடியவர்களையும் நாம் பாராட்டுகிருேம். ஹர்ஷர், புலகேசி இவர்களது பெயர்கள் நமது சரித்திரத்தில் இரத்தினங்களைப்போல் என்றென்றும் விளங்கும். ஹிந்துஸ்தானத்தில் ஓங்கி அழியாக் கீர்த்தியை நாட்டிய மகதராஜ்யம், ஆந்திர ராஜ்யம், ஆந்திர பிருத்தியராஜ்யம், ராஷ்டகூடர் ராஜ்யம, போஜ ராஜ்யம், பாண்டிய ராஜ்யம் இவைகளின் மேன்மைகளில் நாம் மேன் மேலும் பெருமையும் கர்வமும் கொள்வோம். இந்த ராஜ்யங்களில் தோன்றி, சாம்ராஜ்ய ஆட்சியை நாட்டிய சக்ரவர்த்திகள் ஏனைய ஹிந்து சிற்றரசர்களையும் மக்களையும் தாழ்த்தி யடக்கியதில் தவறு ஏதும் இல்லை. அன்னிய மாகாணத்தவரான இவர்கள் எமது மாகாணத்தவரை ஒடுக்கினுர்களே யென்று குறை கூறமாட்டோம். மராட்டிய மக்கள் இந்தச் சக்ரவர்த்திகள் நாட்டிய சாம்ராஜ்யங்கள் யாவையும்விடப் பெரிதான உன்னத சாம்ராஜ்யத்தை நாட்டினுர்கள். அவர்கள் அநியாயமாகத் தமது ஹிந்து சகோதரர்களைத் தாக்கி யடக்கவில்லை. அன்னியர் மீதன்றி உள்நாட்டு மக்களின் மீது அவர்கள் போர் பல புரிந்திலர். ஆதலால் ஜாதி மாகாண வித்தியாசம் பாராட்டாது ஹிந்து மக்கள் யாவரும் மராட்டிய ஹிந்து சாம்ராஜ்யத்துக்கும் சிறந்த கௌரவத்தையும் புகழ்ச்சியையும் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

இது மட்டுமன்று. மராட்டிய இயக்கம் நடந்த காலத்திலே தேசிய நிலைமை பண்டைக் காலத்தில் இருந்ததைக் காட்டிலும் கெட்டு, நெருக்கடியாய் இருந்தது. ஹர்ஷர், புலிகேசி இவர்களது முயற்சிகளிலும் போர்களிலும் வெற்றிகளிலும் காணப்படும் தேசிய நியாயத்தைக்காட்டினும் மராட்டியர் செய்துள்ள முயற்சி

களிலும் போர்களிலும் வெற்றிகளிலும் ஹிந்து தேசிய உணர்ச்சியின் உயர்வும் நியாயமும் அதிகமாகவே இருந்தன. மராட்டியர் வெறும் மண்ணாசைக்காக வாள் எடுக்கவில்லை. சக்ரவர்த்தி என்ற பெருமைப் பட்டம் அடைவதற்காக அவர்கள் ஏனையோரைத் தங்களது ஆட்சியின் கீழ்த் தாழ்த்தி வரவில்லை. அவர்களது காலத்தில் ஹிந்து ஜாதியே அழிந்துவிடுமோ என்று பயப்படக்கூடிய பெருத்த அபாய நிலைமை இருந்தது. வடநாட்டுப் பாடகர் கூறியவாறு, "சிவாஜி தோன்றி யிராவிடில், காசியின் கலையே அழிந்திருக்கும்; மதுரைக் கோவில் மசூதியாயிருக்கும்; நாம் யாவரும் சுன்னத்துப் பெற்று முகம் மதியராயிருப்போம்," என்பதில் வெறும் வெட்டிப் பெருமை அணுவளவேனும் இல்லை. சமீபத்தில் நடந்திருப்பதால் இம் மராட்டிய இயக்கத்தின் மகிமை நமக்குப் பிரமாதமாகத் தெரியவில்லை. பண்டைக் காலத்திலே ஹிந்து லட்சியத்துக்காக விக்ரமாதித்தியரும், சாலிவாகனரும், சந்திரகுப்தரும் செய்துள்ள அரிய பெரிய தொண்டுகளைக் காட்டிலும் மராட்டிய மண்டலம் இயற்றிய தொண்டுகள் முக்கியமானவைகளாகவும், மேன்மை பொருந்தியனவாயும் இருந்தன. பாண்டவர் காலத்துக்குப் பிற்பாடு சந்திரகுப்தர் காலத்தில் தான் நமது ஹிந்து சாம்ராஜ்ய ஆட்சி மிக உன்னத நிலைமையில் மேலோங்கி நின்றது. எனினும் அக்காலத்தில் மராட்டியரது காலத்தில்போல் தேசிய நிலைமை கெட்டு அபாயம் மேலிட்டிருக்க வில்லை. மற்றும் சந்திரகுப்தர் காலத்தில் தேச விபத்துக்களைத் தடுக்கஇருந்த வழிகளைப் போல் மராட்டியர் காலத்தில் அவ்வளவு சுலபமாகவும் திருப்திகரமாகவும் இல்லை. அலெக்சாந்தர் இந்தியாவின்மீது படையெடுத்து வந்ததைப் பற்றி அயல் நாட்டுச் சரித்திரக்காரர்கள் வெகுவாக எழுதியிருக்கிறார்கள். ஆனால் உண்மையில் அவன் படையெடுத்து வந்ததெல்லாம் பஞ்சாப்மீதுதான். அக்காலத்தில் பாடலிபுரத்தில் இருந்த ஹிந்து சாம்ராஜ்ய ஆட்சியின் பலமானது குன்றி யிருந்தாலும் முறிவுறாமல் இருந்து வந்தது. மிலேச்சரைத் துரத்தச் சக்தியற்று இருந்த காரணத்தினால், சாணக்கியருடைய தந்திரத்துக்கும், சந்திரகுப்தரது பலத்துக்கும் எதிரே நிற்க முடியாமல், நந்தன் சிங்கா

தனத்தை விட்டு ஓடவேண்டியதாயிற்று. அதன் பிறகு சாணக்கியரும் சந்திரகுப்தரும் சாம்ராஜ்ய ஆட்சியின் பொறுப்பைத் தாங்கலே வகித்து, கிரேக்கர்களை இந்திய பூமியிலிருந்து துரத்தினார்கள். இத்துடன் மராட்டியர் மேற்கொண்ட காரியங்களின் கடினத்தை ஒத்திட்டுப் பார்ப்போமானால் மராட்டியர் காலத்தில் தேசம் அடைந்துள்ள மகத்தான அபாயமும் திக்கற்ற கதியும் சந்திரகுப்தர் காலத்தில் இருந்திருக்கவில்லை என்பது விளங்கும். இந்தியா முழுவதும் பல நூற்றாண்டுகளாக முகமதியர், போர்த்துகீசர் முதலிய அன்னிய பலாட்டியப் பகைவர்களின் பாதங்களில் நசுங்குண்டு கிடந்தது. இந்தியாவில் ஆண்மையே குன்றி, தன்னம்பிக்கையும் சிதைந்திருந்தது. நீண்ட காலம் ஒன்றுக்குப்பின் ஒன்றாகத் தோல்வியுண்டு வந்த காரணத்தினால், ஹிந்துக்களுக்குத் தைரியமும் துணிவும்போய், இந்தியாவை ஆளுவதற்குள்ள உரிமையைக் கடவுளே இந்த முகலாய அரசனுக்குக் கொடுத்து விட்டார் என்ற மூடநம்பிக்கையும் தோன்றத் தலைப்பட்டது. ஹிந்து வாள் முறிபட்டு, கேடயம் பிளவுண்டிருந்தது. இத்தகைய தாழ்ந்த தசையிலும் மராட்டிய மக்கள் கிளம்பி எதிர்த்துப் போராடி வெற்றி சூடினர். எந்தக் காலத்திலும் ஹிந்து ஜாதியார் இத்தகைய கொடும்போர்களை நடத்தும்படி ஏற்பட்டிருந்ததில்லை. அன்னியர்களான ஹூணர்களும் சாகர்களும் இந்தியாவுக்குள் கிரேக்கரைக் காட்டிலும் அதிகதூரம் நுழைந்து சென்றிருந்தார்கள் என்றாலும், அவர்கள் முகமதியரைப்போல் அவ்வளவு கொடிய பகைவர்களாயிருக்கவில்லை. மேலும் அவர்களால் தமது ஆட்சியின்கீழ் இந்தியா முழுவதையும் அடக்க முடியவில்லை. தோரமானனும் உருத்திரதாமனும், ஆட்சி புரிந்து வந்த காலத்திலும் ஹிந்து தேசியவாழ்வு இவ்வாறு சிதைந்திருக்கவில்லை. மத வெறி பிடித்த முகமதியர், போர்த்துகீசர் ஆட்சியில் ஹிந்து தேசிய வாழ்வுக்கு ஆபத்து மிகுந்திருந்தது. ஹூணர்களையும் சாகர்களையும் எதிர்த்து நின்று தமது நாட்டையும் சமூகத்தையும் காத்திட்ட ஹிந்து மக்களின் தீரத்தையும் தேச பக்தியையும் அரிய பெரிய தியாகத்தையும் நாம் பெரிதும் பாராட்டுகிறோம். அந்தத் தேசிய வீரர்களும் போர் வீரர்களும்

அரசியல் நிபுணர்களும் அன்னியாது ஆட்சியினின்று நமது நாட்டை விடுவித்தது மட்டுமன்றி, ஹிந்து ராஜ்யங்களையெல்லாம் மகத சாம்ராஜ்யத்தின் கொடியின் கீழோ, மாளவ சாம்ராஜ்யத்தின் கொடியின் கீழோ, சந்திரகுப்தர் விக்கிரமாதித்தியர் சாலிவாகனர் முதலியோரின் தலைமையின்கீழோ ஒன்று திரட்டி ஹிந்துக்களுக்குள் உள்ள தேசிய ஒற்றுமையையும் பலத்தையும் விருத்தி செய்தார்கள். ஆதலால் ஹிந்து மக்கள் யாவரும் ஜாதி மாகாண வித்தியாசமின்றி, இவர்கள் திக்குவிஜயம் செய்து நமது மாகாணத்தை வென்றார்களே என்று மனங் கசந்திடாமல், அத்தகைய உள்நாட்டுப் போர்களால்தான் ஹிந்து தேசத்தில் சுதந்திரமும் சமாதானமும் பலமும் வேரூன்றி யிருந்தது என்றறிந்து, ஹூணரிடமிருந்தும் சாகர்களிடமிருந்தும் தாய்நாட்டைக் காத்த சந்திரகுப்தர் யசோதர்மர், புஷ்யமித்திரர் சமுத்திர குப்தர் முதலியவர்களை வாழ்த்த வேண்டும். இதேபோல் சிவாஜி, பாஜிராவ், பாஹூ, ராமதாஸர், நாநா, ஜன்கோஜி முதலிய வீரரத்தினங்களுக்கும் ஹிந்துமக்கள் தமது மரியாதையையும் மனமார்ந்த வாழ்த்துக்களையும் அளிக்க வேண்டும். சந்திரகுப்தர், விக்கிரமாதித்தியர் காலத்தைக் காட்டிலும் இவர்களது காலத்தில் ஹிந்துதேச நிலைமை சீர்கெட்டு, பலங்குன்றி, அபாயம் சூழ்ந்து இருந்தது. ஹிந்து சமூகமே அடியோடு அழிந்து விடுமோ என்ற கவலையும் தோன்றத் தலைப்பட்டது. பண்டை வீரர்களுக்கு இருந்ததுபோல் இவர்களுக்கு மார்க்கமும் இல்லை, வழியும இல்லை, வகையும இல்லை, சாதனமும் இல்லை—எனினும் இம்மராட்டிய வீரரத்தினங்கள் தாம்தொகுத்த ஹிந்து ஆட்சியைத் தளராமல் காத்து பண்டைச் சரித்திரத்திலும் காணப்படாத மகத்தான வெற்றியை நாட்டியுள்ளனர். இதை நினைக்குந்தோறும் ஹிந்துமக்களின் உள்ளத்தில் தேசபக்தியும் பெருமையும் பெருகி வரவேண்டும்.

விஞ்ஞான அறிவு மிகுந்த நாகரிகம் முற்றிய இந்த நவீன காலத்திலும் வெறும் பிரசாரத்தினல் மட்டும் இத்தாலிய நாட்டில் ஒற்றுமைகூட்டிச் சுய ஆட்சியை நாட்ட

முடியாதென்று மாஜினியும் கரிபால்டியும் அறிந்தார்கள். அவர்களால் கலப்பற்ற தருமவழியை மட்டும் கையாண்டு அதனால் இத்தகைய மகத்தான லட்சியத்தை நிறைவேற்ற முடியவில்லை. ஐக்கிய இத்தாலிய ஆட்சி என்ற வெறும் பெருமைப் பேச்சுக்காகத் தமது தனிப்பட்ட சுதந்திரத்தை ஏன் இழக்கவேண்டும் என்று நியோபாலிடன்களும் ரோமன்களும் ஆட்சேபித்தார்கள். பீட்மாண்ட் அரசரும், கரிபால்டி, கிரிஸ்பி, கேவர் முதலியவர்களும் இத்தாலிய மாகாணங்களை ஒன்றன்பின் ஒன்ருக அடக்கி இத்தாலியின் பிட்மாண்ட் சாம்ராஜ்ய ஆட்சியில் சேர்த்துப் பிணைத்த போது, அந்தந்த மாகாணத் தலைவர்கள் அவர்களது நல் லெண்ணங்களையும் சந்தேகித்து எதிர்த்தார்கள்; இத்தனை நாள் ஆஸ்டிரியாவுக்கும் பிரான்ஸுக்கும் அடிமைப்பட் டிருந்ததை மறந்து, தம்மவர் ஒருவருக்கு அடங்கிப்பணிய மறுத்தார்கள். ஆதலால் இத்தாலியின் ஒற்றுமைக்காகக் கரிபால்டியும், விக்டர் எம்மானுவலும், மற்றோரும் அன்னியருடனன்றி இத்தாலிய மக்களுடனும் போர் புரிய நேர்ந்தது. அதனல் சகோதரஹத்தி செய்ததாக அவர்களின் மீது சரித்திரம் பழி சுமத்துகிறதில்லை. இன்று அதே நியோபாலிடன், ரோமன்களுடைய சந்ததியார் உட்பட இத்தாலிய மக்கள் யாவரும் தமது நாட்டை உருப் படுத்திய அந்த வீர புருஷர்களைச் சிலாகித்து மெச்சுகிறார் கள். பீட்மாண்ட் அரசரே நாளடைவில் இத்தாலியின் பேரரசராக முடிசூடியதைப்போல் மராட்டிய அரசரும் இந்தியச் சக்ரவர்ததியாக முடிசூடியிருப்பார். விஸ்வாஸ் ராவ் இந்தியச் சக்ரவர்த்தியாக முடிசூடப் போவதாய் பாஹு பறைசாற்றி யிருந்தார். தற்காலத்தில் ஜர்மா னிய ராஜ்யங்களையும், ஜர்மானியர் ஒற்றுமையடைந்து சுயசாம்ராஜ்ய ஆட்சியை நாட்டியதையும் உவமானமாக எடுத்துப் பார்க்கலாம். அதைப்போல் ஹிந்துராஜ்யங் களெல்லாம் மராட்டியர் தலைமையின்கீழ் ஒற்றுமை யடைந்து, மராட்டிய அரசரும் ஹிந்து சக்ரவர்த்தியாக விளங்கியிருப்பார். இத்தாலி தேசத்து பீட்மாண்ட் ஆட்சி யையும் ஜர்மானியதேசத்து பிரஷ்ய ஆட்சியையும் போல் ஹிந்துஸ்தானத்து மராட்டிய ஆட்சியும் உள்நாட்டுப் போர்களால் தளர்ந்திடாமல் அகிலபாரத ஹிந்து சாம்

ராஜ்யமாக நிலைத்து நின்றிருக்கும். அத்தகைய சாம் ராஜ்ய லட்சியத்தின் பொருட்டுப் பாடுபட்டுப் போர் பல புரிந்து உயிரும் ஈந்த வீரமக்களை ஹிந்துக்கள் யாவரும் வாழ்த்தி வணங்க வேண்டும்.

---

## 4. மராட்டியப் போர் முறை

“ நம்மைக் காத்துக் கொண்டு எதிரிகளைக் கைப் பற்றி வரவேண்டும். நமது நாட்டின் ஓர் பாகம் எதிரியின் கையில் அகப்பட்டு விட்டால், அது மீண் டும் நமது கையில் அகப்படும் வரையில், நாம் தினந்தோறும் தளராமல் கடும் போர் புரிந்து வர வேண்டும். சமயம் வாய்த்தபோ தெல்லாம் நமது படைகளை நாற்புறமும் பிரித்துத் தனித்தனியே பல திக்குகளில் அனுப்பிக் கடைசி வரையில் நாம் போர் புரிந்தே தீரவேண்டும். ஆனால் எதிரியைத் தேடித் தாக்கிய நம்மவர் யாவரும் மீண்டும் வராதவாறு நேர்ந்திடுவது கூடாது.”

(ராஜஆஞ்ஞை)

“ நாற்புறமும் அபாயம் வந்த காலத்தில், எதிரியின் பலத்தைச் சீர் தூக்கிப் பார்த்து, பிறகு காட்டில் புலி நெருங்கியபோது, மான்கள் உடனே நாற்புறமும் ஓடித் தப்பிக்கின்றன.”

(ராமதாஸர்)

சிவாஜியின் பிறப்பினால் ஹிந்து ஜாதியாரின் சரித்திரத்தில் வெற்றிகரமான விசேஷ சகாப்தம் ஆரம்பித்தது என்று நாம் முதலில் கூறியுள்ளோம். சிவாஜியும் அவர் குருவான ராமதாஸரும் நமது சமூகத்தின் முன்பு நாட்டிய மகத்தான தரும லட்சியமே இதற்குக் காரணம். மேலும் போர்க்

களத்தே மராட்டியர் தொகுத்த புது தந்திர முறைகளும் இதற்குக் காரணமென்று சொல்லாம். ஹிந்து சமூகம் பலம் குன்றியபோது மஹாராஷ்டிராரும் அதற்குப் புத்துயிர் கொடுத்ததைப் போல், மராட்டியரது போர் முறைகளும் இந்திய யுத்த சாஸ்திரத்துக்கு விருத்தி யளித்தது என்று இந்த வரலாற்றி லிருந்து தெரிகிறது. இப்புதுப் போர் முறை சிவாஜியின் சௌகரியத்துக்கும் சந்தர்ப்பங்களுக்கும் தகுந்ததாய் இருந்ததால் இது அவரால் முதன் முதலில் கையாளப்பட்டது. சிவாஜிக்குப் பிறகு வந்தவர்களும் இம்முறையின் அபூர்வ விசேஷத்தைக் கண்டுணர்ந்து அதை விடாமல் கையாண்டு எதிரிகளை எதிர்த்து வந்தார்கள்.

ஆதியில் சிறு படைகளைக்கொண்டு சிவாஜி யுத்தம் புரிந்தபோது இம்முறை தகுந்ததாய் இருந்ததன்றி, அவருக்குப் பிறகு மராட்டியப் பெருந் தலைவர்கள் பெரும் படைகளுடன் போர் புரிந்து வந்தபோதும் இம்முறை பகைவர்களைச் சின்னபின்னப் படுத்தி வெற்றியை நாட்டவல்லதாக இருந்தது. மராட்டியப் படைத்தலைவர்கள் இம்முறையின் ரகசியங்களைக் கண்டறிந்து இதைப் பெருஞ் சேனைகளும் கையாளும் விதம் அபிவிருத்திசெய்து பயன் படுத்திக் கொண்டார்கள். இதனால் பல போர் முனைகளிலும் பகைவர்கள் மராட்டியரை எதிர்த்து நிற்க முடியாமலும், மராட்டியரது கையில் அகப்படாமல் தப்ப முடியாமலும், தவித்தது நமது சரித்திரத்தி லிருந்து நன்கு விளங்குகிறது. பகைவரின் பெரும் படை அணுகியதும் மராட்டியக் குதிரைப்படை ஒன்றுசேர்ந்து நில்லாமல் பிரிந்து நாற்புறமும் சென்று அருகுள்ளகுன்றுகளி லிருந்தும் காடுகளி லிருந்தும் பகைவரது படையைக் கவனித்து நிற்கும். இதைக்கண்டு மராட்டிர் தமது எதிரே நிற்கமுடியாமல் பயந்து ஓடிவிட்டதாகப் பகைவரது படைவீரர்கள் எண்ணி மகிழ்ச்சிகொண்டு முன்சென்று கஷ்டமான நிலைமையில் அகப்பட்டுக் கொள்வார்கள். பல தடவைகளில் மராட்டியப் படைத்தலைவர்கள் இதற்கு என்றே ஏற்படுத்திய இடங்களிலேயே பகைவர்களின் படைகள் போய்ச் சிக்கிக்கொண்டு விடும். பின்பு உடனே திடீரென்று

மராட்டியப் படைகள் தந்திரமாய்த் திரண்டு ஒன்று சேர்ந்து இடிபோல் பகைவர் நடுவே பாய்ந்து அவர்கள் இன்னதென்று சமாளிக்க முயலும் முன்பே அவர்களைத் தாக்கி நையப்புடைத்துச் சம்ஹாரம் செய்யத் தொடங்குவார்கள். இப்படி நிச்சயித்துப் போர்புரிந்தபோதெல்லாம் மராட்டியர் ஆவேசத்துடன் போர் செய்து பகைவரின் உள்ளத்தே பேரச்சத்தை நாட்டிக் கலக்குவார்கள். இத்தகைய சமயங்களில், மராட்டியரது கையில் நின்று தப்ப முடியாமல் பகைவர்கள் தவித்திடுவார்கள். ஆதலால் பகைவர்கள் மராட்டியர் போர் நாடும் சமயத்தில் அதைத் தவிர்க்க முடியாமலும், தாம் போர் வேண்டும் போது மராட்டியரைக் கைப்பற்ற முடியாமலும் தவிக்கலானார்கள். ஹம்பீர்ராவ் தொடுத்த போரையும் பதலூ கணவாயில் நடந்த கடும் போரையும் கவனித்தால் இதனுண்மை நன்கு விளங்கும்.

மராட்டியரது போர் முறையின் மர்மமும் தியாக முறையின் தத்துவமும் ராமதாஸரது, "சக்தியினால் ராஜ்யம் அடையப்பட்டாலும், முயற்சிகளை முன்ஜாக்ரதையுடனும் தந்திரத்துடனும் செய்யவேண்டும்" என்ற உபதேசத்தினால் விளங்கும். மராட்டியர் தரும யுத்தத்தில் ஆசை வைத்தவராய், போரினாலன்றி சுதந்திரத்தையும் ராஜ்யத்தையும் நாட்ட முடியாது என்று கண்டு, தியாக புத்தியினாலும், தனாஜியைப் போன்ற குன்றாத வீரத்தினாலுமே, ஹிந்துஸ்தானத்தின் நாயகர்களாய் விளங்கினார்கள். தேர்ச்சியும் சாதுரியமும் இல்லாத வீரம் மிருகத்தன்மையாகும் எனத் தேர்ந்து, வீரத்தைக் காட்டிலும் தந்திரமே சிறந்ததெனக் கருதினார்கள். தியாகத்தினால் வெற்றியடைவது நிச்சயமாயிருந்தாலன்றித் தியாகம் செய்வது வீணே என்று கருதினார்கள். இறுதியில் வெற்றியை நாட்டாத வீரம் வெறும் ஆத்மஹத்தியேயாகும்; அதற்கு மராட்டிய யுத்த தத்துவத்தில் இடமில்லை. "போரில் பலத்தையும் அறிவையும் செலுத்தினால் வெற்றி பெறுவது உறுதியே" என்று ராமதாஸர் போதித்தபோது, "பேடித்தன்மை கேவல நீதியாயின், சூரத்தன்மை நாயின் நடத்தையே ஆகும்," என்பதின் உண்மை நன்கு விளங்குகிறது. முடிவில் தமக்கு உண்டான சேதத்தைக் காட்டிலும் அதிகமான

சேதத்தைப் பகைவர்களுக்கு இழைக்க வல்ல வழிகளை அவர்கள் கையாண்டு வந்தார்கள். இவ்விதம் தீர்க்காலோசனைகளும் சூழ்ச்சிகளும் கொண்டவராயினும் மராட்டியர் சமயம் நேர்ந்தபோது பெருந் துணிச்சலையும் காட்டினார்கள். இத்தகைய துணிவினால் முடிவில் பத்திரமும் பாதுகாப்புமே ஏற்படுகிறது என்பதை யுணர்ந்தார்கள். முன்னதாகவே ஏற்பாடு செய்து பகைவர் நேர் நின்று போர் செய்வதை மராட்டியர் கூடுமானவரை தவிர்த்து வந்தனர் எனினும் அவ்வாறு போர் புரிய நேர்ந்தபோது அவர்கள் பின்னடையாமல் எதிர்த்து நின்று பகைவரைத் தாக்கவும் சித்தமா யிருந்தார்கள்.

முதலில் பகைவர் படைகளின் நாற்புறமும் ரகசியமாய்ச் சுற்றிச் சுற்றி வந்து; படையின் முன்னணியில் தனித்து வந்தவர்களை வெட்டி வீழ்த்தி, பின்பு பதுங்கி யிருந்து, சமயம் பார்த்துத் திடீரென்று சிறு படைகளைத் தாக்குவார்கள். பகைவர்கள் துரத்தி வந்தால் இவர்கள் கலைந்து நாற்புறத்திலும் ஓடிவிடுவார்கள். வீணாகத் துரத்தித் துரத்திப் பகைவர் சலித்து நின்றதும், திடீரென்று ஒரு நொடியில் அவர்களின் மீது பாய்ந்து தாக்குவார்கள். மராட்டியரின் படை பெருகப் பெருக, அவர்கள் இத்தகைய யுத்த தந்திரங்களை விடாமல் மேன்மேலும் கையாண்டு, முன்னணியில் தனித்து வரும் சில பேரையன்றி எதிரிகளின் படை முழுவதையுமே ஒரே கணத்தில் கைப்பற்றிக் கொள்ளத் தலைப்பட்டார்கள். ஹோல்கரும், பட்வர்த்தனும் ஆங்கிலேயர் மீது படையெடுத்துப் போர் புரிந்த முதலாவது ஆங்கில-மராட்டிய யுத்தத்தைப் பார்த்தால் மராட்டியப் பெருந் தலைவரான சிவாஜியின் ஒப்பற்ற யுத்த தந்திரங்களை அவரது மக்கள் நானாபட்னவிஸ், மஹாதஜீ ஷிந்தே காலம்வரையிலும் விடாமல் கையாண்டு மகத்தான வெற்றி சூடிவந்தது நன்கு விளங்கும்.

மராட்டியப் போர் முறையின் இன்னொரு முக்கிய அம்சம் என்னவென்றால், போர் தொடங்கியதும் மராட்டியர் பகைவர்களின் மீது பாய்ந்து பலமாகத் தாக்கவும், அவர்கள் தற்காப்புக்காகப் போர் புரியும்படி நேர்ந்துவிடும். மராட்டியர் யுத்த ஆரம்பத்திலேயே தமது நாடு

களுக்குத் தகுந்த காவல் வைத்துவிட்டு, பகைவரது நாட்டின்மீது படையெடுத்துப் புகுந்து நாசமுண்டாக்க முற்படுவார்கள். மராட்டியர் பகைவரது கையில் அகப் படாமலும் அவர்களின் எதிரே நின்று போர் புரியாமலும் அங்கும் இங்கும் சுற்றி, அவர்களின் படைக்கு வரும் உணவுப் பொருள்களைக் கொள்ளையிட்டுக் கொண்டு போய், அவர்களது நாட்டின் குடிகளின் மனத்தில் பெருத்த பீதியைக் கிளப்பிவிடவே, அவர்களது படையின் போர் வீரர்களும் வீரங் குன்றி மனந் தளர்ந்து பயந்து நடுங்குவார்கள். பகைவர் நாட்டில் இத்தகைய கலவரம் தோன்றவும், ஆங்கு அரசாங்க ஏற்பாடுகளே சிதைந்து ஒழுங்கற்று நின்றுவிடுவதன்றிப் பஞ்சமும் பரவலாகும். இவ்வாறு பகைவர்களைச் சின்னாபின்னப் படுத்திச் சீர் குலைத்து அத்துடன் நின்றிடாமல் மராட்டியர் பெருத்த யுத்த வரிகளையும் பகைவர்களது நாடுகளி லிருந்து வசூலித்து வந்தார்கள். இதனால் பகைவர்கள் தமது படைகளுக்கு மட்டுமன்றி மராட்டியரது படைகளுக்கும் பணம் கொடுக்க நேர்ந்தது. திடீரென்று பகைவர் நடுவே மராட்டியர் பாய்ந்து தாக்கும் போதெல்லாம் அவர்கள் தப்ப வழியின்றி மராட்டியருக் கெதிரே எதிர்த்து நிற்கவும் சக்தியின்றித் தவித்து "மராட்டியருடன் போராடுவது காற்றுடன் போராடுவதை ஒக்கும்; மராட்டியரைத் தாக்குவது நீரைத் தாக்குவதை ஒக்கும்" என்று ஏங்கிக் கதறலானார்கள். இத்தகைய யுத்த தந்திரங்களை ராகோஜியின் வங்காளப் படையெடுப்புக்களில் நன்கு காணலாம். அவர் இடைவிடாமல் தினந்தோறும் திமிர் பிடித்த வங்காள முகமதிய அரசனது நாடுகளில் புகுந்து கலவரத்தை யுண்டாக்கி வரவே, அவ்வரசன் பிழைத்தால் புண்ணியமென்று தவித்துச் சரணாகதி யடைந்ததுமன்றி, மராட்டியருக்கு ஓரிஸ்ஸா நாட்டையும் கொடுத்து, ஹிந்து ஆட்சிக்கு அடங்கிக் கைகட்டிக் கப்பங் கட்டுவதாய் ஒத்துக்கொள்ளவும் நேர்ந்தது.

"பகைவரது நாடுகளில் சேதம் உண்டாக்குவது சிவாஜி காலத்தில் நியாயமாக இருந்தாலும், பேஷ்வாக்கள் காலத்திலும் மராட்டியர் அவ்வாறு செய்தது நியாய

மாகாது. அது கொள்ளைக்குச் சமானமாகும். ஏனெனில் பேஷ்வாக்களது காலத்தில் சைன்யச் செலவுகளை மராட்டியர் தமது ராஜ்யத்தின் வருமானத்தி லிருந்தே வகிக்க முடியும்'' என்று சிலர் கூறுவார்கள். இவ்வாறு கூறுவது முற்றிலும் தவறு என்று ராகோஜியின் படையெடுப்பிலிருந்து தெரியவருகிறது. அக் காலத்தில் அத்தகைய போர்முறை யாவராலும் சாதாரணமாகக் கையாளப்பட்டு வந்தது. ஹிந்துக்களுக்கு எதிரேயன்றித் தமது முகமதியச் சகோதரர்களுக்கு எதிரேயும் போர் புரிந்து வந்த முகமதியர்களும் இத்தகைய காரியங்களைத் தாராளமாகச் செய்து வந்தார்கள். தாங்கள் கைப்பற்றிய பகைவர் நாட்டின் நகரங்களி லிருந்து யுத்த வரி வசூலிப்பது அவசியம் என்று ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் போர்த்துகீசர், ஆங்கிலேயர் முதலியோர் கருதிவந்தார்கள். இரண்டாவதாக, மராட்டியர்களோ ஏக காலத்தில் பல பகைவர்களுடன் போர் புரியவேண்டி யிருந்தது. அவர்களில் பெரும்பான்மையோர் அன்னியர்கள்; ஹிந்துக் குடிகளுக்கு அக்கிரமம் செய்யும் அயோக்கியர்கள்; அநீதி இழைக்கும் துஷ்டர்கள். பகைவர்கள் யாவருடனும் ஏக காலத்தில் பஞ்சாப் முதல் ஆர்க்காடுவரையுள்ள பல தூர விடங்களில் யுத்தம் செய்வதற்குப் பல பெருஞ் சேனைகளைத் திரட்டி அனுப்புவதென்றால் அது மராட்டியரால் சுலபமாகச் செய்யக்கூடிய காரியமன்று; மேலும் செய்ய முடிந்தாலும் அவ்வாறு செய்வது சிலாக்கியமும் அன்று. ஆதலால் தமது புராதனப் போர்முறைகளையும் தந்திரங்களையும் மராட்டியர் விடாமல் கையாண்டு வந்ததால்தான் அவர்களால் மகத்தான வெற்றிகளைச் சூட முடிந்தது. உடனுக்குடன் பகைவர்களும் பலம் தேய்வுற்று, சிதறி, வீழ்ந்து பணியவும் நேர்ந்தது.

மராட்டியப் போர் முறையின் இந்த அம்சத்தை எதிரிகள் அடிக்கடி அநீதி கொள்ளை யென்று ஏளனமாய் இழித்துச் சொல்வதுண்டு. சில பேர்வழிகள் சற்றும் யோசியாமல் வேண்டுமென்றே இத்தகைய அவதூறை வீணாகப் பரப்பி வருகிறார்கள். போயர் யுத்தத்திலும் ஜர்மானிய யுத்தங்களிலும், மற்றும் டல்ஹௌஸி

ஆங்கிலேய ஆட்சிக்கு நாடுகளைச் சேர்த்துவந்தபோதும், மற்றும் 1857—வது வருஷம் நீல் என்பவனின் படை எடுப்புக்களிலும் யுத்த காரணங்களை உத்தேசித்து இத்தகைய ஏற்பாடுகள் அவசியம் என்று கையாளப்படவில்லையா? யுத்த விஷயத்தில் எல்லா நீதியும் நேர்மையானவையே என்று நாம் சொல்ல முன்வரவில்லை. அவ்வாருயின் தரும யுத்தத்தில் செய்வனவெல்லாம் தருமமானவையே. ஔரங்கசீப், திப்பு, குலாம் காதர் இத்யாதி கொடிய பாவிகளை எதிர்த்து ஹிந்து விடுதலைப் போரை நடத்தியபொழுது, இத்தகைய ஏற்பாடுகள் முற்றிலும் நியாயமாகவே தோன்றுகின்றன. சத்ரபதி சிவாஜியே இந்த ஆட்சேபணைக்கு விடை தந்திருக்கிருர்: "உங்களது சக்ரவர்த்தி செய்துவரும் அக்கிரமங்களால்தான் எனது தேசமக்களின் பாதுகாப்புக்காக ஒரு படை திரட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஆதலால் அதன் செலவு எல்லாம் அவனுடைய குடிகளையே சேர்ந்ததாகும். அக் காலத்து ஆங்கிலேய ஆசிரியர்களும் சிவாஜியைப் பற்றி இவ்வாறு ஒத்துக்கொண்டிருக்கிருர்கள்: "அவர் போனவிடத்திலெல்லாம் தன் சொல்லுக்கு அடங்கி நடந்தோருக்குத் தம்மாலும் தமது போர்வீரர்களாலும் யாதொரு கேடும் கோர்ந்திடாது என்று வாக்களித்து வருகிருர். இந்த வாக்குறுதியை இந்நாள்வரை அவர் மீறி நடந்ததில்லை." இதைப்போலவே மராட்டியப் படைத் தலைவர்களும் ஜனங்களுக்கு வாக்களித்து வந்தார்கள். 1795—வது வருஷம் கர்டாவில் நடந்த போரில் நிஜாமை முறியடித்து வெற்றி சூடிய நாள்வரையில் மாராட்டியர் தாம் கொடுத்த வாக்குறுதியைத் தவருமல் காத்து நடந்து வந்தார்கள்.

இத்தகைய படையெடுப்புக்களில் பகைவரது ஹிந்து பிரஜைகளுக்கே துன்பம் ஏற்படலாயிற்று என்பது உண்மையே. போர்க் காலங்களில் இத்தகைய கஷ்ட நஷ்டகள் ஏற்படுவது சகஜந்தான். மற்றும் அத்தகைய கஷ்ட நஷ்டங்களைப் போர்க் காலத்தில் சீர் தூக்கிப் பார்ப்பதும் முடியாத காரியமே. அன்னியப் பகைவர்களான முகமதியரும் ஏனையோரும் மராட்டிய யுத்தத்துக்காக அபராதம் செலுத்த வேண்டியிருந்ததைப்போல், மாராட்டிய

ருடன் ஒன்றுசேராமல் அவர்களை அநியாயமாய் எதிர்த்து வந்த ஹிந்து மக்களும் அன்னியப் பகைவரைப்போல் அபராதம் செலுத்தவேண்டி யிருந்ததில் தவறு ஏதுமில்லை; அது முற்றிலும் நியாயமே. ஹிந்து சாம்ராஜ்யத்தின் சைன்யச் செலவுக்காக ஹிந்து மக்கள் எல்லோரிடத்திலிருந்தும் வசூலிக்கப்பட்ட யுத்த வரி யென்றே அதை நாம் கருதவேண்டும். இந்த ஹிந்துப் படைகளின் பலத்தினுல்தான் ஹிந்து ஜாதியும் நாகரிகமும் கோவில்களும் அடியோடு அழிந்திடாமல் இருக்க முடிந்தது. மேலும் இந்தச் சைன்ய பலம் நிலைத்திராவிட்டால் ஹிந்து தருமமே அழிந்துபோய் ஹிந்துக்களெல்லோரும் முகமதிய மதத்தை தழுவ நேர்ந்திருக்கும்.

ஆனுல், அவ்வப்போது மராட்டியப் படைவீரர்களில் சிலர் ஆங்காங்குச் செய்துவந்த அநீதிகளை நாம் கவனியாமல் இருக்கவில்லை. அத்தகைய அநீதிகளை முகமதியரும் போர்த்துகீசரும் மற்ற மராட்டியரது பகைவர்களும் அக் காலத்தல் சகஜமாய்ச் செய்து வந்தது மல்லாமல் அத்தகைய அக்கிரமங்களைச் சிலாகித்துப் புகழ்ந்து கொண்டாடியும் வந்தார்கள். இவர்கள் செய்த பெரிய அநீதிகளுக்கு முன்னுல் மாராட்டியரில் சிலர் செய்த தவறுகளை ஒப்பிட்டுப் பார்த்தால் அஜகஜாந்திரம் என்னலாம். ஹிந்துக்களில் அநேகரைப் பலவந்தமாக இஸ்லாத்தில் சேர்த்த மதவெறி பிடித்த மௌல்விகள் யாவரும் தங்களது கையில் ஆதரவின்றி அகப்பட்டபோதும், மராட்டியர் அவர்களை ஹிந்து மதத்தைத் தழுவும்படி பலவந்தப்படுத்தியது கிடையாது. அவ்வாறு இஷ்டப்பட்டிருந்தால், மராட்டியர் அநேக முகமதியர்களை ஹிந்து மதத்தில் சேர்த்திருக்கலாமே. அல்லாவின் ஆண்மையையும் பலத்தையும் நிரூபிக்க ஆயிரக் கணக்கான ஹிந்துக் கோயில்கள் இடிக்கப்பட் டிருந்தாலும், மராட்டியர் ஒரு மசூதியையோ கிறிஸ்துவ மதாலயத்தையோ இடித்தது கிடையாது. அவர்கள் இஷ்டப்பட் டிருந்தால் தமது தெய்வங்களான ஸ்ரீ ராமர், ஸ்ரீ கிருஷ்ணர் இவர்களது ஆண்மையையும் பலத்தையும் அதே முறையில் நிரூபித்திருக்க முடியாதா? மராட்டியரின் கொடிய பகைவர்

களும் அவர்கள் எப்போதேனும் மூர்க்கமான அநீதிகளையும் அக்கிரமங்களையும் இழைத்ததாகச் சொல்லவில்லை. அவர்கள் ஒருகாலும் ரத்தவெறி பிடித்து மக்களைப் படுகொலை செய்ததாகவோ, மதவெறி பிடித்து மதத் துவேஷத்தால் மற்றவர்களைத் துன்புறுத்தியதாகவோ, அன்னிய மதத்தவரது வைதிக கிரந்தங்களைச் சுட்டு எரித்ததாகவோ, அவர்களது கொடிய விரோதியும் குறை கூறியது கிடையாது. மராட்டியர் படைகளின் அவசியத்துக்காக அன்னிய நாடுகளில் யுத்தவரி வசூலித்து அங்கு உணவுப் பொருள்கள் இல்லாமல் செய்து வந்தது யுத்த காரணத்துக்காகவே. அதை அவர்களது பகைவர்கள் கொள்ளை யென்று ஆட்சேபித்தார்கள். ஆனால், அன்னியர் தமது நாட்டின்மீது படை எடுத்து வந்தபோதும் மேற் கூறியவாறு தமது சொந்த நாட்டிலும் உணவுப் பொருள்களில்லாமல் செய்து, ஆக்கிரமித்து வந்த பகைவரைப் பட்டினி போடுவதற்கு அதுவே சிறந்த மார்க்கம் என்று மராட்டியர் செய்து வந்ததைப் பார்த்தால், இத்தகைய ஏற்பாடுகள் யுத்த காலத்தில் எவ்வளவு அவசியம் என்று தெரியவரும். இத்தக் காராணத்தினல்தான் ராஜாராம் காலத்தில் ஔரங்கசீப்பின் படையெடுப்பு வீணாயிற்று. இதே காரணத்தினல்தான் ஆங்கிலேயர் பூனாவைக் கைப்பற்ற இரு முறை படையெடுத்து வந்தும் தோல்வியுண்டு பின்வாங்கவேண்டி ஏற்பட்டது. ஆங்கிலேயர் தமது நாட்டில் புகுந்தபோது மக்களையெல்லாம் அவ்வப் பிரதேசங்களிலிருந்து வெளியே போகச் சொல்லி, அவ்விடங்களை யெல்லாம் நிர்மானுஷியக் காடாக்கி, அங்கே உணவுப் பொருள்களும் கால்நடைகளுக்குப் புல் பூண்டும் இல்லாமல் செய்தது மன்றி, தலைநகரான பூனாவினருகே ஆக்கிலேயர் வர நேர்ந்தால் தலைநகரையே கொளுத்தித் தீக்கிரை யாக்கிவிடுவதற்கும் மராட்டியர் ஆயத்தமா யிருந்தார்கள். இதனல் நாம் தெரிந்து கொள்ளுவது என்ன வென்றால், மராட்டியர் அன்னியக் குடிகளிடமிருந்து தமது படைகளுக்காக யுத்த வரி வசூல் செய்து, அன்னியர் நாடுகளில் படையெடுத்துக் கலவரம் உண்டாக்கி, அரசியல் ஆட்சியைக் கவிழ்த்து வந்ததின் காரணம்—வெறும் துவேஷ புத்தியினல் அன்று

என்றும், ஏனைய ஹிந்து மக்களை வேண்டும் என்றே அலட்சியம் செய்யும் ஆணவத்தினாலும் அன்று என்றும், நன்கு விளங்குகிறது. மேலும் இத்தகைய போர் ஏற்பாடுக ளெல்லாம் போர் நின்றதும் நின்றுவிடும். அன்னியர் மராட்டியர் சொற்படி நடக்கச் சம்மதித்ததும், இத்தகைய யுத்த ஏற்பாடுகளும் உடனே நின்றுவிடும். மராட்டிய ஆட்சியில் சேர்க்கப்பட்டவுடன் அந்தந்த மாகாணங் களில் மராட்டியரது யுத்தக் கட்டுப்பாடுகளும் நின்று விடும். அந்நாட்டு மக்கள் முகமதியர், ஐரோப்பியர் இவர்களது ஆட்சியினின்றும் தம்மை விடுவிக்குமாறு மராட்டியரை அழைத்தார்கள். அந்நாடுகளின்மீது மராட் டியர் படையெடுத்து வந்தபோது, அந்நாட்டு மக்கள் மராட்டியரைக் குதூகலத்துடன் வரவேற்றார்கள். இதி லிருந்தே அந்நாட்டு மக்களுக்கு மராட்டியர் கூடுமான வரை அன்பும் ஆதரவும் காட்டிவந்தார்கள் என்பது உறுதியாகிறது.

சிற்சில சமயங்களில் ஆங்காங்குத் தோன்றிய மித மிஞ்சிய நடத்தையை நாம் கண்டிக்க வேண்டியது அவசியமே. ஆயினும் அத்தகைய நடத்தைகளைக் கரிபால்டி ரோமாபுரியி லிருந்து திரும்பியபோதும், பிரஞ்சு நாட்டின் புரட்சியி லிருந்து அயர்லாந்தின் ஸீன்பீன் நடவடிக்கை வரையிலும் அமெரிக்காவின் சுதந்திரப் போரிலிருந்து ஜர்மானிய ஐக்கியவிடுதலைப் போர்வரையிலும் உள்ள எல்லாப் புரட்சி இயக்கங்களிலும் நன்கு காணலாம் என் பது வாசகர்களுக்கு நினைவிருக்கட்டும். இத்தகைய அற்ப துஷ்கிருத்தியத்தாலும் உள்நாட்டுச் சச்சரவுகளாலும் மேற்கூறிய உன்னதமான தேசிய இயக்கங்களின் மகிமை சற்றும் குறைந்துவிடாது. தேசிய தத்துவமும் தேய்ந்து விடாது. பார்க்கப்போனால் தங்கள் பகைவர்கள் செய்த அக்கிரமங்களில் ஆயிரத்தில் ஒரு பங்கேனும் மராட்டியர் செய்திரார். உள்நாட்டுச் சச்ரவுகள் ஏற்பட்டால் மராட்டியரது இயக்கத்தின் மகிமையும் குன்றிவிடாது. பல நூற்றாண்டுகளாக அடிமைத்தனத்திலும் பேடித்தனத் திலும் மண்மீது மண்ணாகத் தாழ்ந்திருந்த ஹிந்துக் கொடியை உயர்த்தி, ஆவேசத்துடன் எதிர்த்துத் தடை

செய்த பல அரசர்களையும் சக்ரவர்த்திகளையும், ஷாக்களையும் பாதுஷாக்களையும் முறியடித்துச் சீர்குலைத்து, அந்த ஹிந்து விஜயக்கொடியை அட்டக் மீதிலும் நாட்டி, அதே ஷாக்களும் பாதுஷாக்களும் அக்கொடியை வாழ்த்தி வணங்கும் படியாகச்செய்த உன்னதமான மராட்டிய இயக்கத்தையும் அது நாட்டிய மகத்தான ஹிந்து சாம்ராஜ்யத்தையும் பாராட்டி வந்தனைசெய்வதே உண்மையான தேசபக்தியுள்ள ஒவ்வொரு ஹிந்துவின் முக்கியக் கடமையாகும்.

---

## 5. எல்லாத் துறைகளிலும் ஹிந்து மக்களுக்குப் புத்துயிர் அளித்த சாம்ராஜ்யம்

"சாஸ்திரத்தால் ரட்சிக்கப்பட்ட ராஜ்யத்தில் சாஸ்திர சிந்தை தோன்றுகிறது"

மராட்டியரது ஆதிக்கத்தினால் மீண்டும் புத்துயிர் பெற்றெழுந்த ஹிந்துசமூகத்தின் முதல் காரியமானது ஹிந்து மக்களின் அரசியல், சைன்ய அதிகாரத்தை நிலை நிறுத்திப் பலத்த தேசிய ஆட்சியை நாட்டுவதே. தேசம் பல துறைகளிலும் முன்னேற்ற மடைவதற்கு இது முக்கியமும் அவசியமும் ஆனது. மராட்டியரது தலைமையில் தேசிய சுதந்திரத்தை நாட்டியதும், பல துறைகளிலும் சீர்திருத்தத்தையும் முன்னேற்றத்தையும் அமைக்க வேண்டிய ஏற்பாடுகளும் முயற்சிகளும் மும்முரமாகச் செய்யப்பட்டன. மராட்டிய ஹிந்துசாம்ராஜ்யம் ஹிந்து வாழ்க்கையின் பல துறைகளிலும் சீர்திருத்தமும் மேம்பாடும் அமைக்க முற்பட்டது. அன்னியரிடம் காணப்பட்ட பல உத்தம மேம்பாடுகளையும் ஹிந்துக்களுள் புகுத்தி நாட்டி, ஹிந்து வாழ்வில் அபரிமிதமாய்க் கலந்துள்ள அன்னிய சம்பந்தங்களை நீக்குவதற்கான முயற்சிகள் நடந்தன. ஹிந்துஸ்தானம் முழுவதிலும் ஹிந்து பாஷை

களில் பாரசிக, அரபிக் கலப்புகள் அதிகரித்திருந்தன. ராஜாங்கப் பதிவுகளெல்லாம் அநேகமாய்ப்பாரசிக பாஷையில் எழுதப்பட்டுவந்தன. ஹிந்து ஆட்சியை நாட்டியதும் உடனே மராட்டியர் அவைகளைப் பாரசிகத்தில் எழுதக் கூடாது என்று உத்தரவு பிறப்பித்தார்கள். அவர்கள் அன்னியக் கலப்பினின்று தாய் மொழிகளைக் காப்பாற்ற அவ்வாறு முயற்சி செய்திரா விட்டால் அரபி, உருது அட்சரங்களும் சொற்களும் நமது பாஷைகளைத் தின்றிருக்கும். உதாரணமாய்ப் பாருங்கள்: தற்காலத்திய பஞ்சாப், ஸிந்துபாஷைகளில் அன்னிய அட்சரங்களே வழங்கி வருகின்றன. ஆனால், தேசிய ஆட்சியில் தேசபாஷையும் விருத்தியடைந்தது. அக்காலத்தில் அரசியல் விவகாரங்களில் அன்னிய முகமதிய வார்த்தைகளே வழங்கப்பட்டு வந்தன. அப் பதங்களுக்குத் தாய் மொழியில் தகுந்த நேர்பதங்களை ராஜ விவகார கோசம் என்ற அகராதியைத் தொகுக்கும்படி கற்றறிந்த பண்டிதருக்கு ஆஞ்ஞையிட்டார்கள்; அன்னிய பாஷை பதங்களை உபயோகிப்பதில் பொது ஜனங்களுக்கு அதிருப்தியை உண்டாக்கினார்கள்; இத்தகைய ஏற்பாடுகளால் மராட்டிய பாஷையில் சிறந்த சீர்திருத்தமும் முன்னேற்றமும் ஏற்பட்டது. அக்காலத்திய ராஜாங்கக் கடிதங்களையும் பத்திரங்களையும் பார்த்தால் தாய் மொழியில் ஏற்பட்ட அபிவிருத்தியும் அன்னியச் சொற்களைப் பகிஷ்கரிக்கும் முயற்சிகளும் நன்கு விளங்குகின்றன. இலக்கிய, சரித்திர, அரசியல், செய்யுள், வசன நூல்களில் இவ்வாறு தினந்தோறும் கலப்பு நீங்கிச் சுத்தம் அதிகரித்து வந்தது. மோரோபந்த் எழுதிய மஹா பாரதத்தில் நாம் பத்து அன்னிய வார்த்தைகளையும் காண முடியாது. 'பகர்' என்ற நூல்களும் விசேஷமானவைகளே. அவைகளில் காணும் மராட்டிய பாஷையில் ஒப்பற்ற உயர்வையும் கலப்பற்ற எளிய நடையையும் காண்கிறோம். அக்காலத்து அரசியல் சரித்திரத்தைப் பார்ப்போமானால் அக்காலத்திய மக்களுக்குச் சதா போர் புரியவேண்டியிருந்ததனால் பல நூல்களை எழுதுவதற்கு அவகாசம் இருந்திராது என்பது தெரிகிறது. ஆதலால் அவர்கள் யாவற்றையும் சுருக்கமாகவே எழுதி வந்தார்கள். அத்தகைய நடை நம்மவருக்குப் பிடிக்காதிருக்க

லாம். நாட்டு மக்கள் புரிந்த பல தீரவீரச் செயல்களை அவர்களது சுருக்கமான நூல்களிலிருந்தே நாம் தெரிந்து கொள்ள வேண்டி யிருக்கிறது.

மராட்டிய ஆட்சியில் மராட்டிய பாஷையைத் தவிர ஹிந்துக்களின் தெய்விக பாஷையான சமஸ்கிருதமும் முன்னேற்ற மடைந்தது. வேதம், வேதாங்கம், சாஸ்திரம், புராணம், ஆயுர்வேதம், ஜோதிஷம், வியாகரணம் முதலிய பல ஹிந்து இலக்கியங்கள் அபிவிருத்தி யடைந்தன. இந்தியாவின் பல பாகங்களிலும் உள்ள ஹிந்து சாம்ராஜ்யத் தலை நகரங்கள் யாவும் ஹிந்து சாஸ்திர வித்தையின் முக்கிய ஸ்தலங்களாக விளங்கின. ஆங்காங்கு ஹிந்து வித்வான்களுக்கும், ஹிந்து வித்தியார்த்திகளுக்கும் ராஜாங்க ஆதரவு வழங்கப்பட்டது. ஹிந்துஸ்தானம் முழுவதிலும் பற்பல இடங்களில் பள்ளிகளும் கல்லூரிகளும் அமைக்கப் பட்டன. மக்களுக்கு நீதிக் கல்வி போதிக்கப்பட்டு வந்தது. மராட்டியர் பாதுகாப்பில் சாஸ்திரம் படித்த பெரியோர்களும் சாதுக்களும் ராமேஸ்வரம் முதல் ஹரித்வாரம் வரையிலும், துவாரகை முதல் ஜகன்னாதம் வரையிலும் உள்ள பற்பல இடங்களுக்குச் சென்று மக்கள் அனைவருக்கும் ஹிந்து நீதிகளையும், ஹிந்து தருமத்தையும், ஹிந்து வழக்கங்களையும் போதித்து வர முடிந்தது. இத்தகைய தரும காரியங்களில் அரசர்களும், ராஜப் பிரதிநிதிகளும், படைத் தலைவர்களும் போட்டி போடலானார்கள். ராமதாசர் முதலிய பெரியோர்கள் ஸ்தாபித்த மடங்கள் எல்லாம் ராஜாங்கத்தாரால் ரட்சணை செய்யப்பட்டன. அவைகளில் தரும விஷயங்களில்மட்டு மல்லாமல் அரசியல் விஷயங்களிலும் பிரசாரம் செய்யப்பட்டு வந்தது. இதைத் தவிரப் பூனாவில் வருஷந்தோறும் சிராவண புண்ணிய காலத்தில் பேஷ்வாவின் ஆதரவின் கீழ் வித்தியாபரிஷத்து கூடிவந்தது. அதற்கு இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் கற்றறிந்த வித்வான்கள் வருவதுண்டு. சாஸ்திரங்களில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வெகுமதியும் பட்டங்களும் வழங்கப் பட்டன. இந்தப் பரிஷத்தில் வித்வான்களுக்குப் பரிசு வழங்குவதிலும் சாஸ்திர ஆராய்ச்சியை விருத்தி செய்வ

திலும் வருஷந்தோறும் லட்சம் ரூபாய்க்குமேல் செலவு செய்யப்பட்டது. இத்தகைய பரிஷத்துக்களால் ஹிந்து மக்கள் யாவரும் தமக்குள் தோன்றும் பல மாறுபாடு களுக் கிடையே மதம் கலை முதலிய விஷயங்களில் ஒப்பற்ற ஒற்றுமை நிலவுவதை அறிந்தார்கள். தமது மதத்தையும் நாட்டையும் நாகரிகத்தையும் காத்து, ஹிந்து ஆட்சியின் எதிரிகளை முறியடித்து, மராட்டியர் நாட்டிய ஹிந்து சாம்ராஜ்ய வெற்றிக் கொடியின்கீழ் ஹிந்து மக்கள் யாவரும் ஒற்றுமை மேலோங்கி, மாகாண ஜாதி வித்தியாசங்களை மறந்து, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களைப்போல் உணர்ந்து பரஸ்பர விசுவாசம் காட்டலானார்கள்.

பொதுஜன உபகார்த்தமான காரியங்களிலும் பேஷ்வாவும் அவரது சிற்றசர்களும் கவனம் வைத்திருந்தார்கள். அட்டக்கி லிருந்தும் ராமேசுவரத்தி லிருந்தும் செல்வம் பூனாவுக்குக் கப்பமாகச் செலுத்தப்பட் டிருந்தால் அங்கே அது பொக்கிஷத்தில் லோபியின் பணம்போல் விருதாவா யிருக்கவில்லை; ராஜபோகங்களில் வீணாகச் செலவு செய்யப்படவும் இல்லை. ஹிந்துஸ்தானத்தில் உள்ள தீர்த்தங்களுக்கும் க்ஷேத்திரங்களுக்கும் உபயோகமானவிதங்களில்தான் செலவு செய்யப்பட்டது. பரத கண்டத்தில் உள்ள புனிதமான நதி ஒவ்வொன்றிற்கும் அமைக்கப்பட்டுள்ள படிக்கட்டுகளிலும், தீர்த்தக்கரை ஒவ்வொன்றிலும் உள்ள பிரமாண்ட தர்மசாலைகளிலும், உன்னத கோபுரங்களைக் கொண்ட கோவில்களிலும், ஒவ்வொரு பிரதானக் கோயிலுக்கும் விடப்பட்ட மான்யம் முதலிய தருமதானதிகளிலும், மஹாராட்டிரத்து ஹிந்து சாம்ராஜ்ய ஆட்சியின் ஈகைக்கு அத்தாட்சிகளைக் காணலாம். மராட்டிய ஆட்சியில் யுத்தங்களே சதா நடந்து கொண்டிருந்தன என்றாலும், செஞ்சி தஞ்சாவூர் குவாலியர் வரையும் துவாரகைமுதல் ஜகன்னாதம் வரையிலும் உள்ள பரந்த சாம்ராஜ்ய நேர் ஆட்சியில் அடங்கியுள்ள பல மாகாணங்களிலும் மக்கள் வரிப் பளுவால் சற்றேனும் வருந்தாமல், நியாய முறையில் ஆளப்பட்டு, அமைதியும் வளப்பமும் பெற்றிருந்தார்கள். வேறு இந்திய ராஜ்யங்

களைக் காட்டிலும் மராட்டிய ராஜ்யத்தில் வரிகுறைந்து நியாயம் ஓங்கி, அமைதியும், செழிப்பும் விருத்தியடைந்திருந்தன. உலகில் அக்காலத்தில் இருந்த ராஜ்யங்கள் யாவையும்விட மராட்டிய ஆட்சியில் ரஸ்தா இலாகாவும் தபால் இலாகாவும், சிறை நிர்வாகமும், பொதுஜனப் பிரயோசனமான ஆரோக்கிய சிகித்சை இலாகாக்களும் சிறந்தே இருந்தன என்பதற்கும் போதுமான அத்தாட்சியிருக்கிறது. மக்கள் தாமடைந்துள்ள தேசிய சுதந்திரத்தை யறிந்து, அவ்வப்போது தோன்றிய உள்நாட்டுச் சச்சரவுகளால் மனம் தளராமல், மராட்டிய ஆட்சியை மேன்மேலும் விரும்பி, தாங்கள் மராட்டிய சாம்ராஜ்யப் பிரஜைகளாயிருப்பதிலும் பெருமை கொண்டு, அத்தகைய நல்லகாலத்தில் தம்மைப் பிறப்பித்ததற்காகப் பகவானை வாழ்த்தி வந்தார்கள் என்பது அக்காலத்திய கடிதங்களையும் பாட்டுக்களையும், நூல்களையும் மற்ற இலக்கியங்களையும் பார்த்தால் நன்கு விளங்கும்.

சீர்திருத்த ஏற்பாடுகளும் நடந்து வந்தன. அந்நாள் வரையில் மக்களின் சமூக, அரசியல் முன்னேற்றத்தைத் தடை செய்துவந்த பல கெட்ட பழக்க வழக்கங்களையும் மூடநம்பிக்கைகளையும் குறைப்பதற்கும் அகற்றுவதற்குமான ஏற்பாடுகள் நடந்துவந்தன. தேவாலய பரிபாலனத்தில் சீர்திருத்தம் ஏற்பட்டது; ஹிந்துஜாதிகளுக்குள் அன்னியோன்னிய விவாகத்தை விருத்தி செய்யவும் முயற்சிகள் செய்யப்பட்டன; ஜனங்களைக் கப்பல் யாத்திரையில் பழக்கி, அவர்களிடம் மாலுமிக்குரிய குணங்களை வளர்த்து, நாட்டின் கப்பல் பலத்தையும் அதிகரித்து, கடல் கடந்து ஐரோப்பாவுக்குப் போய்வந்தோர்களையும் அட்டக் தாண்டி அப்பால் சென்று வந்தவர்களையும் ஜாதியில் சேர்த்து, முகமதியராலும் கிறிஸ்துவராலும். மோசடி வழியிலும் கத்தி முனையிலும் பிற மதத்தைத் தழுவிய ஹிந்து மக்களை மீண்டும் ஹிந்து மதத்துக்கே மாற்றவும் உள்ள திட்டங்கள் நடந்து வந்தன. மராட்டிய ஆட்சி தொடங்கிய காலத்திலிருந்தே 'சுத்தி' இயக்கத்தின் கொள்கைகள் ஆதரிக்கப்பட்டு வந்தன என்று தெரியவருகிறது. பிற மதங்களில் சேர்ந்தவர்களை

மீண்டும் ஹிந்து மதத்தில் சேர்க்கவேண்டிய ஏற்பாடுகளைப் பிராமணத் தலைவர்கள் செய்துவந்தார்கள் என்று போர்த்துகீசரின் ராஜாங்கப் பதிவுகளி லிருந்து தெரிய வருகிறது. போர்த்துகீசரின் பலவந்தத்தினால் கிறிஸ்துவ மதத்தைத் தழுவிய ஹிந்துக்களை மீண்டும் ஹிந்து மதத்தில் சேர்த்துக் கொள்வதற்கு வேண்டிய பிராயச்சித்தங்களை ரகசியமாக நடத்திவந்தார்கள் என்றும் போர்த்து கீசரின் பதிவுகளிலிருந்து தெரிகிறது. ஒருசமயம் இவ்விதம் பிராமணர்கள் ஹிந்துமதத்தை விட்டுக் கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவர்களை மீண்டும் ஹிந்துமதத்துக்கே கொண்டுவரப் பிராயச்சித்தங்களை ரகசியமாய்ச் செய்து வந்தபோது, போர்த்துகீசர் திடீரென்று துப்பறிந்து ரகசியமாய்க் கூடியிருந்த அந்தப் பிராயச்சித்தச் சபையை நாற்புறமும் சூழ்ந்துகொண்டு, துப்பாக்கி ஆயுதங் கொண்டு பயமுறுத்திக் கலைத்தார்கள். அங்கே கூட்டத்தில் இருந்த ஒரு கோஸாவி தான் இருந்த இடத்திலிருந்து ஒரு அங்குலமேனும் நகர மறுத்திடவே, போர்த்துகீசர் அவரை வெட்டி வீழ்த்தினார்கள். அவரது அரிய வீரத்தையும் ஆத்மத் தியாகத்தையும் கண்டு மதவெறி பிடித்த போர்த்துகீசரே மெச்சிப் புகழ்ந்தார்கள் என்றால் அதிகம் சொல்லுவானேன்? இன்னுமோர் உதாரணம் என்னவென்றால் :—பீஜப்பூர் சுல்தான் புகழ்பெற்ற மராட்டிய சர்தாரான நிம்பல்கரைப் பலவந்தமாக இஸ்லாத்தில் சேர்த்து அவருக்குத்தன்மகளையும்விவாகம் செய்வித்தான். ஆனால், இதையெல்லாம் சற்றேனும் பொருட் படுத்தாமல், நிம்பல்சர் அவனது கையிலிருந்து தப்பி மராட்டிய யுத்த கூடாரத்தைச் சேர்ந்ததும், சிவாஜியின் வீரத் தாயான ஜீஜாபாயின் ஆஞ்ஞையின்படி, பண்டிதர்களால் பிராயச்சித்தம் பெற்றுச் சுத்தி செய்யப்பட்டு மீண்டும் ஹிந்து மதத்தில் சேர்ந்தது மட்டு மல்லாமல், தமது மூத்த மகனுக்குச் சிவாஜியின் மகளையே விவாகம் செய்வித்தார் என்பது உலகம் அறிந்த விஷயமே. இன்னொரு முக்கிய உதாரணம் நேதாஜி பால்கர்—இந்த வீர மராட்டியப் படைத் தலைவரை சிவாஜிக்கு அடுத்தவராக யாவரும் கருதி மரியாதை காட்டி வந்தார்கள். முகலாயர் இவரைக் கைப்பற்றி, ஔரங்கசீப்பின் உத்திரவுப்படி அவரை

முகமதிய மதத்தில் பலவந்தமாகச் சேர்த்து, பின்பு எல்லைப் புறத்துக் கப்பால் கொண்டு போய் மூர்க்க ஜாதியாருடன் வாழும்படி செய்தார்கள். ஆனால், அவ்வுத்தம வீரர் எவ்விதத்தாலோ மஹாராஷ்டிரத்துக்குத் திரும்பி வந்து, ஹிந்து மதத்தில் தம்மை மீண்டும் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டினார். பண்டிதர்கள் அவரைச் சிவாஜிக்குச் சிபார்சு செய்யவும், அவர் மீண்டும் ஹிந்து மதத்தில் சேர முடிந்தது. இந்த உத்தம அரசு முறையையும் நய நீதியையும் பேஷ்வாக்கள் நானா பட்னவிஸ் காலம் வரையிலும் அதற்குப் பிற்பாடும் கடைப்பிடித்து வந்தார்கள். 'பேஷ்வாக்களின் தினசரிக் குறிப்பில்' பிரசுரம் செய்யப் பட்ட மூலசாஸனங்களி லிருந்தும், உத்தரவுப் பத்திரிகை களிலிருந்தும் அநேக சமயங்களில் பலாத்காரத்தினால் முகமதிய, கிறிஸ்துவ மதங்களைத் தழுவ நேர்ந்த அநேகர் பச்சாதாபப் பட்டு, மீண்டும் ஹிந்து மதத்துக்கு வந்ததும், ஹிந்து ஜாதியார் அவர்களை ஆதரவுடன் ஏற்றுக் கொண்டதும் தெரிகிறது. உதாரணமாக—சூரத் ஜில்லாவில் போர் புரிந்து வந்த பட்டாளத்தின் போர் வீரரான புடாஜி என்பவரை முகமதியர் கைப்பற்றிப் பலவந்தமாக இஸ்லாத்தில் சேர்த்தார்கள். ஆனால், டில்லியிலிருந்து பாலாஜி பாஜி ராவ் திரும்பி வந்துகொண்டிருக்கும் போது புடாஜி முகமதியரிடமிருந்து தப்பி, பேஷ்வாவின் விடுதியை அடைந்தார். அங்கிருந்த அவரது ஜாதியார் எல்லோரும் ஒன்று கூடி ஏகமனதாய் அவரை மீண்டும் தமது ஜாதியில் சேர்த்துக்கொள்ள விரும்பிப் பேஷ்வாவிடம் தெரிவிக்கவும், பேஷ்வாவின் பிரத்தியேக உத்தரவினால் அவரை மீண்டும் தமது ஜாதியில் சேர்த்துக்கொண்டார்கள். பக்கம் (215-6) இன்னொரு உதாரணம் என்னவென்றால்—துளாஜிபட்ஜோஷி என்பவரை முகமதியர்கள் வஞ்சக ஆசை காட்டி மயக்கித் தமது மதத்தில் சேர்த்து விட்டார்கள். அவர் தாம் செய்த தவற்றை யுணர்ந்து பச்சாத்தாபப் பட்டு, பைதான் நகருக்குச் சென்று, பிராமண சபையின் முன்பே கைகூப்பி நின்று, தமது தவற்றை ஒத்துக் கொண்டு, தம்மை மன்னித்து மீண்டும் ஹிந்து மதத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக் கொண்டார். ஆசாரத்துக்குப் பேர்போன

பைதான் நகரத்துப் பிராமணர்களும் பச்சாதாபப் படுவ தால் அவரை மீண்டும் ஜாதிக்குள் சேர்க்கலாம் என்று தீர் மானித்து, அவருடன் சமபந்தி போஜனமும் செய்தார்கள். பண்டிதர்களின் தீர்மானத்தை மற்ற மக்களும் மரியாதை யுடன் அங்கீகரிக்க வேண்டும் என்று துறைத்தன அதி காரி உத்திரவு செய்யவே, ஜோஷி மீண்டும் தமது ஜாதி யில் சேர்ந்து, தமது பழைய உரிமைகளைப் பெற்றூர். இத்தகைய ராஜநீதி சாம்பாஜியின் அமைதியற்ற காலத் திலும் கையாளப்பட்டு வந்தது. அரசரும் சத்ரபதியுமான சாம்பாஜி மஹாராஜரின் கட்டளைப்படி அதிகாரிகள் பிறப் பித்த உத்திரவிலிருந்து கீழ்க்காணும் ருசிகரமான விஷய மும் தெரியவருகிறது. கங்காதர் குல்கர்ணி என்பவரை முகமதியர் பலாத்காரமாக இஸ்லாத்தில் சேர்த்தார் கள். ஆனல், ஹிந்துக்கள் அவரை மீண்டும் தமது ஜாதியில் சேர்த்துக்கொண்டார்கள். பிராயச்சித்தச் சடங்குகளை விவரமாக எடுத்துரைத்து அந்த ஆஞ்ஞை யின் முடிவில் மனு ஸ்மிருதியி லிருந்து ஒரு சுலோகமும் எழுதப்பட் டிருக்கிறது. அதாவது அவருடன் சம பந்தி போஜனம் முதலிய சமூகச் சல்லாபம் செய்ய மறுத்தவர் கள் "தேவர்களுக்கும் பிராமணர்களுக்கும் தோஷம் செய்தவர்களாயும் பாவிகளாயும் கருதப்படுவார்கள்" என்பதே. இன்னேர் உதாரணத்தையும் சொல்லுவோம். ஜோத்பூர் இளவரசியான இந்திரா குமாரி முகலாயச் சக்ர வர்த்தியை விவாகம் செய்துகொண்டு, நீண்ட காலத்துக் குப் பிறகு டில்லியிலிருந்து திரும்பி வந்ததும் ராஜபுத்திரர் களின் சம்மதம் பெற்று ஹிந்து மதத்தில் மீண்டும் சேர்ந்து கொண்டாள்.

அரசியல் அந்தஸ்தில் தமது தாய்நாடு அடைந்துள்ள தாழ்வையும் குறைகளையும் அகற்றவந்த மராட்டியர் தாய் நாட்டில் காணப்படும் மத, சமூகத் திட்டங்களில் ஏற்பட் டுள்ள குறைகளையும் நீக்க முயன்றது முற்றிலும் இயற்கை யானதே. அரசியலிலும் போரிலும் பெருமித வெற்றி சூடிய ஹிந்து விடுதலை இயக்கம் ஹிந்து நாகரிகத்திலும் சமூகத் திட்டத்திலும் பல நூற்றுண்டுகளாக ஏற்பட்டுள்ள குறைகளைக் கவனியாமல் விட்டுவிடுமா? முகமதியர்கள்

தக்காணம் முழுவதிலும் தமது ஆட்சியை நாட்டி, நூறு வருஷங்களுக்குள் பல ஆயிரக் கணக்கானவர்களைக் கத்தி முனையில் இஸ்லாத்தில் சேர்த்தார்கள். ஆனால், முகமதியர்களை முறியடித்து அவர்களது ஆட்சியை நசுக்கிய ஹிந்துக்களோ பலாத்காரத்தினால் இஸ்லாத்தைத் தழுவிய ஆயிரக் கணக்கான ஹிந்து சகோதரர்களை நூற்றுக் கணக்கிலாவது மீண்டும் ஹிந்து மதத்தில் சேர்த்துக் கொள்ள வில்லை. இஷ்டப்பட்டிருந்தால் மதத்திலிருந்து விலகிய ஹிந்து மக்கள் அனைவரையும் மீண்டும் ஹிந்து மதத்தில் சேர்த்திருக்கலாம். ஆனால், ஹிந்துக்களின் ஐதீகம் அதற்கு ஒப்பவில்லை. காரணம் என்னவென்றால் பல சமயங்களில் அரசியல் துறையில் நேர்ந்த அடிமைத் தனத்தின் தளைகளை அறுத்தெறிவது சுலப மாயினும், சாஸ்திர அறிவிலே ஏற்பட்ட மூட நம்பிக்கைகளைக் களைந்தெறிவது கடினமான வேலையே ஆகும். ஹிந்துக்களின் அரசியல் ஆதிக்கத்தை அழித்திட ஆவேசத்துடன் முற்பட்ட எதிரிகளைச் சின்ன பின்னப் படுத்தி, சமூகத்தின் அரசியல் சுதந்திரத்தைக் காத்து, மகத்தான ஹிந்து சாம்ராஜ்யத்தை நாட்டும் முக்கிய லட்சியத்திலே முழுக் கருத்தும் சிந்தையும் வைத்த மராட்டிய மக்களால் சமூகச் சீர்த்திருத்தமும் 'சுத்தி' இயக்கமும் இவ்வளவு தூரம் நடத்தப்பட்டு வந்ததைக் கண்டு நாமே வியப் படைய வேண்டி யிருக்கிறது. மராட்டியர்கள் மதத்திலிருந்து விலகியவர்களை மீண்டும் தம் மதத்தில் சேர்ப்பதன் அவசியத்தை யுணர்ந்து, மக்களுக்கு அறிவுறுத்தி, அவர்களது மனப்பான்மையையே முற்றிலும் மாற்றி, மீண்டும் ஹிந்து-மதத்துக்கு வந்தோரை அந்தந்த ஜாதியாரே ஆதரவுடன் வரவேற்கும்படியாகச் செய்து, புரட்சித்தன்மை பொருந்திய 'சுத்தி' இயக்கத்தையும் நடத்தினார்களென்றால் அதனிலும் ஆச்சரியமும் உளதோ?

## 6. செய்ந்நன்றியின் கடமை

"பண்டை ஸ்வராஜ்யத்தின் இனிய நினைவுகளை எண்ணி எண்ணி, மக்கள் நீரினின்றும் எடுத்த மீன்களைப்போல் பதை பதைத்து வருவார்கள்."

(பிரபாகர்)

இப்போது நமது சமூகத்தின் சரித்திரத்தில் இதுவரையில் தோன்றியுள்ள மகத்தான ஹிந்து சாமராஜ்யங்களில் முதன்மை பெற்றதும் கடைசியில் தோன்றியதுமான மராட்டிய சாம்ராஜ்யத்தின்மீது திடீரென்று திரை விழுகிறது.

சிந்து நதிக் கரையில் சிந்து தேச வீர ஹிந்து மன்னரான தஹீர் போரில் விழுந்த துர்ப்பாக்கிய தினத்தில் நமது அதிர்ஷ்டமும் விழுந்தது. காபூலின் ஹிந்து அரசரான திரிலோசனபாலர், பஞ்சாப் ஹிந்து அரசர்களான ஜயபாலர், அனங்கபாலர், டில்லி மன்னரான பிரிதிவிராஜர், கானோஜி நாட்டு ஜயசந்த், சித்தூரின் ஸங்க் ராணா, வங்காளத்து லட்சுமண ஸேனர், தேவகிரியின் ராமதேவ ராவ், ஹரபாலர், விஜயநகரத்து அரசர்களும், அரசிகளும், இத்தியாதி சிந்து நதி முதல் கடல்வரை யுள்ள ஹிந்து ராஜ குலங்களும், ஹிந்து சிங்காதனங்களும், கிரீடங்களும், ஒன்றன் பின் ஒன்றாய் மண்ணில் புரண்டு மடியலாயின. ஆணவமும் துணிவும் மிகுந்து, நமது கொடிய பகைவன் கதியற்று மண்ணில் வீழ்ந்திருந்த நமது சமூகத்தின் மார்பின்மீது தனது கொடிய முழங்காலை வைத்து அழுத்தலானான். சித்தூரில் மட்டு மன்றிப் பாரதகண்டம் முழுவதிலுமே இழிவான முறையில் ஹிந்து சமூகத்தின் நாகரிகத்தையும் வாழ்வையும் சுட்டெரித்துச் சாம்பலாக்கி விட்டார்கள். இச் சாம்பல் குவியலில் ஆத்மத் தியாகிகளின் வீரஜோதி ஆங்காங்கே பிரகாசித்திருந்தது. இந்தச் சாம்பல் குவியலில் நமது சமூகத்தின் எதிர்கால நம்பிக்கையும் மண்ணோடு மண்ணாய்ச் சிதறிக் கிடந்தது. அதன் மீது தனது சாம்ராஜ்ய மயூர சிங்காசனத்தின் மீது இறுமாப்புடன் ஔரங்கசீப் அமர்ந்திருந்தான் அவனைச் சுற்றி லட்சக் கணக்கான சிப்பாய்

கள் கத்தி தாங்கி, அவன் கோபத்துடன் விரலை நீட்டிய தும் படு கொலை செய்யச் சித்தமாய் நின்றிருந்தார்கள்.

"இந்தப் பூமண்டலம் முழுவதிலும் ஹிந்து ஒருவனும் இல்லையே," என்று ஏங்கிய காலத்தில், "ஏதோ ஒரு சிறு மூலையில்" ரகசியமாய்ச் சில ஹிந்து சிறுவர்கள் கூடி, கொலையுண்ட தமது அரசர்கள் அரசிகளின் மீதும், தமது சமூகத்தின் நம்பிக்கையைச் சுட்டழித்த சாம்பல் குவிய லின் மீதும் ஆணையிட்டு, தமது சமூகத்துக்கும் மதத்துக் கும் பகைவர்கள் இழைத்த பழிக்குப் பழி வாங்கி, ஹிந்து ஆண்மையையும். வெற்றிக் கொடியையும் மீண்டும் நிலை நாட்டி, அன்னியப் பகைவர்களை வீழ்த்தித் தகர்த்துவ தாய்ச் சபதம் செய்து கொண்டார்கள். இச்சிறுவர் களின் கையில் துருப்பிடித்த கத்திகளைத் தவிர வேறு ஆயுத மொன்றும் இல்லை. இது என்ன மதியீனம் என்று உலகம் சொல்லிற்று; பூ வென்று ஔரங்கசீப் இறுமாப் புடன் ஏசினன்; அவ்வாறு செய்வதால் தமக்கே தீங்கு நேரிடும் என்று பெரியோர்கள் சிறுவர்களுக்கு எச்ச ரிக்கை செய்தார்கள். அவர்கள் சொல்லியதில் தவறொன் றும் இல்லை. ஏனெனில் சிவாஜிக்கு முன்னே பலர் எதிர்த் துக் கலகம் செய்துள்ளார். அவர்களில் அநேக வீர இளங் காளையாளர் எதிர்த்து நின்று தோல்வியுற்று உயிரை இழக்க நேர்ந்தது. ஆனல், இதனல் தளர்வுறாமல் அவ்விளம் வீரர்கள் ஆயுள் முழுதும் அடிமைத்தனத்தில் கழிப்பதைக் காட்டிலும் வீர யுத்தம் புரிந்து இறப்பதே சிலாக்கியம் என்றும், தாம் துணிவுடன் எதிர்த்து நின்றாலன்றிச் சமூகத்தின் ஆண்மையும் வீரமும் நிலைத்து நில்லாமல் அடி யோடு அழிந்துவிடும் என்றும் தேர்ந்து கலக முயற்சியை விடாமல் செய்துவந்தார்கள்.

இவ்வாறு இருபது வருஷங்கள் கழிந்தன. ஔரங்க சீப்பின் பார்வையில் ஒளிகுன்றித் துக்கம் மேலிட்டது. ஏனென்றால் இந்த ஹிந்து வாலிபர் சங்கத்தையே நடு நாயகமாய்க் கொண்டு அவ்விடம் ஒரு ஹிந்துராஜ்யமே தோன்றத் தலைப்பட்டது." பரவாயில்லை. அந்த மூலையில் அவர்கள் கிடக்கும்போதே, அந்தக் காபீர்களை நான் மிதித்து கொன்றுவிடுகிறேன்," என்று அந்த முகலாயன்

இறுமாப்புடன் வீரம்பேசி,லட்சம்போர்வீரர்களைத்திரட்டி கோபாவேசத்துடன் அச் சிறு ஹிந்துராஜ்யத்தின் மீது படையெடுத்துப் பாய்ந்து தாக்கி, கலகக்காரர்களை ஈன்றெடுத்த அந்தத் தேசத்தையே மிதித்து நசுக்கலானான். ஆனால், அந்தப் பூமியோ அவனது கால்பட்ட மாத்திரத்தில் வெடித்துப் பிளவுற்றது. இதைக் கண்டு அந்த முகலாயன் திடுக்கிட்டு, சமாளித்து நேரே நிற்க முடியாமல், அகன்று வந்த அந்த வெடிப்பிலிருந்து தப்பிக்க வழியின்றித் தத்தளித்தான். கோபத்தினால் அவன் கால்களை மேன்மேலும் தூக்கி மிதிக்கவும், அந்த பூமி வெடிப்பு மேன்மேலும் பிளவுற்று அகன்றிடவே, அவன் அதன் வாயில் வீழ்ந்து மீளா வண்ணம் பாதாளம் எய்தினான். அவனும் அவனைப் பின்பற்றி வந்த லட்சம் வீரர்களும் பாதாளத்தில் ஆழ்ந்து மடிந்தபின்பே அந்தப் பூமி மீண்டும் மூடிக்கொண்டது. அவ்விதம் அவர்களைத் தோண்டிப் புதைத்து நாட்டிய சவக்குழியின் மீது அந்தச் சிறு ஹிந்து ராஜ்யம் மகத்தான ஹிந்துசாம்ராஜ்யமாக ஓங்கிற்று.

ஏனெனில் உடனே மஹாராஷ்டிரத்து வீரப்படைகள் ஹிந்து ஆட்சியின் தெய்விகக் குறியான தமது காவி வர்ணக் கொடியைத் தாங்கி ஹிந்து விடுதலைப் போரை ஹிந்துஸ்தானத்தின் பலபாகங்களிலும் பரப்பினார்கள். குஜரத், காண்டேஷ், மாள்வா, பண்டில்கண்டு நாடுகளில் பிரவேசித்தார்கள். சாம்பல், கோதாவரி, கிருஷ்ணா, துங்கபத்திரா நதிகளைத் தாண்டினார்கள்; தஞ்சாவூரில் கூடாரம் அடித்தார்கள்; செஞ்சி, நாகபுரி, ஒரிஸ்ஸா நாடுகளைக் கைப்பற்றினார்கள்; இவ்வாறு தளராமல் தினந்தோறும் பாடுபட்டு, யமுனை முதல் துங்கபத்திரா வரையிலும், துவாரகை முதல் ஜகன்னாதம் வரையிலும் உள்ள நாடுகளினின்றும் முகமதிய ஆட்சியை ஒழித்து, இடைவிடாத் தொடர்ச்சியும் ஒற்றுமையும் பலமும் உள்ள ஹிந்து சாம்ராஜ்ய ஆட்சியை நாட்டினார்கள். பின்பு அவர்கள் யமுனை, கங்கை, கண்டகி நதிகளைத் தாண்டி, குப்தவம்சத்துப் பேரரசர்களின் தலைநகராகிய பாடலிபுத்திரத்தையும் கைப்பற்றி, கல்கத்தாவுக்குச் சென்று காளிதேவியை வணங்கி, காசிக்குப் போய் விசுவேசுவ

ருக்கும் பூஜை செய்தார்கள். சிவாஜியின் காலத்தில் ரகசியத்தில் பத்துக் கணக்கில் கூடி, துருப்பிடித்த கத்திகளைத் தூக்கி, வீரசபதம் செய்துவந்த மக்களின் சந்ததியாரோ இப்போது ஆயிரக் கணக்கிலும் லட்சக் கணக்கிலும் கூடி, தமது வெற்றிக் கொடிகளை வெளிப்படையாகவே மேல் தூக்கிப்பிடித்து, யுத்த கோஷத்துடனும் வாத்தியங்களுடனும் கிளம்பி முகமதிய சாம்ராஜ்யத்தின் தலைநகர் மீதே படையெடுத்துச் சென்று, அதன் கோட்டைவாயிலையும் தாக்கிப் பிளந்தார்கள். புராணங்களை நம்பும் ஹிந்துக்களைக் குரானை நம்பும் முகமதியர்கள் நாள்தோறும் மேன்மேலும் சீர்குலைத்து வருவதை எடுத்துக்காட்டி, இதனால் குரானில்தான் தெய்விகமும் உண்மையும் இருக்கின்றன, என்று ஓயாது புளுகிவந்த மௌலானாக்களும் மௌல்விகளும் இதைக்கண்டு திடுக்கிட்டார்கள். ஜாதி மாகாணப் பிரிவுகளால் ஒற்றுமை சிதறிப் பிளவுண்டு, விக்ரக ஆராதனை புரிந்து வரும், தாடி வளர்க்காத இந்த ஹிந்து மக்கள் எதிர்க்க முடியாத ஆண்மையுடனும் பலத்துடனும் டில்லி வாயிலை யுடைத்து, இஸ்லாத்தின் ரட்சஸ்தலங்களின் மீதும் தமது காவிக் கொடியை நாட்டியபோதும், மௌல்விகளும் மௌலானாக்களும் புளுகிவந்தபடி இஸ்லாத்தைக் காப்பதற்கு ஸெப்ரில் எவனும் தோன்றிவர வில்லை. ஆதலால் முகமதியப் படைகள் வெற்றி பெறுவதிலிருந்தே இஸ்லாம் கூறுவதெல்லாம் தெய்விக உண்மையே என்றும், ஹிந்துக் கோவில்கள் இடிந்து விழுவதிலிருந்தே ஹிந்து மதம் தப்பான மார்க்கத்தைப் போதிக்கிறதென்றும் இனி எவனும் சொல்லிக்காட்டமுடியாது. இத்தனை நாள் இத்தகைய புரளிப் பிரசாரம நடந்து வந்தது. மேன்மேலும் ஹிந்துக்கள் தோல்வியுற்றே வருவதைக் கண்டு மக்களும் இவ்வாறு கூறுவது உண்மைதானே என்று மதிமயங்கி முகமதிய மதத்தில் சேரத் தலைப்பட்டனர். சாஸ்திரம் அறிந்த பண்டிதர்கள் என்ன சொல்லியும் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. ஆனால், இத்தகைய புரளிப் பிரசாரம் இனி நடக்க வழியில்லை—இனி அதற்கு நேர்மாறான பிரசாரமே நடக்கமுடியும். முகமதிய மசூதிகளுக்குமேல் ஹிந்துக் கோவில்கள் உன்னதம் பெற்று நகைத்தன. முகமதியப்

பிறை தேய்ந்து திணறவும், ஹிந்து சூரியன் உதயமாகி, ஹிந்து நாடுகளில் எல்லாம் இருளகற்றி, அகன்ற பொன்னொளியை நாட்டிற்று. பிரிதிவி ராஜரின் சந்ததியார் மீண்டும் டில்லியைக் கைப்பற்றி ஆட்சி புரிந்தார்கள். பாஹு சொன்னவாறு, ஹிந்து மக்கள் தமது ஹஸ்தினபுர ராஜ்யத்தை மீண்டும் ஜயித்துக் கொண்டார்கள். ஒளரங்கசீப் இறுமாப்புடன் மலை எலிகள் என்று ஏசினன்; ஆனால், அந்த எலிகளோ அந்தச் சிங்கத்தை அதன் குகையிலேயே தாடியோடு பிடித்திழுத்து, அதன் நகங்களையும் பற்களையும் ஒவ்வொன்றாகப் பிடுங்கி விட்டன. பசுக்கள் ஒன்று சேர்ந்து கசாப்புக்காரனையே கொன்றுவிட்டன. நமது குரு கோவிந்தஸிங்கு தீர்க்க தரிசனத்துடன் சொல்லியவாறு, குருவிகள் ஒன்று சேர்ந்து பருந்துகளைத் துண்டுதுண்டாகக் கொத்திக் கொன்றுவிட்டன.

அன்றுமுதல் அவர்களது படைகள் போர் வீரர்களைப் போலும் பிராணத் தியாகிகளைப் போலும் குருக்ஷேத்திரத்தில் குளித்து, ஹிந்து வெற்றிக்கொடியை லாகூருக்கும் எடுத்துச்சென்றன. ஆப்கானியர் உள்ளே புகுந்து தடை செய்யவும், மராட்டியர் அவர்களை அட்டக்குக்கு அப்பால் வெளியே துரத்திவிட்டார்கள். ஆங்கு மராட்டியப் போர்வீரன் தனது குதிரையை நிறுத்தி இறங்கிச் சற்று இளைப்பாறவும், பூனாவில் அவனது சேனாதிபதிகளும் தலைவர்களும், சிந்து நதியைத் தாண்டி ஹிந்துப் படைகளைக் காபூலுக்கும் ஹிந்துகுஷ் பருவதத்துக்கும் அனுப்ப விரும்பி, படையெடுப்பின் ஏற்பாடுகளை மும்முரமாகச் செய்து வந்தார்கள். பாரசீகரிட மிருந்தும், ஆங்கிலேயரிட மிருந்தும், போர்த்துகீசரிட மிருந்தும், பிரெஞ்சுக்காரரிட மிருந்தும், ஹாலந்து நாட்டி லிருந்தும், ஆஸ்டிரியா நாட்டி லிருந்தும் பூனாவுக்கு ராஜ தூதகோஷ்டிகள் வந்து, தத்தம் நாடுகளின் ராஜ தூதர்களாய்த் தாங்கள் மஹாராஷ்டிரத்தின் சாம்ராஜ்ய ராஜ சபையில் இருப்பதற்கு அனுமதியளிக்க வேண்டுமென்று வேண்டினார்கள். வங்காளத்து முஸ்லிம் நவாபும், லக்னோவின் முஸ்லிம் ராஜப் பிரதிநிதியும், ஹைதராபாத்தின் முஸ்லிம் நிஜாமும்,

மைசூரின் முஸ்லிம் சுல்தானும், ஆர்க்காடு முதல் ரோஹில் கண்ட் வரையில் உள்ள சிற்றரசர்களும், மராட்டியருக்குக் கப்பமும் சௌத் ஸர்தேஷ்முகி வரிகளும் கொடுத்து, உயிருடன் விட்டால் போதும் என்று வேண்டி வந்தார்கள். உண்மையில் நிஜாம் ஹைதராபாத்தில் வரி வசூலுக்கும் அதிகாரியாகத்தான் இருந்து வந்தான். அவன் அவ்வப்போது வசூலித்ததை யெல்லாம் மராட்டியரது சாம்ராஜ்ய பொக்கிஷத்துக்குச் செலுத்தவேண்டியிருந்தது. அவர்கள் எதிர்த்து வந்த பகைவர்களில் முகமதியர் மாத்திரம் அன்று, இரான் தேசத்து ஷாவும், காபூல் நாட்டு ஷாவும், துருக்கியரும், முகலாயரும், ரோஹில்லரும், பட்டாணியரும், போர்த்துகீசரும், பிரெஞ்சுக்காரரும், ஆங்கிலேயரும், அபிஸீனியரும் மராட்டியரது ஆதிக்கத்தை யெதிர்த்து நிலத்திலும் கடலிலும் போர் பல புரிந்தார்கள். ஆனால், ஹிந்துப் படைகளோ தமது தெய்வத்தின் பெயராலும் தேசத்தின் பெயராலும் போர் புரிந்து, ஹிந்து லட்சியத்தையும், ஹிந்து சுதந்திரத்தையும் எதிர்த்துவந்த பகைவர்கள் அனைவரையும் நிலத்திலும் கடலிலும் சந்தித்த விடத்தி லெல்லாம் முறியடித்து வெற்றி சூடினார்கள். ராங்கண, விஷால்கட், சாகண, ராஜாபூர், வெங்குர்லா, பார்ஆனூர், புரந்தர், ஸிம்ஹகட், ஸால்ஹெர், ஊம்பிராணி, ஸாவனூர், ஸங்கமேர், போண்டா, வாயீ, பால்டண, செஞ்சி, ஸாத்தாரா, திப்தோரி, பால்கேத், பெட்லாட், சிப்லூன், விஜயகட், ஷிரிகான், டாணே, தாராபூர், வஸயீ, ஸாரங்கபூர், திரள், ஜயத்பூர், டில்லி, துரை, ஸேரை, போபால், ஆற்காடு, திருச்சினப்பள்ளி, காதர்கஞ்ச், பருக்காபாத், உத்கீர், குஞ்சபுரா, பானிப்பட்டு, ராக்ஷஸபுவன், உனவடி, மோதிதலாவ், தார்வாட், சுக்ரதால், நஸீப்காட், வடகான், போர்காட், பாதாமி, ஆக்ரா, கர்டா—மதில் பிளவுகளை நிரப்புவதும், முற்றுகை முடிப்பதும், ஸ்தலங்களையும் செல்வங்களையும் கைப்பற்றுவதும், கப்பல் படைகளை யழிப்பதும், போர்முனையில் வெற்றி சூடுவதும்—மராட்டியரது சேனைகளும் கப்பல் படைகளும் வெற்றி நாட்டிய யுத்தங்களில் சிலவற்றை மேலே கூறியுள்ளோம். இத்தகைய புகழ் பெற்ற வெற்றிகள் ஒவ்வொன்றிற்கும் நம் நாட்டுப் பண்டைக் காலத்து மக்களும்

மற்ற நாட்டினரும் ஒவ்வொரு விஜய ஸ்தம்பம் நாட்டிக் கொண்டாடி யிருப்பார்கள். சிவாஜி பிறந்தது முதல் நானா பட்னவிஸ் மரணம் வரையில் உண்மையில் ஹரிபக்தர்கள் ஒரு போரிலேனும் தோல்வி யுண்டானதே யில்லை. அவர்கள் ஒவ்வொரு வெற்றிக்குப் பிறகும் அநேக பெரும் பட்டணங்களைத் தொகுத்தார்கள். அவைகளில் ஒவ்வொன்றும் அயல் நாட்டு ராஜ்யங்களின் தலைநகரங்களைப்போல் பெரியதாய் இருந்தது. ஸாதாரா, நாக்பூர், கோல்ஹாபூர், தஞ்சாவூர், ஸாங்கிலி, மிரஜ். குண்டி, பரோடா, தார், இந்தூர் ஜான்ஸி, குவாலியர், இத்தியாதி பட்டணங்கள் மாகாணங்களுக்கும் ஜில்லாக்களுக்கும் தலைநகரங்களாக விளங்கின. இந்த மாகாணங்களிலும் ஜில்லாக்களிலும் ஒவ்வொன்றும் ஐரோப்பாக்கண்டத்திலிருக்கும் ராஜ்யங்களுக்குச் சமானமான விஸ்தீரணம் வாய்ந்தது. ஹிந்து மதத்தைப் பகைத்து விக்கிரகங்களை யுடைத்து வந்த பகைவரது கொடிய வெஞ்சினத்தினின்றும் மராட்டியர் ஹரித்வாரம், குருக்ஷேத்திரம், வடமதுரை, டாகூர், அயோ, அவந்தி, பரஷ்ராம், பிரபாஸ், நாஸிக், திரிம்பக், துவாரகை, ஜகன்னாதம், மல்லிகார்ஜுனம், தமிழ் மதுரை, கோகுலம், கோகரணம், முதலிய புனித க்ஷேத்திரங்களை விடுவித்தார்கள். மௌகாரி, சாளுக்ய, பல்லவ, பாண்டிய, சோழ, கேரள, ராஷ்டிரகூட, ஆந்திர, கேஸரி, போஜ, மாளவ, ரதோடா, சவன, முதலிய பண்டைப் புகழ்பெற்ற சாம்ராஜ்ய வம்சங்களின் புராதன ராஜ்யங்களும், ஹர்ஷர் புலிகேசி முதலோரது பெரும் ராஜ்யங்களும், ஒருங்கு திரண்டு சேர்ந்ததைப் போன்ற மகத்தான ஹிந்து சாம்ராஜ்யம் நிலைத்து நின்று, அன்னியர்கள் தமக்கு இந்நாள்வரை இழைத்துள்ள குறைகளை நீக்கி, பழிக்குப் பழி வாங்கி வருவதை யறிந்து காசி, பிரயாகை, ராமேஸ்வரம் முதலிய மஹா புண்ணிய க்ஷேத்திரங்கள் தமது உன்னத கோபுரங்களைப் பயமின்றி உயர்த்தலாயின. அந்தச் சாம்ராஜ்யத்தின் ராஜப் பிரதிநிதிகளும் சேனாதிபதிகளும் பெரிய பெரிய மாகாணங்களில் ஆட்சி புரிந்து வந்தார்கள். அத்தகைய பெரிய மாகாணத்தை ஆள வல்ல அரசர்கள் பண்டைக் காலத்தில் அசுவமேத யாகம் செய்யத் தகுதியுள்ளவர்களாய் விளங்கி யிருப்பார்கள். முதலாவது சந்திரகுப்தர் நாட்டிய மகோன்னத

சாம்ராஜ்யத்தையும், குப்த வம்சத்து அரசர்கள் தமது உன்னத காலத்தில் நாட்டிய சாம்ராஜ்யத்தையும் தவிர சரித்திரத்திலும் புராணங்களிலும் காணப்படும் வேறு எந்த ஹிந்து சாம்ராஜ்யமும் மராட்டிய சாம்ராஜ்யத்தைப் போல் விஸ்தீரணத்திலும் கௌரவத்திலும் காரியசித்தியிலும் தேச ஊழியத்திலும் தியாகத்திலும் சிறந்து விளங்கி யிருக்க வில்லை; கஷ்டங்களையும் அபாயங்களையும் நெருக்கடிகளையும் ஆபததுக்களையும் நிர்வகித்து அவை யாவினின்றும் தப்பிச் சமாளித்து இதுபோல் வெற்றிசூடி யிருக்கவில்லை.

நமது நாட்டுப் பண்டைச் சரித்திரத்திலே சில சமயங்களில் விக்கிரமர் அல்லது விக்கிரமாதித்தியர் என்கிற பதத்துக்கும் சக்ரவர்த்தி என்கிற பதத்துக்கும் ஒரு சாஸ்திரீக வித்தியாசம் வழங்கி வந்ததாக உணருகிறோம். ஏனைய ஹிந்து அரசர்களை ஜெயித்து சாம்ராஜ்ய ஆட்சியையும் அதிகாரத்தையும் வகித்தவரே சக்ரவர்த்தியாவர். சக்ரவர்த்தியைப்போல் ஏனைய ஹிந்து ராஜ்யங்களை வென்று, அத்துடன் நில்லாமல் அன்னியாது ராஜ்யத்தையும் வென்று, அன்னியாது ஆதிக்கத்தினின்றும் நமது சமூகத்தையும் நாகரிகத்தையும் ரட்சித்த பேரரசர்களை விக்கிரமாதித்தியர் என்று பிரத்தியேக கௌரவத்துடன் பாராட்டுவதுண்டு. முதலாவது விக்கிரமாதித்தியர் ஸிதியர் என்ற அன்னியர்களைத் துரத்தியடித்துப் புகழ்பெற்றார். இரண்டாவது விக்கிரமாதித்தியர் மேனாட்டுச் சாகர் என்ற அன்னியாது ஆதிக்கத்தினின்று நமது தாய் நாட்டையும் சமூகத்தையும் விடுவித்தார். மூன்றுவதான யசோதர்ம விக்கிரமாதித்தியரோ ஹூணரை முறியடித்து வெளியே துரத்தி அவர்களது அரசனையும் பெரும் போரில் கொன்ற வீர புருஷர். தருமமும தெய்விகமும் உள்ள லட்சியத்துக்காக அன்னியப் பகைவர்களுடன் போர் புரிந்து, நாட்டையும் சமூகத்தையும் ரட்சித்து, போர்ப் புகழுக்காகவன்றி, தேசிய தர்மக் கடமைக்காகவும், தேசிய அவசியத்துக்காகவும் திக்கு விஜயம் புரிந்து, மத வெறியும் வஞ்சக ஆசையும் உடைய அயல் நாட்டுப் பகைவரால் நேர்ந்த பேராபத்தி

னின்று நமது நாட்டு மக்களைக் காத்த வீர மன்னரை விக்கிரமாதித்தியர் என்று அழைப்பது சாஸ்திரீகமானல்—சரித்திரத்தில் கடைசியான ஹிந்து சாம்ராஜ்யத்தை வளர்த்த மராட்டிய வீரர்கள் பண்டைய சக்ரவர்த்திகளையும் விக்கிரமாதித்தியர்களையும் காட்டினும் பல மடங்கு உயர்ந்த வீரமும் மேன்மையும் கொண்டவர்களாதலால் ஹிந்து மக்களாகிய நாம் அனைவரும் சரித்திரப் புகழ்ச்சி பெற்ற மற்ற வீரர்களைப் போல் இவர்களுக்கும் கௌரவமும் அன்பும் நன்றியறிதலும் காட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஏனெனில் மராட்டிய வீரர்கள் நமது ராஜபுத்ர அரசர்களது வீரக் கரங்களிலிருந்து நழுவி விழவிருந்த நமது சமூகத்தின் கொடியைத் தாவிப் பிடித்து நிறுத்தி, ஹிந்து லட்சியத்தை வெறுத்து எதிர்த்து வந்த அன்னியப் பகைவர்களுடன் தெய்வீக யுத்தம் புரிந்து தஹீர், அனங்கபாலர், ஜயபாலர், பிரிதிவிராஜர், ஹரபாலர், பிரதாபர், பிரதாபாதித்தியர் இத்யாதி வீர மன்னர்களின் பிராணத் தியாகங்களுக்கு வஞ்சம் தீர்த்து, சித்தூர் ராஜ்யத்துக்கும் மாதவாசாரியார் ஸாயணாசாரியார் இவர்களின் உபதேசப்படி பலாட்டியரான ஹரிஹரரும் புக்காவும் புனித தேவாலயத்தைப் போன்று தொகுத்து நாட்டிய விஜயநகர ராஜ்யத்துக்கும் பகைவர் இழைத்த கொடும் பழிகளுக்கு பதில் பழியும் வாங்கினார்கள்.

இவ்விதம் ஆறு நூற்றாண்டுகளுக்கு மேலாக இடைவிடாமல் நடந்துவந்த மகத்தான கடும் போரை மராட்டியர் நடத்தி வெற்றி சூடி, ஹிந்து சமூகம் ஒழுக்கம் குன்றி அரைத் தூக்கத்தில் இருந்தாலும் இத்தகைய வெற்றிகளை நாட்ட வல்லது என்று உலகத்துக்கு எடுத்துக் காட்டி, பொது வாழ்வில் ஒற்றுமையும் ஊக்கமும் கொண்டால் ஹிந்துக்கள் இந் நாளிலும் அரியபெரிய காரியங்களைச் செய்ய வல்லவர்களே என்பதையும் ஐயமற விளக்கிவிட்டார்கள்.

ஆதலால் ஹிந்துக்களாகிய நாம் அனைவரும் நமது ஆழ்ந்த அன்பையும் நன்றியறிதலையும் காட்டி, உன்னத அதிகாரத்திலும் மேன்மையிலும் மராட்டியர் இருக்கும் போதே அவர்களது பாதங்களில் நமது மனமார்ந்த

வணக்கத்தையும் பக்தியையும் அர்ப்பணம் செய்து, அவர்களையும் அவர்கள் வெற்றியுடன் நாட்டிய மகத்தான ஹிந்து சாம்ராஜ்யத்தையும் கடைசியாக தரிசனம் செய்வோமாக. ஏனெனில், அந்தோ! திடீரென்று இந்த நாடகத்தில் திரை விழுந்து, கண்ணீர் நிறைந்த நமது பார்வையிலிருந்தும் நமது உன்னத சரித்திர சோபை மறைந்து விடப்போகிறது.

---

## 7. திரை விழுகிறது

"ஆயுதம் தாங்கத் தகுதி பெற்ற எதிரியைச் சந்திக்குங்கால் போர் வீரரின் உள்ளத்தே தோன்றும் கடிய உவப்பும் வியப்பும் அவரது பார்வையில் தோன்றின."

"நம்பிக்கை இழக்காதே. யாவும் கைகூடும். எல்லாம் மீண்டும் தோன்றி உதிக்கும்."

(பிரபாகர்)

1795-வது வருஷம் நடந்த கர்டா யுத்தத்துடன் நாம் இச்சரித்திரத்தை முடிக்கிறோம். நாம் சென்ற அத்தியாயங்களில் கூறியதெல்லாம் இந்தச் சரித்திரக் காலத்தைப் பற்றியதே யாகும் - மராட்டிய இயக்கத்தின் முழுச் சரித்திரத்தை விவரமாகச் சொல்ல வேண்டும் என்பது எமது விருப்பமன்று; அவ்வியக்கத்துக்கே உயிரளித்த கருத்துக்களையும் உயர்ந்த தத்துவங்களையும் லட்சியங்களையும் விவரமாக எடுத்துரைத்து ஹிந்து மக்களின் சரித்திரத்தில் மராட்டிய இயக்கத்துக்குள்ள உண்மையான இடத்தையும் ஆராய்ந் தறிவதே எமது நோக்கம்.

அந்த வேலை இப்போது முடிந்தது என்றாலும், 1795 - வது வருஷம் முதல் 1818 - வது வருஷம் வரையுள்ள சரித்திரத்தை—மராட்டிய சாம்ராஜ்யம் வீழ்ச்சி யடைந்த துக்ககரமான வரலாற்றை—பெருமூச்சு விடாமலும் கண்ணீர் உகுக்காமலும் நாம் படிக்க முடியாது.

அப்போதுதான் மராட்டியர் தமது புராதன முகமதியப் பகைவர்களைத் தாழ்த்தி, பல நூற்றாண்டுகளாக நடந்து வந்த ஹிந்து விடுதலைப் போரை வெற்றியுடன் முடித்து, களைப்புற்றுச் சற்று ஓய்வு எடுத்துக்கொள்ள விரும்பினார்கள். அந்தத் தருந்த சமயத்தில் பலாட்டியனான புதிய பகைவன்—இவர்களால் இதற்கு முன் இரு முறை முறியடிக்கப்பட்டிருந்த அவ்வன்னியப் பகைவன்—இப்போது மீண்டும் போர் புரிந்து பலமாகத் தாக்கலானான்.

மராட்டியர் மூன்றாவது முறையும் அவனை வென்றிருப்பார்கள். ஆனால், துரதிஷ்ட வசமாய் நானா இறந்துவிடவும், இரண்டாவது பாஜி ராவ் மராட்டிய மக்களுக்கு அதிபதியாய், நாட்டின் பகைவர்களுக்கு அடிமையாய்த் தோன்றினார். நானா, இரண்டாவது பாஜி ராவ் இவர்களிடத்தில் முற்றிலும் மாறுபாடான இயற்கையைக் காண்கிறோம். மராட்டிய இயக்கம் முழுவதிலும் இவ்விருவித இயற்கை இடையின்றி ஒன்றோடொன்று போர் புரிந்து வந்ததைக் கண்டோம், இரண்டாவது பாஜிராவின் சுபாவமோ இழிந்த சுயநலமும் தேசத் துரோகம் செய்யும் அகங்காரமும் இறுமாப்புமாகும். நானாவின் சுபாவமோ தேசியத் தியாகமும், பொது வாழ்வில் சுயநலமற்ற தன்மையும், தேச சுதந்திரத்திலும் மேன்மையிலும் பெருமை கொண்டாடி, தேசத்துக்குத் துரோகம் செய்வதால் கிடைக்கும் பதவிகளையும் செல்வத்தையும் வெறுப்பதுவாகும். மராட்டியர் தமது சமூகத்தினின்று இழிய குணங்களை அறவே களைந்தெறிய முடியாவிட்டாலும், நானாவின் காலம் வரையில் தேசிய வாழ்வில் அவைகள் தலையெடுக்கா வண்ணம் அடக்கி வந்தார்கள். அதன் பலனாக ஹிந்துபத பாதுஷாஹியை நாட்டினார்கள். ஆனால், இப்போதோ இரண்டாவது பாஜி ராவும் அவரது கட்சியாரும் அதிகாரம் பெறவே, மராட்டிய சாம்ராஜ்யம்

ஒற்றுமை கெட்டு வீழ்ச்சி யடையலாயிற்று. ஏனெனில், அப்போது மராட்டிய ஆட்சியைத் தாக்கியவர்கள் இந்தியரும் அல்லர், ஆசியாக்கண்டத்தோரும் அல்லர். ஆனல், ஆங்கிலேயர்கள். அந்தக் கீழ்த் திசையிலும் மராட்டியர் மற்ற இந்திய மக்களையும் ஆசியா கண்டத்தவரையும் காட்டினும் பலமும் ஒழுங்கும் தேச பக்தியும் உடையவர்களாகவே இருந்தார்கள். ஆனல் ஆங்கிலேயருக்கு எதிரே மராட்டியர் தோற்பது திண்ணமாகவே தோன்றிற்று.

ஏனெனில் பெரும் வெற்றிகளைச் சாதிக்க வல்ல விசேஷ குணங்களிலும் பயிற்சிகளிலும் ஆங்கிலேயர் மராட்டியரைக் காட்டினும் சிறந்து விளங்கினர்; அரசியலில் அநுபவம் முதிர்ந்து, தங்கள் நாட்டில் உள் நாட்டுப் போர்களையும் மதத் துவேஷக் கொடுமைகளையும் கொடுங்கோல் ஆட்சியையும் தவிர்த்திருந்தனர். பொது வாழ்க்கைக்குரிய அடக்கமும் பொறுப்பும், தேச ராஜ பக்தியும், ஜாதி ஒற்றுமையும், லட்சிய ஐக்கியமும், முயற்சியில் கட்டுப்பாடும், தேசிய சுய ஆட்சிக்கு அடங்கும் தன்மையும், மராட்டியரைவிட ஆங்கிலேயரிடம் சிறந்து விளங்கின. இத்தகைய குணக்களில் மராட்டியர் ஏனைய ஹிந்து மக்களைக்காட்டினும் முன்னேற்றம் அடைந்திருந்தாலும் ஆங்கிலேயர் அளவு முன்னேற்றம் அடைந்திருக்கவில்லை.

எனினும், மராட்டியர் தன்னந் தனியாய் ஆவேசத்துடன் போர் புரிந்து வந்தார்கள்; தாங்கள் அவ்வாறு போராடியது வாழ்க்கைக்கே இன்றியமையாததாய் இருந்ததைப் பிற்பாடு உணர்ந்தார்கள். சிலர் கடைசி மராட்டிய தேச பக்தரான பாபு கோகலேயைப் போல் மரணம் நேரினும் பகைவரைச் சரண் புகுவதில்லை என்று உறுதி கொண்டார்கள். "மண்ணேடு மண்ணய் விழுந்தாலும் சரி, நாங்கள் கையில் கத்தி ஏந்தியே உயிர் துறப்போம்," என்று அவர் ஓர் ஆங்கிலேய அதிகாரியிடம் சென்ஞர். ஆனல், மஹாதஜி, நானு, துகோஜி, ரரகோஜி, படகே முதலிய வல்லமை பெற்ற அறத்தில் நிபுணர்களும் படைத்தலைவர்களும் அனேகமாய் ஏககாலத்தில் ஒருவர் பின் ஒருவராய் இறந்துவிடவும், மராட்டியப் படைகளுள் தளர்ச்சி தோன்றவே, தகுதியற்ற மனிதர்கள் தலைமை வகிக்க

நேர்ந்த தன்றி, இரண்டாவது பாஜிராவ் பிரதான அதிகாரத்தையும் பெறவும் நேர்ந்தது. இத்தகைய சந்தர்ப்பத்தில் மராட்டியரின் பகைவரோ பலாட்டியரான ஆங்கிலேயர். போரின் முடிவு என்னவாகும் என்பதை யாவரும் முன்னுடியே ஊகித்தறியலாம். மராட்டியர் வீழ்ச்சியடைந்தனர். அவர்களுடன் மகத்தான கடைசி ஹிந்து சாம்ராஜ்யமும்—மகத்தான கடைசி இந்திய சாம்ராஜ்யமும்—வீழ்ச்சியடைந்தது. பஞ்சாப்பில் மட்டும் சீக்கியர்கள் ஹிந்து சுதந்திர தீபத்தைப் பிடித்து வந்தார்கள். ஆனால் அங்கும் இதே காரணங்களால் ஹிந்து ஆட்சி வீழ்ச்சியடைய நேர்ந்தது.

நமது மகத்தான தேசிய சாம்ராஜ்யத்தின் முடிவைப் பற்றி எழுதுவதில் உள்ள கூரிய மனவேதனையை ஒத்துக் கொள்ளுகிறோம். ஆனல், இங்கிலாந்து வெற்றி பெற்றதைக்கண்டு நாம் அசூயைப் படவில்லை. பல கடல்களையும் மகா சமுத்திரங்களையும் நாடுகளையும் கண்டங்களையும் தாண்டி வந்து, நமது கையினின்றும் இந்திய சாம்ராஜ்யத்தைப்பிடுங்கி அதை அஸ்திவாரமாகக் கொண்டு, இந்நாள் உகமே கண்டிராத பூமண்டல சாம் ராஜ்யததையே நாட்டிய இங்கிலாந்தின் பலதையும் வல்லமையையும் நாம் மெச்சுகிறோம்.

இவ்வாறு கிறிஸ்து சகாப்தம் 1818-வது வருஷம் மகா உன்னதமான நமது ஹிந்து சாம்ராஜ்யம் வீழ்ந்து மடிந்தது. அதைக் கவனித்து வாருங்கள்! அதற்கு அன்பும் சிரத்தையும் கனிந்த கவலையுடன் தூபம் காட்டி, நம்பிக்கையுடன் பிரார்த்தனை செய்து வாருங்கள்!

---

Printed by Shakti Press Ltd., (Shanti Press) P.I.C. No. MS. 23.
Royapettah, Madras 14.

# பொருளடக்கம்

## முதல் பாகம்—ஆராய்ச்சிக் காலத்திய சரித்திரம் 1—156


1. புதிய சகாப்தம் 1
2. ஹிந்து ஸ்வராஜ்யம் 5
3. சிவாஜிக்குப் பின் வந்த சமூகம் 11
4. ஆத்மத் தியாகம் செய்த அரசர் 13
5. மராட்டியர் தமதரசர் கொலைக்கு வஞ்சம் தீர்த்த வரலாறு 15
6. மஹாராஷ்டிர மண்டலம் 19
7. பாஜி ராவ் தோன்றியது 22
8. டில்லியின் மீது படையெடுப்பு 28
9. ஹிந்துக் கடல்களினின்றும் அயலாரைத் துரத்தியது 38
10. நாதிர்ஷாவும் பாஜிராவும் 54
11. நாஞவும் பாவூவும் 60
12. சிந்து நோக்கிப் படையெடுப்பு 72
13. ஹிந்து சாம்ராஜ்ய ஸ்தாபனம் 82
14. பானிப்பட்டு 95
15. தோல்வியை அளித்த வெற்றி 112
16. தர்மாத்மா மாதவராவ் 120
17. பானிப்பட்டின் பழிக்குப் பழி தீர்த்தது 124
18. உள் நாட்டுப் போரும் புரட்சியும் 134
19. ஆங்கிலேயர் தாழ்வுற்றது 150
20. ஸவாயீ மாதவராவ்—மக்கள் போற்றிய பேஷ்வா 155


## இரண்டாம் பாகம்—சமஷ்டி விமரிசனை 194—255


1. லட்சியம் 196
2. காலத்துக்கேற்ற உத்தம மார்க்கம் 205
3. புராதன, நவீன சரித்திர ஒளியில் ஆராய்ச்சி 216
4. மராட்டியப் போர் முறை 224
5. எல்லாத் துறைகளிலும் ஹிந்து மக்களுக்குப் புத்துயிர் அளித்த சாம்ராஜ்யம் 234
6. செய்ந் நன்றியின் கடமை 243
7. திரை விழுகிறது 252